


# வல்வையின்
# முதுசொம்





**வல்வை ந.அனந்தராஜ்**

N.Anantharaj
B.A (Hons),M.A.
Dip-In-Edu, Dip-In Journ
SLPS, SLEAS

# வல்வையின்

# முதுசொம்


கலாபூசணம் - வல்வை. ந. அனந்தராஜ்

B.A.(Hons.),M.A.

Dip-In-Edu.,Dip-In.In Journalism, SLPS,SLEAS



வெளியீடு

கலாசாரப் பேரவை,

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம்

பருத்தித்துறை

2016

நூல் விபரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வல்வையின் முதுசொம் |
| ஆசிரியர் | : | வல்வை.ந.அனந்தராஜ் |
| முகவரி | : | தெணியம்பை, வல்வெட்டித்துறை. |
| வகை | : | வரலாறு |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| மின்னஞ்சல் | : | anantharaj48@gmail.com |
| பதிப்பு | : | முதலாம் பதிப்பு டிசம்பர் 2016 |
| பக்கங்கள் | : | xii + 143 |
| அளவு | : | B5 ( 25 cm X 19 cm ) |
| வெளியீடு | : | வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை |
| அட்டை வடிவமைப்பு | : | திரு. அல்பேட் பெஸ்ரியன் |
| அச்சுப் பதிப்பு | : | கரிகணன் (தனியார்) நிறுவனம்<br>இல.681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். |
| விலை | : | ரூபா. 550.00 |
| ISBN | : | 978 - 955 – 41846 – 1 – 9 |
| Bar Code | : | 9 789554 1846 19 |

இந்நூல் பிரதேசம் சார் பண்பாடு அம்சங்களை ஆவணப்படுத்துதலை நோக்கமாகக் கொண்டு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் கலாசார செயற்றிட்டம் – 2016 இன் கீழ் பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு – பருத்தித்துறையூடாக, கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படுகின்றது. இந் நூலில் இடம்பெற்றுள்ள விடயங்களுக்கும் கருத்துக்களுக்கும் நூலாசிரியரே பொறுப்பாவார்.

– கலாசாரப்பேரவையினர் –

# வெளியீட்டுரை

வடமராட்சிவடக்கு என்பது வல்லிபுரம் முதல் தொண்டைமானாறு வரையான கடலையும் கடல் சார்ந்த நிலங்களையும் உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில், சங்ககால நெய்தல் நிலப் பண்பாட்டம்சங்கள் பல அருகிப்போய்விட்ட நிலையிலும், அடுத்து வந்த காலப்பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கி மேனிலைபெற்ற பண்பாட்டு மரபுகளின் தேட்டமும், அவற்றின் வழிவந்த நவீனத்துவ அம்சங்களின் சேர்க்கையும் பின்னிப் பிணைந்த வாழ்வியலை தன்னகத்தே கொண்ட பிரதேசமாக பரிணமித் திருப்பதைக் காண முடிகின்றது. இத்தகையதொரு பின்னணியைக் கொண்ட பிரதேசத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தைத் தொகுத்து ஆவணப்படுத்திப் பாதுகாக்க முயலும் எவரும் முழுமைபெற்ற பணியை ஆற்றியதாகத் திருப்தி கொள்ள முடியாது.

எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை அதன் தாய் மடியில் வளர்த்து, அதன் வருங்கால சந்ததியினருக்குக் கையளிப்பதும், பாதுகாப்பதுமே எமது நோக்கமாகும். இவ்வாறான பணிகளை பிரதேசம் தோறும் முன்னெடுப்பதற்காக வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், பிரதேச கலாசாரப் பேரவைகளை உருவாக்கி அவற்றின் துணையோடு, அவ்வப் பிரதேசங்களின் பண்பாட்டம்சங்களைப் பேணவும், மேம்படுத்தவும், கையளிக்கவும் பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய ஒரு கலாசாரத் திட்டத்தினூடாக ஆண்டுதோறும் நிதி ஒதுக்கி, பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இந்த வகையுள் ஒன்றாகவே, திரு. வல்வை. ந. அனந்தராஜ் அவர்களினால் ஆக்கப்பட்ட "வல்வையின் முதுசொம்" என்னும் இந் நூல் வெளியிடப்படுகின்றது.

உலக மயமாக்கலின் வலிய கரங்களுக்குள், கட்டுண்டு கிடக்கின்ற மனிதகுலம் அதனாலுண்டாகும், நன்மை தீமைகள் தொடர்பில் எதிர்வினையாற்றிய வண்ணம் இருக்கின்றது. இந்நிலையில் நமது தமிழ்ச் சமுகம், பிரக்ஞையின்றி பண்பாடு, வரலாறு முதலான நம் முன்னோரளித்த அருஞ்செல்வங்களைக் காற்றில் பறக்க விட்டுக் கால்போன போக்கில் நடப்பதே புதுமையும், பெருமையும் எனக் கருதி புதுயுகம் காணப்புறப்பட்டு விட்டதாகச் சொல்லிக் கொள்கின்றது. எது எவ்வாறு இருப்பினும், பண்பாட்டு விழுமியங்களையும், தனித்துவங்களையும் பாதுகாத்து, அவற்றை வருங்கால சந்ததியினருக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பு சமுகத்தினர் ஒவ்வொருவரினதும்

கடமையாகும். இந்த நோக்கத்தின் பின்னணியில் எழுதப்பட்டதே "வல்வையின் முதுசொம்" என்ற இந்நூலாகும். மேற்குறிப்பிட்ட பின்னணியிலேயே . வல்வையின் முதுசொம் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகக் காணப்படுகின்றது. இந்நூலில் உள்ள விடயங்களும் புகைப்படங்களும் வல்வெட்டித்துறையை வைத்து உருவாக்கப்பட்டதாயினும், அவற்றில் பெரும்பாலானவை யாழ்ப்பாணக் கலாசாரத்திற்குப் பொருத்த மான பல அம்சங்களையும் கொண்டிருப்பதால் அனைவராலும் பேணப்படவேண்டிய ஒரு ஆவணமாகவும் இருக்கும்.

வடமராட்சிவடக்கின்முக்கியமானஇரண்டுநகரங்களில்ஒன்றாகவல்வை, விளங்குகின்றது. இந்நகராக்கம் அதனோடு கூட்டிணைக்கப்பட்டிருக்கின்ற சமுக அசைவியக்கம் முதலானவை, அவற்றிற்கேயுரிய தனித்துவத்தை அவாவி நிற்கின்றன. இந்த வகையில் இந்நூல், வல்வையின் வாழ்வியல் வரலாற்று அம்சங்களில் முக்கியமானவை என்று ஆசிரியர் கருதிய பல விடயங்களை உள்வாங்கியிருக்கின்றது எனினும் இந்நூலில் இடம்பெற்றிருக்கக் கூடிய ஒரு சில விடயங்கள் தவிர்க்கப்படமுடியாது, கைவிடப் பட்டிருக்கின்றன. வேறு சில விடயங்கள் விரிவஞ்சியோ அல்லது வேறேதும் எண்ணப் பாங்கிலோ விடுபட்டிருக்கவும் வாய்ப்பிருக்கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தனிமனித முயற்சியினூடாக ஒரு பிரதேசத்தின் வாழ்வியல் வரலாற்றினை முழுமையாக எடுத்தியம்பமுடியுமா…? என்ற கேள்வியும் எழுகின்றது. இந்த நிலையிலும், காலத்தின்தேவை யுணர்ந்து, வல்வை. ந. அனந்தராஜ் அவர்களினால் எழுதப்பட்ட இந்நூலுக்கு வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையானது வெளியிடும் வாய்ப்பை வழங்கியுள்ளது. இதற்கான நிதி வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்டிருக்கின்றது. எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான முயற்சிகளுக்கு வாய்ப்பினை வழங்குவதன் மூலம், பிரதேசத்தின் பண்பாட்டு மேம்பாட்டிற்குப் பங்களிப்பு நல்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

கடந்த காலங்களில், பண்பாட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் இருந்த இடர்ப்பாடுகள் படிப்படி யாகக் குறைந்து வருகின்றது. அரசநிதிவளங்களைப் பயன்படுத்துவதில் உள்ள கட்டுப்பாடுகள், ஒரு புறமிருக்க ஒதுக்கப்படும் அரச நிதி, இத்தகைய ஒரு செயற்பாட்டை முழுமையாகவும் கலாபூர்வமாகவும் செய்வதற்குப் போதுமானதாக அல்லது பொருத்தமானதாக இல்லை என முன்வைக்கப்படுகின்ற கருத்துக் களையும் நிராகரிக்க முடியாத ஒரு சூழ்நிலையே இன்றும் காணப்படுகின்றது. இந்நிலையில் கிடைப்பன வற்றுள் சிறப்பான வற்றை வெளியிடுவது என்ற நோக்குடன் நாம் இந்நூலை வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

மேலும் கிடைக் கின்ற நிதி குறைவானதாக இருப்பதால், ஒரு பெருந்தொகுப்பை வெளியிடு வதை விட சிறுசிறு தொகுப்புக் களாக வெளியிடுவதே பொருத்தமானது எனக் கருதுகின்றோம். இவ்வாறான தொகுப்புக்களை வருடாவருடம் வெளிக்கொணர்வதனூடாக 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது போல், பிரதேசம் சார்ந்த அம்சங்களை ஆவணப் படுத்தமுடியும் என்று நம்புகின்றோம். இதற்கு பிரதேசங்களின் துறை சார் வல்லுனர்களினதும், எழுத்தாளர்களினதும் பேராதரவையும், முயற்சிகளையும் அவாவி நிற்கின்றோம்.

'வல்வையின் முதுசொம்' போன்ற நூல்களைக் கலாசாரப் பேரவை வெளியிடுவதென்பது முன் மாதிரியான செயற்பாடாக அமைந்து எதிர்காலத்தில் இத்தகைய செயற்பாடுகளில், ஈடுபடுபவர்களுக்கு உந்துசக்தியை வழங்கும் என எதிர்பார்க்கின்றோம். இன்றைய சூழலில் மூத்தோருடைய ஆதங்கங்களுக்குச் செவிசாய்ப் பதற்கும், அவர்களின்

அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் நேரம் ஒதுக்க எவரும் முன்வருவதில்லை. இந்த நிலையில் ஆவணப்படுத்துகையின் முக்கியத்துவலம் கருதி ஒரு ஆரோக்கியமான சமுகத்திற்கு உகந்தது எனக்கருதியே பிரதேச கலாசாரப் பேரவை இத்தகைய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றது. பிரதேசத்தின் மிக முக்கியமான பண்பாட்டு மயமாக்க நிறுவனங்களில் ஒன்றாக இருக்கக்கூடிய கலாசாரப் பேரவையானது, அதன் போசகர் குழாத்தினருடன் இணைந்து இவ்வாறான பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பது அதன் தார்மீகக் கடப்பாடாகக் கருதுகின்றது. இத்தகைய செயற்பாடுகளில் பக்கச்சார்பற்றும் வெளிப்படைத் தன்மையோடும் தொடர்ந்தும் பயணித்தால், பல நல்ல அறுவடைகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. அந்த நம்பிக்கை ஒளியில், நமது பயணத்தைத் தொடர்வதற்கு தெளிந்த நல்லறிஞர்களின் துணையை நாடி நிற்கின்றோம்.

"வல்வையின் முதுசொம்" நூலாக்க முயற்சியிலும், வெளியீட்டிலும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மன நிறைவடைகின்றோம்.


**அ. சிவஞானசீலன்**
**கலாசார உத்தியோகத்தரும்**
**கலாசாரப் பேரவைச் செயலாளரும்**

# அணிந்துரை

**வல்வையின் முதுசொம் பற்றி....**

ஈழத்தின் சென்னிஎனஅழைக்கப்படும் வடமராட்சியில் வடமராட்சிவடக்குபிரதேசசெயலர்பிரிவில்வரலாற்றுப்பெருமையும் புகழும் மிகுநகரமாகதிகழும் வல்வெட்டித் துறைதனித்துவ மானஅடையாளங்களையும்பண்பாடு, கலை,கலாசாரஅம்சங்களையும் கொண்டுதிகழ்கின்றது. இவ் வல் வெட்டித்துறைநகரின் வரலாற்றுப் பாரம்பரியங்களை எடுத்தியம்பும் நூல்கள் பலஎம்மிடம் உள்ளன. இதன் தொடர்ச்சியாக இப் பிரதேச வரலாற்றின் ஒருபகுதி கலாபூஷணம் வல்வை ந.அனந்தராஜ் அவர்களால் மீளவும் நூலுருவாக்கம் செய்யப்பட்டு'வல்வையின் முதுசொம்' என்றபெயரில் எமதுவடமராட்சிவடக்குகலாசாரப் பேரவையின் வெளியீடாக வெளியிடப்படுவதனையிட்டுபேருவகைஅடைகின்றோம்.

இவ் வெளியீடுகாலத்தின் தேவையாகும். இந் நூல் தற்கால செய்திகளைஉள்வாங்கி இற்றைப் படுத்திய தகவல்களை உள்ளடக்கியதாகஅமைந்திருப்பது பாராட்டுக்குரியது. மேலும் இந் நூல் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் 2016ம் ஆண்டிற்கானநிதிஅனுசரணையுடன் வெளிவருவது சிறப்பிற்குரியது.



நாடறிந்த கல்விமானும்,கல்விநிர்வாகதுறையில் பணி யாற்றியவரும்,பல்வேறு நூல்களை வெளியிட்டவரும், கலா பூஷணமும்,வல்வெட்டித்துறைநகரசபையின் முன்னாள் தவிசாளரும்,எமதுவடமராட்சிவடக்குகலாசாரப் பேரவையின் உறுப்பினரும்,வல்வையின் மைந்தனுமாகியதிரு. ந. அனந்தராஜ் அவர்கள் இந் நூலினை பலசிரமங்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்பு ணர்வுடன் ஆக்கித் தந்துள்ளார்.

வல்வெட்டித்துறையின் வரலாற்றில் நினைவு கூரப்படவேண்டிய முதுசங்களாகிய இருபது விடயங்களை எளிமையாகவும் ஆழமாகவும் சான்றாதாரங்களுடனும் தேவைக்கேற்ப புகைப்படங்களுடனும் இந் நூலில் உள்வாங்கி இருக்கிறார். இவ் ஒவ்வொரு முதுசங்களும் ஒவ்வொருவகையில்வல்வெட்டித்துறையின் வரலாற்றையும் அடையாளங்களையும் தனித்தன்மையினையும் வாழ்வியல் முறைமைகளையும்பண்பாட்டம்சங்களையும்வல்வெட்டித்துறையின் எழுச்சிக்கு புத்துயிர் அளித்த பெரியார்கள், அறிஞர்களையும் அவர்களின் சரித்திரங்களையும் கூறிச் செல்கின்றது.

வல்வெட்டித்துறையின்மிகநீண்ட நெடியவரலாற்றுபெருமைகளின் ஒருகுறுக்குவெட்டுப் பார்வையை இன்றைய நிலையில் அறிந்துகொள்வதற்கும் வல்வெட்டித்துறையின் வளத்தை யும்வாழ்வையும்ஆய்வுநோக்கில் அணுகவும் இந்நூல் மிகமுக்கியமானபங்கெடுக்கும் எனத் துணிந்து கூறலாம். இப் பெருமுயற்சியை மேற்கொண்டு வல்வெட்டித்துறைநகரின் பெருமைகளில் கணிசமானவற்றை பேசமுனைந்து அதை நூலுருவாக்கித் தந்து எமது கலாசாரப் பேரவையின் வெளியீடாக'வல்வைமுதுசொம்'என்றபெயரில் வெளியிட அனுமதித்த கலாபூஷ ணம் வல்லை ந. அனந்தராஜ் அவர்களிற்கு எமதுநன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்நூல் வெளியீட்டிற்கு நிதிஅனுசரணை வழங்கிய வடமாகாணபண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு எமது நன்றிகளைதெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இந்நூல் வெளியீட்டுமுயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய எமது பிரதேசசெயல ககலாசார உத்தியோகத் தரிற்கும் எனதுநன்றிகள்.

எமது கலாசாரப் பேரவையினால் வெளியிட்பபடுகீனற 'வல்வையின் முதுசொம்' வடமராட்சிமண்ணின் தனித்துவம் மிக்க வல்வெட்டித்துறை நகரின் அருமை பெருமை மிக்க தகவல்களைஉலகறியச்செய்யும்முக்கியமானஆவணங்களில்ஒன்றாகவிளங்கும்எனநம்புகின்றேன். இவ் நூல் சிறப்பாகவெளிவரஉளமார்ந்தவாழ்த்துக்களைதெரிவித்துப்பணிகின்றேன்.

**இ. த. ஜெயசீலன்**
பிரதேசசெயலாளர்
பிரதேசசெயலகம்,
பருத்தித்துறை.
28/12/2016

# முன்னுரை

பழம் பெருமையும், சிறப்பும், பண்பாட்டு புறநானூற்று வீரமும், ஆன்மீகநெறியும் நிறைந்த வல்வெட்டித்துறை மாநகர் உலகளாவிய ரீதியில் பெருமைக்குரிய சிறப்புக்களைக் கொண்டது. அதன் தோற்றுவாயில் இருந்தே பல்வேறு சாதனைகளைப் புரிந்து பெருமை பெற்ற மண் இன்று தனது அடையாளத்தை இழந்து போய் இருக்கின்றது.

வீரத்திலும், விவேகத்திலும், சாதனைகளிலும், கலைகளிலும், காதலிலும் கூட பல சிறப்புக்களைக் கொண்ட மண்ணில் காலம் காலமாகப் பேணிப்பாதுகாத்து வரப்பட்ட அரிய பொருட்களும், வரலாற்றுத் தகவல்களும், பண்பாடுகளும், உணவுப் பழக்க வழக்கங்களும், கலை பண்பாடுகளும், மக்களால் நேசிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களும் இன்று படிப்படியாக மறைந்து கொண்டும், அழிக்கப்பட்டும் வருகின்ற நிலையில் அந்த நினைவுகளை மீட்டிப் பாதுகாத்துக்கொள்வது மட்டுமல்லாது, அவற்றை எமது எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் ஆவணப்படுத்தி வைத்திருக்க வேண்டியதும், தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

“முதுசொம்” என்பது வெறுமனே கட்புலனாகக் கூடிய பொருட்களையோ அல்லது கட்டடங்களையோ மட்டும் குறிப்பிடாது, பழம் பெருமை வாய்ந்த வரலாற்றுச் சம்பவங்களையும், எமது மக்களால் பேணப்பட்டு வந்த மரபுகள், கலை, பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், சாதனையாளர்களின் வரலாறுகள் போன்ற கட்புலனாகாச் சொத்துக்களையும் கூட நினைவுபடுத்தும் வகையில் ஆவணப்படுத்த வேண்டியதும் அவசியமாகும். ஏனெனில் ஒரு நகரத்தின் அல்லது கிராமத்தின் பண்பாடு, வாழ்க்கை முறைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், சாதனைகள் மற்றும் சமுகப் பின்னணிகள் எல்லாமே அந்தக் கிராமத்திற்குரியதும், தனித்துவம் வாய்ந்ததுமான “முதுசொம்” என்ற வகையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. வல்வெட்டித்துறையில் காலம் காலமாகப் பேணப்பட்டு வரும் மரபுகள், வரலாற்றுச் சம்பவங்கள் போன்ற பல்வேறுதகவல்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதால், இந்நூலுக்கு “முதுசொம்” என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள விடயங்கள் எதிர்காலத்தில் இந்த மண்ணின் வளமிக்க பிரஜைகளாக உருவாகப்போகின்ற எமது குழந்தைகளும் வாசித்து அறிந்து இந்த மண்ணின் பண்பாட்டுத்

தொடர்ச்சியை நிலைநாட்டவேண்டும் என்ற எனது இலக்கு இதனூடாக நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் இந்த நூலைக் கையளிக்கின்றேன்.

இலங்கையின் உச்சிப் பகுதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதேசமாக விளங்கும் வடமராட்சி பின்வரும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய பிரதேசங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றமையால் வடமராட்சியின் தனித்துவம் இன்றும் பேசப்பட்டு வருகின்றது. ஆயினும் வடமராட்சி வடக்கு பிரதேசசெயலகப் பிரிவில் உள்ள வல்வெட்டித்துறை நகர அபிவிருத்தியின் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் ஒப்பு நோக்கும் பொழுது ஒரு பாரிய தலைமுறை இடைவெளி காணப்படுவதை வெளிப்படையாகவே அவதானிக்கமுடிகின்றது.

- வடமராட்சி வடக்கில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகளையும், பருத்தித்துறை பிரதேச சபையின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாக உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் காணப்படுகின்றன.
- வல்வெட்டித்துறை நகரசபையானது, மேற்கே தொண்டைமானாறு தொடக்கம் கிழக்கே பொலிகண்டி, வடக்கே வளம் நிறைந்த கடலும், தெற்காக கொம்மாந்தறை வல்வெட்டியை உள்ளடக்கிய விவசாய பிரதேசமும் உள்ளடக்கியதால் ஒரே பார்வையில் விவசாய பிரதேசம், கடல் சார்ந்த பிரதேசம் ஆகிய இரு வெவ்வேறு சூழல்களை அவதானிக்கும் வகையில் வல்வெட்டித்துறை பிரதேசம் அமைந்துள்ளது.
- இரு வெவ்வேறு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக வல்வெட்டித்துறை விளங்குகின்ற காரணத்தினால் கடல் உணவுகளின் மூலமும், விவசாய உற்பத்திப் பொருட்களின் மூலமும் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டில் கணிசமான பங்களிப்பைச் செய்யும் ஒரு பிரதேசமாக விளங்குகின்றது.
- சுனாமி, புயல், வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அழிவுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் இயற்கையான பாதுகாப்பு அரண்களைக் கொண்டிருப்பதால் வெள்ளப் பெருக்குகளினாலோ அல்லது சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலோ பாரிய அழிவுகள் ஏற்படுத்தப்படவில்லை.
- கல்சைட் போன்ற கனியவளங்களை அதிகளவில் கொண்டிருப்பதும், அரிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பவளப்பாறைகள் வல்வெட்டித்துறையின் கரையோரங்கள் கொண்டிருப்பதும் அதன் இயற்கை அழகுக்கு கட்டியம் கூறி நிற்கின்றது. ஆனால் இன்று அதிகளவிலான பவளப்பாறைகள் சுனாமி தாக்கத்தினாலும், சட்டவிரோத மண் மற்றும் பவளப் பாறைகளின் அகழ்வினாலும் அகற்றப்படுவதுடன் அதிகளவிலான கனிய மணல், கட்டிடத் தேவைகளுக்காகவும், வீதிகள் அமைப்பதற்காகவும் அகற்றப்படுவதால், கடற்கரையின் எழிலும், இயற்கை வனப்பும் அழிந்து கொண்டு வருகின்றது.
- ஏனைய பிரதேசங்களைவிட உயர்ந்த கல்வித் தரம் பேணப்பட்டு வருவதற்கு, வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் மிகச் சிறந்த கல்லூரிகள் காணப்படுதல்.
- சரித்திர காலத்தை நினைவு படுத்தும் வகையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்களான வல்லிபுரக்கோயில், செல்வச்சந்நிதி கோயில் ஆகியன காணப்படுகின்றன.

அந்த வகையில் வடமராட்சி வடக்கின் மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் மேற்கு எல்லையாக விளங்கும் வல்வெட்டித்துறையின் முதுசொம்கள் தொடர்பான தகவல்கள் இந்த வெளியீட்டில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அதே வேளை இந்நூல் அரச திணைக்களத்தின் அனுசரணையில், வெளியிடப்படுவதால், வல்வையின் முக்கியமான மதுசொம்களாகக் கருதப்படுகின்ற சில விடயங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. தேபோன்று ஏனைய பிரதேசங்களின் முதுசொம்களும் தனித்தனியான ஆவணங்களாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பல வளங்களைக் கொண்டுள்ள எமது பிரதேசத்தின் அன்றைய சிறப்புக்களையும் எதிர்காலத்தில் மேலும் எவ்வகையில் எமது பண்டைய பண்பாடுகள், பாரம்பரிய சொத்துக்கள் போன்றவற்றை மேம்படுத்தலாம் என்ற ஒரு விழிப்புணர்வையும், எமது மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பல அரிய தகவல்களையும், நூற்றுக் கணக்கான புகைப்படங்களையும் கொண்டதாக, “வல்வையின் முதுசொம்” என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது. இந்நூலை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை பிரதேசங்களின் முதுசொம்களை ஆவணப்படுத்துகை என்ற திட்டத்தின் கீழ் தனது 4 ஆவது வெளியீடாக வெளியிட வந்தமைக்கு பிரதேச செயலரும் கவிஞருமான திரு.இ.த.ஜெயசீலன் அவர்களுக்கும், கலாராசார உத்தியோகத்தர திரு.அ.சிவஞானசீலன் அவர்களுக்கும், வடமராட்சி வடக்கு பிரதேச சபையின் கலாசாரப் பேரவையினருக்கும், இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த கரிகணன் (தனியார்) நிறுவனத்தினருக்கும் மிகவும் தத்ரூபமாகவும், அழகிய முறையிலும் முகப்பு அட்டையை வடிவமைத்துத் தந்த திரு.அல்பேட் பெஸ்ரியன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேவேளை முன்னர் வெளிவந்த எனது நூல்களை வாசித்து ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கும் எனது அன்புக்கினிய வாசக நெஞ்சங்களுக்கும், எனது நூல்களின் அறிமுகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, இலக்கிய உலகிற்கு வெளிப்படுத்தி வரும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

**வல்வை. ந. அனந்தராஜ்**
**தெணியம்பை**
**வல்வெட்டித்துறை.**

வரலாற்றில் நினைவு கூரப்படவேண்டிய முதுசொம்கள்...!


| | | |
|---|---|---|
| 1. | வல்வெட்டித்துறையும்,நகராட்சி மன்ற வளர்ச்சியும் | 1 - 4 |
| 2. | அருள் ஒளிபரப்பும் வல்வையின் சில ஆலயங்கள் | 5 - 23 |
| 3. | பூம்புகாரை நினைவூட்டும் வல்வையின் இந்திர விழா | 24 - 26 |
| 4. | வல்வெட்டித்துறையின் கல்வி, பண்பாட்டுப் பாரம்பரியம் | 27 - 40 |
| 5. | அறிஞர்கள், மகான்களால் வாழ்த்தப்பட்ட வல்வை நகரம் | 41 - 45 |
| 6. | ஆளநீர் தேங்கி நிற்கும் தீருவில் புட்கரணிக் குளம் | 46 - 47 |
| 7. | துறைமுக அபிவிருத்தியும், கடலோடிப் பாரம்பரியமும் | 48 - 52 |
| 8. | கப்பல் ஓட்டிய தமிழர்கள் | 53 -61 |
| 9. | சுற்றுலாத் தலங்களும் வரலாற்று முக்கியத்துவமுள்ள கட்டடங்களும் | 62 - 67 |
| 10. | சாதனையாளர்கள் வரிசையில் வல்வையின் மைந்தர்கள் | 68 - 90 |
| 11. | உயிர் காக்கும் இந்திராணி வைத்தியசாலை – 1947 | 91 |
| 12. | ஈழத் தமிழர்களின் அரசியல் வாழ்வில் வல்வையின் பங்கு | 91 - 104 |
| 13. | வல்வெட்டித்துறையின் சிறப்பு வாய்ந்த உணவுகள் | 105 - 107 |
| 14. | பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்த தட்டிவான்கள் | 108 - 109 |
| 15. | வல்வையின் பாரம்பரிய கலை, பண்பாட்டு வடிவங்கள் | 110 - 115 |
| 16. | பண்பாட்டைச் சீரழிக்கும், மதுபானசாலைகளே இல்லாத நகரம்: 1994 - 2012 | 116 - 118 |
| 17. | வல்வெட்டித்துறை அபிவிருத்தியும், பிரஜைகள் குழுவும் | 119 - 122 |
| 18. | வரலாற்று ஆவணக் காப்பகம் | 123 - 124 |
| 19. | வரலாற்றின் மறக்க முடியாத சில நினைவுகள் | 125 - 129 |
| 20. | வளக்கிலிருந்து அருகிவரும் முதுசொம்கள் | 130 - 138 |
| 21. | வல்வை எழுத்தாளர்களின் நூல்கள் மற்றும் ஆய்வு நூல்கள் | 139 - 143 |

# வல்வெட்டித்துறையும், நகராட்சி மன்ற வளர்ச்சியும்

- வல்வெட்டித்துறை (Valvettithurai) இலங்கையின் வடகிழக்குக் கரையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள நகரம். இது யாழ்ப்பாண நகரில் இருந்து வடக்கே 16 மைல் தூரத்திலும், (30km) கிழக்கே 9 மைல் தூரத்திலும், பருத்தித்துறையிலிருந்து மேற்கே 5 மைல் தூரத்திலும், தென்னிந்தியாவிலிருந்து தெற்கே கடல் மார்க்கமாக 30மைல் தூரத்திலுமுள்ள ஒரு துறைமுகப்பட்டினம். இதன் விஸ்தீரணம் 7.68 சதுரகிலோ மீற்றராகவும் (ஒன்றேமுக்கால் சதுரமைல்) உள்ளது.
- 1946ம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசனமதிப்பின்படி 5035 இந்துசமயத்தவர்களும் 85 கிறிஸ்தவசமயத்தவர்களும் இருந்துள்ளார்கள்.
- இலங்கையின் வடபாகத்தின் கடற்கரையோரத்தில் கிழக்கே ஊறணியில் இருந்து மேற்கே ஊரிக்காடு வரையும் தெற்கே வல்வெட்டி, கம்பர்மலை கொம்மந்துறை ஆகிய கிராமங்களும் அடங்கப்பட்ட 250 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதாக இருந்த சிறிய பட்டினம் வல்வெட்டித்துறை. இன்று பழமை வாய்ந்த கந்தவனக் கடவை தொடக்கம் தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஈறாகவும் மூன்றரை மைல் நீளமும் அரை மைல் அகலமும் உள்ள வல்வெட்டித்துறை நகர சபையாக மிளிர்கின்றது.
- ஒவ்வொரு கிராமமும் தமக்கென்று பாரம்பரிய கலாச்சாரம், அரசியல், பண்பாடுகளைக் கொண்ட கதைகளை தாங்கியுள்ளது போன்று வல்வெட்டித்துறைக்கும் எனத் தனித்துவமான பாரம்பரியமும் வழக்காறுகளும் பண்பாடுகளும் இருந்து வந்திருக்கின்றன.
- இங்கு வசிப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள் ஆவர். பெரும்பாலும் இந்து, மற்றும் ஒரு சிலர் கத்தோலிக்க மதத்தையும் சேர்ந்தவர்கள். விவசாயம், கடற்றொழில், வணிகம், கப்பல் தொழில் மற்றும் அரசுத்துறை சார்ந்த பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். இங்குள்ளவர்கள் தமிழநாட்டின் கோடிக்கரை, வேதாரண்யம் போன்ற பகுதிகளுடன் கப்பற் தொடர்புகளை வைத்திருந்த போதும் இப்போது நிலவும் சூழ்நிலைகளால் இத்தொடர்புகள் மிகவும்

குறைந்துள்ளன. ஆயினும் வல்வெட்டித் துறையில் பின்பற்றப்படும் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள், உணவுமுறைகள்என்பன இந்தியத் தொடர்புகளின் காரணமாக நெருங்கிய தொடர்புடையனவாக இருக்கின்றன.

- இங்கிருந்தே உள்ளூரில் உள்ள வேப்ப மரத்தினால் தயாரிக்கப்பட்ட அன்னபூரணி என்ற பாய்க்கப்பல் 1933 ஆம் ஆண்டில் அத்திலாந்திக் பெருங்கடலைக் கடந்து அமெரிக்காவின் மசபசூசெட்சை வந்தடைந்தது.
- இலங்கையில் தமிழர்கள் என்ற ஒரு இனம் வாழ்ந்து வருவதை உலகுக்கு அறியத் தந்தவரும், அவர்களது பிரச்சினைகளை உலகுக்கு அறியத் தந்தவருமான திரு. வே. பிரபாகரன் போன்ற தலைவர்களைப் பெற்றெடுத்த மண் என்ற ஒரு பெருமையைக் கொண்ட நகரம்.
- பிரபல கோயில்களான வல்வை வைத்தீஸ்வரன் ஆலயம், முத்துமாரி அம்மன் ஆலயம், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயம், பொலிகண்டி கந்தவனக் கடவை ஆலயம் என்பனவற்றுடன் சுமார் 33 இந்து ஆலயங்களும் புனித செபஸ்தியார் என்ற ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் காணப்படுகின்றன.
- உலகளாவிய ரீதியில், பெயர் பெற்ற தமிழ் விக்கிபீடியாவில் வல்வெட்டித் துறை தொடர்பாக குறிப்பிடப்பட்ட தகவல்கள் வல்வெட்டித்துறையின் முக்கியத்துவத் தைக் காட்டுகின்றது.

**வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பரிணாம வளர்ச்சி**

1947ம் ஆண்டுமுதல் பட்டினசபையாக இயங்கிவந்த ஆதி வல்வை இன்று நகரசபையாக இயங்குகிறது. பட்டினசபைக்காலத்தில் எல்லைகள் வகுக்கப்பட்டு இவைகள் ஐந்து வட்டாரங்களாகப் பிரித்துக் கோயில் வட்டாரம், பஜார் வட்டாரம், ரேகுவட்டாரம், வாடிவட்டாரம், வேவில் (வல்வெட்டி) வட்டாரம் ஆகிய பெயர்களில் வாக்காளர் தேர்தல் மூலமாக தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் பட்டினசபை வேலைகளைக் கவனித்து வந்தார்கள். இச்சபையின் முக்கிய பணிகள் சுகாதாரம், சந்தை, தெருக்கள், ஒழுங்கைகள் பரிபாலித்தல், மின்சாரம் முதலியனவாகும். வல்வைக்கு ஆரம்பகாலத்திலிருந்து மின்சாரம் பருத்தித்துறை நகரசபையின் மின் பிறப்பாக்கி மூலம் வழங்கிவந்தனர். பின்னர் இரண்டு பாரிய இயந்திரங்களைச் சொந்தமாக வாங்கி நவீனசந்தையாக மாற்றிய பழையசந்தையை ஒரு புறத்தில் இயக்குவித்து மின்சாரத்தை வழங்கினார்கள். பின்னர் 1971ம் ஆண்டளவில் “லக்சபானா” மின்சாரம் தென்பகுதியிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு வந்த போது வல்வெட்டித்துறைக்கு மின்சாரத்தை அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வல்வைப் பட்டினசபையின் தலைவர்களாக இருந்து அளப்பரிய சேவைகளை ஆற்றியவர்களாக,

திரு. ஐ. திருப்பதி(1947) திரு.ச. நடனசிகாமணி(1953) திரு. சோ. சுந்தரலிங்கம்(1956)

திரு. இ. அப்புக்குட்டியாபிள்ளை(1959), திரு. க. சபாரத்தினம்(1960), திரு. க. சு. கதிரிப்பிள்ளை

(திரு. சபாரத்தினம் 1961ம் ஆண்டு சத்தியாக்கிரக தமிழினப் போராட்டப் பங்களிப்பின்போது தடுப்புக்காவலில் இருந்தபோது ஒரு வருடம் பதவியில் இருந்தார்) திரு. வி. இரத்தினவடிவேல்(1968) திரு. ச. ஞானமூர்த்தி(1979), திரு. து. நவரத்தினம்(1971) திரு. க. சிவாஜிலிங்கம்(1999) திரு. ந. அனந்தராஜ் (2011) ஆகியோர் விளங்குகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம் அவர்களது முயற்சியால் பட்டின சபையானது 01-01-1971 முதல் நகரசபை தரத்திற்கு உயர்த்தப்பட்டது. அதன் பிரதேசங்களின் எல்லைகளாவன.

**வடக்கு :-** பாக்குநீரிணை தொடுவாய்கடல்

*கிழக்கு :-* கந்தவனக் கடவை ஆலயத்திற்கு மேற்கேயுள்ள கற்பெரும்பாதை

**மேற்கு :-** தொண்டைமனாறு செல்வச்சந்நிதி கோயிலை உள்ளடக்கிய பகுதி

**தெற்கு :-** பொலிகண்டி மேற்குப்பகுதி வல்வெட்டிக் குறிச்சி, ஊரிக்காடு மயிலியதனைக் குறிச்சி கெருடாவில் குறிச்சி

ஏறக்குறைய 4000 குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். இந்த எல்லையை நிர்ணயித்த போது பொலிகண்டி மேற்குக் குறிச்சியைச் சேர்ந்த சிலரும், மயிலியதனைப் பகுதியைச் சேர்ந்த சிலரும் தாங்கள் வல்வையுடன் இணைய விருப்பமில்லை எனப் பிடிவாதமாக இருந்த போது திரு.அ.அமிர்தலிங்கம், திரு.மு.சிவசிதம்பரம், ஆகியோர் அவர்களை அழைத்து இணையவேண்டிய அவசியத்தையும், இதனால் பிரதேசமும் அபிவிருத்தி அடையும் என்பதையும் கூறி அவர்களைத் திருப்திப் படுத்தியதால் முன்நிர்ணயித்த எல்லைகளே உறுதிப் படுத்தப்படன.

பட்டினசபை வட்டாரங்கள் சிறிய மாற்றங்களுடன் ஆறு வட்டாரங்களாகவும், புதிதாகச் சேர்க்கப்பட்ட பொலிகண்டி ஒரு வட்டாரமாகவும், தொண்டமானாறு ஒரு வட்டாரமாகவும், மயிலியதனை ஒரு வட்டாரமாகவும் ஒன்பது அங்கத்தவர்கள் கொண்ட சபையாயிற்று நகரசபையின் தரத்தைப் பெற்றபின் நடைபெற்ற முதலாவது தேர்தலில் திரு. து.நவரத்தினம் அவர்கள் முதலாவது நகரமுதல்வரானார்.

1979ம் ஆண்டு முதல் கட்சி அடிப்படையில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் திரு.ச.ஞானமூர்த்தி அவர்களைக் தலைவராகக் கொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணி நகரசபையைக் கைப்பற்றியது. அப்போது பாராளுமன்ற உறுப்பினர் திரு.த.இராஜலிங்கம் அவர்களின் உதவியாலும் நகரசபை அலுவலகக் கட்டிடம் காணி கொள்வனவு, நவீனசந்தை, குழாய் நன்நீர் திட்டம் ஜேர்மன் நாட்டு G.T.Z நிறுவனத்தின் உதவியாலும் தொண்டமானாறு, பொலிகண்டி, கம்பர்மலை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கல் ஆகிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

தனித்தமிழ்நாடு கோரும் எவரும் அரசமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து சத்தியப் பிரமாணம் செய்ய முடியாத நிலையில், தமிழர்விடுதலைக் கூட்டணி சார்பில் பதவிவகித்த திரு.ச.ஞானமூர்த்தி அவர்கள் பதவி துறந்தார். அவரது பதவிக்காலத்தில் 1979 - 1983ல் நகரசபை புதுப் பொலிவு பெற்றது. அதன்பின்னர் 1998ம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்டிருந்த முரண்பாடுகளின் காரணமாக திரு.க.சிவாஜிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரமுடியாத ஒரு சூழல் நிலவியதால், தமிழகத்தில் சுமார் 12 வருடங்கள் தங்கி வாழ்ந்து மீண்டும் சூழல் நிலைமைகளைச் சாதகமாக்கிக் கொண்டபின்னர் வல்வெட்டித்துறைக்கு வந்து சேர்ந்ததார். அதனைத் தொடர்ந்து, 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற நகராட்சிமன்றத் தேர்தலில் சாதாரண பொது மக்கள் எவரும் தேர்தலில் போட்டியிட முன்வராத நிலையில், ரெலோ இயக்கத்தின் சார்பில் போட்டியிட்டு தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அவரது வெற்றிக்காக முழுமூச்சாக நின்று உழைத்தவர்களில் ஆதிகோயிலடியைச் சேர்ந்த இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவரது காலத்தில் சிவில் நிர்வாகம் செயலிழந்த நிலையில், சட்டம் ஒழுங்கு என்பன முறையாகப் பின்பற்றப்படாததால், ஒன்பது உறுப்பினர்கள் இருக்கவேண்டிய நகராட்சி மன்றத்தில், அவருடன் சேர்த்து, இப்பிரதேசத்தைச் சாராத திரு.சந்திரசேகரன் என்பவர் மட்டுமே உப

தலைவராக இருந்து மூன்று வருடங்களாக நகரசபையின் முழுத் தீர்மானங்களையும் எடுத்து வந்தனர்.

2002 ஆம் ஆண்டில் நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டு வரை விசேட ஆணையாளர்களின் கீழ் நிர்வாகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, நீண்டகால இடைவெளியின் பின்னர், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வந்தபோது, 2011இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்தும், ரெலோ இயக்கத்தில் இருந்தும் விலகியிருந்த திரு. க. சிவாஜிலிங்கமும், தமிழ் தேசியக் கூட்டைமப்பின் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவரும் இத்தேர்தலில் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை பொதுமக்களினதும், இளைஞர்களினதும் வேண்டுகோளின் பேரில் திரு. ந. அனந்தராஜ் அவர்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வல்வெட்டித்துறையின் 11 வது தலைவராக தெரிவு செய்யப்பட்டார் அதில் அவரை விட வாக்களைப் பெற்ற திரு. க. சிவாஜிலிங்கம் நகரசபையின் தலைவர்பதவியை முதல் ஆண்டில் தன்னிடமே தரவேண்டும் என்றும் தலைவர்பதவி தரப்படாவிட்டால் நகர சபையை முடக்கப்போவதாக விடுத்த இறுக்கமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில், அவர் உப தலைவர் பதவியை ஏற்க மறுத்ததால், அவருக்கு அடுத்த பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவரை தேர்தல்கள் திணைக்களம், உப தலைவராக நியமித்தது. அச்சுறுத்தல்கள் நிலவிய அந்த நிலையிலும் எந்த ஒரு காலத்திலும் இல்லாத வகையில், 2012 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுமார் 83 கோடி ரூபாவுக்கான அபிவிருத்தி வேலைகள் இடம் பெற்றமையால், இன்று வல்வை மாநகர், புதுப்பொலிவுற்று விளங்குகின்றது. ஆயினும் அந்தச் சபையின் பதவிக்காலம் 2015 ஆம் ஆண்டு வரை இருந்தபோதும், சில உறுப்பினர்களின் நகரசபையின் தலைமைப் பதவிக்கான போட்டிகள் மற்றும் அவர்களது உட்கட்சி மோதல்களினால், சபை நடத்தமுடியாத நிலை தொடர்ந்தும் நிலவியதால் நகரபிதாவின் வேண்டுகோளை ஏற்று, வடமாகாண முதலமைச்சர் அவர்களினால், 2015 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. அவரது அறிக்கையில் கலைக்கப்பட்ட பொழுது முதலமைச்சரின் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை நகர சபை மிகவும் சிறப்பாகவும் எவ்வித ஊழலோ மோசடிகளோ இல்லாத நிலையில் சிறப்பாக இயங்கி வந்தபோதும், சில உறுப்பினர்களின் ஒத்துழைப்பின்மையால் சபை இயங்கமுடியாத நிலையில் உள்ளது" என 19.02.2015 அன்று வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிக்கையில் முதலமைச்சர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பதினொரு நகர பிதாக்களைச் சந்தித்த வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் காலத்திற்குக் காலம் பதவி ஏற்ற தலைவர்கள் அந்தந்தக் காலத்தின் சபைகளின், யாரோ ஒரு உறுப்பினரால் தொடர்ந்தும் அச்சுறுத்தப்பட்டே வந்தது போல் 11 வது நகர சபையின் தலைவரும் அச்சுறுத்தலுக் குள்ளாக்கப்பட்டே வந்தமையானது ஒன்றும் புதிய விடயமல்ல.

# அருள் ஒளிபரப்பும் வல்வையின் சில ஆலயங்கள்

**வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்கு 34 இந்து ஆலயங்களும், ஒரு கத்தோலிக்க தேவாலயமும் உள்ளன. இவற்றின் விரிவான வரலாறுகள் அந்தந்த ஆலயங்களின் சிறப்பு மலர்களில் இடம் பெற்றுள்ளதால், அவை தொடர்பான தகவல்களைத் தவிர்த்து இவற்றுள் சில ஆலயங்கள் பற்றிய வரலாறுகள் மட்டும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.**

- **ஆதி வைரவர் கோயில் -**

வல்வெட்டித்துறையில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாக இருப்பதால் இவ்வாலயம் ஆதிகோயில் என அழைக்கப்பட்டது. இவ்வாலயம் 1825 ஆம் ஆண்டு பொதுமக்களால் கட்டப்பட்டதாக கச்சேரிப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் பழமைவாய்ந்த ஒரு நாவல் மரத்தின் கீழ் சுற்றி வர பனை தென்னைகள் நிறைந்த ஒரு இரம்மியமான சூழலில், சிறு கொட்டில் ஒன்றில் அமைக்கப்பட்ட இவ்வாலயத்தின் வைரவசுவாமி மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தியாக விளங்குகின்றார். பின்னர் இக் கொட்டகை ஊரவர்களின் உதவியினால் 1866 ஆம் ஆண்டு கற்கட்டடமாக அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மூலஸ்தான மூர்த்தி கருங்கல்லினால் அமைக்கப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்டது. இவ்வாலயத்தின் வைரவர், ஷேத்திர பாலகர் எனவும் அழைக்கப்படுவர். சிவனின் மூர்த்தமாக விளங்கும் இந்த வைரவர் இந்தப் பிரதேசத்தில் வாழ்கின்றவர்களின் வாழ்வோடு ஒன்றித்துப் போனதால் எந்தச் செயலையும் செய்யும் முன்னர், வைரவரை வணங்கிய பின்னரே மேற்கொள்வது, ஆதிகோயிலடி மக்களின் மரபாக இருந்து வருகின்றது.

- **அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில் -1795**

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோயிலின் வரலாறு என்பது, வல்வையின் கடலோடிப் பாரம்பரியத்துடன் தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றது. வட இலங்கைக்கும், தென்னிந்தியாவுக்கும் இடையில் உள்ள கடற்போக்குவரத்துக்கள், வல்வெட்டித்துறையின் துறைமுகத்தினூடாகவே நடைபெற்று வந்தமையை அன்றைய கச்சேரிப்பதிவுகள் காட்டுகின்றன. தென்னிந்தியாவின் கோடியாக் கரையில் தபால் பொதிகளை தோணிகளில் ஏற்றிக் கொண்டிருந்த பொழுது, ஒரு வயோதிபப் பெண், அங்கே புறப்படுவதற்குத் தயாராக

நின்ற வள்ளக்காரரின் முன்னிலையில் தோன்றி, தன்னை வல்வெட்டித்துறைக் கரையில் கொண்டுபோய் இறக்கி விடுமாறு கேட்டார். அந்தப் பெண்ணை மேலும் கீழும் பார்த்த வள்ளக்காரருக்கோ ஆச்சரியமாக இருந்தது.

"எணேய் ஆச்சி...அங்கை எங்கை போகப் போறியள்....என்ன வேலை இருக்குது.. என்னபெயர்..? என்று கேள்வி க்கு மேல் கேள்வி கேட்டு, அந்த வயோதிபப் பெண்ணை ஏற்ற மறுத்துவிட்டார்களாம். அங்கே நின்ற அந்த வயோதிபப் பெண் விடாப்பிடியாக நின்று,

"நான் வல்வெட்டித்துறைக்குப் போகப் போறன்...எனது பெயர் கைலை மாதரசி" என்றும் கூறியதும்,

வள்ள ஓட்டிகள், அந்த வயோதிப பெண்ணை ஏற்றிக் கொண்டு வல்வெட்டித்தறை கரையில் இறக்கி விட்டனர். கரையில் இறக்கி விட்டதும், அவர்களை ஆசி கூறிவிட்டு வள்ளத்தில் இருந்தும் இறங்கி நடக்கத் தொடங்கி விட்டார். அவர் சென்று மறையும் வரை அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண் டிருந்த வள்ளமோட்டிகளுக்கு வியப்பாகவே இருந்தது.

இந்தச் சம்பவம் நடைபெற்று இரண்டு நாட்களின் பின்னர், தற்போதைய முத்துமாரியம்மன் கோயில் கர்ப்பக் கிரகம் இருக்கும் இடத்தில், இரவு நேரங்களில் ஒரு ஒளி தென்படத் தொடங்கியதும் ஊரவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்தப் பகுதி அடர்ந்த மரங்களினால் சூழப்பட்ட நிலையில் இருந்த காட்டுப் பகுதியில் திடீரென இரவு நேரங்களில் ஒளி தென்பட்டதும், வல்வெட்டித்துறை வாசிகள், அவ்வூர்ப் பெரியவர் ஒருவரின் தலைமையில் அந்த இடத்திற்குச் சென்று பார்த்தபின் பின் அங்கே நின்ற வேப்ப மரத்தின் அண்மையில் ஒரு சிறிய கொட்டிலை அமைத்து வழிபட ஆரம்பித்தனர். இதுவே இன்றைய முத்துமாரியம்மனின் தோற்றுவாயாக உள்ளது.



**அம்மன் கோயில் பழைய கோபுரத்தின் கும்பாபிசேகம் அன்று, வல்வையின் பிரமுகர்களும், ஆச்சாரியார்களும்**

இந்த ஆலயம், போர்த்துக்கேயர்காலத்திற்கு முன்னர், யாழ்ப்பாண அரசர் காலத்தில் தோன்றியிருக்கலாம் என்றே கருதமுடிகின்றது. யாழ்ப்பாணத்தை அரசாண்ட கூளங்கைச் சிங்கை ஆரியன் காலமான 1748ஆம் ஆண்டு காலமாக வரலாற்று ஆசிரியர் குறிபபிடுவதால், இக்காலத்திலேயே இவ்வாலயமும் தோற்றம் பெற்றிருக்கலாம். இவ்வாலயம் கச்சேரிப் பதிவேட்டின்படி, 1795 ஆம் ஆண்டு வேலாயுதர் புண்ணியர் என்பவரால் கட்டப் பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வலயத்திற்கான விக்கிரகங்கள் தென்னிந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டே பிரதிஸ்டை செய்யப் பட்டன.

**காத்தவராயர் வழிபாடு**

வல்வை முத்துமாரியம்மன் ஆலய வழிபாட்டில் "காத்தவராயர்" வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவதால் இது கிராமிய வழிபாடு சார்ந்ததாக, சாதாரண மக்களின் குல தெய்வமாகவும் வழிபடப்பட்டு வருகின்றது. காத்தவராயரின் சிறப்பு வழிபாடாக தேர் உற்சவத்தின் பொழுது, மடை வைத்து விசேட வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

முத்துமாரியம்மனின் கோயிலின் முகப்பில் உள்ள கழுவேறி மரத்திற்கு பல வருடங்களுக்கு முன்னர் மிருகபலி கொடுக்கப்பட்டு வந்தது.

பின்னர் ஆகம முறையில் அமைந்த ஒரு இந்து ஆலயத்திற்கு முன்னால் அந்த பாவச்செயல் மேற்கொள்ளப்படக்கூடாது என்ற வல்வை மக்களின் கோரிக்கையை அடுத்து, மிருகபலி நிறுத்தப்பட்டதுடன், அவை தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட சடங்குகளின் நினைவாக, தேர் உற்சவத்தின் பொழுது, மிருகங்களைத் தானம் செய்து, மஞ்சள் நீர் தெளித்துக் காணிக்கை கொடுத்தபின்னர், மீண்டும் நேர்த்திக்கடன் வைத்தவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. இங்கு காணப்படும் கழுமரமும், காத்தவராயர் வழிபாடும் ஆதியில் வல்வெட்டித்துறையில் கிராமிய முறையிலான வழிபாடுகள் இடம் பெற்றமையைக் காட்டுகின்றது.


**வருடாந்த மகோற்சவம்:**

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் மகோற்சவகாலம் ஆரம்பித்துவிட்டால் ஊரே விழாக் கோலம் பூண்டுவிடும். ஆலய வீதிகளைச் சுத்தம் செய்வதிலும், தெருக்களைக் கூட்டித் தண்ணீர் தெளிப்பதிலும் பெண்கள் ஈடுபடுவர். பதினைந்து நாட்கள் சிறப்பாக நடைபெறும் முத்துமாரி அம்மன் திருவிழாவின் நிறைவுநாள் அன்று, அம்மன் அதிகாலையில் தீர்த்தமாடப் புறப்படும் பொழுது, நெடியகாட்டுப் பிள்ளையார் கோயிலில் இருந்து முத்துமாரி அம்மன் கோயிலுக்கு வருகை தரும் பறைமேளங்களின் நாத ஒலியுடன் முத்துமாரி அம்மனை அழைத்துச்செல்லத் தொடங்கியதில் இருந்து, இந்திரவிழா நிகழ்வுகள் நடைபெறுகின்றன. சித்திரா பௌர்ணமியின் பொழுது காலையிலேயே ஊறணி தீர்த்தக் கடலில் நீராடி நெடியகாடு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலயத்தில் தங்கியிருந்து இரவு 7 மணியின் பின்னர் மீண்டும் தனது ஆலயம் நோக்கித் திரும்புவார்.

இறைவனின்பஞ்சகிருத்தியங்களில்ஒன்றான படைத்தல் தொழிலை உணர்த்தும் வகையில், கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகும் உற்சவம், 15ஆம் நாள் தீர்த்தோற்சவத்துடன் நடைபெற்று நிறைவுக்குக் கொண்டுவரப்படும்.

மேலும் தேர்த்திருவிழாவில் மூன்று அழகிய சித்திரத் தேர்களில் வீதியுலாவரும் காட்சி அடியவர்களை மெய் சிலிர்க்க வைக்கும் இவற்றில் பெரிய சித்திரத் தேரில், எழுந்தருளி மூர்த்தியாக விளங்கும் முத்துமாரியம்மனும், மற்றைய தேர்களில் முறையே பிள்ளையார், முருகன் ஆகிய விக்கிரகங்களும் பவனிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.





**புண்ணிய மணியகாரர் என்பவரால் அமைக்கப் பட்டமுத்துமாரி அம்மன் கோயிலின் முன்னைய இரு தோற்றங்கள்**


**முத்துமாரி அம்மன் திருமண மண்டபம்**

இன்று வல்வை முத்துமாரியம்மனுக்கு அழகிய திருமண மண்டபம் அமைக்கப்பட்டு நவீன முறையில் காட்சியளிப்பது, வல்வெட்டித்துறைக்கு மேலும் அழகூட்டிக் கொண்டிருக்கின்றது. நகராட்சி மன்றத்தின் புதிய கட்டிடத்தையும், திருமண மண்டபத்தின் கட்டிடத்தையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும் பொழுது ஒரு கப்பலைப் பார்ப்பது போல்

அற்புதமாக இருக்கும். "முத்துமாரி அம்மன் கோயில் சரித்திரம்" என்ற நூலை எழுதி தனது

**நகராட்சி மன்றமும், திருமணமண்டபமும்**

**சங்ககால மரபை விளக்கும் புலி வேட்டைத்திருவிழா**





**புலிவேட்டைத் திருவிழா:**

முத்துமாரி அம்மன் கோயிலின் பன்னிரண்டாம் திருவிழாவின் இரவுத் திருவிழா சங்ககாலத் தமிழர் பண்பாட்டியலையும் வீரத்தையும் எடுத்துக் காட்டும் வகையில் சங்க இலக்கியமான புறநானூற்றில் இடம் பெறும், புலியை முறத்தினால் அடித்துத் துரத்திய ஒரு வீரத்தமிழச்சியின் வரலாற்றைக் கூறும் விழாவாக அமைந்ததால், அதனை "புலிவேட்டைத் திருவிழா" என அழைப்பர்.

"முறம் எடுதது்ப் புலி அடித்த தமிழகம்" என்ற பாடல் அடிகளுக்கு உயிர் கொடுப்பது போல், அன்று இரவுத் திருவிழாவில் முத்துமாரி அம்மன், முருகன், பிள்ளையார் ஆகிய மூன்று விக்கிரகங்களும், படல் சாத்துப்படி வடிவில் அலங்கரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் தனித்தனி இடப வாகனங்களில் வீதியுலா வரும் பொழுது, தெற்கு வீதியில் இருந்து புலிவேட்டை ஆரம்பமாகும். இதில் புறநானூற்றில் இடம்பெறும் பாடலுக் கேற்ப "வேடுவன் ஒருவனைப் புலி பிடித்து இழுத்துச் செல்லும் பொழுது, அவனுடைய மனைவி எவ்வித பதட்டமும் அடையாது, தனது குடிசையினுள் இருந்த சுளகை எடுத்து வந்து ஆவேசம் கொண்டவளாக, சுளகினால் அடித்து அடித்து அந்தக்காட்டுப் புலியைத் துரத்தி, தனது கணவனை மீட்டுக் கொண்டு வரும் அந்த வீரமிக்க வரலாற்றையே 12ஆம் திருவிழாவின் "புலி வேட்டைத் திருவிழா"வில் இளைஞர்கள் தத்ரூபமாகப் பாவனை செய்து காட்டுவார்கள். அன்றைய இரவுத் திருவிழவின் பொழுது புலி வேட்டைத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதேஏராளமான வர்ண வாண வேடிக்கைகளும், சிலம்படி, கோலாட்டம் போன்ற கிராமியக் கலை வடிவங்களும் இடம் பெறுகின்றன.

- **தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் -1897**

வடமராட்சி பிரதேச எல்லைக்குள் அரசாங்கத்தினால் வர்த்தமானிப் படுத்தப் பட்டதுமான முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் பிரபல்யமான இரு ஆலயங்களைக் கொண்டிருப்பது ஏனைய பிரதேசங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பியல் பாகும். வடமராட்சியின் மேற் காக தொண்டைமானாற்றங்கரையுடன் அமைந் துள்ள செல்வச்சந்நிதி முருகன் ஆலய மும், கிழக்காக ஆரப்பரிக்கும் கடலுடன் சார்ந்த வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் அமைந்துள்ளது. இவ்விரு ஆலயங்களையும் தரிசிப்பதற்காக நாடளாவிய ரீதியில் வருடாந்தம் பல ஆயிரக் கணக்கான மக்கள் வருகை தருவதால் இப்பிரதேம் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் ஆகமம் சாராத ஒரு ஆலயமாகவும், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், ஆகமம் சார்நத வைஷ்ணவ ஆலயமாகவும் விளங்குவதால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாக விளங்குகின்றது.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் தோற்றமானது, 16 ஆம் நூற்றாண்டில் இருந்தே ஆரம்பமாகியுள்ளது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். இவ்வாலயம், பண்டைய தமிழர்களின் அரசியல் மற்றும் பொருளாதார சமூக வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும் அதற்கு அப்பால் சிவபெருமானுக்கும், சுந்தரமூர்த்திநாயனாருக்கும் இடையில் இருந்த தோழமை உறவு போல், சந்நிதி முருகனுக்கும், அவனை வணங்கச் செல்லும் அடியவர்களுக்கும் இடையிலான ஒரு தோழமையுடன் கூடிய பக்தி வரலாற்றுடன் தொடர்புடையதாகவும் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கு மேற்குப்புறமாக ஓடிக் கொண்டிருக்கும் தொண்டைமான் ஆறு “வல்லிநதி; என்ற பெயருடன் விளங்கியது. இந்நதியின் தொடு வாயை தொண்டைமான் என்னும் அரசன் வெட்டி கடலுடன் சங்கமிக்க விட்டதால், அன்று முதல் இந்நதியின் பெயர் “தொண்ட மானாறு; ஆகிவிட்டது.

இவ்வாலயத்திற்கு பக்திமணம் கமழும் ஒரு வரலாறும் உண்டு. தென்னிந்தியாவில் உள்ள முருகன் திருத்தலங்களில் ஒன்றான, திருச்செந்தூர் என்னும் தலத்தில் இருந்து முருகன், மகேந்திரபுரியை ஆண்டுவரும் சூரபத்மனிடம் வீரவாகுதேவரைத் தூது அனுப்பினார். தூதுவனாக வந்த வீரவாகு தேவர் முதன்முதலாக வட இலங்கையின் வல்லிநதிக் கரையில் உள்ள கல்லோடையில் காலடி எடுத்து வைத்தார். வீரவாகு தேவரது பாதச்சுவடுகள் இன்றும் ஆலயத்தின்





தொண்டைமான் ஆறும்  செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆரம்பகாலத் தோற்றமும்

வடக்குப் பக்கத்தில் பாதச்சுவடுகளாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. வீரவாகுதேவர், மகேந்திரபுரிக்குச் சென்று சூரபத்மனைச் சந்தித்தபின்னர், திரும்பி வரும் வழியில் மீண்டும் இந்நதிக்கரைக்கு வந்தார். வந்தபொழுது சந்திக் காலமாகி விட்டதால், முருகனுக்குரிய சந்திப்பூஜையை செய்தபின்னர், மீண்டும் திருச்செந்தூரை அடைந்தார். இதனால், இந்தத் தலம் மகத்துவம் வாய்ந்த முருகன் சந்நிதியாக விளங்குகினறது. செல்வச்சந்நிதி ஆலயத்தின் அன்றைய தோற்றம் தமிழ் மக்களின் பாரம்பரிய வழிபாட்டு முறையை வெளிப்படுத்தக்கூடிய வகையில் மடாலய அமைப்பில் அமைந்திருந்தது. அப்பொழுது இருந்த எளிமையான தோற்றம் இன்று, மாற்றப்பட்டு கால ஓட்டத்தில் படிப்படியாக ஆகமம் சார்ந்த தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில், சிற்ப முறைகளைக் கொண்டதாக விளங்குகின்றது.

**ஆலயத்தின் தோற்றுவாய்:**

செல்வச்சந்நிதி ஆலயத்தின் தோற்றமானது அற்புதமான வரலாற்றைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. பக்தி வைராக்கியத்துடன்

இறைவனை வணங்குபவர்களுக்கு, இறைவன் சாதாரண மனித வடிவத்திலும் தோன்றி காட்சியும் கொடுத்து, அருளும் வழங்குவார் என்பதற்கு உதாரணமாக செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. 19ம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஆற்றங்கரை ஓரத்தில் வாழ்ந்து வந்த பரதகுலத்தவர்களுள் மூத்தவரும் பக்திமானுமாகிய மருதர் கதிர்காமர் என்பவர் நாள்தோறும் இவ்வாற்றில் மீன்பிடித்து தனது அன்றாட வாழ்க்கையை நடாத்தி வந்தார். இவர் மீன்பிக்கச் செல்லும் முன்னர் ஐராவசு முனிவர் தியான வழிபாடு செய்து தவம் இயற்றிய இடமாகிய பூவரச மரத்தின் சமாதியை வணங்கியே மீன்பிடிப்பது வழக்கம். தனக்குப் பூஜை செய்வதற்கு கதிர்காமரே ஏற்றவர் என எண்ணிய முருகப் பெருமான், மருதர் கதிர்காமரைத் தனது தொண்டனாக்கிக்கொள்ள விரும்பினார். அதனால் தன்னை நாள்தோறும் வணங்கியபின்னர், ஆற்றங்கரையில் மீன்பிடிக்கும் கதிர்காமர் முன்பாக ஒரு சிறுவன் உருவில் தோன்றிய முருகன், “கதிர்காமா என்னிடம் இக்கரைக்கு வா” என்று அழைத்தார். இதனைக் கேட்ட கதிர்காமர் ஆற்றின் மேல் இருந்து கரைக்கு வந்தார். இவ்வாறு வந்து சேர்ந்தவரை இறைவன் கூட்டிச்சென்று பூவரசமரத்தின் அடியையும் அதன் அருகில் வீரவாகுதேவர் சந்தி கடன் செய்த இடத்தையும் சுட்டிக் காட்டி “இதில் பூஜை வழிபாடு செய்ய எல்லா வகையிலும் நீயே ஏற்றவன்” என்று கூறி மறைந்தருளினார். இதைக்கண்ட கதிர்காமர் கலக்கமுற்று “கந்தா என்ன சோதனை... என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? நானோ பரதகுலத்தவன் எனது தொழிலுக்கும் உனது பூஜை வழிபாட்டிற்கும் இடையில் எவ்வளவு தூரம் வித்தியாசம் உள்ளது. எங்களுக்கு இது ஒவ்வாது; எனக் கண்ணீர் மல்க கதறிய ழுது மறுத்து நின்றார். இதைக் கண்ட கந்தப் பெருமான் “யாம் இருக்கப் பயமேன்;; எனக் கூறி பூஜை வழிபாடு செய்யும்படி கூறிய போதும் வழிபாட்டு முறை தெரியாது எனக் கூறி மறுத்தார். அப்போது எம்பெருமான் “நீ புனித வல்லிநதியில் மூழ்கி நான் அழைத்த போது இக்கரைக்கு வந்தவுடன் உனது பாவங்கள் எல்லாமே கழுவப்பட்டு விட்டன என்னுடன் வா, நான் காட்டும் பூசை முறையில் வாய்கட்டி மௌனபூஜை செய்வாய்” எனக்கூறி கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளையெல்லாம் காட்டி அருளினார்.

**ஆலம் இலைகளில் அமுது படைக்கும் மரபு:**

மருதர் கதிர்காமர் நாள்தோறும் வாழை யிலையில் உணவு படைத்து உண்பது வழக்கம். ஒரு நாள் இவர் அமுது செய்து உண்பதற்கு உட்கார்ந்தபோது ஓர் அசரீரி வாக்கு இவர் காதில்விழுந்தது. “உனது அமுதை நீ உண்பதற்கு முன்னர் ஆற்றங் கரையில் உள்ள பூவரச மரத் தின் அருகாமையில் ஓர் அடியார் மிகுந்த பசியால் களைப்புற்றிருக்கின்றார். அவருக்கு திருவமுது செய்தபின் நீ உண்பாய்” எனக் கூறியது. இதைக் கேட்ட கதிர்காமர் தனது அமுதை அப்படியே பொங்கிய பானையுடன் கொண்டு வந்து பூவரச மரத்துக்குப் பக்கத்தில் பார்த்த பொழுது உண்பதற்குரிய ஆலம் இலைகள் போடப்பட்டு உண்பதற்கு எவரும் இல்லாதிருப்பதைக் கண்டார். அவர் இறைவனை நோக்கி மனம் நொந்து இரந்து பார்த்த போது “கதிர்காமர்!..... எனக்கு உனது திருவமுதைப்படை என்னுடன் மேலும் 63 பேர் உணவருந்த வருவார்கள். அவர்களுக்கும் எனக்கும், உனக்கும் சேர்த்து 65 ஆலம் இலைகளில் அமுதைப் படைப்பாய்....அதன் பின்னர் யாம் உண்போம்” என்று கூறக் கேட்ட கதிர்காமர், முருகனின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில், பயற்றங்கறியும் பச்சரிசி அமுதும், பொங்கப்பட்டு கோயிலுக்குள் பொங்கும் பானையுடன் கொண்டு சென்று படைப்பதற்குப் பின்பற்றப்பட்ட அந்த நடைமுறையே, இன்றும் 65 ஆலம் இலைகளில் பச்சை அரிசி பொங்கலும், பயற்றங்கறியும் படைக்கின்ற மரபு இருந்து வருகின்றது. இதனை யாரும் “பிரசாதம்” என்றோ அல்லது

"பொங்கல்" என்றோ அழைப்பதில்லை. மாறாக "மருந்து" என்றே அதனை அழைத்து பயபக்தி யோடு உட்கொள்வார்கள்.

**மூர்த்தி, தலம், விருட்சம் கொண்ட ஆலயம்:**

சந்நிதி ஆலயத்தின் தோற்றம், அமைப்பு, வழிபாட்டு முறை எல்லாமே வித்தியாசமான முறையில் காணப்படுகின்றன. பெரிய இராஜகோபுரங்களோ, தூபிகளோ, கட்டடங்களோ, விமானங்களோ சந்நிதியில் இல்லை. ஆலயமுகப்பில் நந்தியும், ஆலயத்தைச் சுற்றிவர, மருத மரங்களும், மேற்கே புனித தீர்த்தம் எனக் கூறப்படும் தொண்டைமான் ஆறும் ஆலயத்திற்கு அழகூட்டிக் கொண்டிருக் கின்றன. ஆலயத்தின் எந்தத் திசையில் இருந்து பார்த்தாலும், முருகனையும், தீபாராத னையையும் பார்க்கக்கூடிய அளவுக்கு, ஆலயச் சுவர்கள் குறுகியதாக அமைந்துள்ளன. இங்கு முருகப் பெருமான் வேல் வடிவத்திலேயே மூல மூர்த்தியாகவும், எழுந்தருளியாகவும் காட்சி கொடுக்கின்றார். இவ்வேலில் சிகண்டி முனிவர், தன்னைத் தாக்க வந்த யானைக்கு வெற்றிலையைக் கிள்ளி விசியபோது, அது வேலாக மாறி யானையைத் தாக்கியதை எடுத்துக் காட்டுமுகமாக எழுந்தருளி வேலில் வெற்றிலையின் நுனி பதிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். தொண்டைமானாறு செல்வச்சந்நிதியின் மேற்குப்புறமாகச் செல்லும் வல்லியத்தேவன் என்பவனால் வெட்டப்பட்ட ஆறு, புனிதம் நிறைந்ததாகக் கருதப்படுகின்றது. ஆலயத்திற்கு வருபவர்கள் முதலில் இங்கு நீராடிய பின்னர், அதற்கு எதிர்ப்புறமாக ஆலயத்துடன் உள்ள நன்னீர்க் கேணியில் நீராடிய பின்னரே ஆலயத்திற்குச் செல்வார்கள். இவ்வாலயத்தின் தலவிருட்சமாக பூவரச மரம் அமைந்தள்ளது. முருகப் பெருமானும், மருதர் கதிர்காமருக்கு, இந்தப் பூவரச மரத்தின் கீழேயே முதன் முதலில் காட்சி கொடுத்ததாக ஒரு வரலாறு உண்டு.


**அன்னதான மடங்கள்:**

இவ்வாலயச் சூழலில் யுத்தகாலத்திற்கு முன்னர் 48 வரையான அன்னதான மடங்கள் இருந்திருக்கின்றன. பின்னர் அவற்றில் பெரும்பாலானவை யுத்தத்தினால் அழிக்கப் பட்ட நிலையில் தற்பொழுது புனரமைக் கப்பட்டுள்ள சுமார் பதினைந்து மடங்கள் மூலம் தினமும் வழங்கப்படும் அன்னதானம் ஆலயத்திற்கு எந்த நேரத்திலும் வருகை தரும் அடியவர்களின் பசி போக்குவதால் "அன்னதானக் கந்தன்" என்றும், காவடிகளை எடுத்து நேர்த்திக் கடன்களைச் செய்து வருவதால், "காவடிக் கந்தன்" என்றும், கல்லோடைக் கந்தன என்றும், ஆற்றங்கரை யான் என்றும் பல்வேறு நாமங்களால் அழைக்கப்படுகின்றார்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் யுத்தத்திற்கு முன்னர், ஆற்றங்கரை ஓரமாக இருந்து அன்ன தானப் பணிகளை மிகவும் சிறப்பாக மேற்கொண்டு வந்த ஆனந்தா ஆச்சிரமத்தில் வாழ்ந்த மயில் வானம் சுவாமிகளின் ஆச்சிரமத்தில கௌரிபாலா, ஜேர்மன் சுவாமிகள் எனப் பல சித்தர்களும், சுவாமிகளும் வாழ்ந் திருக்கின்றார்கள். அவர்களில் ஐரோப்பிய நாடுகளைச் சர்ந்தவர்களும் சந்நிதிச் சூழலில் வாழ்ந்து பலசித்துக்களைக் கொண்டிருந்தமை சந்நிதிச் செல்வத்தின் மகிமையைக் காட்டு கின்றது.

செல்வச்சந்நிதியின் மிகப் பெரிய தேர் 1985 இல் எரிக்கப்பட்ட பொழுது அதில் ஆறு இராணுவத்தினர் பங்குபற்றியதாகச் சொல்லப்பட்டது. பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அதே ஆலயப் பகுதியில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட அங்கிருந்து தப்பிச் சென்ற மற்றைய இராணுவச் சிப்பாய் பின்னர் கதிர்காமம் சென்று காவடி எடுத்ததாகத் தென்னிலங்கைப்பத்திரிகை ஒன்று எழுதி யிருந்தது.





சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்த சுவாமிகளும் சித்தர்களும்

எரிக்கப்பட்ட தேரின் கம்பீரமான தோற்றம்



தற்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு சித்திரத்தேர்களில் வேலும், மற்றையதில் ஆறுமுகசாமியும் வீதியுலா வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். செல்வச் சந்நிதியின் தோற்றம் வரலாறு, பூசை முறைகள் மற்றும் ஆலயச் சூழலில் நிகழ்ந்த அற்புதங்கள, அன்னதான மடங்கள், அங்கு வாழ்ந்த சித்துக்கள் புரிந்த சித்தர்களின் வரலாறு போன்ற பல தகவல்கள் எனது “சந்நிதிச் செல்வம்” என்ற நூலில் உள்ளமையால், அதனை மேலும் விரிவாக இங்கு குறிப்பிடவில்லை.

பழைய அழகு வாய்ந்த கட்டுத் தேர்




- **வயலூர் முருகன் கோயில் -1800**

சந்திரசேகர முதலியார், சுப்பிரமணியன் என்பவர்களால் 1800 ஆம் ஆண்டு தீருவில் வெளியில் கட்டப் பட்டதாக யாழ்ப்பாணக் கச்சேரிப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. 1802 ஆம் ஆண்டில் உள்ள கச்சேரிப் பதிவேடுகளின் பிரகாரம் கதிரேசர் வைத்திலிங்கம் என்பவர் இவ்வாலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


இம் முருகன் ஆலயமும் வல்வெட்டித் துறையின் மிகப் பழமை வாய்ந்த ஒரேஒரு முருகன் ஆலயமாகும். தீருவில் வயல் வெளியில் அமைந்துள்ள பழமை வாய்ந்த ஆலயமாக இருப்பதால் இது வயலூர் முருகன் என அழைக்கப்படுகீனறது. இதன் தர்மகர்த்தாவாக அமரர் சிவபாதசுந்தரம் அவர்கள் இருந்த பொழுது, 1999 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்து, ஆலயத்தின் நித்திய பூசைகளும், அலங்கார உற்சவங்களும் சிறப்பாக நடைபெறுவதற்கேற்ற ஒழுங்குகளையும் செய்துள்ளார். அதன்பினனர் மீண்டும், திருப்பணிவேலைகளை மேற்கொண்டு 2005 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 10 ஆம் திகதி, சிவன் கோயில் பிரதம குருக்களாக இருக்கும் பிரம்மஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் மனோகரக் குருக்கள் அவர்களின் தலைமையில், கும்பாபிசேகம் நடைபெற்று இன்று பூசைகளும் அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 2015 ஆம் ஆண்டு முதலாம் திருவிழா உற்சவகாரர்களால், கொடித்தம்பம் அமைக்கப்பட்டு தற்காலிகமாக யாகசாலையும் அமைத்து ஆகம முறையிலா பூசை முறைகள் இடம் பெறுகின்றன. தற்பொழுது அதன் ஆலய உரிமையாளர் இலண்டனில் இருந்து வருகை தந்து ஆலயத்தைப் மேலும் உள்வீதிகள் அமைத்து புனரமைப்புச் செய்து வருகின்றார்.

- **வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் ஆலயம் - 1867**

வல்வெட்டித்துறையின் புகழை ஓங்கச் செய்து கொண்டிருப்பது இங்குள்ள சிவன் கோயிலாகும். 1867ஆம் ஆண்டு சங்கத்தாபனம் செய்து வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோயிலைக்கட்டிய வள்ளல் பெரியவர் என்று அழைக்கப்பட்ட திரு. திருவேங்கடாசலம் பிள்ளையவர்கள். ஐயம்பெருமாள் வேலாயுதர் வழிவந்த "திருமேனியாரின்" மைந்தனாக சித்திரபானு ஆண்டு மார்கழித்திங்கள் 6ம் நாள் - 1822 ஆம் ஆண்டு வியாழக்கிழமை இவர் வல்வெட்டித்தறையில் பிறந்தார்.



வயலூர் முருகன் கோயிலின் அன்றைய தோற்றமும்,



தற்போதைய திருத்தி அமைக்கப்பட்ட தோற்றமும்

இவரது தந்தையாரான வேலாயுதர் திருமேனியார், திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்து அதன்பின்னர் வேறு சிலரிடம் அந்தப் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு, வல்வை முத்துமாரி அம்மன் கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்த பொழுது, வேலாயுதர் திருமேனியார் அவர்கள், சிவபதமடைந்ததும், இவருடைய மூத்த சகோதரரின்மகன்சங்கரியார் தருமகர்த்தாவாயினர். இச்சங்கரியாரே அம்மன் கோயிலில் இப்போதுள்ள பழமை வாய்ந்த பிரமாண்டமான சப்பரத்தைச் செய்வித்தவர்.

கடலோடுவதால் கிடைத்த பெரும் செல்வத்தில் திளைத்த வல்வெட்டித்துறையில் திரும்பிய இடம் எல்லாம் கோயில்களே இருந்தன. அவற்றில், பெரும்பாலனவை பிள்ளையார் கோவில்களாகவும், வைரவர் கோயில்களாகவுமே காணப்பட்டன. சைவ சமயத்தின் முழுமுதற்கடவுளான சிவபிரானை

வழிபடுவதாயின் பருத்தித்துறையில் இருந்த பசுபதீஸ்வரர் கோவிலுக்கே மக்கள் செல்லவேண்டியிருந்தது. வல்வை மக்களின் வாழ்வே தனது வாழ்வாக நினைத்து வாழ்ந்து வந்த திரு. வேங்கடாசலம் பிள்ளையின் கனவில் தோன்றிய அவரது தந்தையாரால் சிவனுக்கு ஒரு ஆலயம் அமைக்காததே தனது குறை என்று கூறி அவருக்கு ஒரு கோயில் கட்டவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அக் கனவினைக்கண்ட நாள்முதலாய் பெரிய தம்பியார் இதே நினைவிலேயே இருக்கலானார். சிவன்கோவிலை எங்கே அமைப்பது எனதவிக்க லானார்! இக்காலத்தில் இவரிடம் ஊழியம் புரிந்த கம்பர்மலையைச் சேர்ந்த ஒருவர் தனது வேலை முடிந்து தினமும் முத்துமாரியம்மன் கோவிலுக்கு தெற்குப்புறமாக அமைந் திருந்த கற்களும் பற்றைகளும் பலவித செடிகொடிகளும் மரங்களும் வளர்ந்திருந்த நடைபாதைவழியூடாக வீட்டுக்கு திரும்பிச் செல்வது வழக்கம். மின்சார வசதியற்ற அக்காலத்தில் முன்னிரவில் சிறுபற் றைகளினுடாக நடந்து செல்லும் அவர் ஒருநாள் அப்பகுதியில் நின்ற கொன்றை மரத்தடியில் சிறிய வெளிச்சம் ஒன்றைக் கண்டார். தொடர்ந்து சிலநாட்கள் இவ்வாறு தான்கண்ட விபரத்தை தனது எசமானான வெங்கடாசலம் பிள்ளையிடம் கூறினார். வெங்கடாசலம்பிள்ளையும் அடுத்தநாள் அந்த ஊழியரையும் அழைத்துக் கொண்டு அவ் விடத்துக்கு சென்று பார்த்தார். அந்த ஊழியர் காட்டிய இடத்தில் நின்ற கொன்றைமரத்தடியில் பசுவின் சாணம் எரிந்து கிடக்கக்கண்டார். அத்துடன் கொன்றை மரத்தின் பூக்கள் எல்லாம் அதனைச் சுற்றி விழுந்திருக்கவும் கண்டார். அவ் விடத்தில் நின்று நிமிர்ந்து பார்த்தபோது நேர்வடக்காக இருந்த முத்துமாரியம்மன் கோவில் மூலஸ்தானத்தைக்கண்டார். தந்தையார் கனவில் சொன்ன பொருளைப் புரிந்து கொண்ட வெங்கடாசலம்பிள்ளையும் அவ்விடத்திலேயே சிவபிரானுக்கு கோயில் கட்டமுடிவெடுத்தார்.

பன்னிரண்டு கப்பல்கள் கட்டி, கடல் வாணிபம் செய்து பெரும் செல்வந்தர் ஆகினார். முதன் முதலாக பெரியவர் அம்மன் கோயிலுக்குத் தெற்கேயுள்ள 60 பரப்புக் காணியை விலைக்கு வாங்கினார். இக்காணிகரடுமுரடானதாயும், பற்றையும் செடிகளும் நிரம்பியதாயும் இருந்தது. காணியை விலைக்கு வாங்கிய வெங்கட சலம்பிள்ளையவர்கள் தனது பரம்பரை ஆதனங்களில் இருந்து கிடைத்த பெருமளவு நிதியைக் கொண்டும் கப்பல்களை ஓட்டி அதன்மூலம் கிடைத்த வருமானங்களைக் கொண்டும், 1867 ஆம் ஆண்டில் அத்திவாரம் இடும், சங்கத்தாபனத்தை செய்வித்து, சிறந்த சிற்பிகளையும் ஆச்சாரியார்களையும் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வந்து கோயில் திருப்பணி வேலைகளைச் செய்து, அதனை அழகு பெறச் செய்து, 1900 ஆம் ஆண்டில் அதனை முடித்து வைத்தார். அக்காலத்தில் பிரபுவாயிருந்த பெரியவர் வெங்கடாசலம்பிள்ளையின் ஒன்றுவிட்ட சகோதரனான ஆறுமுகத்தார் விசுவநாதபிளளை என்னும் பெரியவர் காசிக்குச் சென்று அங்கிருந்து பாணலிங்கத்தைக் கொண்டு வந்தார்.

**பாணலிங்கம்:**

"பாணலிங்கத்திற்கு" இயற்கையிலேயே பூணூல் அணிவது போன்ற இரேகை அமைப்பு படர்ந்திருக்கும். ஆயிரம் கல் சிவலிங்கத்திற்கு ஒரு ஸ்படிகலிங்கம் சமன் என்பது போல், 12இலட்சம் ஸ்படிகலிங்கங் களுக்கு ஒரு பாணலிங்கம் சமனாகும். பாணலிங்கம் வடித்தெடுக்கப்படுவதில்லை. பிரமா. விஷ்ணு முதலிய தேவர்கள் பூஜித்த புண்ணிய நதிகளான கங்கை, யமுனை, நர்மதை போன்றவற்றில் இலிங்கவடிவில் இயற்கையாகவே உருண்டோடி வரும் சிறப்பு வாய்ந்தவையே பாணலிங்கமாகும்." பாணலிங்கத்தை மட்டுமல்லாது உற்சவமூர்த் தியாகிய நடேசர் மற்றும் சந்திரசேகரர் ஆகியோரின் திருவுருவங்களையும்

விஸ்வநாதபிள்ளையவர்கள் காசியில் இருந்து வல்வெட்டித் துறைக்கு மிகுந்த பொருட்செலவில் கொண்டு வந்துள்ளார். இங்கு கூறப்படும் விஸ்வநாதபிள்ளையின் மகனான சரவணமுத்துப்பிள்ளை அவர்களே பின்நாட்களில் சிவன்கோவிலுக்கு தங்கத் தகடுமருவிய தூபியை இயற்று வித்தார். என 1884 ஆம் ஆண்டு வெளி வந்த வைத்திலிங்கப்புலவருடைய "சைவாபிமானி" பத்திரிகை தெரிவிக்கின்றது. காசிக்குச்சென்று சிவலிங்கத்தைக் கொண்டு வந்த கப்பலின் பெயர் "அன்னபூரணி" என்பதாகும். இதனால் இக்கப்பல் பின்னர் "காசிஅன்னபூரணி" என அழைக்கப்பட்டது. விஸ்வநாதர் வாழ்ந்த வீட்டின் பெயரும் "அன்னபூரணி" ஆகும். வல்வெட்டித்துறை கிழக்குவீதியில் இலக்கம் 84 இல் அமைந் திருக்கும் இக்காணியின் பெயரும் "விஸ்வநாதர் வளவு" என்பதாகும். விஸ்வநாத பிள்ளையின் மகனான சரவண முத்துப்பிள்ளையின் மறை வின்பின் அவர் மனைவியாகிய "சின்னத்தங்கம்" உடைய காலத்திலும் மேற்கூறப்பட்ட கப்பல் வர்த்தகத் தில் ஈடுபட் டமை தெரியவருகின்றது.

அந்த சிவலிங்கத்தையே மூலஸ்தானத்தில் பிரதிஸ்டைசெய்து, வல்வைவாலாம்பிகாசமேத வைத்தீஸ் வரர் என்று பெயர் சூட்டப்பட்ட சிவன் ஆலயத்திற்கான கும்பாபிசேகத்தை 1867 இல், மேற்கொண்டதுடன், இலங்கையில் எங்குமே நடைபெறாதவகையில், ஆறுகால பூசைகளையும் ஒழுங்காக மேற்கொள்ளக் கூடியவாறு சிறப்பாக நிர்வாகம் செய்து வந்தார்.

**ஐவகை லிங்கங்களைக் கொண்ட ஆலயம்:**

சிதம்பரம் கோயிலை அடியொற்றியதாக மூன்றுவீதிகள் கொண்டதாகவும் பிருதிவி லிங்கம், தேயுலிங்கம், அப்புலிங்கம், வாயுலிங்கம், ஆகாயலிங்கம் என்றும் ஐவகை லிங்கங்களை தனித்தனியாக அமைத்தார். மூலஸ்தானத்தில் பாணலிங்கம் உட்பட மற்றும் அண்ணாமலை ஈஸ்வரர் மகாவிஸ்ணு என பல வகைத் தெய்வங்களுடன் நவக்கிரகங்களும் சைவநாயன்மார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி நாயனார் மாணிக்கவாசகசுவாமிகள் என்பவர்களுக்கும் தனித்தனியாக விக்கிரகங் களை பிரதிஸ்டை செய்தே இக்கோயிலைப் பெரியவர் வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் அமைத்தார்.

இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபிசேகம், 1883 ஆம் ஆண்டு, சுபானு வருடம், வைகாசி மாதம் 27ஆம் திகதி நடைபெற்றது. அதன் பின்னர் 1819ஆம் ஆண்டு, புனராவரத்தன கும்பாபிசேகம் நடைபெற்ற பின்னர், சிவன் கோயிலின், புனராவர்த்தன சம்புரோட்சண கும்பாபிஷேகம் பிலவங்க வருடம் வைகாசி மாதம் 28ம் திகதியான 11.06.1967ல் வெகுசிறப்பாக பக்தி சிரத்தையுடன் நடந்தேறியது.

**நடராஜர் ஆருத்ரா தரிசனம் :**

வல்வை வைத்தீஸ்வரன் கோயிலில் மட்டுமே, நடராஜர் ஆருத்ரா தரிசனம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அந்த நாட்களிலேயே சிறந்த தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி நடேசர் விக்கிரகத்தை மூன்று பக்கங்களிலும் நடனம் ஆடக்கூடிய வகையில் அமைத்ததால், சிதம்பரத்தில் நடனமாடும் நடராஜரை இக்கோயிலில் காணும் வாய்ப்பு ஏற்படத்தப்பட்டுள்ளது. மார்கழி திருவாதிரையின் பொழுதும், ஆனி உத்தரத்தின் பொழுதும், நடராஜப் பெருமான் வீதியுலா வரும் பொழுது, "ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை காணக் கண் ஆயிரம் வேண்டாமோ..." என்ற பாடல் அடிகளுக்கு ஏற்ப, ஆனந்தத் தாண்டவத்தை எடுத்துக் காட்டுவதற்காக, இரத்தின பீடத்தில் வைக்கப்பட்ட நிலையில், மேலும் கீழும், பக்கவாட்டிலும், முன்பின்னாகவும் நடனம் ஆடிக்கொண்டு வரும் காட்சியைக் காண்பதற்காகவே குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வந்து வணங்கிச் செல்வர்.

ஆருத்ரா தரிசனத்தின் பொழுது இடம் பெறும் நடேசர்வீதியுலா




**நித்திய பூசைகளும்,அக்கினி யாகமும்:**

தினமும் அதிகாலைப் பூசையின் பொழுது பள்ளியறையில் இருந்து திருப்பள்ளியெழுச்சி பாடப்பட்டு சிவபெருமான் அடியர்களின் தேவார ஒலி மற்றும் மேள,தாள வாத்தியங்களுடன் மூலஸ்தானத்திற்குக் கொண்டுவரப்படுவார். அங்கு நடைபெறும் காலைப் பூசையைத் தொடர்ந்து அக்கினி ஓமம் வளர்க்கப்பட்டு பெருமானுக்கும், பொது மக்களுக்குமாகத் தீபாராதனை காட்டப்படும். அதனைத் தொடர்ந்து வாலம்பிகா சமேத வைத்தீஸ்வரர் வீதி உலா வருவார். இன்றும் வழமைபோல், ஆறுகாலப் பூசைகளும் நடைபெற்று இரவு சாயரட்சைப் பூசையுடன் மீண்டும் தேவாரம் பாடப்பட்டு சிவபெருமான் பள்ளியறைக்குக் கொண்டு செல்லப்படுவார்.

**பிரம்மோற்சவம்:**

இக்கோவிலில் நடைபெறும் பிரமோற்சவம் 16 நாட்கள் என கணிக்கப்பட்டதெனினும் மகோற்சவம் எனப்படும் இத்திருவிழாக்காலம் முழுமையாக முடிவுற மூன்று வாரங்களாகும். இக்கோயிலில் தனியாக சூரிய பூசை நடைபெறுவது போலவே சூரியக்கதிர்கள் இக்கோவிலின் மூலஸ்தானத்தில் மீது நேரடியாக விழுகின்ற நிலையில் தெளிவான வானத்துடன் சூரியவெப்பம் மக்களை வாட்டாத பங்குனி மாதத்திலேயே மகோற்சவ நாட்கள் பெரியவரால்தெரிவுசெய்யப்பட்டுஇன்றுவரை



**சிவன்கோயிலின் முன்னைய தோற்றம்**

நடைபெற்று வருகின்றன.

கொடியேற்றத் திருவிழாவிற்கு முதல்நாளில் சிவன்கோவிலின் பிரதமகுரு கோவிலின் இடது புறத்தில் அமைந்திருக்கும் முத்துமாரியம்மன் கோவிலுக்கு சென்று "ஊரின் குலதெய்வமான" முத்துமாரியம்மனிடம் மகோற்சவத்தைச் செய்வதற்கு அனுமதியையும் ஆசியையும் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு நடைபெறுகின்றது. மறுநாள் மாணிக்கவாசகர் ஊர்முழுக்கச் சென்று சிவன்கோவிலின் கொடியேற்றத்திற்காக கட்டியம் கூறுவார். தொடர்ந்து வரும் அமாவாசைத் திதியன்று சிவபிரானின் கொடியேற்றத் திருவிழா நடைபெறும் அன்றுமுதல் மூன்று நாட்களுக்கு விநாயகப் பெருமானின் சக்தியை அதிகரிக்க விசேடபூசையும் தொடர்ந்து வரும் மூன்று நாட்களுக்கு முருகப் பெருமானுக்கும் வள்ளி தெய்வானைக்குமுரிய விசேடவழிபாடும் நடைபெறும். அடுத்து வரும் நாட்களில் மகாயாகத்துடன் வசந்தமண்டபத்தில் சிவபெருமான் வாலாம்பிகை விநாயகர் முருகன் சண்டேஸ்வரர் என்பவர்களுக்கான விசேடபூசைகளுடன் மூலமூர்த்திக்கு சந்திரசேகரப்பட்டமும் வழங்கப்படும். இவ்வாறு தொடரும் மகோற்சவ நாட்களில் பங்குனிப்பூரணை நாளுக்கு முதல்நாளில் நடைபெறும். தேர் உற்சவத்தின்

பொழுது ஐந்து சித்திரத் தேர்களில் பஞ்ச விக்கிரகங்கள் பவனி வரும் அதை அடுத்த இறுதிநாளான பூரணைநாள் காலையில் வெள்ளியிலான இடப வாகனத்தில் ஊறணி தீர்த்தக்கடற்கரையில் சுவாமி தீர்த்தமாடுவார். பின்னர் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலில் தங்கியிருந்து இரவு முழுநிலவில் உமையவளுடன் கல்யாண சமோதரராய் ஆலயம் திரும்புவார். அதன்பின் கொடியிறக்கம் நடைபெறும். இதற்கு அடுத்தநாள் சிவபெருமான் உமாதேவி சுந்தரமூர்த்திநாயனார் பங்கு கொள்ளும் ஊடல்திருவிழா நடைபெறும். மறுநாள் உற்சவ மூர்த்திக்கு அணியப்பட்ட ஆபரணங்களையும் சண்டேஸ்வரருக்கு அணிவித்து இறைவன் வீதி உலாவரும்வாகனமான விமானத்தில் சிறப்பான அலங்காரங்களுடன் சண்டேஸ்வரர் வீதிஉலா வருவார். இறுதியில் ஆலவட்டம் கொடி என்பனவற்றுடன் மேளதாளம் நாதஸ்வரம் முழங்க சண்டேஸ்வரரை மையப்படுத்தி கோயில் வாசலில் சுற்றிச்சுற்றி மூன்று முறை வலம் வருவர். இறுதிநாளில் ஆலயத்தின் காவல் தெய்வமாக விளங்கும் வைரவருக்கு நடைபெறும் விசேடபூசையுடன் மகோற்சவம் முடிவடையும்.

**வல்வை சிவன் கோயில் குரு பரம்பரை:**

வல்வை வாலாம்பிகாசமேத வைத்தீஸ்வரர் ஆலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம் 1883ம் ஆண்டு சுபானுவருடம் வைகாசி 27ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதனை அக்காலத்தில் பிரசித்தி பெற்ற குமாரசாமிகுருக்கள் நடத்தி வைத்தார். அன்று தொடக்கம் பருத்தித்துறையைச் சேர்ந்த சண்முகக்குருக்கள் பூசைகளை நடாத்தி வந்தார். 1908ம் ஆண்டு தொடக்கம் ஆரியதிராவிட மொழியில் திறமை உடையவரும் கிரியா விற்பன்னருமான, கார்த்திகேசுக்குருக்கள் அக்கால எஜமான் அவர்களால் நியமிக்கப் பட்டு தொடர்ச்சியாக 24 ஆண்டுகள் பூசை உற்சவம் பிரதிஷ்டை முதலியவற்றைச் செய்து வந்தார். இவருடைய காலத்தில் 1919ம் ஆண்டு புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதில் இவருடைய சிறிய தந்தையார் இராமலிங்க குருக்கள் (மாப்பிள்ளைக்குருக்கள்) இவருடைய விருப்பப்படி பிரதான ஆசாரியாராக இருந்து கும்பாபிஷேகம் செய்தார். அதன்மேல் இவருடைய் மகன் நீலகண்டக்குருக்கள் (சின்னப்பாக்குருக்கள்) கூட இருந்து பூசைகளை நடாத்தி வந்தார்கள். 1930ல் கார்த்திகேசுக்குருக்கள் இறைவனடி சேர்ந்தார். அதன் மேல் நீலகண்டக்குருக்களே பிரதான ஆசாரியாராக இருந்து கோயில் பூஜா கருமங்களை நடத்தி வந்தார்.

இவருடன் இவரது மகன் பரமேசு வரக் குருக்கள் 1942ம் ஆண்டு உதவியாக இருந்து பூஜைகளைச் செய்து வந்தார். 1954ம் ஆண்டு நீலகண்டக் குருக்கள் இறைவனடி சேர்ந்ததைத் தொடர்ந்து பரமேசுவரக்குருக்கள், பூசைகளை மேற்கொண்டு வந்தார். அவர் பின்னர், அவரின் மூத்தமகன் மனோகரக்குருக்கள் பிரதம குரு வாக இருந்து ஆறுகாலப் பூசைகளையும், மகோற்சவங்களையும் நடத்திவர, இன்று அவரது ஏனைய புத்திரர்களான பராபரக் குருக்கள், பிரசன்னா குருக்கள் ஆகியோரும் உதவி யாக இருந்து நடத்தி வருகின்றனர். இவர்களுடன் சேர்த்து சிவன் கோயில் ஐந்து குருபரம்பரைகளைக் கொண்ட ஒரு சிவாலய மாக விளங்கி வருகின்றது.

**சிவபுர வீதியின் தோற்றம்:**

சிவன் கோயிலின் முன்னால் செல்லும் சிறிய வீதியானது, மிகவும் ஒடுக்கமாகவும், இடையிடையே தனியார் காணிகளினால் மூடப்பட்டுமிருந்தது. பொது மக்களின் போக்குவரத்துச் சிரமங்களைத் தவிர்ப்பதற் காகவும், பிரதான வீதியில் இருந்து பார்க்கும் பொழுது, சிவன்கோயில்தெரியக்கூடியதாகவும் இருக்கவேண்டு மென்ற வகையில், பெரும் தெருவை இணைக்கும் "சிவபுர வீதி; 1967ல் திறக்கப்பட்டது. அந்த வீதியைத் திறந்து வைப்பதற்காக, அதை அண்டிய மக்கள் தங்கள் நிலத்தை அன்பளிப்பாக வழங்கியதுடன் மேசன் தொழிலாளர்களுடன் சேர்ந்து,

**மூன்றாவது குரு பரம்பரையில் வந்த பரமேஸ்வரக் குருக்களும், சிவபுர வீதி அமைப்பில் ஈடுபடும் பொதுமக்களும்**

பொது மக்களும் வீதி அமைப்புப் பணிகளில் உதவியதால் விரைவாக அந்தப்பணி முடிவடைந்தது. இவ்வாலயத்தின் வளர்ச்சியில் பல வள்ளல்கள் கட்டிடங்களை நிர்மாணித்துக் கொடுத்து சகல பரிவார மூர்த்திகளையும் கொண்ட சிறந்த ஆலயமாக வளர்த்திருக்கின்றார்கள். இந்த விபரங்கள்: மகாகும்பாபிசேக மலரில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1967 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சிவபுர வீதி இடையிடையே தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டு வந்த போதிலும், அதனை சிறந்த ஒரு வீதியாக அமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாக இருந்து வந்தது. இதனால் ஆலயத்திற்குச் செல்லும் பொது மக்களும், வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர். 2011 ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற நகராட்சி மன்றத்தினூடாக 10 இலட்சம் ரூபா ஒதுக்கீட்டில் சிவபுர வீதி அழகிய கொங்கிறீற் பாதையாகப் போடப்பட்டது.

- **பொலிகண்டி கந்தவனக் கடவை**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் புறஎல்லையாகத் திகழும் கந்தவனக் கடவை முருகன் ஆலயம், பழம் பெருமை வாய்ந்த ஒரு ஆலயமாகும். கோயில்சீரும் திருவும் பொலியும் ஈழ மணித் திருநாடு தேவாரம் பாடிய சிவஸ்தலங்களையும் திருப்புகழ் பாடிய குகன் தலங்களையும் உடையது. அதன் வடகடல் ஓரத்தில் வல் வெட்டித்துறைக்கு கிழக்கே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் கொண்ட கந்தவனப்பகுதியில் சண்முகப் பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பதி தான் பொலிகண்டி கந்தவனப்பதியாகும்.

முருகனுடைய ஆலயங்களுள் கிரிப் பிராந்தம்., வனப்பிராந்தம், சமுத்திரப்பிராந்தம் ஆகிய இவற்றுள் இரண்டு சிறப்புக்களையும் ஒருங்கே அமையப் பெற்ற இடம் பொலிகண்டிக் கந்தவனக் கடவையாகும். இவ்வாலயம் மிகவும் பழைமை வாய்ந்தது. கர்ண பரம்பரை வரலாற்றைக் கொண்டது. வெள்ளரித் தோட்டத்தில் வேலாயுதம் தான் தோன்றியதாக கூறப்படுகின்றது. தற்போதும் ஆலயத்தின் வடக்கு வீதியிலுள்ள நறுநீர்க்கேணியும் அதன் அருகேயுள்ள காலம் கணிக்க முடியாத மூன்று வன்னி மரங்களும் உள்ளது. இந்நறுநீர்க்கேணியின் நடுவிலே உள்ள கல்லில் ஆதி காலத்தில் கற்பூரம் விளைந்ததாக வரலாறு உண்டு. இக்காரணத்தால் இக்கந்தனை "கற்பூரக் கந்தன்" என்று கூறுவதும் உண்டு. காஞ்சிமாவடி வேலன் என்று அழைப்பார்கள். இவ் ஆலய வேலவர் மீது அருணகிரிநாத சுவாமிகளால் திருப்புகழ் பாடப்பட்டது. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் நான்மணி மாலையையும் பதிகமும் திருப்பள்ளி எழுச்சியும் பாடியுள்ளார். முதுமையில் கண்பார்வைக்

குறைபாடு ஏற்பட்டபுலவரான உடுப்பிட்டி சிவசம்புபுலவர் முருகனின் அருளாணைப்படி நான்மணி மாலையும் பதிகமும் பாடி கண்பார்வையைப் பெற்றார். இப்பாடலில்," கண்ணொளியைத் தந்தாய் மறப்பேனா" என்ற அடிகள் அமைந்தமை குறிப்பிடத் தக்கது. இவ்வாலய வருடாந்த மகோற்சவம் ஆனிப்பூரணையை தீர்த்தமாகக் கொண்ட பதினைந்து நாட்கள் நடைபெறும். பதினைந்து திருவிழாக்களும் பதினைந்து கிராம மக்களால் நடாத்தப்படுவது இதன்சிறப்பம்சமாகும்.

- **வேவில் வீரகத்திப் பிள்ளையார் கோயில்-1845**

வல்வெட்டிக் கிராமத்தில் ஒரு ஆலயம் இல்லை என்று பலவருடங்ளாகக் கவலைப் பட்டு இறைவனை வழிபட்டு வந்த, சிவஸ்ரீ. ஆறுமுகக் குருக்களின் கனவில் தோன்றிய விக்னேஸ்வரப் பெருமான், ஆனைமுகமும் அழகிய திருவுருவமும் கொண்டு மிகக் கம்பீரத்துடன் காட்சி கொடுத்தார் தனக்கு இந்த இடத்தில் ஒரு ஆலயத்தை அமைத்து வழிபடுமாறு கூறியருளியமைக்கு அமைய1845 ஆம் ஆண்டு,கனவில் குறிப்பிடப்பட்ட வேவில் என்ற இடத்தில் இந்த ஆலயத்தைக் கட்டி விநாயகப் பெருமானைப் பிரதிஸ்டை செய்து நித்திய பூசைசெய்து வழிபடத் தொடங்கினார். கற்பக விருட்சங்கள் நிறைந்த வல்வெட்டி கிராமத்தில் தோன்றிய ஒரு பழமையான ஆலயம் தான் அருள்மிகு வேவில் ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வரர் ஆலயமாகும்.

சிவஸ்ரீ. ஆறுமுகக் குருக்களைத் தொடர்ந்து அவரின் புத்திரராகிய சிவஸ்ரீ. சின்னையா குருக்கள் கர்ப்பக் கிரக மண்டபம், உள்வீதி, வெளிவீதி ஆகியவற்றை அமைத்து இரண்டு கால பூஜைகளைச் செய்து வந்தார். சின்னையா குருக்களின் பின்னர், அவரின் மகனான சுவாமிநாதக்குருக்கள் தொடர்ந்து ஆலயத்தை பராமரித்து நித்தியபூஜைகளையும் சிறப்பாக நடத்தி வந்தார். அவருக்குப் பின்னர் அவரது மைத்துணரான சுப்பிரமணியக் குருக்கள் காலத்தில் தரிசன மண்டபம், வசந்த மண்டபம், நிருத்த மண்டபம், தம்ப மண்டபம், தேர் வாகனங்கள் என்பன பொது மக்களால் அமைக்கப்பட்டு 1959ம் ஆண்டு சித்திரை மாதம் மகாகும்பாபிஷே கத்தையும் நடாத்தி வைத்தார். ஆலயத்தின் அலங்கார உற்சவம் வைகாசி பூரணையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்து நாட்கள் நடத்தப்படுகின்றது. அன்னாரின் மருமகனான சிவஸ்ரீ திருச்சிற்றம்பலக் குருக்கள் கோயிலை பொறுப்பேற்று பொதுமக்களின் உதவியுடன் மணிக்கூட்டு கோபுரம், காண்டாமணி என்பனவற்றை செய்து, ஓட்டால் அமைந்த கொட்டகைகளாக மாற்றி திருப்பணிகளைச் செய்தார்.1973ல் திருச்சிற்றம்பலக் குருக்களின் அவரின் மகனாகிய சிவஸ்ரீ.கமலநாதன் ஆலயத்தின் பொறுப்பை ஏற்றார். சிவஸ்ரீ.கமலநாதன் குருக்களின் காலத்தில் பரிவார மூர்த்திகளுக்கு தனித்தனி பீடங்கள் அமைக்கப்பட்டு கர்ப்பக் கிரக ஸ்தூபியும் புதிதாக அமைக்கப்பட்டது. 1980ம் ஆண்டு தைத்திங்கள் மிருகசீரிடம் நட்சத்திரத்தன்று சிவஸ்ரீ. சோ. தண்டபாணி தேசிகர் அவர்களினால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக் கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து அழகிய பூங்காவன மண்டபமும் பஞ்சமுக விநாயகர் எழுந்தருளியும் நவக்கிரகம் போன்றனவும் அமைக்கப்பட்டன.

இந்த ஆலயம் வல்வெட்டி மக்களின் பராமரிப்பிலும்,வழிபாட்டிலும் இருந்து வந்த போதிலும் வேவில் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள தெணியம்பை மக்களால் குலதெய்வமாக வழிபடப்பட்டு வந்ததால், தீர்த்தத் திருவிழாஅன்று விநாயகர் ஊர்வலம் வரும்பொழுது, தெணியம்பைச் சந்தியில் வரவேற்பு விழா நடைபெற்று வந்தது. இதில் மடை வைத்து வழிபாடுகள் மேற்கொள்ளும் அதேவேளை கலை நிகழ்வுகள் மற்றும், இசைக்கச்சேரிகள் என்பனவும் இடம்பெற்று வந்ததால், நீண்டநேரம் எடுக்கின்ற காரணத்தினால், விநாயகப் பெருமானின் கொடியிறக்கும் சடங்குகளை

உரிய காலத்தில் செய்ய, தெணியம்பை மக்களுக்கென 5ஆம் நாள் உற்சவத்தை வழங்குவதாக அப்போதைய வல்வெட்டி, தெணியம்பை பிரதேசத்தின் முக்கிய சிரேஸ்ட பிரமுகர்களாக இருந்த பஸ்கொம்பனி முதலாளி ஐயாத்துரை, மு.நடராசா, மு.கந்தசாமித்துரை, கந்தசாமி, ம.மகோற்கடமூர்த்தி ஆகியோரின் சம்மதத்துடன் ஒன்றுகூடி தீர்மானம் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து 1968 ஆம் ஆண்டில் இருந்து, தெணியம்பையில் இடம் பெற்று வந்த வரவேற்பு நிகழ்ச்சிகள், மடைவைத்து வழிபடுதல் என்பன நிறுத்தப்பட்டு தற்பொழுது தெணியம்பை, வித்தனை, கொண்டல் கட்டை மக்களால் வருடாவருடம் 5ஆம் திருவிழாவை நடத்துவதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் வடக்கு மூலையில் முருகப் பெருமானின் மண்டபமும், மூல மூர்த்தியும் 5ஆம் திருவிழா உபயகாரர்களினால் அமைத்துக்கொடுக்கப்பட்டது.

தற்பொழுது இந்த ஆலயம் படிப்படியாக வளர்ச்சிபெற்று, இன்று கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம் மூசிகம், பலிபீடம் கொடிமரம், என்பவற்றைக் கொண்ட ஸ்தம்ப மண்டபமும் அமைந்து ஆகமம் சார்ந்த அமைப்புள்ள கோயிலாகக் காட்சிஅளிக்கின்றது. தற்பொழுது ஸ்தாபகக் குருக்களின் வழித்தோன்றல்களான சிவஸ்ரீ. பாலச்சந்திரக்குருக்களும், சிவஸ்ரீ. சி.விக்னேஸ்வரக்குருக்களும் இணைந்து விக்னேஸ்வரர் ஆலயத்தை ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றனர்

- **நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் -1848**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிள்ளையார் வைரவர் என்பவரால் கோயிலின் தெற்கு வீதியில் அமைக்கப்பெற்றிருந்த ஒரு மடத்தில் பிள்ளையாரை எழுந்தருளச் செய்து, அதற்கு பூசைகளைச் செய்வதற்காக, இந்தியாவில் உள்ள வேதாரணியத்தில் இருந்து, கணபதிக் குருக்கள் என்ற சைவக் குருக்களை அழைத்து வந்து பூசைகளை மேற்கொண்டு வந்ததாக அறியவருகின்றது. யாழ்ப்பாணக் கச்சேரிப் பதிவேடுகளின் பிரகாரம் 1848ஆம் ஆண்டு, வல்வெட்டித்துறையின் பொதுமக்களால் கற்கட்டடமாக கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது.

பூஜைகள் சிவஸ்ரீ தியாகையர் அவர்களால் நடத்தப் பட்டு வந்தன. அக்காலங்களில் கப்பல் வாணிபம் தொடங்கப் பெற்று செல்வனே நடந்து வந்ததால் கப்பற்தொழில் சம்பந்தப்பட்ட எல்லோரிடமிருந்தும் மகிமைகள் வசூலிக்கப் பெற்று கோயிலுக்கு சேர்க்கப் பெற்று வந்தன. 01.02.1846ல் பிரசித்த நொத்தாரிசு கே.கணபதிப்பிள்ளை முன்னிலையில் எழுதப் பெற்ற உறுதியிலும் மகிமை தொகையில் என்ன விழுக்காடு நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்கிற விபரம் தெளிவாக காட்டப்பட்டிருக்கிறது. இவ்வுறுதிகள் ஊரிலுள்ள பல பெரியார்கள் முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். மகிமைகள் வசூலிப்பதும் செலவு செய்வதும் பெரியவர் திருமேனியார் வெங்கடாசல பிள்ளை உட்பட ஐவர் கொண்ட ஒரு குழுவினரிடம் ஒப்படைக்கப்பெற்றது. அப்போது பிள்ளையார் கோயிலுக்கு ஆறுமுகம் முருகுப்பிள்ளை என்னும் பெரியார் மணியமாயிருந்தார். 1867ம் ஆண்டு சிவன்கோயில் சங்குத்தாபனம் செய்யப் பெற்ற இரண்டு ஆண்டுகளில் திரு. வெங்கடாசலம்பிள்ளை சிவன் கோயில் திருப்பணியோடு ஒன்றி விட்டமையால் அவர் பிறகோயில்களின் வேலைகளில் இருந்து விலகி விட்டார். இக்கால கட்டத்தில் கந்தக் குட்டியார் வேலுப்பிள்ளை என்னும் சைவஆசாரசீலர் பிள்ளையார் கோயில் மேற்பார்வையாளரானார். இவர் சிறிது சிறிதாக மூலஸ்தானம் தம்ப மண்டபம், மதில் முதலியவை கட்டி பிள்ளையாரை மூலஸ்தானத்தில் எழுந்தருளச் செய்து 1884ல் பிரதிட்டா அபிஷேகம் செய்வித்தார். இவருக்கு ஆண் பிள்ளைகள் இல்லாமையால்

தன் சகோதரி மகளின் கணவர் சண்முகம் பிள்ளையை தன்னுடைய திருப்பணி வேலைகளில் சேர்த்துக் கொண்டார் கொடித்தம்பம் நிறுத்தித்தேரும் செய்வித்து 1892-1912ம் ஆண்டுக்கிடையில் வருடாந்த திருவிழாவையும் தொடக்கி வைத்தார்கள்.



அவர் 1912ம் ஆண்டளவில் கந்தக் குட்டியார் கதிரிப்பிள்ளை நடராசா என்னும் பெரியாரிடம் கோயில் மேற்பார்வையை ஒப்படைத்தார். நடராசா அவர்கள் தம்ப மண்டபத்தையும் கட்டி முடித்தார். திருச்சிற்றம்பலப்பிள்ளையார். ஊஞ்சல் பராக்கு பாக்களைக் கொண்ட ஒரு சிறு நூலையும் 1916ம் ஆண்டு மதுரையில் பதிப்பித்தார்கள். 1918ம் ஆண்டில் கோயில் பரிபாலனம் இவரின் தமையனார் க.க. அருளம்பலம் அவர்களிடம் சேர்ந்தது. 1930 - 1933ம் ஆண்டுகளில் செல்லையா தில்லையம்பலமும் ஆறுமுகம் விசுவலிங்கமும் ஒருவர் பின் ஒருவராக கோயிலை பரிபாலித்து வந்தார்கள். 1933 - 1937ம் ஆண்டுகளில் ம.சாம்பசிவமணியம் ஆனார். இவர் காலத்தில் சுற்றுமதில் வேலை நடந்தது. அவர் விலகிக் கொள்ள பொ.தங்கவேலாயுதம் அவர்கள் மணியமானார். இவர் காலத்தில் கோபுரத்தின் கீழ்ப் பகுதி திரு.கார்த்திகேசு (ஓவசியர்) பெண் சகுந்தலையம்மாவாலும் கட்டி முடிக்கப்பட்டது. சைவ ஆலய விதி முறைகளுக்கு அமைய தல விருட்சமாக வன்னி மரமும், ஆலயத்தின் வடக்குப் புறமாக அமைந்த கேணியும் அமைந்துள்ளமை இவ்வாலயத்தின் சிறப்பாகும்.

1905ஆம் ஆண்டளவில் திரு நா.செல்வ மாணிக்கம் அவர்களிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கோயில் தொண்டில் தம்முடைய முழுச்செயலையும் சிந்தனையையும் அர்ப்பணித்தார்கள்.

இவ்வாலயப் பணிகள் முடிவடைந்து இவை யாவும் கவினுறச் செய்யப்பெற்ற பின்பு கும்பாபிஷேகம் 07.06.1970ல் சிறப்புற நடந்தேறியது. அதைச் சிறப்பிக்க திருமுருக கிருபானந்தவாரியார் சிறப்பு பிரசங்கம் செய்தார். கோயிலின் திருப்பணி வேலைகளில் அன்று ஊர் கூடிப் பலரும் தமது பங்களிப்பை வழங்கியிருந்தமையால், ஆலயத்தின் பணிகள் எல்லோரதும் பங்கேற்புடன் நடைபெற்றன.

- **புனித செபஸ்தியார் தேவாலயம் - 1720**

வல்வெட்டித்துறை நகரின்மத்தியில் உயர்ந்து நிற்கும் "புனித செபஸ்தியார்" தேவாலயத்தை அமைப்பதற்கு வித்திட்டதன் மூலம் வல்வெட்டித்துறை வரலாற்றில் நீக்கமற நிறைந்து விட்ட ஒருவரே ஐயம்பெருமாள் அம்மையர் (நிக்கலாப்பிள்ளை) ஆவார். வல்வெட்டித்துறையில் கத்தோலிக்க வழிபாட்டை முதலில் அறிமுகப்படுத்தியவர் குருவிக்கொத்தர் என அழைக்கப்படுகின்றார்.

**நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலின் 1938 ஆம் ஆண்டு நடைபெற்ற பூங்காவனத் திருவிழாவில் யாழ்ப்பாணத்தின் புகழ் பெற்ற நாதஸ்வர தவில்கலைஞர்களின் இசை நிகழ்ச்சியும், அழகான ஏண்கோண வடிவத்தில் அமைக்கப்பட்ட மோர் மடமும்**

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களினால் எழுதப்பட்ட “25 years catholic progress” நூல் தெரிவிக்கின்றது. இது ஒல்லாந்தரின் ஆட்சிக் காலமான 1700 காலப்பகுதியாகும். வல்வெட்டித் துறை கடற்கரையில் தனக்கு கிடைத்த மரத்திலான புனித செபஸ் தியர் சொரூபத்தை 1720 ஆம் ஆண்டு அவரது சொந்த நிலத்தில் உள்ள ஓலைக் கொட்டிலில் பிரதிஸ்டை செய்து, அத்திருவுருவத்தை மற்றையோருக்கும் குருவிக்கொத்தர் அறிமுகப்படுத்தியுள்ளார். குருவிக்கொத்தர் என்பது ‘குருவரீ கோத்திரத்தார” என்பதன் சுருக்கமாகும். இக்குறியீடு அஞ்சா நெஞ்சமும் ஆற்றலும் மிக்க குருகுலத்தார் அல்லது வருணகுலத்தார் எனப்படும் கடேலாடி வம்சத்தை குறிக்கப் பயன் படுவதாகும். குருவிக் கொத்தருடைய மருமகன் அம்மையர் என்பவரே, வல்வெட்டித்துறையின் புனித செபஸ்தியார் ஆலயத்தை சிறிய கொட்டிலாக முதலில் அமைத்தார் எனவும் மேற்படி நூல் தெரிவிக்கின்றது.


புனிதசொரூபம் வைக்கப்பட்டிருந்த கொட்டிலை சிறிய கற்கட்டிடமாக 1780 களில் அம்மையருடைய மகனான வைத்தியர் அமைத்தார் என்ற குறிப்பும் மேற்படி ஆலயவரலாற்றில் காணப்படுகின்றது. வைத்தியரினால் கட்டப்பட்ட புனித செபஸ்தியர் ஆலயத்தில் 1872இல் ஆரம்பபாடசாலையும் 1890களில் குருமனையும் அமைக்கப்பட்டன. எனினும் இவ்வாலயத்தின் புனரமைப்பு வேலைகள்1895 இல் அன்றைய யாழ்ப்பாண பங்குத்தந்தை வண.மான்கொட் அடிகளாரின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து பங்குத்தந்தை வண.ஒவன் (Owen) என்பவரின் காலத்தில் தேவாலயத்தின் கதவு யன்னல் பூச்சு என மேலும் பல வேலைகளும் நடைபெற்றன. எனினும் 1913இல் வண.பங்குத்தந்தை பெருஸ்சல் (Perussel) காலத்திலேயே சமயஆசாரங்களுடன் கூடிய புனித செபஸ்தியரர் ஆலயத்தின் அனைத்து வேலைகளும் நிறைவடைந்தன.

பின்னர், 1780ஆம் ஆண்டு சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணம் கச்சேரிப் பதிவேடுகளின்படி, இத்தேவாலயம் சீமன் அந்தோனியார் என்பவரால் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாலயத்திற்கு 1959 ஆம் ஆண்டு மடுமாதாவின் திருச்சொரூபம் வல்வெட்டித் துறையில் உள்ள புனித செபஸ் தியார் தேவாலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு புனிதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. அன்றைய அந்த அற்புதத் திருநாளில் மடு அன்னையைத் தரிசிப்பதற்காக கிறிஸ்தவ மக்களுடன் வல்வையின் இந்துக்களும் வருகை தந்து புனிதஅன்னை மரியாளின் ஆசீர்வாதம் பெற்றுச் சென்றனர் வல்வெட்டித்துறையில் 99% இற்கும் அதிகமான மக்கள் இந்துக்களாக இருந்த போதிலும், கிறிஸ் தவமத தேவாலயத்தின் வளர்ச்சிக்கு இந்துக்களும், பெருமளவில் உதவிகளைச் செய்து வந்திருக்கின்றார்கள்.



பழமையான புனித செபஸ்தியார் தேவாலயம் :




1959இல் மடு மாதா புனித மரியாளின் தரிசனம்




மடாலய அமைப்பில் உருவாக்கப்பட்ட எளிமை நிறைந்த செல்வச்சந்நிதிமுருகன் ஆலயத்தின் அன்றைய தோற்றமும், இன்றைய தோற்றமும்




ஆதி வைரவர் கோயிலின் முன்னைய தோற்றமும் தற்போதைய தோற்றமும்

வைத்தீஸ்வரன் கோயிலின் இராஜகோபுரமும் அதில் தெற்குப் புறமாக அமைக்கப்பட்டுள்ள காந்தி சிலையும்



வேவில் வீரகத்திப் பிள்ளையார் கோயில் கொடியேற்றம்



பொலிகண்டி கந்தவனக் கந்தன் கோயில்

2012 ஆம் ஆண்டில், இரண்டு புதிய சந்தைக் கட்டிடங்களைக் கட்டும் பொழுது, இரண்டு கட்டிடங் களுக்கும் மத்தியில் புனித செபஸ்தியார் தேவாலயம் இருந்தமையால், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த மக்களின் வழிபாட்டு வசதிக்காக, ஆலயத்திற்குச் செல்லும் பாதை 18 அடியாக அமைத்துக் கொடுக்கப்பட்டது. ,

இங்கு குறிப்பிட்ட ஆலயங்களை விட வல்வெட்டித்துறையில் மேலும்பல ஆலயங்கள் காணப்படுகின்றன. அவை தொடர்பான விபரங்கள் அந்தத்த ஆலயங்களின் சிறப்பு மலர்களில் இடம்பெற்றதால், நூலின் விரிவஞ்சித்தவிர்க்கப்பட்டுள்ளன. வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குள் மட்டும் சுமார் 34 இந்து ஆலயங்களும், ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் காணப்படுவது வல்வெட்டித்துறையை "கோயில் நகரமாக" அடையாளப்படுத்தியுள்ளது:

- **சிவன் கோயில்கள் (02)**

வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் ஆலயம் (1867), சுந்தரேசப் பொருமாள் கோயில் (1950)

- **பெண்தெய்வ வழிபாட்டு ஆலயங்கள்: (07)**

வல்வை முத்துமாரி அம்மன் கோயில், மீனாட்சி அம்மன் கோயில் (1830)

வீரமாகாளி அம்மன் கோவில் தொண்டைமானாறு பத்திர காளி அம்மன் ஆலயம் (1903)

இராக்கச்சி அம்மன் கோயில், வாடி ஒழுங்கை, அளக்கடவை ஒழுங்கை, காளி கோயில், குச்சம சரஸ்வதி கோயில்

- **முருகன் ஆலயங்கள் (03)**

வயலூர் முருகன் கோயில், கந்தவனக் கடவை ஆலயம்(நகராட்சி மன்ற எல்லையில் அமைந்துள்ளது) தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்

- **பிள்ளையார் கோயில்கள் (10)**

கப்பலுடையவர் கோயில் (1800), நறுவிலடிப் பிள்ளையார் கோயில் (1820), புட்கரணிப் பிள்ளையார் கோயில் (1820), வல்வெட்டி வேவில் வீரகத்திப் பிள்ளையார் கோயில் (1845), வல்வெட்டி வேவில் லக்ஸ்மி நாராயணர் மற்றும் பிள்ளையார் கோயில் (எல்லைக் கோயில்), நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளை யார் கோயில் (1848), வைகுண்டப் பிள்ளையார் கோயில் (1884), உலகுடைய பிள்ளையார் கோயில், தொண்டை மானாறு தச்சன் கொல்லை பிள்ளையார் கோயில்(1815), உப்புத் தண்ணீர்ப் பிள்ளையார் கோயில், பொலிகண்டி

- **வைரவர் கோயில்கள் (09)**

ஆதிவைரவர் கோயில், தில்லையன் மடத்து ஞானவைரவர் கோயில் (1800), ஆசிமடத்து வைரவர் கோயில் (1800), சடையாண்டி வைரவர் கோயில் (1805) நெற்கொழு வைரவர் கோயில், கொத்தியால் வைரவர் கோயில், நெடியகாடு ஞான வைரவர் கோயில் தெணி வைரவர் கோயில், ரேவடி வைரவர் கோயில்

- **காத்தவராயர் கோயில்கள் (02)**

சின்னக் காத்தவராயர் கோயில், மானாங்காணை பெரிய காத்தவராயர் கோயில்

- **விஸ்னு கோயில் (01)**

ஊறணி கிருஸ்ணர் கோயில்

- **கிறிஸ்தவ தேவாலயம்:**

புனித செபஸ்தியார் தேவாலயம்

# பூம்புகாரை நினைவூட்டும் வல்வையின் இந்திர விழா

வல்வை முத்துமாரி அம்மன் திருவிழாவின் நிறைவு நாளான தீர்த்த உற்சவத்தின் பொழுது, நெடியகாட்டுப் பிள்ளையார் ஆலய மோர்மட வரவேற்புக்குழு தலைமையில் வல்வை மக்கள் அனைவரும் இணைந்து அம்மனை வரவேற்கும் வகையில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நடத்திவருகின்ற "இந்திர விழா" நிகழ்வுகள் மிக அற்புதமாக இருக்கும். காலையில் அம்மன் தீர்த்தமாடச் செல்லும் பொழுது, நெடியகாட்டில் இருந்து, அம்மன் கோயிலுக்கு தமிழ் வாத்தியமான சுமார் 15 கூட்டு பறைமேளங்கள் வரை தமிழர் இசையுடன் சென்று அம்மனை அழைத்துவரப்படுவார்.

தமிழர் வாழ்வியலுடன் இணைந்த பறை நாதமானது, பண்டைய தமிழ் வாத்தியமாக இருந்தபோதிலும் அந்த வாத்தியத்தின் மகிமையை உணராதவர்கள் அவை ஈமச்சடங்குகளுக்கான ஒரு வாத்தியமாகவே பார்க்கின்ற ஒரு நிலையை மாற்றி தமிழர்கள் அதன் இசையை இரசிக்கும் வகையில் வல்வெட்டித்துறை நெடியகாட்டு இளைஞர்கள் அந்தத் தமிழ் வாத்தியத்திற்கு முக்கியத்துவம் அளித்து இந்திரவிழாவின் முதலாவது மங்கல வாத்தியமாக அறிமுகப்படுத்தியிருந்தனர்.


அம்மன் வீதியுலா வரும் பொன்னாலை பருத்தித்துறை வீதியின் இருபக்கங்களிலும் ஊரிக்காடு தொடக்கம் ஊறணிவரையான தெருவெங்கும் நூற்றுக்கணக்கான பழக்குலைகளுடன் காட்சி தரும் வாழைகளும், தோரணங்களும், மின்விளக்குளினால் அலங்கரிக்கப்பட்ட மூங்கில் மரங்களும் அலங்கார வளைவுகளும், பூம்புகார் காலத்தை நினைவுறுத்தும் வகையில் அற்புதமான ஒரு தோற்றத்தைக் கொண்டதாக வல்வை நகர் விழாக்கோலம் பூண்டிருக்கும். இந்த இந்திரவிழா நிகழ்வுகள் நெடியகாடு இளைஞர்களுடன் சேர்ந்து, வல்வெட்டித்துறையின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்களும் ஒன்றுகூடிக் கொண்டாடும் விழாவாக அமைந்தது.

தமிழ் நாடகக் காப்பியமான சிலப்பதி காரத்தில் வரும் 'பூம்புகார் நகரத்தின் அமைப் பையும், அங்கு வாழ்ந்த மக்களின் இந்திர விழாக் கொண்டாடிய சிறப்புக்கள் பற்றியும் குறிப்பிடும் "இந்திரவிழா எடுத்த காதையில்", கடற்கரையோர நகரமான பூம்புகார் நகர மக்களால் வருடத்தில் ஒரு நாள் மிகவும் கோலா கலமாகக் கொண்டாடப்பட்டு வரும் வழிபாடுகளும், விழாக்களும் எவ்வாறு நிகழ்த்தப்பட்டனவோ அவை போன்றே "வடமராட்சியின் நெய்தல் நிலச் சூழலில் அமைந்துள்ள நகரமான வல்வையின் மக் களாலும், முத்துமாரி அம்மன் திருவிழாவின்

நிறைவு நாள் அன்று இந்திரவிழா கொண்டாடப்பட்டு வருவது "சிலப்பதிகார நிகழ்வை" எடுத்துக்கூறும் ஒரு பெரு விழாவாக அமைந்துள்ளது.

சிலப்பதிகரத்தில் வருடம் ஒரு முறை இடம் பெற்ற "இந்திர விழாவைப் போன்று, ஒவ்வொரு சித்திரா பௌர்ணமி நாள் அன்றும் வல்வெட்டித்துறை நகரில் கோயில் கொண்ட முத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவ நாளன்று, ஊறணிக் கடற்கரையில் இருந்து, ஊரிக்காடு வரை காலை ஆறு மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணிவரை வல்வையின் இந்திர விழா மிகவும் கோலாகல மாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. கடந்த 60 வருடங்களுக்கு மேலாக வல்வை நெடியகாட்டு இளைஞர் களினாலும், நெடியகாடு மோர் மட வரவேற்புக் குழுவினராலும் வல்வை இளைஞர்களால்க் கொண்டாடப் பட்டு வரும் இந்திரவிழா தற்பொழுது, தமிழர்களின் வரலாறுகள் மற்றும் இந்து மத்தின் சிறப்புக்களைச் சித்தரிக்கும் அலங்கார வளைவுகளுமாக வல்வெட்டித் துறையின் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக அந்த விழாவைக் கொண்டாடி வருகின்றனர். வல்வையின் இந்திர விழாவின் பொழுது, நகரே விழாக் கோலம் பூண்டிருக்கும். அன்றைய இரவு நிகழ்ச்சிகளின் பொழுது, நாதஸ்வரக் கச்சேரி, உள்ளூர் மற்றும் யாழ்ப்பாணத்தின் பிரபலமான கலைஞர்களின் நடன, நாட்டிய நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், நூற்றுக் கணக்கான புகைக் கூண்டுகளை வானத்தில் பறக்க விடுதல் பொம்மலாட்டம் மற்றும் கரகஆட்டம் என மிகவும் கோலாகலமாக அந்த இந்திரவிழாவைப் பார்ப்பதற்காகவே குடா நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வல்வெட்டித்துறையை நோக்கித் திரண்டு வருவார்கள்.

கொழும்பு தமிழ் சங்கத்தில் "சிலப்பதிகார விழா" வருடாவருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டிலும் "சிலப்பதிகார விழா" கொண்டாடப்பட்ட நிகழ்வில், கிழக்கு பல்கலைக் கழகத்தின் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் செ.யோகராஜா அவர்களின் தலைமையில் நடந்த ஆய்வரங்கில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ரகுபரன் உட்படப் பல கல்வியாளர்களும், எழுத்தாளர்களும் கலந்து கொண்டனர். இரண்டாம் நாள் ஆய்வரங்கில், பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் சுமன் அவர்களால், "பூம்புகாரின் இந்திர விழா" என்ற தலைப்பில் கட்டுரை வாசிக்கப்பட்டது. அப்பொழுது, பேராசிரியர்.செ. யோகராஜா ஆய்வாளரையும், அவரால் எடுக்கப்பட்ட தலைப்பையும் அறிமுகம் செய்யும் பொழுது, "பலவருடங்களாகவடக்கேவல்வெட்டித்துறை நெடியகாட்டிலும், ஒவ்வொரு சித்திரா பௌர்ணமியின் பொழுதும். மிகவும்





**1975 இல வைக்கப்பட்ட பிள்ளையார் உருவமும்1974 இல் வைக்கப்பட்டுள்ள நந்தியின் உருவமும்**

கோலாகலமாக இந்திர விழாவைக் கொண்டாடும் மரபு பேணப்பட்டு வருகின்றது. ஆனால் அந்த விழாவுக்கு இந்திரவிழா என்று பெயர் சூட்டப்பட்டதற்கான விளக்கத்தை இங்கே சமூகம் அளித்திருக்கும் எழுத்தாளர் கலாபூசணம் வல்வை அனந்தராஜ் அவர்கள் தான் குறிப்பிடவேண்டும்'' என்று தெரிவித்தபொழுது, பேராளர் உரையில் அவர் குறிப்பிடுகையில் வல்வையின் இந்திர விழாவுக்கும், பூம்புகாரின் இந்திர விழாவிற்கும் உள்ள தொடர்புகள் பற்றி குறிப்பிட்டதுடன் வல்வையின் அன்றைய நாளின் சிறப்புக்கள் பற்றியும் தெளிவு படுத்திய பொழுது அங்கிருந்த கல்வியாளர்கள் அக் கருத்தை வரவேற்றனர்

இந்த விழாவில் ஆய்வாளராகக் கலந்து கொண்ட பேராசிரியர் பா.இரகுவரன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

"வல்வெட்டித்துறை மண் கடலோடிச் சாதனை படைத்த மண் என்பதால் மட்டுமல்ல தமிழர்களே பெருமைப்படக்கூடிய வகையில் சாதனை படைப்பதில் எதிலும் முன்மாதிரியாக நடந்து வருவது தமிழர்கள் என்ற வகையில் எமக்கும் பெருமை தருகின்றது" என்று குறிப்பிட்டமை வல்வையின் பாரம்பரியப் பெருமைகளையும், வீரத்தையும் எந்த அளவுக்கு நேசிக்கின்றார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

"பூம்புகார் நகரின் அமைப்பும், அங்கு வாழ்ந்த பல்வேறு வகையினரான குடியினர்களும், அவ்வூரார் இந்திர விழாக் கொண்டாடிய சிறப்பும் பற்றிச் சொல்லும் சிறந்த பகுதி இது. புகார் நகரின் மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் ஆகிய இடங்களின் சிறப்பையும், ஐவகை மன்றங்களாகிய தெய்வமன்றம், இலஞ்சிமன்றம், ஒளிக்கல் மன்றம், பூதசதுக்க மன்றம், பாவை மன்றம் ஆகியவற்றில் அரிய பல்வேறு பலிகளையும் இட்டு மக்கள் பலரும் வழிபட்டுப் போற்றிய நிகழ்ச்சியையும் எடுத்துரைக்கின்றது. வழிபாடுகளும் விழாக்களும் எங்கணும் நிகழ்கின்றன. இவ்வாறு பூம்புகார் நகரின் வீதிகளின் சிறப்பை இளங்கோ அடிகளினால், பின்வருமாறு வருணிக்கப்படுகின்றது:

"மரகத மணியொடு வயிரம் குற்றிப்
பவளம் திரள்கால் பைம்பொன் வேதிகை
நெடுநிலை மாளிகைக் கடைமுகத்து யாங்கனும்
கிம்புரி பகுவாய்க் கிளர்முத்து ஒழுக்கத்து,
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரணம் நிலைஇய, தோம்அறு பசும்பொன்
பூரண கும்பத்துப் பொலிந்த பாலிகை
பாவை விளக்குப் பசும்பொன் படாகை,
தூமயிர்க் கவிரி, சுந்தரச் சுண்ணத்து,
மேவிய கொள்கை வீதியிற் செறிந்து
- ஆங்கு..." (150-155)

என்ற பாடல் அடிகளில் குறிப்பிட்டது போன்று, "மரகத மணியொடு வயிரமும் வைத்துச் சேர்த்து, இழைத்த பவளத்தின் திரண்ட கால்களும், பசும்பொன் மேற்கூரையும் உடைய பல்லக்கில் இந்திரனின் திரு உருவம் வீதியுலா வரும்பொழுது, அந்த வீதிகள் எங்கும், வீடுகளின் முகப்புக்கள் தோறும் அலங்கரித்து, பூரண கும்பங்கள் வைத்து இந்திரனின் விக்கிரகத்தை வரவேற்க மக்கள் கோலாகலமாகக் காத்திருப்பது போல், வல்வெட்டித்துறை நகரின் ஊறணி தீர்த்தக் கடற்கரையில் இருந்து, முத்துமாரி அம்மனின் விக்கிரகமும் முத்துக்களும், தங்கங்களும் பொறித்த அலங்கார வடிவினராக இந்திர விமானத்தில் வருகை தரும் பொழுது, மக்கள் தமது வீடுகளின் முன்னால் பூரண கும்பங்களையும், வீதிகள் எங்கும் தாகசாந்தி நிலையங்களையும் அமைத்துக் காத்திருக்கும் அந்த வல்வையின் இந்திரவிழாவைக் காண்பதற்காக குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஆசார சீலராக வந்து போவது என்பது, மிகவும் அற்புதமாக இருக்கும். வல்வையின் இந்திர விழாவின் பொழுது வீதிகளில் ஆங்காங்கே வைக்கப்பட்ட வல்வையின் அற்புதமான கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட அலங்கார வளைவுகளில் சிலவற்றை அடுத்துள்ள வர்ணப் பக்கங்களில் உள்ள படங்களில் காணலாம் :




முத்துமாரியம்மன் இராஜகோபுரமும் கழுமரமும்




இந்திரவிழாவில் அமைக்கப்பட்டுள்ள பாரிய லக்சுமி





இந்திர விழாவின் காட்சிகள்



உதயசூரியன் பட்டப் போட்டியில்
ட்றகனின் வடிவமைப்பிலான பட்டம்




இந்திரவிழாவின் நுழைவாயில்



கப்பல் கிழவன் எனப்படும் கப்பலுடையவர் கோயில்

## வல்வெட்டித்துறையின் கல்வி, பண்பாட்டுப் பாரம்பரியம்

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் முக்கியத்துவம் வாய்ந்த புகழ் பூத்த கல்லூரிகள் காணப்படுவதால் வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும், கல்வித் தரமும் அன்று தொடக்கம் இன்று வரை மிகஉயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் அன்று தென்னிலங்கையில் இருந்தும் கூட மாணவர்கள் வடமராட்சியில் இருந்து கல்வி கற்று மிக உயர்ந்த நிலைகளில் இருந்திருக்கின்றனர். தொண்டைமானாறு தொடக்கம் பருத்தித்துறை வரை இயங்கும் உயர்தர வகுப்புகளைக் கொண்ட கல்லூரிகளில் குறிப்பாக, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரி, வல்வைமகளிர் மகாவித்தியாலயம், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி, வேலாயும் மகாவித்தியாலயம், புற்றளை மகாவித்தியாலயம் தும்பளை சைவப் பிரகாசமகா வித்தியாலயம் ஆகிய உயர்தர வகுப்புகளைக் கொண்ட கல்லூரிகள் அன்று தொடக்கம் இன்று வரை மிக உன்னதமான கல்விச் சேவைகளை வழங்கி வருகின்றன. யாழ்ப்பாண நகரத்திற்கு அடுத்தபடியாக வடமராட்சி வடக்கு பிரதேசத்திலேயே மிக அதிகளவிலான உயர்தரப் பாடசாலைகள் காணப்படுவது இன்னுமொரு முக்கியமான அம்சமாகும்.

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் முக்கியத்துவம் வாய்ந்த கல்லூரிகள் காணப்படுவதால் அதன் கல்விப்பாரம்பரியமும், கல்வித் தரமும் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. தொண்டைமானாறு தொடக்கம் பருத்தித்துறை வரை இயங்கும் உயர்தர வகுப்புகளைக் கொண்ட கல்லூரிகளில் குறிப்பாக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் எல்லைக்குள் தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம், சிதம்பரக்கல்லூரி, வல்வை மகளிர் மகாவித்தியாலயம், ஆகியனவும், இடை நிலை வகுப்புக்களைக் கொண்டதாக கம்பர்மலை வித்தியாலயம், வல்வை சிவகுரு வித்தியாலயம் ஆகியனவும், ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளாக வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, வல்வை றோமன் கத்தோலிக் தமிழக் கலவன் பாடசாலை, கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகிய ஒன்பது பாடசாலைகள் இயங்குகின்றன.

- **வல்வையின் கல்வி ஒளிவிளக்கு சிதம்பரக் கல்லூரி - 1896**


வல்வெட்டித்துறை மக்களுக்கு மட்டுமல்லாது அயல் கிராம மக்களும் பயனடையக்கூடிய வகையில் வல்வெட்டித் துறையில் கல்வி ஒளி ஏற்றும் கல்விக்கூடமான வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி, ஆங்கிலக்கல்வியையும், சைவத்தையும் வளர்க்கும் வகையில், வல்வையின் பெரியாராகிய அமரர் கு.சிதம்பரப்பிள்ளை அவர்களால், 1896ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி "சிதம்பரா வித்தியாலயம்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 5ஆம் வகுப்பு வரையே நடைபெற்று வந்த இப்பாடசாலை 1923 ஆம் ஆண்டு, 2ஆம் தரக்கனிஸ்ட பாடசாலையாகவும், பின்னர் 1959ஆம் ஆண்டு தரம்1 பாடசாலையாகவும் உயர்த்தப்பட்டு "சிதம்பரக் கல்லூரி" என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. ஒரு காலத்தில் மிகஉன்னதமான கல்விக் கூடமாக விளங்கியதுடன் பல ஆயிரக்கணக்கான கல்வி மான்களை உருவாக்கி வந்தது. அது மேலும் பல சிறப்புக்களைப் பெற்று, மீண்டும் உன்னதமான ஒரு கல்விக் கூடமாகத் திகழ வேண்டும் என்ற சிந்தனை இன்று வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பழைய மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அல்லாத, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஊற்றெடுக்கத் தொடங்கியுள்ளது.

அந்த வகையிலேயே, இக்கல்லூரியை மீண்டும் உயர் நிலைக்குக் கொண்டு வருவதற்காக, இலண்டனில் வசித்துவரும், சிதம்பரக் கல்லூரியின் பழையமாணவனும் ஆசிரியருமான திரு.சுவாமி. இராஜேந்திரா மற்றும், வல்வெட்டித்துறை மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் அக்கறையுடன் செயற்பட்டு வரும் திரு.ம.இராமானந்த் ஆகியோரின் முயற்சியினால் **சிதம்பரா நலன்புரி வலையமைப்பு நிறுவனத்தினால்** (CWN) சுமார் 18 மில்லியன் ரூபா செலவில் மூன்று ஆய்வு கூடங்கள் நவீனமுறையில் புனரமைத்துக் கொடுத்ததுடன், அதற்குத் தேவையான ஆய்வு கூட உபகரணங்களையும் வளங்கியதும் 20 மில்லியனி ரூபா செலவில், அழகான உள்ளக கேட்போர் கூடத்தையும் புனரமைத்து வழங்கியுள்ளனர்.

அதேவேளை வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவனால் 1999 ஆம் அண்டில், உலக வங்கியின் நிதி உதவியில் 2வது பொதுக் கல்வித் திட்டத்தின் (GEP-2) கீழ் 2.1 மில்லியன் ரூபா, செலவில், நவீன முறையிலான 60'X25' அளவுள்ள "**நூலக கற்றல் வளநிலையமும்**" அதற்குரிய பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த தளபாடங்களும், நூல்களும் வழங்கப்பட்டது.




திரு.கு.சிதம்பரப்பிள்ளை



நவீன ஆய்வுகூடங்கள் தொகுதி

திரு.ந.அரியரத்தினம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் அவரது வேண்டுகோளுக்கு அமைவாக நெக்கோட் திட்டத்தின் திட்டப் பணிப்பாளராக இருந்த, திரு.இலங்காநேசனின் உதவியுடன் இரண்டு மாடிக் கட்டடமும் கட்டிக் கொடுக்கப்பட்டதால், இன்று,மிகச் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் நிறைந்த ஒரு கல்லூரியாகத் திகழ்கின்றது.

அன்று தொடக்கம், இன்று வரை இக் கல்லூரி பல ஆயிரக்கணக்கான கல்வியாளர்களை உருவாக்கி வந்தமை இன்றும் கல்வி உலகில் நினைவு கூரப்படுகின்றது. வல்வெட்டித்துறையின் பாரம்பரியம் மிக்கதும், அதன் அடையாளச் சின்னமாகவும் விளங்கும் சிதம்பரக் கல்லூரியின் தற்போதைய தேக்கநிலை மறைந்து, உன்னதமான ஒரு கல்லூரியாக மீண்டும் மாறவேண்டுமென்பதே வல்வை மக்களின் விருப்பமுமாகும்.

- **தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாயலயம்:**

பிரித்தானியர்களும் அமெரிக்கர்களும் இலங்கையில் இருந்தபாழுது; அவர்களது பிரதான நோக்கமாக மதமாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்ததால், இலகுவில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக கல்வியையே ஒரு ஆயுதமாக எடுத்தனர். அந்தவகையில் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் பாடசாலைகளை ஆரம்பித்து அவற்றினூடாக மதமாற்றத்தை ஏற்படுத்தி வந்தனர்.

அவற்றில் 1851 ஆம் ஆண்டில், அமெரிக்க மிசனரியைச் சேர்ந்த பாதிரிமார்கள் தொண்டைமானாற்றிலும் 5ஆம் வகுப்பு வரையான ஒரு பாடசாலையை ஆரம்பித்தனர். இப்பாடசாலையில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக வீடுவீடாகச் சென்று மதப்பிரசாரம் செய்து அன்பளிப்புக்களையும் பணத்தையும் கொடுத்துச் சேர்த்து வந்தார்கள். இதனூடாக அந்த மாணவர்களிடையே கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக அவர்களுக்கு பாடசாலைகளில் கிறிஸ்தவ மதப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அவர்களது மதமாற்ற முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்காக கல்வியினூடாகவே சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்ற இலட்சிய வேட்கையுடன், தொண்டைமானாற்றில் பல கப்பல்களை வைத்து, திரைகடலோடித் திரவியம் தேடிய செல்வந்தரான திரு. சி.வீரகத்திப்பிள்ளை அவர்கள் எடுத்த முயற்சிகளினால், அவருடைய சகோதரரின் இல்லத்தில், 1912 ஆம் ஆண்டு, 20 மாணவர்களுடன் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார்.

இப்பாடசாலையில் சைவசமயத்திற்கு முன்னுரிமை கொடுத்ததுடன் ஆங்கிலக் கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டதால், அன்று இப்பாடசாலை ஆங்கிலப் பாடசாலை - என்றே அழைக்கப்பட்டு வந்தது. அப்பொழுது, தொண்டைமானாற்றில் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையும், தொண்டைமானாறு சைவ ஆங்கிலப்பாடசாலையும் தனித்தனியாகவே இயங்கி வந்தன. பின்னர் பாடசாலைகளை அரசு சுவீகரித்த பின்னர் 1965 ஆம் ஆண்டு, ஒரே பாடசாலையாக இணைக்கப்பட்டது. இப்பாடசாலை பின்னர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரதும், பொது மக்களினதும் கோரிக்கைக்கு அமைய 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் என்று பெயர்மாற்றப்பட்ட போதும் தரம் இரண்டு பாடசாலையாகவே இயங்கி வந்தது.

ஆனால் இப்பாடசாலையில் கற்கும் மாணவர்களில் பலர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருபவர் களாதலால், க.பொ.த. சாதாரண தரத்தில் திறமையாகச் சித்திபெற்ற போதும், வேறு பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களைக்கற்கமுடியாததால், அவர்களில் பலர் உயர் கல்வியை இடைநிறுத்தியுள்ளதைக் கவனத்தில் எடுத்த அதிபர் மற்றும் பாடசாலைச் சமுகம் 1998 ஆம் ஆண்டு இதனை தரம் 1






**தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயமும், ஸ்தாபகர் சி. வீரகத்திப்பிள்ளையும்**

பாடசாலை யாகத் தரம் உயர்த்தி, க.பொ.த. உயர்தர வகுப்புகளை வைப்பதற்கான அனுமதியைக் கோரியபோது, அதற்கு வடமராட்சிகல்வி அலுவலகம்அனுமதிவழங்க மறுத்துவிட்டது. அவர்கள் அனுமதியை வழங்கு வார்கள் என்ற நம்பிக்கையில் அங்கே சித்தி பெற்ற மாணவர்களை தற்காலிகமாக வைத்து உயர்தர வகுப்புக்களை நடத்தி வந்த அதிபர் ஒரு நெருக்கடியான நிலையை எதிர்நோக்கியிருந்தார்

அங்கே ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப் புகளை மீண்டும் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது, அப்பொழுது வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்ட அதிபரிடம் இருந்து அனைத்து ஆவணங்களும் பெறப்பட்டு, செயலாளராக இருந்த திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள்மூலம், அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்ததால், பல மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கும், கல்வியியல் கல்லூரிக்கும் செல்லும் வாய்ப்பைப் பெற்று இன்று மிகச்சிறந்த உயர்தரப்பாடசாலைகளில்ஒன்றாக தொண்டை மானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் விளங்குகின்றது

**வல்வை மகளிர் மகா வித்தியாலயம் -1971**

வல்வெட்டித்துறையின் கல்விப் பாரம்பரியத்தில் பாடசாலைகள் ஆரம்பித்த காலம் முதல் கலவன் பாடசாலைகளே இருந்து வந்தபோதும்,ஏனைய கிராமங்களில் உள்ளதுபோன்று, பெண்களுக்கென ஒரு தனித்துவமான பாடசாலை இல்லை என்ற கருத்து கல்வியாளர்களிடையே தோன்றியபோது, நெடிய காட்டில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அரச உதவியின்றி தனியாரின் முயற்சியினாலேயே பெண்களுக்காகவென வல்வை மகளிர் மகா வித்தியாலயம் உருவாக்கப்பட்டது. அந்தநேரம் வல்வெட்டித்துறை நகரசபை துரை வாத்தியார் என்பவரிடம் இருந்து கொள்வனவு செய்த காணியிலேயே மகளிருக்கான பாடசாலை அமைக்கப்பட்டது. இக்காணியை கல்வித் திணைக்களத்தின் பெயரில் எழுதுவதற்கு அன்றும் சிலரால் எதிர்ப்புக் காட்டியபோது, அப்போதைய நகரபிதா திரு. மு. இரத்தினவடிவேல் அவர்களினதும், பாராளுமன்ற உறுப்பினருமாக இருந்த திரு. க. துரைரத்தினம் அவர்களதும் முயற்சியின் காரணமாக எதிர்ப்புக்களையும் மீறி பாடசாலைக்கான நிலம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அதனை அடுத்து பாராளுமன்ற உறுப்பினரால், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒரு கட்டிடமும், அமரர்களான செ.யோககுரு, செ.மௌனகுரு ஆகிய இரு சகோதரர்களும் சேர்ந்து, தமது

தாயின் நினைவாக வடக்குப் புறமாக ஒரு கட்டடத்தையும் கட்டிக் கொடுத்தனர்.

இப்பாடசாலையின் திறப்பு விழா 1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்று, கல்வித் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக திருமதி. கோ. அரியரத்தினம் அவர்கள் பொறுப்பேற்று, 344 மாணவர்களைக் கொண்ட உயர்தரப் பாடசாலையாக நடத்தி வந்தார். 1999 ஆம் ஆண்ட உலகவங்கியின் 2வது பொதுக் கல்வித் திட்டத்தின் கீழ், வடக்குக் கிழக்கு மாகாணத்தில் நூலக அபிவிருத்திக்குப பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்தபொழுது, 1.2 மில்லியன் ரூபா செலவில் ஒரு நவீன நூலக கற்றல் வள நிலையமும் கட்டிக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதேவேளை வடமராட்சி வலயம் இவ்விடத்தில் இருந்த பழைய மரத்தைத் தறிக்க முடியாது என்பதைக் காரணம் காட்டி நூலகத்தைக் கட்டுவதற்கான அனுமதியை மறுத்தபோதும், மாணவர்களின் கற்றல் செயற்பாட்டைக் கவனத்தில் எடுத்து வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நூலக அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சின் பேரில், உலக வங்கியின் நிதி உதவியில் 2 வது பொதுக் கல்வித் திட்டத்தில;(GEP-2) புதிய நூலகம் அமைக்கப்பட்டது. இன்று வடமராட்சியில் முதல்தரமான நூலகம் என்ற விருதினைப் பெற்று சிறந்த நூலகமாகவும் திகழ்கின்றது. அதேவேளை மகளிர் கல்லூரிக்கு என விளையாட்டு மைதானம் இல்லை என்ற குறையைப்





**வல்வை மகளிர மகாவித்தியாலயத்தின் தோற்றமும், எதிர்ப்புறமுள்ள விளையாட்டு மைதானமும்**

போக்கும் வகையில் பாடசாலை நிர்வாகம் கடுமையான முயற்சிகளை எடுத்துவந்த நிலையில், 2011 ஆம் ஆண்டு புதிதாகப் பதவி ஏற்ற வல்வெட்டித்துை நகராட்சி மன்றத்தின் முதலாவது அமர்வில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நகரசபைக்குச் சொந்தமான 6 பரப்பு காணியை வல்வை மகளிர் மகா வித்தியாலயத்திற்கு எவ்வித நிபந்தனையும் இல்லாமலேயே வழங்குவது என்று எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அந்த ஆதனம் 2012 ஆம் ஆண்டு பாடசாலைக்குக் கொடுக்கப்பட்டது. வல்வையின் கல்வி அபிவிருத்தி மற்றும் விளையாட்டுத்துறைக்குக் கிடைத்த வரப்பிரசாதமோ என்னவோ, அந்த ஆதனத்தை வல்வை மகளிர் மகா வித்தியாலயத்திற்கு வழங்குவதற்கு எதிர்ப்புக் காட்டிய ஒரு சிலர் அன்றைய அமர்வைப் புறக்கணித்தததால், வல்வையின் பெண் குழந்தைகளுக்கான ஒரு விளையாட்டு மைதானம் எவ்வித சிரமமும் இல்லாது கிடைத்தமை வல்வைக் கல்வி அபிவிருத்தியின் ஒரு மைல் கல்லாகும். ஆந்த ஆதனத்துடன் ஏற்கனவே திரு. பழனி அண்ணாவினால் வழங்கப்பட்ட காணியுடன் சேர்த்து சிறந்ததொரு விளையாட்டு மைதானமும்

அமைக்கப்பட்டுள்ளதால், இப்பாடசாலையின் மாணவிகள் விளையாட்டுத் துறையி லும் பல சாதனைகளைப் புரிந்து வல்வெட்டித் துறைக்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.

- **சைவத் தமிழ் வளர்த்த வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்**

ஆறுமுகநாவலரின் சைவ மறுமலர்ச்சி இயக்கம் வலுப் பெறுவதற்கு முன்னரேயே வல்வெட்டியில் குமார சுவாமி முதலியார் என்பவரால் ஒரு சைவத் தமிழ் பாடசாலை இலவசமாகவே நடத்தப்பட்டது. அவரது காலத்தில், வல்வெட்டி மக்களிடையே தமிழும், சைவமும் தான் வேரூன்றி யிருந்ததால், கிறிஸதவ மதத் திற்கு எவரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. 1894 ஆம் ஆண்டு வரை திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு வல்வெட்டிக் கிராமத் தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கான கல்வி ஒளியை ஏற்றி வந்த பொழுது, 1894 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்கன் மிசனரி மாரினால், பொறுப் பேற் கப் பட் டு "வல்வெட்டி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையாகப் பெயர் சூட்டப்பட்டு, அவர்களது நிர்வாகத்தில் இயங்கத் தொடங்கியது. அந்த வகையில் யாழ்ப்பாண சைவத் தமிழ் மக்களிடையே மதமாற்றத்தை ஏற்படுத்து வதையே குறிக் கோளாகக் கொண்டிருந்தாலும், அமெரிக்கன் மிசனரிமாரின் வருகையின் பின்னரே, யாழ்ப் பாணச் சமுகத்தின் கல்வி வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. ஆரம்பகால அதிபராக அச்சுவேலியைச் சேர்ந்த திரு.மயில்வாகனம் மோசஸ் மத்தியூ என்பவர் பொறுப்பேற்று 1901 ஆம் ஆண்டு வரை சிறப்பாகக் கடமையாற்றியிருந்தார். அவரது காலத்தில் இப்பாடசாலையானது, ஆரம்பப் பிரிவில் இருந்து, தரம் பதினொன்று வரை வகுப்புகள் நடைபெற்றன. பின்னர் அயல் பாடசாலைகளின் வளர்ச்சி காரணமாக 1987 ஆம் ஆண்டுவரை 7 ஆம் வகுப்பு வரை நடத்தப்பட்டு பின்னர் தரம் 5 வகுப்புகளைக் கொண்டதாக இயங்கத் தொடங்கியது.

1978 ஆம் அண்டு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு.க.செ.சின்னரத்தினம் அவர்கள் இப்பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்றபின்னர், 01.01.1982ஆம் ஆண்டில் இருந்து "யாழ். வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்" எனப் பெயர் மாற்றப்பட்டு முழுமையாக ஒரு சைவத்தமிழ்ப் பாடசாலையாகவே இயங்கத் தொடங்கியது. அவரது காலத்தில் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்லாது, ஒழுங்கு கட்டுப்பாடுகளிலும் மேலோங்கியிருந்ததால், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் அந்தப் பிரதேசத்திலேயே மிகச் சிறந்த பாடசாலை என்ற பெயரையும் பெற்றது.

ஒரு பாடசாலையின் மீது பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் அக்கறைகள் அதிகரிக்கவேண்டுமானால், அந்தப் பாடசாலையானது எல்லாத்துறைகளிலும் செல்வாக்கைச் செலுத்த வேண்டும். அந்த வகையில்வல்வெட்டி விநாயகர்வித்தியாலயத் தின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட லண்டன், கனடா, சுவிஸ்வாழ் வல்வெட்டிவாழ் மக்களின் அயராத உழைப்பின் காரணமாக 2002 ஆம் ஆண்டில், இப்பாடசாலைக்கு எதிர்ப்புறமாக உள்ள மாஞ்சோலைக் காணியைக் கொள்வனவு செய்து, அதனை பாடசாலை விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தனர். அவ்வாறு புதிதாகக் கொள் வனவு செய்யப்பட்ட காணியில், 2002 ஆம் ஆண்டு RRAAN என்ற அமைப்பின் நிதியுதவியில் இருந்து, 70' X 25' அளவுள்ள கட்டிடம் கட்டிக் கொடுககப்பட்டதால் வகுப் பறைகளின் பற்றாக்குறையும் ஓரளவு குறையத் தொடங்கியது.

2002 ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற நிதியில் இருந்து மாணவர்களின் தேவைக் காகவே கட்டிக் கொடுக்கப்பட்ட நீர்த் தொட்டிக்கு வாரம் இரண்டு நாட்கள் என்ற அடிப்படையில் மாணவர் களின் பயன் பாட்டிற்காகவும், வீதியால் நடந்து களைத்துச் செல்பவர்களுக்கும் தாகத்தைத் தீர்ப்பதற்காக






வுமே வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

அதேவேளை தினமும் பாடசாலை நேரங்களில் கூட அயலில் உள்ள கடைகளைக் கழுவுவதற்கும், வர்த்தகர்கள் தமது எண்ணெய்ப் பதார்த்தங்களால் அழுக்கடைந்த பாத்திரங்களைக் கழுவி வந்ததால், தினமும் குடிநீர் விரயம் செய்யப்பட்டு வருவதால் பிள்ளைகளின் தேவைக்கு குடி நீர் கிடைப்பதில்லை எனவும் அதிபர் முறைப்பாடு செய்திருந்த போதிலும் வெளியாரின் தலையீடு காரணமாக அவரால் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது போய்விட்டது.

- **கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்திய வல்வைக் கல்வி மன்றம்- 1978**

1978 ஆம் ஆண்டில், வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்கு உதவக் கூடிய வகையில் அதிபரின் அனுமதியுடன் பாடசாலைக்குப் புறம்பான ஒரு வேலைத்திட்டமாக இலவச வகுப்புக்களை தரம் 9 தொடக்கம் 13 வரை நடத்துவதற்காக கல்வி வளர்ச்சியின் மீது அக்கறை கொண்டவர்களால், முன்னெடுக்கப்பட்டது. இந்த முயற்சியில் வல்வையின் ஆசிரியர்களும், சில கல்வியாளர்களும், சட்டத்தரணிகளும் இலவசமாகவே கற்பித்து வந்தனர். மிகச் சிறப்பாக வகுப்புகள் நடைபெற்று வந்தபோதும், வல்வெட்டித்துறையில் செயற்பட்டு வந்த சில தனியார் கல்வி நிறுவனங்களின் தலையீடுகளினால் அதனைத் தொடர்ந்து செயற்படுத்த முடியாதுபோனது, இதனால் சிதம்பராக் கல்லூரியில் இலவசமாக வழங்கப்பட்ட வகுப்புகளை நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது எனவே "ரியூற்றரியை ரியூற்றரியினாலேயே அழிக்கவேண்டும்" என்ற சங்கற்பத்துடன் 10.01.1979 அன்று "வல்வைக் கல்வி மன்றம்" "கல்வியே செல்வம்"என்ற மகுட வாக்கியத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அது சுமார் 15 வருடங்களாக வல்வெட்டித்துறை மாணவர்களின் கல்வி, கலை, பண்பாட்டு வளர்ச்சியில் கவனம் செலுத்தியதால், அந்தக் காலப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களை உயர் நிலைக்குக் கொண்டு வந்த பெருமை இம்மன்றத்திற்கே உரியது. வல்வைக் கல்வி மன்றத்தின் கல்வி சார்ந்த பணிகளுக்கு மேலதிகமாக வருடாந்தம் நடத்தி வந்த கல்விக் கண்காட்சிகளின் மூலம் மாணவர்களின் ஆராய்வூக்கம் வெளிப்படுத்தப்பட்டது.


கலை, பண்பாட்டு மற்றும் மொழித்திறனை ஊக்குவிக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகள், இலக்கியப் போட்டிகள், கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகள் ஆகியவற்றை நடத்தி, மாணவர்களின் கூட்டுப் பொறுப்பு, மொழித்திறன் விருத்தி மற்றும் கல்விக்கான தேடலையும் மேம்படுத்தும் வகையில் அமைந்திருந்தமையால், இங்கே கற்று வெளியேறிய மாணவர்களிடையே ஒரு சமநிலை ஆளுமை வளர்த்தெடுக்கப்பட்டது.

ஆயினும் வல்வையின் கல்விச் சொத்தாகப் பேணப்பட்டு வந்த வல்வைக் கல்வி மன்றம் மீது 1991 ஆம் இடம் பெற்ற வல்வைப்புயல்

நடவடிக்கையின் பொழுது, அடுத்தடுத்து, இரண்டு விமானங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுக்களினால் சேதமடைந்து அழிக்கப்பட்டாலும், தற்காலிக கொட்டகைளை அமைத்து மேலும் சிறப்பான முறையில் கல்விக் கட்டமைப்பை உருவாக்கிவந்த போது,1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட தமிழ் மக்களின் பாரிய இடப்பெயர்வினாலும், வல்வையின் கல்வி ஒளிவிளக்காகத் திகழ்ந்து வந்த, வல்வைக் கல்வி மன்றம், 17 ஆவது அகவையுடன் தனது பணியை முடித்துக் கொண்டமை வல்வையின் கல்வி மற்றும் பண்பாட்டு விருத்தியில் ஒரு தேக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

- **பாரம்பரிய பெருமை மிக்க வல்வை சனசமூக சேவா நிலையம் :**

*1943* ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆனந்தபகவதர் என அழைக்கப்பட்ட அமரர்.க.ஆனந்தமயில் அவர்களின் சிந்தனை





**மாணவர்களின் தேடலை ஊக்குவிக்கும் கல்விக் கண்காட்சியில், ஆசிரியர்களுடன் மாணவர்கள்**

யில் உதித்த விருட்சம் தான் இன்று வல்வை சனசமூக சேவா நிலையமாக உயர்ந்து நிற்கின்றது. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில், தமிழ் மக்களின் மத மற்றும் கலாசார ஒழுக்க விழுமியங்கள் எல்லாம் பறிக்கப்பட்ட பொழுது, வல்வை மக்களை ஒரு உறுதியான வாழ்வுக்கு இட்டுச் செல்லும் நோக்கில் ஆனந்தபகவதர் அவர்களால் "வாசிகசாலை" என்ற பெயரில் ஒரு சிறிய அளவில், ஆரம்பிக்கப்பட்டது. *1943*ஆம் ஆண்டில் இதனை ஆரம்பித்தபொழுது, தற்போது அமைந்துள்ள சந்தைக்கட்டிடத்தில் இருந்த "விஸ்வநாதர் கிட்டங்கி"யின் ஒரு அறையிலும், அதன் பின்னர், தெருவுக்கு மேற்குப் புறமாக இருந்த வளவில் உள்ள ஒரு அறையிலும் இயக்கப்பட்டது. அதன்





**ஆண்டுதோறும் நடத்தப்படும் பரிசளிப்பு விழாவும் 1991 இல் விமானக் குண்டு வீச்சில் அழிந்த மன்றமும்.**

பின்னரே தற்போது உள்ள இடத்தில் அழகான ஒரு கட்டடமாக அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில், திரு.ஏரம்பமூர்த்தி அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட சுமார் 200 நூல்களைக் கொண்டு இரவல் வழங்கும் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அன்று அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய தலைவர்கள், செயலாளர்களின் முயற்சியினால்' இந்நிலையம் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டது. 1950ஆம் ஆண்டில் ஒரு அழகான நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்பட்டு சமுகசேவைகள், சுகாதார விழிப்புணர்வு படக்காட்சிகள், 'அலை ஒளி' ஒளி ஆகிய கையெழுத்துச் சஞ்சிகைகளின் வெளியீடு, நூல்கள் இரவல் வழங்குதல், இலக்கியப் போட்டிகளை நடத்துதல் போன்ற பல அரிய சேவைகளை ஆற்றி வந்தது. இந்த நிலையத்தைக் கௌரவிக்கும் வகையில் தமிழகத்தில் இருந்து வருகை தரும் அறிஞர்கள், வல்வெட்டித்துறைக்கும் வந்து போவார்கள். அவர்களில் குறிப்பாக, திருமுருக கிருபானந்த வாரியார், தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானகிராமணியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திரு.சுத்தனந்தபாரதியார் போன்ற அறிஞர்கள் மற்றும் மகாத்மா காந்தி போன்ற தலைவர்களும் வருகை தந்து சொற்பொழிவாற்றி அறிவொளி பரப்பிய நிலையம் இன்று களையிழந்து செயல்திறனற்ற நிலையில் காணப்படுகின்றது.

கலை உணர்வை எற்படுத்திய அந்த அழகான உறுதியான சனசமுக நிலையக் கட்டிடம், அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால், எவரதும் ஆலோசனையும் பெறப்படாமலேயே இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அந்த இடத்தில் நெக்கோட் திட்டப் பணிப்பாளராக இருந்த திரு.இலங்காநேசன் அவர்கள் வல்வெட்டித்துறை மண்ணுக்குத் தனது நன்றிக் கடனாக வழங்கிய நிதியில் இருந்து ஏற்கனவே பேருந்து தரிப்பிட நிலையம் இருந்த போதும், கீழ் தளத்தில் இன்னுமொரு பேருந்து தரிப்பிட நிலையத் தையும், அதற்கு மேல் உள்ள முதலாவது மாடியில், நூலகத்திற்கான கட்டடமும் கட்டப்பட்டுள்ளது.

இன்று அது பொதுமக்களால், நூலகமாகப் பயன்படுத்தப்படாத நிலையில், செயலிழந்து போய் இருக்கின்ற மையானது, வல்வெட்டித்துறை மண், பேணப் பட்டிருக்க வேண்டிய ஒரு பாரம்பரிய சொத்தை இழந்து போய் நிற்கின்றமை வல்வை மண்ணுக்குக் கிடைத்த இன்னுமொரு இழப்பாகும். நெக்கோட் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த நிதியைக் கொண்டு வேறொரு இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பொது நூலகம் ஒன்றைக் கட்டியிருந்தால், வல்வை மண்ணுக்கு இன்னும் ஒரு சொத்துக் கிடைத்திருக்கும்.





**செயல்திறனுடன் அன்று இயங்கிய வல்வை சனசமுக சேவா நிலையத்தின் அழகிய தோற்றமும், ,இன்று செயலிழந்து போய் இருக்கும் தற்போதைய நிலையத்தின் தோற்றமும்**

- **சனசமுக நிலையத்தின் முன் இருந்த வாளி மலகூடங்களின் ஒழிப்பு:**


வல்வெட்டித்துறைப்பிரதேசங்களில்அன்று வாளி மலகூடங்கள் ஏராளமாக இருந்தன. வீடுகளிலும், பொது மலகூடங்களிலும் இருந்த வாளி மலகூடங்களில் சேருகின்ற மலக் கழிவுகளை சுகாதாரத் தொழிலாளிகள் தாம கொண்டு செல்கின்ற பெரிய வாளிகளில் சேகரித்து ஒரு சிறிய கை வண்டியில் வீதி வழியாகக் கொண்டு சென்று குழிகளில் புதைப்பார்கள். அப்பொழுது



**வல்வெட்டித்துறை சந்தியில் இருந்த தொகுதி மலகூடம். அதன் பின்னணியில் சனசமுக நிலையம் உள்ளது**

வல்வெட்டித்துறைச் சந்தியிலும் தற்போதைய சனசமுக நிலையக் கட்டிடத்திற்கு முன்பாக இருந்த அரச மரத்துடன் இணைந்ததாக 12 வாழி மலகூடங்களைக் கொண்ட ஒரு மலகூடத் தொகுதி இருந்தது.

வல்வைச் சந்தியின் மத்தியில் உள்ள மலகூடத்தில் இருந்து வெளிவரும் துர்நாற்றம், வல்வெட்டித்துறை நகரப்பகுதியையே அசுத்தமாக்கிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் திரு.சுந்தரம் டிவகலாலா அவர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இருந்த பொழுது, வாளி மலகூடத்தைப் பயன்படுத்தி வந்த வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை நகரசபைகளுக்கு 1984 ல் அனுப்பி வைத்த சுற்றறிக்கையினூடாக வாளி மல கூடங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு இன்று எல்லா வீடுகளிலும் நீரிறக்கிப்பொறி மலகூடங்கள் பாவனையில் வந்துவிட்டன. அதனைத் தொடர்ந்து வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்த மலசலகூடமும் இடித்து அகற்றப்பட்டது. அன்று வல்வெட்டித்துறையின் சந்தியின் அழகைக் கெடுத்துக் கொண்டிருந்த வாளி



**வீடுகளில் பாவனையில் இருந்த ஒரு வாளி மலகூடம்**

மலகூடங்கள் ஒழிக்கப்பட்டமையானது முக்கியமான ஒரு அம்சமாகும்

- **தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்:-1968**

தமிழ்மொழிமூல மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்துவதற்காகவும், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காகவும், உயர்தர வகுப்பு விஞ்ஞான மாணவர்களைப் பொதுப் பரீட்சைகளுக்குத் தயாராக்குவதற்காகவும் தொண்டைமானாறு வெளிக்களநிலையம்1968 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஹாட்லிக்கல்லூரியில், விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிய திரு.எம்.அற்புதநாதன் மற்றும் அவரோடு இணைந்து, செயலாற்றிய சில ஆசிரியப் பெருந்தகைகள் எடுத்த முயற்சியினால்,

தொண்டைமானாற்றின் அக்கரையில், அரச காணியில் "தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்" என்ற பெயரில் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்டது. இதன் செயற்பாடுகள்யாவும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடனும், அவர்களின் வழிகாட்டலிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

"பச்சைக் கட்டடம்" என்று பிரபலமடைந்த இந்தக் கல்வி நிறுவகம் மாணவர்களின் ஆய்வு ஊக்கத்தை வளர்த்தெடுத்த அதே நேரத்தில், அவர்களது கல்வி அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தி வந்தது. பல மாணவர்களும், ஆசிரியர்களும் தங்கியிருந்து, கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடவும், கடல் வாழ் அங்கிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் மூலம், மாணவர்களின் புத்தாக்க முயற்சிகளை மேற்கொள்வதற்கும் ஏற்ற வகையில், சகல வசதிகளையும் கொண்ட உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் விஞ்ஞான ஆய்வுகூடங்கள், விரிவுரை மண்டபம், நூலகம், கட்புல, செவிப்புல மண்டபம் தங்குமிட வசதிகள் என்பவற்றை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டிருந்தது. அதன்மூலம், பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் விஞ்ஞான அறிவு மேம்படுத்தப்பட்டது.

**தூரநோக்கு : "கல்வியின் தரத்தை உயர்த்ததல்**

**பணிக்கூற்று : "களவேலைகளையும், ஆய்வு வேலைகளை அடிப்படையாகக் கொண்டு, மாணவர்களின் விசேட ஆற்றல்களை வளர்த்தெடுத்தல்.**

கடந்த காலங்களில் பாடவிதானத்துடன் இணைந்த வகையில் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சிகள் மற்றும் களப்பயிற்சி என்பவை தொடர்பாகவே செயலமர்வுகள் நடத்தப்பட்டன. ஆனால் அதற்கும் மேலதிகமாக பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

1. குடாநாட்டில் நீரியல் உயிரியல் ஆராய்ச்சிகளினூடாக நீரின் வன்மைமைத் தன்மையைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும், நீரின் உவர்த் தன்மையைப் பரிசோதித்தல்.
2. தாவர சாகியத்தின் வலயங்களைக் கற்றல்
3. பாடவிதான மாற்றங்களுக்கு ஏற்ப புத்தூக்கம் அளிக்கும் வகையில் க.பொ.த. (உயர்தர) வகுப்பு ஆசிரியர்களுக்குக் காலத்திற்குக் காலம் கருத்தரங்குகளையும், செயலமர்வுகளையும் நடத்ததல்.
4. விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் வகையில், விஞ்ஞான அறிவுப் போட்டிகளைநடத்திதகைமைச்சான்றிதழ்களை வழங்கி, விஞ்ஞானக்கல்வியில் விருப்பத்தை ஏற்படுத்துவதுடன், செயற்பாடு தொடர்பான கற்றலை விருத்தி செய்தலும்.
5. தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்திற்கு அண்மையில் உள்ள ஆற்றுப் பகுதியில், இறால் வளர்ப்பை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
6. தொண்டைமானாறு கடல் நீரேரிப் பகுதிக்குள் காணப்படுபவையும், வந்து போகின்றவையுமான பறவைகளை அவதானித்தலும், அவற்றைப் பேணுவதற்கான சரணாலயத்தை அமைத்தலும்.

**அதேவேளை வினாத்தாள்களை அச்சிட்டு விற்பனை செய்வது என்பது அதன் பிரதான குறிக்கோளாக இருக்கவில்லை.** 1977 ஆம் ஆண்டில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனமுரண்பாடுகள் காரணமாக தொண்டை மானாறு வெளிக்கள நிலையத்தின் கட்டடங்களும், அதனுள் இருந்த பெறுமதியான கற்றல்-கற்பித் தல்

வளங்களும், அரிய உயிரியல் சேமிப்புக் களும், பல ஆயிரக்கணக்கான நூல்களும் அழிக்கப் பட்டன. அதனைத் தொடர்ந்து 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதியுடன், வெளிக்கள நிலையத் தின் அபிவிருத்திச் செயற்பாடுகள், முடக்கப் பட்டன. இந்த நிலையில் 2011ஆம் ஆண்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம் பெற இருந்த வேளையில், "மாணவர்களின் ஆராய்வு ஊக்கத்தையும்சுய கற்றலையும் வளர்ப்பதற்காக தொண்டைமானாற்றில் உருவாக்கப்பட்ட கற்றலுக்கும், ஆய்வுக்கும் பயன்படும் வெளிக்கள நிலையத்தை சகல தொழில்நுட்ப வசதிகளையும், ஆய்வுகூட வசதிகளையும் உள்ளடக்கியதாகவும், மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கிப் பயிற்சிபெறும் வசதிகளையும் கொண்டதாகவும் மீண்டும் தொண்டைமானாற்றில் இயக் குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்" என்ற தீர்மானத் திற்கு அமைவாக, தொண்டை மானாறு வெளிக்களநிலையத்தை மீண்டும், குறிப்பாக, வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குள் உள்ள தொண்டைமானாற்றில் நிறுவும் செயல்திட்டம் முன்வைக்கப்பட்டது. நகராட்சி மன்றத் தின் தீர்மானத்தைத் தொடர்ந்து, தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தை தொண்டைமானாற்றில் இயங்கச் செய்வதில், பல சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்த போதும், அதனை மீண்டும் தொண்டைமானாற்றில் அமைப்பதற்கான காணியைப் பெற்றுக் கொள்வதற்காக, செல்வச்சந்நிதி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. தங்கராசா ஐயர் அகிலேந்திர ஐயர் அவர்களை வல்வெட்டித்துறை நகர பிதா அணுகியபொழுது, மாணவர்களின் நலன் கருதி, வெளிக்கள நிலையத்தின் செயற்பாடுகளுக் காக மட்டும் 65 பேர்ச் காணியை தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் பெயரிலும், அதனுடன் ஆற்றங் கரை வீதி வழியாக வெளிக்கள நிலையம் வரை செல்லும் வீதியை அமைப்பதற்கு 30 பேர்ச் காணியை வல்வெட்டித் துறை நகராட்சி மன்றத்தின் பெயரிலுமாக சுமார் 60 இலட் சம் ரூபா பெறுமதியான 9 பரப்புக் காணியை மனமுவந்து வழங்கியிருந்தனர்.



சிவஸ்ரீ த.அகிலேந்திர ஐயர்,அவரது மனைவி இருவரும் இணைந்து வழங்கிய ஆதனத்தின் உறுதிப் பத்திரத்தை நகரபிதா ந.அனந்தராஜ் ஊடாக தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் தலைவர் பேராசிரியர் க.சின்னத்தம்பி அவர்களிடம் கையளிக்கின்றார்.

அந்த நல்ல மனமும், தாராள சிந்தனையும் கொண்ட சிவஸ்ரீ.த.அகிலேந்திர ஐயர் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில், வெளிக்களநிலையக் கட்டடப் பணிகளை நிறைவு செய்யக் கூடியதாக இருந்தது. அவர் மூலம் உறுதியை எழுதும் பொழுது, "இந்த ஆதனம் மாணவர்களின் கல்வித் தேவைக்காகவே பயன்படுத்தப்படவேண்டும். இது வேறு தேவைக்குப்பயன்படுத்தப்பட்டாலோ அல்லது மாணவர்களின்கல்வி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாதுவிட்டாலோ இந்த நிலம், கட்டிடத்துடன் நிலத்தை அன்பளிப்புச் செய்தவருக்கே போய்ச் சேரும்" என்று எழுதப்பட்டமையானது, அவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிலத்திற்கு ஒரு பாதுகாப்பையும் வழங்கியுள்ளது. தற்போதைய செயற்குழு தொண்டைமானாற்றில் உள்ள புதிய இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கத் தவறினால், அந்த நிலமும் கட்டிடமும் சிவஸ்ரீ.த.அகிலேந்திரஐயர் அவர்களுக்கே மீண்டும் சொந்தமாக்கப்படும். தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தைத் தொண்டைமானாற்றிலேயே இயங்கச் செய்வதற்கான ஆரம்ப முயற்சியாக தேயிலை


ஏற்றுமதி மற்றும் சூழலைப் பேணும் டில்மா நிறுவனத்தினரால், (Dilma Group of Conservation) 40அடிX25 அடி அளவுள்ள கட்டடத்தை அமைப்பதற்காக 2.2. மில்லியன் ரூபாவையும், கதிரைகள், அலுவலக மேசைகள் மற்றும் அலுமாரிகளைக் கொள்வனவு செய்வதற்காக 250,000.00 ரூபாவையும் அன்பளிப்பாக வழங்கியதுடன் தாமே முன்னின்று கட்டட வேலைகளையும் மேற்பார்வை செய்தனர். இந்தப் பணியை நிறைவு செய்வதில் பின்புலமாக இருந்து செயற்பட்ட கொழும்பு பல்கலைக் கழகத்தின் விலங்கியல்பீடத் தலைவர், பேராசிரியர் கொட்டகம அவர்களது முயற்சிகள் அளவிடற்கரியது.



வெளிக்கள நிலையம் அக்கரையில் அன்றும்,

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் முழுமையான பணிகளை நிறை வேற்றுவதற்காக மூன்று கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில், மூன்று மாடிக்கட்டடம் அமைக் கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட இரவும் பகலும் காவல் காப்பதற்காக பல ஆயிரக்கணக்கான ரூபாக்களை செலவிட்டும் வருகின்றது.

**ஆற்றங்கரையோரமாக வெளிக்கள நிலையம் வரை செல்வதற்கான புதிய தார் வீதி:-**




தொண்டைமானாறு சந்தியில் இருந்து, தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் வரை செல்வதற்கான சீரான பாதை இல்லாத காரணத்தால், மாணவர்களும், ஆசிரியர்களும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் நகர சபையின் முயற்சியினால், 2013 ஆண்டு தொண்டைமானாறு ஆற்றங்கரையில் இருந்து, வெளிக்கள நிலையம் வரையான 950 மீற்றர் நீளமான வீதி அமைப்பதற்காக 10 மில்லியன் ரூபாவைவில் வெளிக்கள நிலையத்திற்கு இலகுவாகச் செல்வதற்கு ஏற்ற வகையில் தார் வீதி அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது, சகல வசதிகளையும் உள்ளடக்கி கட்டடங்கள் யாவும் பூர்த்தி செய்யப்பட்ட



இக்கரையில் இன்றும்

நிலையிலும், தொண்டைமானாறு வெளிக்களநிலையம் தனது பணிகளை அங்கு மேற்கொள்ளாது பூட்டப்பட்ட நிலையில் உள்ளது. அதேவேளை கற்றல்கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளுக்குத் தேவையான அனைத்து வளங்களையும் கொண்டதாக சர்வதேச தரத்திற்குச் சமனானதாகக் கொண்டுவர புலம் பெயர் அமைப்புக்கள் தயாராக







தனது சொந்த நிலத்தைத் தானம் செய்த குருக்கள் : வெளிக்களநிலையம் வரை செல்லும் புதியபாதை

இருக்கின்றபோதும் வினைத்திறன்மிக்க நிர்வாக அமைப்பு ஒன்று இல்லாத நிலையில் இதன் முழுமையான செயற்பாடுகள் புதிய கட்டடம் அமைக்கப்பட்ட பின்னரும் கூட ஆரம்பிக்கப்படாதமையால் உதவிகளும், கல்வியாளர்களின் ஈடுபாடும் கிடைக்கவில்லை.

அதேவேளை காணியை அன்பளிப்புச் செய்தவரால் குறிப்பிடப்பட் தகவல்கள் 2012ஆம் ஆண்டு பொறிக்கப்பட்ட நினைவுக் கல்லில் இடம்பெற்ற போது பின்னர் வந்த செயற்குழுவினால் அது சேர்க்கப்படவில்லை.

**அட்டாளையும் பின்னர் அறிமுகமான பித்தளைப் பாத்திரங்களும்**





அன்று வீடுகளில் சமையல் செய்பவர்க்ள இரு வகையான பாத்திரங்களைப் பயன்படுததி வந்தனர். மாமிச உணவுகளைத் தயாரிப்பதற்கும், மரக்கறி உணவு வகைகளைத் தயாரிப்பதற்கும் வெவச்வேறான பாத்திரங்களைப் பயன்படுத்தி வந்தனர். மாமிச உணவுகளைத் தயாரிபபதற்கான பாத்திரங்களாக மண் சட்டி, பானைகளைப் பயன்படுத்தினர்.இத்தகைய பாத்திரங்களை அடுக்களைக்கு வெளியில் சிறுசிறு மரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அட்டாளை என்று அழைக்கப்படுகின்ற ஒரு வகைப் பரணில் மண் பாத்திரங்களை அடுக்கி வைப்பார்கள். மரக்கறி உணவுகளைச் சமைப்பதற்கும்.உணவை உட்கொள் வதற்கும் அன்று பித்தளைப் பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டுப் பின்னர் கறையில் உருக்கினால் செய்யப்பட்ட பாத்திரங்களைப் பயன் படுத்தினர்.

# அறிஞர்கள், மகான்களால் வாழ்த்தப்பட்ட நகரம்

- **"வல்வை மக்கள் சிறந்த கடலோடிகள்"-றொபேட்நொக்ஸ் -1716**

*1658* இல், கப்பல் தலைவனாகவும், வரலாற்று நூல் எழுத்தாளருமான றொபேட் நொக்ஸ், பிரித்தானியா வில் உள்ள சறே என்ற நகரத்தைச் சேர்ந்தவர். இவர் பிரித்தானியாவின் கிழக்கிந்தியக் கம்பனியில் வேலை செய்த பொழுது, கடல் மார்க்கமாக நாடுகள் எங்கும் பயணம் செய்த வகையில்,ஒரு தடவை, நொக்ஸ் பயணம் செய்த கப்பல், புயல் தாக்கத்திற்கு உள்ளானபோது, அதிர்ஸ்டவசமாக, அவர்களது கப்பல், இலங்கையில் கரை ஒதுங்கியது. அங்கு தங்கியிருந்த காலப்பகுதியில், இலங்கையின் புவியியல் பின்னணி, மக்களின் வாழ்க்கை முறைகள், பண்பாடு ஆகியவற்றை அறிவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டது அவர் ஒரு சிறந்த வரலாற்று எழுத்தாளராக இருப்பதால், அந்தக் காலப்பகுதியில் தனக்கு ஏற்பட்ட பயண அனுபவங்களைத் தொகுத்து, *1681* ஆம் ஆண்டில் "கிழக்கிந்தியாவில் உள்ள இலங்கைத் தீவுடனான வரலாற்றுத் தொடர்புகள்" (An historical relation of the island Ceylon, in the East Indies. Printed by R. Chiswell.,) என்ற நூலாக எழுதினார். *1680*ஆம் ஆண்டு வரை இலங்கையில் தங்கியிருந்த பொழுது, சேர் றொபேட் நொக்ஸ், கண்டி, மன்னார் மாவட்டத்தில் உள்ள அரிப்பு, மற்றும யாழ்ப்பாணத்தில் உள்ள கரையோரக் கிராமங்களுக்கும் விஜயம் செய்த பொழுது, கடல் மார்க்கமாக வல்வெட்டித்துறை துறைமுகப்பட்டினத்திற்கும் வந்திருந்தார். அவர் வல்வெட்டித்துறைக்கு வருகை தந்த பொழுது, வல்வைக் கடலில் நூற்றுக்கும் மேற்பட்ட பாய்க்கப்பல்கள் கட்டப்பட்டிருந்ததை அவதானித்த றொபேட் நொக்ஸ்,


"வல்வெட்டித்துறை சிறிய கடலோரக் கிராமமாக இருந்தபோதிலும், இங்குள்ளவர்கள், கடின உழைப்பாளிகளாகவும், கப்பல் கட்டுவதிலும், கடற்பயணத்திலும் சிறந்தவர்களாக விளங்கினர்" என்று குறிப்பிட்டது, அன்று வாழ்ந்த மக்களின், கடலோடிப்பாரம்பரியத்தின் சிறப்பைக் காட்டுகின்றது.

- **"வல்வை மக்கள் நாகரிகத்தின் சின்னங்கள்" - சேர் றொபேட்நொக்ஸ் -1716**

அந்த ஊரின் அமைப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகள் பண்பாடுகள் ஆகியவற்றைப் பார்வையிட்டுச் சென்ற சொபேட் நொக்ஸ், வல்வெட்டித்துறையில் உள்ள பெண்கள் தொடர்பாக தனது அவதானத்தை வெளிப்படுத்தும் வகையில், தனது நாட் குறிப்பேட்டில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"நான் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்றிருக்கின்றேன் ஆனால் மற்றைய இடத்து மக்களை விட வல்வெட்டித்துறை மக்கள் நாகரிகத்திலும் மேம்பட்டவர்களாகவே விளங்குகின்றனர். வல்வெட்டிததுறைப் பெண்கள் பளபளக்கும் குடங்களில் நீர் அள்ளிக் கொண்டு அழகாகவும் அடக்கமாகவும் செல்வதைப் பார்த்தால், இவர்கள் நாகரிகத்தின் சின்னங்கள் என்றுதான் சொல்லவேண்டும்.."




AN
Historical Relation
Of the Island
CEYLON,
IN THE
EAST-INDIES:
TOGETHER,
With an ACCOUNT of the Detaining in Captivity the AUTHOR and divers other Englishmen now Living there, and of the AUTHOR's Miraculous ESCAPE.

Illustrated with Figures, and a Map of the ISLAND.

By ROBERT KNOX, a Captive there near Twenty Years.

LONDON,
Printed by Richard Chiswell, Printer to the ROYAL SOCIETY, at the Rose and Crown in St. Paul's Church-yard, 1681.

FACSIMILE OF TITLE PAGE OF 1681 EDITION

- **"ஊர்க்காவலர் வைகிலெங்கள் வல்வை நகர்"- சிவசம்பு புலவர் :**

உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் அவர்களால இயற்றப்பபட்ட "வல்வைக் கலித்துறை" என்ற செய்யுள் தொகுதியில், அன்று வல்வெட்டித்துறையில் வாழ்ந்த மக்களின் பூர்வீகம் பற்றிப் பின்வரும் பாடலூடாக வெளிப்படுத்தியுள்ளார். ஆதியில், ஊர்க்காலுக்காக இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு வல்வெட்டித்துறையில் குடியேற்றப்பபட்ட யுத்த வீரர்களே அன்றைய வல்வை மக்கள்என்பதை "வல்வை ஊர்க்காவலர் வைகிலெங்களுக்கே பெரிதூதியமே" என்று குறிப்பிட்டுள்ளமை வல்வையின் அன்றைய வீர மறவர்களைப் பெருமைப்படுத்துகின்றது.

வல்வெட்டித்துறை மக்களுக்கும் அதன் அயலூர் மக்களுக்கும் தன் திரண்ட செல்வங்களை எல்லாம் அள்ளிக்கொடுத்தும், அம்மக்ககளின் அருட்கொடைக்காக ஆண்டவனின் சன்னிதானத்தையும் அமைத்தும் கொடுத்த வள்ளல் திரு. வெங்கடாசலம்பிள்ளை அவர்களின், வள்ளண்மையை "வல்வைக் கலித்துறை" பாடிய உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் உயர்ந்தும் வியந்தும் பாடியுள்ளார். 1829 - 1910ம் ஆண்டுகளை தனது வாழ்க்கைக்காலமாக கொண்டிருந்த உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் நாவலரின் கடின நடைப் பிரசங் கங்களையும் எளிய நடையில் சாதாரணமக்களும் விளங்கும்படி விளக்கிக்கூறும் அற்புத சொல்லாட்சி மிக்கவர்.

வல்வைக்கலித்துறையில்19ம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் வல்வெட்டித்துறையில் வாழ்ந்த மக்களின் சிறப்பையும் அவர்களுடைய முதல்வனாகவும் முழுமையானவராகவும் திகழ்ந்த வெங்கடாசலம்பிள்ளையின் சீரையும் சிறப்பையும் தெரிந்து கொள்ளலாம் !..

இப்பாடல்அடிகளின் ஊடாக வல்வையின் மறவர்களைச் சிறப்பித்த புலவர், வல்வைக் கலித்துறைச் செய்யுள் தொகுதியின் முதலாவது பாடலில் வல்வை வைத்தியேசப்பெருமான் கோயில் கொண்டருளும், வல்வையின் சிறப்புப் பற்றியும் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

"கோவிற்சிறப்பு மடச்சிறப் போடை குளச்சிறப்புக்
காவிற்சிறப்புப் புராணச் சிறப்புக் கனிந்தவருட்
பாவிற்சிறப்பு வெண்ணீற்றுச் சிறப்பினைப் பண்சிறப்பாற்
பூவிற்சிறப்பு முற்றும் வல்வையூரிற் பொலிந்தனவே"

இத்தகைய சிறப்புமிக்க புலவர் வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோவில் பிரதிஸ்டை செய்யப்பட்டதன்பின் பாடிய வல்வைக்கலித்துறையில்.

"நீதிமரபிற்றிருத் தொண்டரோடு திகழும் பத்திச்
சோதிமலர்முக **வெங்கடாசலத்துங்க** வள்ளல்
பாதிமதிச் சடையான் தேவி யோடு பயிலத்தந்த
சேதிமமொன்றையும் வல்வைச் சீரைத் தெரிந்திடவே..........
விண்ணியல்செல்வத்தின் மண்ணியல் செல்வமிதக்கத் துய்க்க
புண்ணிய சீலத்திருவெங்கடாசலப் பூபன்வந்து
நுண்ணியவான் குலத்தார் வாழும் வல்வை நகரினூடங்
கொண்ணியல் போக நகர் வேறிங்கியாவதி சைந்திடவே ........

கார்காமர் கண்டத்து நம் வைத்தியேசர் கருணையினாற்
தீர்காயுளு மிட்டிசித்தியுமெய்திச் செறிந்தருள
நீர்க்காகலெலா முத்த சங்கினமுர்ந்து நிறைந்த வல்வை
**ஊர்க்காவவலர்வைகிலெங்களுக்கே** பெரிநூதியமே!.......... எனப் பாடியுள்ளார்

**மகாத்மா காந்தி அடிகளின் வல்வை விஜயம் - 1927**





இந்திய சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்தி வந்த காந்தி அடிகள் நிதி சேகரிப்பதற் காகவும், மக்களை விழிப்பூட்டுவதற்காகவும் 1927 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்தபொழுது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் சென்று சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருந்தார் அப்பொழுது அவரும் அவருடைய குழுவினரும் வல்வெட்டித்துறைக்கும் வருகை தந்த பொழுது முத்துமாரி அம்மன் கோயில் வீதியில் வைத்து இந்திய சுதந்திர போராட்டத்திற்கான தமது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் அவருக்கு வரவேற்பு அழித்து பணமுடிப்பும் வழங்கப்பட்டது.

வல்வை மக்களால் அன்று ரூபா 870.25 வழங்கப்பட்டது. அவரது விஜயத்தை நினைவு கூரும் வகையில் வல்வெட்டித்துறை சிவன் கோயில் இராஜகோபுரம் 1930ஆம் ஆண்டில் வல்வைப் பெரியவர் அமரர் சி.செல்லத்துரை பிள்ளை அவர்களால் கட்டப்பட்ட பொழுது, கோபுரத்தின் தென்திசையில் மகாத்மா காந்தியின் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

- **"அல்வெட்டும் அரிய ஊர்" - கி.வா. ஜகந்நாதன் - 1950**

தமிழகத்தின் பிரபல இலக்கியச் சஞ்சிகையான 'கலைமகள்' சஞ்சிகையின் நிறுவுனரும், முன்னாள் ஆசிரியரும், புகழ்பெற்ற தமிழ் அறிஞருமான கி.வா.ஜகந்நாதன் அவர்கள் 1950 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி வல்வெட்டித்துறை சனசமுக சேவா நிலையத்திற்கு வருகை தந்திருந்த பொழுது, வல்வெட்டித்துறை நகரின் அழகையும், ஆலயங்கள் அமைந்துள்ள முறைகளையும், வல்வை சனசமூக சேவா நிலையத்தின் செயற்பாடுகளையும் பார்த்து மெய்மறந்த நிலையில், அவர் பின்வரும் பாடலினூடாக வல்வெட்டித்துறை பற்றிய கருத்தை வெளியிட்டுள்ளார்:

"கல்வெட்டி உருச்செய்து கடவுளெனப் பாவித்துக் காதல் செய்தே

அல்வெட்டி அறிவு பெறும் அன்பர்கள் நிறைந்துள்ள அரியஊராம்

வல்வெட்டித் துறையதனில் வளர்த்த சனசமுக நிலையத்தில் வந்தே

நல்வெற்றி வடிவேலன் பேரழகின் திறம்சற்றே நவின்றேனம்மா"

- **"வல்வைமக்கள் சமயப்பற்று மிக்கவர்கள்"-தவத்திரு குன்றக்குடிஅடிகள். 1957**

தமிழகத்தின் ஆன்மீகத் தலைவராக விளங்கிய இராமநாதபுரம் ஜில்லா தெய்வசிகாமணி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 21.03.1957 இல் வல்வெட்டித்துறை சனசமூகசேவாநிலையத்திற்கு வருகைதந்திருந்த பொழுது, வல்வெட்டித்துறையில் உள்ள ஆலயங்களையும் மக்களின் பழக்க வழக்கங்களையும் பார்வையிட்டுப் பெருமையடைந்து வெளியிட்ட செய்திக்குறிப்பில் பின்வருமாறு கூறிப்பிடப்பட்டுள்ளது:

"இன்று இந்நகர் சனசமூக நிலையத்திற்கு வருகை தரும் சந்தர்ப்பம் கிடைத்தது மிக்க மகிழ்ச்சி. இளையோரும் முதியோரும் உற்சாகமாகக் காணப்படுகின்றனர். நல்ல பண்பாடும், சமயப்பற்றும் இருக்கின்றது. சமயச் சடங்குகளைப் பழமை பிறழாது செய்து வருகின்றனர். இந்நிலையம் வாழ்க...வளர்க இதன் பணி..!"

- **வல்வைக்கு விஜயம் செய்த சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் -1969**

1969 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி, உடுவிலில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் பங்குபற்றுவதற்காக சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட பொழுது, சிலம்புச் செல்வர் மயிலாப்பூர் பொன்னுச்சாமி சிவஞானம் எனப்படும் ம.பொ.சி. அவர்கள் வல்வெட்டித்துறைக்கு வருகை தந்து, வல்வை இளைஞர்களின் அழைப்பில் பிரபல வர்த்தகரும், வள்ளலுமான அமரர் அ.சி. விஸ்ணுசுந்தரம் அவர்களின் இல்லத்தில் ஒரு இலக்கியச் சந்திப்பை நிகழ்த்திச் சென்றார்.

இச்சந்திப்பின்பொழுது, மரபுஇலக்கியங்கள் பற்றியும், தற்போதைய நவீன இலக்கியங்கள் பற்றியுமான சுவையான கலந்துரையாடல் இடம்பெற்றது. அப்பொழுது, விருந்துபசாரம் முடிந்த பின்னர், அங்கிருந்த இளைஞர்களுடன் உரையாற்றிய பொழுது, "வல்வெட்டித்துறை இளைஞர்கள் இந்த வயதிலேயே ஆழ்ந்த தமிழறிவு பெற்றவர்களாக விளங்குகின்றனர்... அவர்களுடைய பெரியோர், மற்றும் அறிஞர்களைமதிக்கும்பண்பும், விருந்தோம்பும் முறையும் மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது" என்று அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட

வல்வையின் இளைஞர்களைப்பார்த்துக் குறிப்பிட்டார்.

அன்றைய சந்திப்பின் பொழுது ந.நகுலசிகாமணி, வெ.தர்மகுலசிங்கம், ந.அனந்தராஜ், மு.பிரேம்குமார் ஆகியோருட் பட தமிழகத்தில் இருந்து வருகை தந்தவர்கள் சிலரும் கலந்து கொண்டனர். இவர், இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரரும், சிறந்த தமிழறிஞருமாவர். சிலப்பதிகாரம் காப்பியத்தின் மீது இவர் கொண்ட ஆளுமையின் காரணமாக இவர் 'சிலம்புச்செல்வர்' என அழைக்கப் பட்டார். இவர் இந்திய தமிழரசுக் கட்சியின் நிறுவுனருமாவார்.



ம.பொ.சியுடன் இலக்கியச் சந்திப்பில் வல்வை இளைஞர்கள்சேர்



ஹென்றி ஆர்தர் பிளாக்

- **சேர் ஹென்றி ஆர்தர் பிளாக்கின் நன்றியறிதல் -1905**

தரைப்போக்குவரத்து வசதிகள் முழுமையாக நிறைவேற்றப்படாத அந்த நிலையில் 1905ஆம்ஆண்டு கொழும்பு-காங்கேசன்துறை புகையிரதப்பாதை அமைப் பதற்கான பொருட்களை கடல் வழியாக ஏற்றி இறக்கி உதவி செய்த வல்வெட்டித்துறையின் கடலோடிகளின் அந்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதற்காக

புகையிரதப்பாதை திறக்கப்பட்டு ஒருமாதத்திற்குள்ளாகவே ஆங்கிலேய அரசினரின் நன்றியறிதலைத் தெரிவிக்கும் முகமாக அன்று இலங்கையின் 'தேசாதிபதி' யாக விளங்கிய Sir Hentry Arthur Black வல்வெட்டித்துறைக்கு நேரடியாக விஜயம் செய்திருந்தமை வரலாற்றின் முக்கியமானதொரு நிகழ்வாகும்.

பிரித்தானியாவின் விசேட பிரதிநிதியாக இலங்கையை ஆண்டு கொண்டிருந்த தேசாதிபதி, Sir Hentry Arthur Black 1905 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்தபோது,வல்வைக் கடலில் முப்பதிற்கு மேற்பட்ட கப்பல்கள் தத்தமது கொடிகள் அசைந்தாட ஒரு திருவிழாவிற்காக அணிவகுத்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார் (Re.opening of north Ceylon port. Page 14 valvai sevasangam என்ற கைந்நூலில் இக்குறிப்பு காணப்படுகின்றது.) வல்வெட்டித்துறை துறைமுகப்பகுதியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபொழுது, இவ்வளவு பெருந்தொகையான கப்பல்கள் ஒரே இடத்தில் தரித்து நின்றதைக் கண்ட ஆச்சரியத்தில் வல்வெட்டித்துறையையும் அன்றைய வல்வையின் கப்பலோட்டிகளையும் அவர் மனதாரப் புகழ்ந்திருந்தார். நூறாண்டுகளிற்கு முன்னர் வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகளை புகழ்ந்துபேசிய sir hentry Arthur black 'வல்வெட்டித்துறை போன்ற சிறிய துறைமுகத்தில் தொடராகநின்ற பெரும் தொகையானகப்பல்களைப்போல்வேறெங்கும் கண்டதில்லை' என அவர் கூறியதன் மூலம் அன்றைய வல்வெட்டித்துறையின் கடல்வழி வணிகத்தின் தனித்துவமான போக்கை அறிந்து கொள்ளலாம்.

## ஆள நீர் தேங்கி நிற்கும்
## தீருவில் புட்கரணிக் குளம்

வல்வெட்டித்துறையின் வயலூர் முருகன் கோயிலுக்கு மேற்குப் புறமாக உள்ள "தீருவில்க்குளமானது, முன்பு "தாமரைக்குளம்" என்னும் கருத்தில் "புட்கரணிக்குளம்" என அழைக்கப்பட்டு ஈற்றில் இக்குளமானது தூர்ந்த காலத்தில் "தீர்ந்த அல்லது முடிந்த" என்றும் பொருள் தரும் தீரு-என்னும் அடியாகப் பிறந்து வில் எனப்படும் குளத்துடன் கூடி "தீருவில்" என அழைக்கப்பட்டுள்ளது பின்னாட்களில் அக்குளம் தீருவிற் குளம் எனவும் குளம் அமைந்துள்ள அப்பகுதி தீருவில் எனவும் இன்று அழைக்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள இந்த தீருவில் குளம் என அழைக்கப்படும் புட்கரணிக் குளம்" பல வருடங்களாக வரண்ட நிலையில் நீரைக் கொண்டிருக்காத நிலையில், நிலங்கள் பொருமி வெடித்துப் போய் இருந்தது...1989 ஆம் ஆண்டு வல்வைப் பிரஜைகள் குழுவின் தலைவராக தி.ச.செல்வேந்திரா அவர்களின் தலைமையில் நகரசபையினால் ஓரளவு ஆளப்படுத்தப்பட்ட தீருவில் குளம் இன்று மீண்டும் தூர்ந்து நீர் வற்றிக் காணப்பட்ட. இதன் முக்கியத்துவத்தை அந்தநேரம் எவரும் உணராததால், அது கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டது.






**தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினராலும், அந்தப் பிரதேச பொதுமக்களாலும் மேற் கொள்ளப்படும் சிரமதானப் பணிகள் மூலம் ஒரே நேரத்தில் இரு இலக்குகள் நிறைவு செய்யப்படுகின்றன.**

இலங்கையின், பொலநறுவையை இராசதானியாகக் கொண்டு அரசாண்ட மகா பராக்கிரமபாகு "ஒரு துளி நீரையேனும் கடலுக்குச் செல்லவிட மாட்டேன்" என்ற குறிக்கோளுடன் இலங்கையை வளம் கொழிக்கும் நாடாக மாற்றுவதற்கான ஒரு ஏற்பாடாகப் பல குளங்களைக் கட்டியும், புதுப்பித்தும் வந்ததால் இன்று பல குளங்கள் நீர் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால் யாழ் மாவட்டத்தில் 200 குளங்கள் வரை எவராலும் கவனிப்பாரற்ற நிலையில் தூர்ந்து கொண்டு வருவதால், யாழ்ப்பாண நீர் நிலைகள் படிப்படியாக உவர்த் தன்மையடைந்து கொண்டு வருகின்றன. இந்நிலை வல்வெட்டித்துறையிலும் தொடரக்கூடாது என்ற குறிக்கோளுடன், 2012 ஆம் ஆண்டு திரு. ந. அனந்தராஜ் அவர்களின் தலைமையில் புதிதாகப் பதவியேற்ற வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம், எடுத்த முயற்சியின் காரணமாக குளத்தை ஆழப்படுத்தி அகலப்படுத்துவதற்கான செயற்றிட்டமுன்மொழிவு (Project Proposal) தயாரித்து, உலக உணவுத்திட்ட நிறுவனத்தினரிடம் கையளிக்கப்பட்டது. அதனைப் பரிசீலனை செய்த உலக வங்கி அதிகாரிகள், நேரில் வந்து பார்வையிட்டு, அதன் தேவையையும் முக்கியத்துவத்தையும் கவனத்தில் எடுத்து, உலக உணவுத் திட்ட நிதியின் கீழ் 9 இலட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தனர். அதனுடன் சேர்த்து மேலதிகமாக, வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற நிதியில் இருந்து, ஒதுக்கப்பட்ட 4 இலட்சம் ரூபாவையும் கொண்டு தீருவில்குளத்தை ஆளப்படுத்தி அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பாரிய பணி தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினராலும், அந்தப் பிரதேச பொதுமக்களின் உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டு குறுகிய காலத்திற்குள் நிறைவு செய்யப்பட்டதால் உலக வங்கி அதிகாரிகள் நேரில் வருகை தந்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்துச் சென்றனர். தீருவில் குளத்தில் இருந்தும் அகழ்ந்து எடுத்த மண்ணில் 2800 உழவு இயந்திர அளவுடைய மண் தீருவில் விளையாட்டுமைதானத்தின் தாழ்வான பகுதியில் நிரப்பப்பட்டு மட்டப் படுத்தப்பட்டதால், தற்பொழுது நீர் தேங்கி நிற்காத நிலையில் தீருவில் இளைஞர்களுக்காக ஒரு அழகிய மைதானமும் உருவாக்கப்பட்டது.



**2013 இன் முன்னர்வற்றிய குளமாக:அன்று.**



**2013 இல் புனரமைக்கப்பட்டபின் நீர் நிறைந்த குளமாக: இன்று**

இதனை ஆளப்படுத்தி, அகலப்படுத்தியதால் கோடைகாலத்திலும்கூட ஆறு அடிக்கு மேல்நீர் தேங்கி நிற்பதுடன், அயலில் உள்ள கிணறுகள் படிப்படியாக நன்னீராக மாறிக்கொண்டும் வருகின்றன. இதனால், குடிநீர்ப் பிரச்சினைகள் படிப்படியாக நீங்கி வருகின்றன. இந்தக் குளம், வல்வெட்டித்துறைக்குக் கிடைத்த ஒரு முதுசொம்.

# துறைமுக அபிவிருத்தியும் கடலோடிப் பாரம்பரியமும்

வல்வெட்டித்துறையில் அன்று இருந்த துறைமுகமானது மிகவும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. இத்துறைமுகம், எந்த ஒரு பாதகமான சூழ்நிலையிலும் கப்பல்கள் வந்து செல்லக்கூடியவகையில் இயற்கையான பாதுகாப்பரண்களைக் கொண்டிருந்தகாரணத்தினால், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் இருந்த துறைமுகங்களைவிட அமைவிடம், பாதுகாப்பு, இலகுவில் சென்றடைதல், இயற்கை அரண் போன்ற காரணங்களினால் சிறப்புப் பெற்றிருந்தன. இதனால் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங்களில் பாரிய கப்பல்களும், பாய்மரக்கப்பல்களும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. அன்று, வல்வெட்டித்துறையில் ஒரே நேரத்தில் நூறு பாய்க்கப்பல்கள் கட்டப்பட்டிருந்ததாக, ஆய்வாளரான றொபேட் நொக்ஸ் தனது பயணக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வல்வெட்டிததுறை துறைமுகமும், பருத்தித்துறை துறைமுகமும் அழிவடைந்த நிலையில் இருப்பதாலும் அதனைப் புனரமைக்கவேண்டுமென்ற பரந்த சிந்தனை இல்லாததாலும் அவை இன்றும் கவனிப்பாரற்றுக் காணப்படுவது ஒரு துர்ப்பாக்கியமாகும். அதனைப் புனரமைக்கவேண்டிய ஒரு தேவையும் உள்ளது. 1985-1990 காலப்பகுதிகளில் பருத்தித்துறையில் இருந்து திருக்கோணமலைக்கு பயணிகளை ஏற்றிச்செல்வதற்கும், கொழும்புக்கும் பருத்தித்துறைக்குமிடையில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும் வல்வெட்டித்துறைத் துறைமுகத்தில் இருந்தே கப்பல்கள் புறப்பட்டன. இன்று நவீன முறையில் மீன்பிடித்துறையை விஸ்தரிப்பதனூடாக வடமராட்சியின் மூலம் அதிகளவிலான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். இதற்கு தற்போதுள்ள நிலையில் பாரிய துறைமுகங்களை அமைக்கமுடியாவிட்டாலும், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் நங்கூரமிடும் துறைமுக வசதிகள் (யுஔழசயபநஉயடிழரசகுயஉடைவைநைள) ஏற்படுத்தப்பட்டு, சிறந்த சந்தை வாய்ப்புகளும் உருவாக்கப்படுமாயின் மீன்பிடித்துறையினூடாக இலங்கையும் தன்னிறைவு அடையும். எவ்வித அரசியல் வேறுபாடோ அல்லது பாரபட்சமோ இன்றி வல்வெட்டித்துறையில் மீண்டும்



நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார்



குச்சம் சரஸ்வதி கோயிலும் வாணி படிப்பகமும்



ஊறணி தீர்த்தக் கடற்கரை மண்டபம்



நெற்கொழு வைரவர் கோயில்




அம்மன் கோயில் திருவிழாவில் கரகாட்டம்



நாட்டுக் கூத்துக் கலையில் நமது சிறுமிகள்



குச்சிப்புடி நடனமேதை நாட்டிய விசாரத் ரங்கமணி



அண்ணாவியார் இராசேந்திரமும், திரு. சந்திரகுமாரும்

துறைமுகத்தை புனரமைக்க அரசாங்ககம் முன்வருமானால்,தமிழகத்தின் சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும் நிலையில் இவையும் முக்கியத்துவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது..

- **வடக்கிலங்கைத் துறைமுகத்தை மீள ஆரம்பித்தல் - 1951**

வல்வெட்டித்துறையின் கப்பல் கட்டும் தொழில், வல்வெட்டித்துறையை சிறந்த துறைமுகமாக் குவதற்கான சான்றாதாரங்கள் மற்றும் அன்னபூரணிக் கப்பலின் அமெரிக்கப் பயணம், வல்வெட்டித்துறையின் பண்பாடு தொடர்பான பல தகவல்களைக் கொண்டதாக அமரர் பூ.க.முத்துக்குமாரசாமி அவர்களால் 1951 ஆம் ஆண்டு பெப்ரவரி 20 ஆம் திகதி "வடக்கிலங்கைத் துறைமுகத்தை மீள ஆரம்பித்தல்" (Reopening of North Port) என்ற முதலாவது ஆங்கில வரலாற்று நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் வல்வை சேவா சங்கத்தினால் வெளியிடப்பட்டது. இந்நூலே பிற்காலத்தில் எழுந்த வல்வை வரலாறு தொடர்பாக பல்வேறு நபர்களினாலும் எழுதப்பட்ட நூல்களுக்கெல்லாம் ஆதாரமாகவும் வழிகாட்டி நூலாகவும் இருந்துது.

இந்நூலில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் ஏனைய துறைமுகங்களான காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, பருத்தித்துறை ஆகியவற்றை விட, வல்வெட்டித்துறையில் ஒரு துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதே சிறந்தது என்பதை நிலைநாட்டும் பல்வேறு சான்றுகள் குறிப்பிடப்பட்டதுடன் ஏனைய துறைமுகங்களை விட வல்வெட்டித்துறையில் துறைமுகம் அமைக்க வேண்டியதன் முக்கியத்துவமும் எடுத்துக் காட்டப்பட்டு மிக அற்புதமாக இந்த நூல் வடிவமைக்கப்பட்டு இன்றும் எமது முதுசொமாகப் பேணப்பட்டு வருகின்றது. வல்வெட்டித்துறையில் துறைமுகத்தை அமைப்பதற்குரிய சான்றாதரங்களையும், புகைப்படங்களையும் வரலாற்று ரீதியாகவும், பூகோள, காலநிலை ரீதியாகவும் ஆராய்ந்து ஒரு அறிக்கையைத் தயாரித்து, அப்போதைய அரசாங்கத்திற்கு வல்வை சேவா சங்கத்தினூடாக அனுப்பியிருந்தனர்.

ஆனால் வல்வை மக்களின் அன்றைய வேண்டுகோளை ஏற்று, அந்தக் கோரிக்கைக்கு அரசு இணங்கி வல்வெட்டித்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்திருந்தால், எமது நாட்டின் பொருளாதாரம் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லப் பட்டிருப்பதுடன், அதற்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்கள் அழிவுகள் கூட ஏற்பட்டிருக்காது.

- **மூழ்கிய கப்பல் மிதந்தது -1856**

*1856ஆம் ஆண்டு பிரித்தானியாவில் கட்டப்பட்டதும்,ஆங்கிலேயருக்கு சொந்தமானதுமான 12000 தொன் நிறையுடைய "அத்திலாந்திக் அரசன்" (King of Atlantic) என்ற கப்பல் திருகோணமலைக்கு வடக்காக முல்லைத்தீவுக்கு கிழக்கே வங்கக்கடலில் மூழ்கிவிட்டது.*

ஆங்கிலேயரின் கட்டிட நிர்மாணப் பணிகளிற்காக கொண்டு வரப்பட்ட சுண்ணாம்பு மூடைகளுடனேயே அக்கப்பல் மூழ்கியிருந்தது. பல நாட்களாக அதனை மீட்க முயற்சிசெய்த கப்பலின் உரிமையாளரான ஆங்கிலேயர்கள் செய்வதறியாது மூழ்கிய நிலையிலேயே அதனைவிற்றுவிட முடிவு செய்தனர். ஆங்கிலேய நாட்டிலிருந்து இலங்கை வரை பயணம் செய்த இரட்டைப்பாய்மரக்கப்பலான அதனை மூழ்கிய நிலையிலேயே விலைக்கு வாங்கிய வெங்கடாசலம் பிள்ளை எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக அதனை நீரிலே மிதக்கவிட்டார். கப்பற்சாத்திரம் என்னும் மாலுமிசாஸ்திரத்திலும் வானசாஸ்திரத்திலும் பூரணஅறிவு கொண்ட இவர் இதற்காக பல நாட்கள் முல்லைத்தீவில் கள்ளப்பாடு என்னும் கடற்கரைப் பிரதேசத்தில் தங்கி யிருந்து மேற்படிமூழ்கிய கப்பலை மீட்டெடுக்கும்

முயற்ச்சியில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் தன்னிடம் இருந்த சுழியோடிகள் மூலமாக கப்பலில் இருந்த பொருட்களை சிறிதுசிறிதாக வெளியே எடுத்தார். கப்பலில் ஏற்றப்பட்டிருந்த சுண்ணாம்புமூடைகளை கடலில் இட்டு கப்பலின் பாரத்தைக்குறைத்தார். பின்னர் மூழ்கிய கப்பலுடன் நேராகப்பிணைக்கப்பட்டு மிதந்து கொண்டிருக்கும் பாரியமரக்குற்றிகளை பக்கவாட்டாக நகர்த்து வதன் மூலம் மூழ்கிய கப்பலை நீர்மட்டத்திற்கு கொண்டு வந்து ஆங்கிலேயரும் மெச்சும் வகையில் தனது பொறிமுறை அறிவினைப் பயன்படுத்தி வெற்றிகண்டார். "அத்திலாந்திக் கிங்" என்னும் அக்கப்பல் மூழ்கியதும் அதிலிருந்த சுண்ணாம்பு மூடைகளை வெளியே கொண்டு வரமுடியாமல் அதில் இருந்த பொருட்கள் அவ்விடத்திலேயே கடலில் இடப்பட்டன.

"அத்திலாந்திக் கிங்" என்ற இக்கப்பல் கெச்(ketch)சுக் கப்பல் எனப்படும் வகையைச்சேர்ந்தது. இவ்வகைக் கப்பல்களின் பாய்மரங் களின் உயரம் அதுவரை இலங்கை இந்தியா போன்ற கீழைத்தேச நாடுகளில் கட்டப்பட்ட சமஅளவு கொண்டபாய்மரங்கள் போலன்றி முன்னிருக்கும் பாய்மரம் எப்பொழுதும் உயர்ந்ததாகவே காணப்படும். இதனால் பருவக்காற்றுக்களின் மூலம் நகரும் இவ்வகைக்கப்பல்கள் ஏனைய கப்பல்களை விடவிரைவாக நகரும் தன்மை கொண்டவையாக விளங்கின. முல்லைத்தீவிற்கு அண்மையில் வங்காள விரிகுடாக்கடலில் இன்றும்கூட "கப்பல்தட்டு" என அவ்விடம் அழைக்கப்படுகின்றது. வங்காள விரிகுடாவிலிருந்து மீட்கப்பட்ட இக்கப்பலை அடியொற்றியே அதன்பின்னாக வல்வெட்டித்துறையில் கப்பல்கள் கட்டப்பட்டுவந்தன. அவ்வாறே அன்னபூரணி அம்மாளும்கட்டப்பட்டிருந்தது. அன்னபூரணி என்பது இமயமலையில் அமைந்திருக்கும் மலைச்சிகரங்களில் ஒன்றாகும்.

- **எஸ்.எஸ்.சென்ற்ஜோன்** (S.S.St.John) **கப்பலை மிதக்க வைத்தமை - 1916**

வல்வெட்டித்துறையின் கப்பல்களின் சொந்தக்காரரான கப்பல் கட்டுவதில் ஆற்றல் படைத்த மேத்திரியாரான வடிவேல் என்பவர் 1916 ஆம் ஆண்டில் காங்கேசன்துறைக்குச் சமீபமாக உள்ள கடலில், மூழ்கிப் போன "எஸ்.எஸ்.சென்ற் ஜோன்" என்ற பெயருடைய கப்பலை மிதக்கச் செய்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தின் ஒரு பகுதியைக் கொண்டு கீரிமலை நகுலகிரி நாராயண சுவாமி கோயிலைக் கட்டினார்.

- **ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் வல்வையின் கடலோடிகள்:**

வல்வெட்டித்துறையில்1850களில் நூற்றுக் கணக்கான பாய்மரக் கப்பல்களில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததால், வல்வையர்களின் பொருளாதார வளம் மேம்பட்டிருந்ததுடன் இலங்கையில் இரண்டாம் உலக யுத்தத்தின் பொழுது நாட்டு மக்களின் பசி, பஞ்சத்தையும் போக்க உதவினர். 1850-1870 காலப் பகுதியில் இந்தியாவின் தென்மேற்கு மாநிலமான மலையாளநாடென்று அழைக்கப்பட்ட இன்றைய கேரளாவிற்கும் யாழ்ப்பாணத்திற்குமான புகையிலை வியாபாரமானது பெருவிருத்தியடைந்தது. தந்தை வழியில் வந்த திருமேனியார் வெங்கடாசலம் பிள்ளையவர்கள். கப்பல் உரிமையாளராகவும் சிறந்த கடலோடியாகவும் இருந்ததனால் மலையாளத்தேச வியாபாரிகளினாலும் இந்தியாவின் நாட்டுக் கோட்டை செட்டிகளினாலும் யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்யப்படும் புகையிலையையும் அதன் உற்பத்திப் பொருட்களான சுருட்டையும் ஏனைய நுகர்வுப் பொருட்களையும் மலையாள நாட்டின் கொச்சினிற்கும் திருவாங்கூருக்கும் ஏற்றிச்சென்று கொடுப்பதன் மூலம் அதிகவருவாயைப் பெருக்கினார்கள்.

- **பிரித்தானியருக்கு எதிரான போரில் வல்வையின்கடலோடிகள்:**

இலங்கையின் சுதந்திரத்திற்கான போராட்டம் 1939 இல் தேசிய ரீதியல் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற

வேறுபாடுகளின்றி பிரித்தானியருக்கு எதிராக ஒன்று திரண்டு குரல் கொடுத்தனர். இலங்கை பிரிததானியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில், பிரித்தானிய அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த இடதுசாரித் தலைவர்களான டாக்டர். என்.எம். பெரேரா, பிலிப் குணவர்த்தன, டாக்டர் கொல்வின் ஆர்.டீ.செல்வா, எட்மண்ட் சமரக்கொடி, பேரனாட் சொய்சா, டாக்டர். ஏஸ்.ஏ.விக்கிரமசிங்க ஆகியோரை பிரித்தானிய அரசு கைது செய்வதற்காகத் தேடிய பொழுது, அவர்கள் தலை மறைவாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்த இடதுசாரித் தலைவர்கள் கைது செய்யப்பட்டால், சுதந்திரத் திற்கான குரல் ஒடுக்கப்பட்டுவிடும் என்பதை உணர்ந்த வல்வெட்டித்துறைக் கடலோடிகள், அவர்களைப் பாதுகாப்பாக வல்வெட்டித்றைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

சிங்கள இடதுசாரித் தலைவர்கள் தப்பி வல்வெட்டித்துறைக்கு வந்தபோது இந்த உதவியை முன்நின்று செய்தவர்கள் செல்கம்பனி அதிபர் முருகுப்பிள்ளை, செந்திவேல், கமியூனிஸ்ட் கொள்கையில் நாட்டங்கொண்டு சிங்கப்பூரிலிருந்து



பிலிப்குணவர்தன, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க டாக்டர் என். எம். பெரேரா

இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட சிறி,எஸ். புவனேஸ்வரராசா, அ.ந.வேலாயுதம் (சட்டத்தரணி) ஆகியோராவர். அவர்கள் அனைவரும் வல்வெட்டிததுறையில் சில நாட்கள் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டு சரியான சந்தர்ப்பம் கிடைத்ததும் கடல்மார்க்கமாக அவர்களை இந்தியாவிற்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

வங்கக் கடலில் பிரித்தானிய கடற் படையினரின் கண்காணிப்பும்,ஆகாயத்தில் தொடர்ச்சியாக விமானப்படையினரின் நோட்டமும் இருந்தபோது பிரித்தானிய இராணுவத்தினரால், அவர்கள் எந்த நேரத் திலும் சுற்றி வளைத்துக்கைது செய்யப்படவோ அல்லது சுட்டுக் கொல்லப்படவோ முடியும் என்ற ஒரு பயங்கரமான சூழலில், வல்வெட்டித்துறையில் தஞ்சம் அடைந்திருந்த அந்த இடது சாரித் தலைவர்களை துணிச்சலுடன் தமது கப்பல்களில ஏற்றிப் பாதுகாப்பாக தமிழகத்தில் கொண்டு சென்று வட இந்தியாவில் உள்ள பொம் பேக்குக் (தற்பொழுது மும்பே என அழைக்கப் படுகின்றது.) கொண்டு சென்று சேர்த்தவர்கள் வல்வையின் வீரமிக்க கடலோடிகளே. அங்கும் அவர்களுக்கான உதவிகளைச் செய்து கொடுத்து அவர்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்து கொடுத்துவிட்டே திரும்பியிருந்தனர்.

1948ஆம்ஆண்டில்இலங்கைக்குச்சுதந்திரம் கிடைத்து பலவருடம் கழித்து திரு. பிலிப்குணவர்த்தன அவர்கள் தேசிய அரசில் கைத்தொழில், மீன்பிடித்துறை அமைச்சராக இருந்தசமயம் 31-10-1965ல் வல்வெட்டித்துறைக்கு வந்த சமயம் வல்வை சனசமூகநிலைய முன்றலில் இதனை நினைவுகூர்ந்து வல்வை மக்களின் விருந்தோம்பும் பண்பையும், நண்பர்களுக்கு ஆபத்தில் உதவும் தன்மையையும் பற்றிக் குறிப்பிட்டதுடன் அரசாங்கத்தின் சார்பில் தனதும் சிங்கள மக்களினதும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

- **கப்பல்போக்குவரத்தும் தபால் சேவையும்:**

கப்பல் போக்குவரத்து கி.பி.1500-1770 காலப்பகுதியிலேயே வல்வெட்டித்துறையில் ஆரம்பமானது. இக்காலத்தில் இருந்தோ அல்லது, அதற்கு முற்பட்ட காலத்தில் இருந்தோ வல்வெட்டித்துறையில் இருந்து கடல்மூலமான பயணங்கள் இடம் பெற்றிருக்கின்றன. முல்லைத்தீவு, கொக்கிளாய், திருக்கோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கான போக்குவரத்து ஊடகமாக கப்பல்களே இருந்திருக்கின்றன.


அதேவேளை தென்னிந்தியாவில் இருந்தான தபால் போக்குவரத்தும், இப்பாதையூடாகவே மேற்கொள்ளப் பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. இத் தொடர்பானது ஒல்லாந்தர் காலத்திற்கு முன்னர், நல்லுரை அரசாண்டு வந்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் இருந்தே, மேற்கொள்ள்பபட்டதாகும். அந்தக் காலத்தில்,நல்லூர் இராஜதானியை ஆண்ட அரசர்களுக்கும், மதுரை நாயக்க அரசர்களுக்கும் இடையிலான நல்லுறவும், நெருங்கிய தொடர்பும் இருந்துள்ளதால்,அக்காலத்திலேயே தபால் போர்ககுவரத்தும் மேற்கொள்ளப்பட்டது.

**ழிவில் இருந்தும் மீண்டெழும் வல்வை சிவகுரு வித்தியாலயம்**







1896 ஆம் ஆண்டு ஆலடியில் சிவன்கோயிலுக்குச் சொந்தமான காணியில்,திரு.ஞா.தையல்பாகர் அவர்களினால் தமிழ் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.பின்னர் இட வசதி போதாமையினால், தற்போதுள்ள கடற்கரைப் பக்கமாக உள்ள காணியில், காற்றோட்டமுள்ள சூழலில் கற்கட்டிடமாகக் கட்டப்பட்டது. அடுத்தடுத்து இடம்பெற்ற இயற்கை அனர்த்தங் களினாலும்,இராணுவ நடவடிக்கை களினாலும் இப்பாடசாலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 1962 ஆம் ஆண்டு வீசிய கடும் புயற்காற்றில் சேதமடைந்த போது அதனை ஓடுகளினால் உள்ள கூரையாக மாற்றித் தொடர்ந்தும் சிறந்த கல்விச் சேவையை ஆற்றி வந்தது. மீண்டும் 1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற "வல்வைப் புயல்" இராணுவ நடவடிக்கையின் பொழுதும்,2005 ஆம் ஆண்டில் பேரழிவை ஏற்படுததிய சுனாமி அனர்த்தங்களின பொழுதும், இப் பாடசாலையின் கட்டிடங்கள் யாவுமே முற்றாக அழிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நெக்கோட் உதவித் திட்டத்தின் கீழ் சகல வசதிகளையும் கொண்ட அழகான கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. வல்வெட்டித்துறையில் மிகச் சிறந்த இடைநிலைப் பாடசாலைகளில் ஒன்றாக வல்வை சிவகுரு வித்தியாலயம் இயங்கி வருகின்றது.



தூபி வீதி அமைப்பில் பிரஜைகள் குழுவினர்




தீருவில் நினைவுத் தூபி




தீருவிலில் அமைக்கப்பட்ட தூபியின் நிலை




ரேவடி உல்லாசக் கடற்கரையும் சிறுவர் பூங்காவும்




பெரியவர் திருமேனியார்



அன்று வல்வையில் ஓடிய தட்டிவான்



இளையபெருமாள் அப்பாவின்
Z மொடல் கார்






வல்வெட்டித்துறை ஊறணி ஊற்றும், மரபுரிமையாகப் பிரகடனம் செய்யப்பட்ட அறிவித்தலும்

# கப்பல் ஓட்டிய தமிழர்கள்

வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் அன்று கப்பல்கட்டும் தொழில் நன்கு விருத்தியடைந்திருந்ததால், பல நூற்றுக் கணக்கான கப்பல்கள் உள்ளூர் வேப்பமரங்களில் இருந்தே தயாரிக்கப்பட்டன. இவை எந்தவிதமான பாதகமான சூழ்நிலையையும் தாங்கக்கூடிய வகையில் இலகுவில் கடலையும்கிழித்துக்கொண்டு பயணம்செய்யக்கூடியவகையில்தயாரிக்கப் பட்டன. அன்றைய எமது மேத்திரிமார்களினால் தயாரிக்கப்பட்ட இரட்டைப்பாய் மரக்கப்பல்களின் மூலம், காக்கிநாடா, ரங்கூன், தூ த்துக்குடி போன்ற துறைமுகங்களுக்கும்வல்வெட்டித்துறை, பருத்தித்துறை துறைமுகங்களுக்கும் இடையில்லான கடல் போக்குவரத்துக்கள் மூலம் ஏற்றுமதி, இறக்குமதிகள் சட்டரீதியாகவே இடம் பெற்று வந்தன. தரைப் போக்குவரத்துக்கள் முக்கியத்துவம் பெறாத காலப் பகுதியில் இவ்வகையான கப்பல்கள் மூலமாகவே பயணிகள் போக்குவரத்தும் நடைபெற்றருக்கின்றன. அன்னபூரணி என்ற இரட்டைப்பாய்மரக் கப்பல் பத்தாயிரம் மூடை அரிசி வரை ஏற்றக்கூடியது. இது போன்ற பல கப்பல்களை வல்வெட்டித்துறை பருத்தித்துறை, தொண்டைமானாறு ஆகிய பிரதேசங்களில் கடல் பயணத்தில் ஈடுபட்டிருந்ததுடன், அவை சர்வதேச கடற்பயணச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப, "லொயிட்ஸ் தாபனத்தில்" பதிவு செய்யப்பட்டுமிருந்தமை குறிப்பிடத்தக்கது. 19ஆம், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு கடற்பரப்பில் சுமார் 136 கப்பல்கள் வரை கடல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்ததாக "ஊரின்னிசை" நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- **அன்னபூரணி அம்மாளின் அமெரிக்கப்பயணம் - 1938**

வல்வெட்டித்துறையில் உள்ள மேற்குத்தெரு வாடியில் வைத்து, 1930ஆம் ஆண்டில், சுந்தரம் மேத்திரியாரினால் உள்ளூர் வேப்பமரத்தில் தயாரிக்கப்பட்ட "அன்னபூரணி அம்மாள்" என்ற பெயரிலான இரட்டைப்பாய்மரக் கப்பல் 89 அடி நீளமும், 19 அடி அகலமும் கொண்ட ஒரு பாரிய கப்பலாக அந்த நாட்களில் விளங்கியது. அன்னபூரணி என்பது இமயமலையில் அமைந்திருக்கும் மலைச்சிகரங்களில் ஒன்றாகும். இன்றைய நேபாளத்தின் எல்லைக்குட்பட்ட இதன்உயரம் 26504 அடிகளாகும். அத்துடன் அள்ளஅள்ளக் குறையாத அமுதசுரபி கொண்ட தெய்வமாக

இந்துக்களால் ஆராதிக்கப்படும் பெண் தெய்வத்தின் பெயரும் அன்னபூரணியாகும். இப்பெயரே அன்னபூரணிஅம்மாளின் சுட்டுப் பெயராக பலஇடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.


1936 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வல்வெட்டித்துறைக்கு வருகை தந்திருந்த அமெரிக்கரான பிரபலகடலோடியான அமெரிக்கரான றொபின்சன் (William Albert Robinson) அன்னபூரணியின் அழகால் கவரப்பட்டவராக, அதனை வாங்கிக் கொண்டு அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று விரும்பினார். அதனைக் கொள்வனவு செய்ததும், அன்னபூரணி அம்மாள் என்ற பெயரில் உள்ள அந்தக் கப்பலை "Florence C. Robinson" என்ற, தனது மனைவியின் பெயருக்கு மாற்றியபின்னரே அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றார். வல்வெட்டித்துறை மாலுமிகளின் உதவியுடன் கொந்தளிக்கும் இராட்சச அலைகளையும் கடந்து சுயஸ் கால்வாயினூடாக அமெரிக்காவின் போஸ்ரன் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட சாதனை இன்றும் உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்றது.

சூயெஸ் கால்வாயினூடாக மத்தியதரைக் கடலில் பயணம் செய்தபோது, ஏற்பட்ட புயலில் சிக்கிய கப்பல் 250 கடல்மைலகள் பின்புறமாக பெய்ரூத் வரை அடித்துச் செல்லப்பட்டது. இவ்வாறு பல்லாயிரக்கணக்கான மைல்களையும், பல கடல்களையும் கடந்து சென்ற இத்துணிகர கடற்பயணம்1938 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் முதலாம் திகதி அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் (Massachusetts) மாநிலத்தில் உள்ள குளோசெஸ்ரர் (Gloucester) துறைமுகத்தில் நிறைவடைந்தது.

தெற்காசிய நாடொன்றில் உள்ள சின்னஞ்சிறிய தீவான இலங்கையில் உள்ள வல்வெட்டித்துறையில்கட்டப்பட்டு, காற்றின் துணையுடன் இயங்கும் கப்பலொன்று, இந்து சமுத்திரத்தைக்கடந்து,ஐரோப்பாவின் ஊடாக மத்தியதரைக்கடலையும்கடந்து, அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக, அமெரிக்காவின் குளோசெஸ்ரர் துறைமுகம் வரை பயணம் செய்தது, உலக வரலாற்றில் இதுதான் முதல் தடவையும், கடைசித் தடவையுமாகும். இச்சாதனை நிறைந்த கடற்பயணத்தில், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தண்டையல் கனகரத்தினம் தம்பிப்பிள்ளை (48வயது) அவர்களின் தலைமையில், திரு. பூரணவேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (29 வயது), திரு.தாமோதரம்பீளளை சபாரத்தினம் (28வயது) திரு.சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை, (28 வயது) திரு.ஐயாத்துரை இரத்தினசாமி(24 வயது) ஆகிய ஐந்து கடலோடிககளும் பயணத்தின் இறுதி இலக்கு வரை பங்கேற்றிருந்தனர். அமெரிக்காவின் தலைநகரான வாசிங்டன்நகருக்கு அண்மையில் உள்ள பால்ரிமோர்என்ற துறைமுகத்தில்தரித்து நின்றபொழுது, எடுக்கப்பட்ட படத்தை அது தொடர்பான கட்டுரையுடன், பால்ரிமோரில் இருந்து வெளிவரும், "Baltimore Sun"என்ற செய்தித்தாள் பிரசுரித்திருந்தது. அன்னபூரணி அம்மாள், கப்பலை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லும்பொழுது கப்டன் மக்குயிஸ் என்பவரின் தலைமையில், வல்வெட்டித்துறை மாலுமிகளின் உதவியுடன் பயணம் செய்து குளோசெஸ்டர் துறைமுகத்தைச் சென்றடைந்தது. அன்று, குளோசெஸ்டர நகரில் இருந்து வெளியிடப்பட்ட ஊடகங்கள் பிரசுரித்த கருத்துக்கள் மிகச் சிறந்த சான்றுகளாகவும், ஆதாரங்களாகவும் விளங்கின.

அன்னபூரணி அம்மாளின் இந்த திகில் நிறைந்த பயணம் பற்றிய இலக்கியங்கள் நூல்களாகவும், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் கட்டுரையாகவும் வெளிவந்துள்ளமை அதன் சிறப்பைப் பல மடங்கு உயர்த் தியுள்ளது. இச்சாதனைப் பயணம்பற்றிய விபரங்கள் 02 ஓகஸ்ட் 1938 வெளிவந்த The Boston Globe பத்திரிகையில் Voyage Ended By Brigantine என . Barrows என்பவரால் விவரிக்கப் பட்டிருந்தது.





பால்ரிமோர் துறைமுகத்தில் தரித்து நின்ற Florence.C.Robinson எனப் பெயர் மாற்றப்பட்ட அன்னபூரணிஅம்மாளும், அமெரிக்கர்களால் கட்டப்பட்ட Swift of Ipswick என்ற பெயருடைய கப்பலும்

மற்றும் அன்றையநாளில் வெளிவந்த மற்றாரு தினசரியான 02.08.1938 அன்று நாட்டவர்களின் உள்ளக்கிடக்கையையும் கருத்தையும் அறிய முடிகின்றது.



The Boston Daily Globe

BOSTON, TURSDAY MORNING, AUGUST 2, 1938- TWENTY PAGES (2) TWO CENTS

VOYAGE ENDED BY BRIGANTINE

Rare Spectacle Provided by Arrival From Ceylon

By NAT A. BARROWS

GLOUCESTER, Aug. 1—Like a chapter straight from one of the Malay sea stories of Joseph Conrad, a picturesque crew of square-rigger sailors came reaching into port before a quartering breeze today aboard the 89-foot brigantine Florence C. Robinson—last windship of her kind, in all pr[illegible]ability, that will ever cross Western Ocean under can[illegible] alone.

Bringing a tale of storms, d[illegible] drums, thirst, short rations a[illegible] near collision, the trim lit[illegible] brigantine's company of seven— grizzled old Gloucesterman, [illegible] turbaned, beskirted Ceylone[illegible]

a British brig of war of the 1840 period. Robinson himself took her leisurely through the Indian Ocean and the Red Sea as far as Crete.

Six Ceylonese, from the seafaring town of **Valvettiurai, in Northern Ceylon**, came out with her and

வெளியிடப்பட்ட Gloucester Time இல் Ceylon Brige Arrives After Long Voyage எனவும் மேற்படி அன்னபூரணியின் நீண்ட கடற்பயணம் அதன் முன்பக்க செய்தியாக வெளிவந்திருந்தது. அதில் குறிப்பிடப்பட்ட பின்வரும் செய்திக் குறிப்பினூடாக தமிழர்களின் கடல் ஆளுமைகளை பற்றி மேற்கத்தைய

"வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட ஒன்பது பாய்களையும் விரித்தபடி, கம்பீரமாக ஆடிஆடிப் பயணம் செய்து கொண்டிருந்த கப்பல் ஒன்று, அத்திலாந்திக் சமுத்திரத்தையும் கடந்து அமெரிக்கக் கிழக்குக் கரையை அடைந்ததோர் நீண்ட கடல் பயணம் பற்றிய

உண்மைக் கதை. இத்தகைய கப்பல்கள், வல்வெட்டித்துறையிலும் அதனை அடுத்துள்ள பருத்தித்துறையிலும் கட்டப்பட்டு வல்வெட்டித்துறைக் கடலோடிகளால், செலுத்தப்பட்டன. இவை தமிழ் நாட்டில் பணம் படைத்த செட்டி மாருக்காகவும், வல்வெட்டித்துறையை வதிவிடமாகக் கொண்ட செட்டி மாருக் காகவும், வல்வெட்டித்துறை வணிகர்களுக் காகவும் இலங்கை வடக்கில் உள்ள வல்வெட்டித் துறை, பருத்தித்துறை மேஸ்திரிமார்களால் கட்டப் பட்டவை."

அன்னபூரணி அம்மாளுடன் அமெரிக்கா சென்றடைந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மாலுமிகள் அங்கிருந்து திரும்பும்போது தம்முடன் எடுத்துவந்த இருபத்திரி கைக்குறிப் புகளே மேற்கண்டவையாகும்.

அமெரிக்கா சென்ற மூன்றாவது மாதத் தில் அன்னபூரணி 22 November 1938 இல் தென் Pacific சமுத்திரத்தில் உள்ள Tahiti தீவைநோக்கி ஒரு துணிகர பயணத்தை மேற்கொண்டது. இம்முறையும் மீண்டும் மூன்றுநாட்கள் கடும் புயலில் சிக்கிக் கொண்டது. அத்திலாந்திக்கடலில் 100மைல் வேகத்தில் வீசியகாற்றையும் 40அடி உயரத்திற்கு எழுந்தஅலைகளையும் அன்னபூரணி அனாசயமாக வெற்றிகொண் டவாறு தனதுபயணத்தை தொடர்ந்தது. வல்வெட்டித்துறையின் உறுதியான வேப்ப மர கட்டுமானமும் அதன் செய்வினைத் தொழில்நுட்பத்திறனும் இவ்வெற்றிக்கு காரணங்களாகின. இறுதியில் 8196 மைல் களைக் கடந்து 15 February 1939 இல் Pacific சமுத்திரத்தில் உள்ள Tahiti தீவை அடைந்து தனது இரண்டாவது உலகசாத னைப் பயணத்தையும் வெற்றி கரமாக முடித்துக் கொண்டது.

அன்னபூரணியின் Tahiti பயணம்பற்றி Tahiti Bound மற்றும் Wanderer எனும் இருநூல்கள் வெளிவந்துள்ளன. Florence C. Robinson இன் இப்பயணத்தின்போது அமெரிக்க தலைநகரான Washington நகருக்கு அண்மையில் உள்ள Baltimore துறைமுகத்திற்கு அண்மையில் 1957 வரை நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வளவு சாதனைகளையும் செய்து இந்துசமுத்திரம் அத்திலாந்திக்சமுத்திரம் பசுபிக்சமுத்திரம் என உலகத்தை சுற்றிய அன்னபூரணியின் பயணம் 1957 ஆம் ஆண்டு Tahiti யில் மூழ்கி தனது வாழ்வை முடித்துக் கொண்டது. ஆயினும், சாகசம் மிக்க கடற்பயணத்தை மேற்கொண்ட அன்னபூரணி என்ற அந்த இரட்டைப் பாய்க்கப்பல் வல்வெட்டித்துறையின் பெருமை மிக்க ஒரு முதுசொமாகும். அன்னபூரணியின் வடிவத்தை அடியொற்றியதாக அமெரிக்கர்களால் முதன் முதலில் கட்டப்பட்ட இரட்டைப பாய்க்கப்பலான "Swift of Ipswick" என்ற கப்பல் பசிபிக் சமுத்திரத்தினூடாக ஓடித்திரிந் தமையானது வல்வையின் கப்பல் கட்டும் தொழில் நுட்பத்திற்குக் கிடைத்த ஒரு அங்கீகா ரமாகும்.

அமெரிக்க மற்றும் ஸ்ரீலங்காப் படையினர் இணைந்து நடத்திய 'ஒப்ரேசன் பசுபிக் ஏஞ்சல்' நிகழ்விற்காக(15.08.2016) அமெரிக்க தூ துவரான அதுல்ஹேசப் (Atul Keshap) யாழ்ப் பாணத்திற்கு வருகைதந்திருந்தார். அங்கு அவர் தனதுரையில் 1813 இல் அமெரிக்க மிசனரியினர் ஏற்படுத்திய இலங்கைக்கான தொடர்பினை தாம் உருவாக்கிய அன்ன பூரணிஅம்மாள் என்ற பாய்க்கப்பலின் மூலம் அமெரிக்காவின் குளோஸ்ரர்துறை முகத்திற்கு வந்த வல்வெட்டித்துறை கடலோடிகள் அமெரிக்காவுடனான உறவை மீளவும் தொடர் ந்துள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டினார். அத்துடன் ஆச்சரியமிக்க அன்னபூரணியின் இக்கடல்வழிப் பயணம் சரித்திரபூர்வமானது என்பதையும் அவர் குறிப் பிடத் தவறவில்லை.

இலங்கை மக்கள் அனைவரும் குறிப்பாக ஈழத்தமிழர்கள்கூட மறந்துவிட்ட ஒருநிகழ் வினை எழுபத்தைந்து வருடங்களின்பின்


யாழ்ப்பாணமண்ணில்மீண்டும்ஓர்அமெரிக்கர் நினைவு கூர்ந்துள்ளார். இதுபோலவே 1987 மே மாதத்தில்வடமராட்சியை கைப்பற்றுவதற்காக சிறிலங்கா படையினர் 'லிபரேசன் ஒப்பரேசன்' எனும்பெயரில் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து உலகவங்கியைச் சேர்ந்த சில அதிகாரிகள் வல்வெட்டித்துறைக்கு விஜயம்செய்திருந்தனர். அவர்களில் ஒருவர் குறிப்பிட்ட அன்னபூரணிஅம்மாளின் பயணம் பற்றி அன்று உதவி அரசாங்க அதிபராக இருந்த வல்வெட்டித்துறை மண் பெற்றெடுத்த திரு. வை.வேலும்மயிலும் அவர்களிடம் தெளிவாக உரையாடியிருந்தமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

- **சுப்பிரமணிய புரவியின் கடல் சாதனைப் பயணம்**

தொண்டைமானாற்றில்கடல்வாணிபத்தில் ஈடுபட்டு வந்த செல்வந்தக் குடும்பத்தில் தோன்றிய சின்னத்தம்பி வீரகத்திப்பிள்ளை அவர்கள் கப்பலோட்டுவதிலும், திரைகடலோடித் திரவியம் தேடுவதிலும் சிறந்து விளங்கினார். இவர் நாட்டுக் கோட்டைச் செட்டிமாருடன் சேர்ந்து, பங்காகவும், தனித்துச்சொந்தமாகவும் பல கப்பல்களையும் தோணிகளையும் வைத்திருந்து கடல் வாணிபத்தில் ஈடுபட்டு வந்தார். 1938களில் தொண்டைமானாற்றிலும் "சுப்பிரமணிய புரவி" என்ற இரட்டைப் பாய்மரக் கப்பல் உட்பட, பல கப்பல்கள் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளன.

இவ்வாறு கப்பல்களை ஓட்டிய தமிழர்களில், சின்னத்தம்பி வீரகத்திப்பிள்ளை அவர்கள் முக்கியமானவராகக் கருதப்பட்டார். இவருக்குச் சொந்தமாக சுப்பிரமணிய புரவி, கோக்கிநாடா, வள்ளிநாயகி, பேரானந்தவல்லி, ஆதிபூரணி, தெய்வநாயகிஆகிய கப்பல்கள் ஓடிக்கொண்டிருந்தன. இவற்றில், 154 இறாத்தல் நிறைகளையுடைய சுமார் 8500 மூடைகளை ஏற்றிச் செல்லக்கூடிய பெரிய கப்பலான "சுப்பிரமணிய புரவியில்" வல்வெட்டித்துறையின் கடலோடிகளே, தண்டையல்களாகவும், சுக்கானிமாராகவும், கிலாசுகளாகவும் தொழில் புரிந்தனர்.

1933 காலப்பகுதியில், இக்கப்பல் மூலம், பர்மாவின் இரங்கூன், அரிக்கன், மோல்மின் ஆகிய துறைமுகங் களுக்குச் சென்று, அங்கிருந்து அரிசி, தவிடு, தேக்கமரம், சட்டாப்பாய் முதலிய பொருட்களை ஏற்றிக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள துறைமுகங்களான யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இறக்கி வந்தன. அதேவேளை வீரகத்திப்பிள்ளையிடம் இருந்த சிறிய கப்பல்கள் இந்தியக் கரையில் உள்ள காக்கிநாடா, கலிங்கப்பட்டினம், நாகப்பட்டினம், அதிராம்பட்டினம், தோப்புத்துறை, முதலிய துறைமுகங்களுக்குச் சென்று அங்கிருந்து ஓடுகள், செங்கற்கள் போன்ற பொருட்களை ஏற்றி வந்தன. மீண்டும்


சுப்பிரமணிய புரவிக் கப்பல்


சுப்பிரமணிய புரவியின் பாரிய நங்கூரம்

இக்கரையில் இருந்து திரும்பும் பொழுது, புகையிலை சிப்பங்களுடன் அவை சென்றன.

இவ்வாறு தமது வர்த்தக நடவடிக்கைகள் பல்கிப் பெருகத் தொடங்கியதும், வீரகத்திப் பிள்ளை அவர்கள் தனது மகன்களான இராசரத்தினம், இராசசேகரம் ஆகிய இருவரையும் இணைத்து "வீரகத்திப பிள்ளை அன் சன்ஸ்" என்ற நிறுவனத்தை ஆரம்பித்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இவ்வாறு திரைகடலோடித் தேடிய திரவியங்களைக் கொண்டே தொண்டைமானாற்றில் அறிவொளி பரப்பும் கல்விக் கூடத்தை ஆரம்பிதது வைத்ததால், இன்று தொண்டைமானாற்றின் மிகப் பொரியதொரு அறிவாலயமாகத் திகழ்கின்றது.

யாழ்ப்பாணத்தில் சுமார், 134 பாரிய பாய்க்கப்பல்கள் ஓடித்திரிந்த காலப்பகுதியில் 60 கப்பல்கள் பிற ஊர்களின் முதலாளிமார்களுக்கும் மிகுதியாக உள்ள 74 கப்பல்களே வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முதலாளிமார்களுக்குச் சொந்தமானதாக இருந்தன. அதிலும் வீரகத்திப்பிளளை அவர்களே கூடுதலான கப்பல்களை வைத்திருந்தார்.

அந்தக் காலத்தில் கப்பல்களைப் பதிவு செய்தே ஓடவிடவேண்டும் என்ற சர்வதேச நியமச்சட்டங்களுக்கு அமைவாக வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு பிரதேசங்களில் கட்டப்பட்ட அனைத்துக் கப்பல்களும். இவ்வாறு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொழுது, 1926 ஆம் ஆண்டு வீரகத்திப் பிள்ளைக்குச் சொந்தமாக இருந்த வள்ளிநாயகி என்னும் பாய்க்கப்பல் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ஓடுகளுடன் கொச்சியில் இருந்து வரும்போது, இலங்கை கடலுக்குத் தெற்கே 20 மாலுமிகளுடன் புயலில் அகப்படடுக் கடலினுள் மூழ்கியது. அதே போன்று மீண்டும் 1933 ஆம் ஆண்டில், வீரகத்திப்பிள்ளை அவர்களுக்குச் சொந்தமான இன்னுமொரு கப்பலான, பேரானந்தவல்லி என்ற பாய்க்கப்பல் பர்மாவில் இருந்து வந்து கொண்டிருந்தபொழுது, 1933 ஆம் ஆண்டில் கடற்கொந்தளிப்பில் சிக்கி சேதமடைந்தது.

- **உற்பத்திப் பொருட்களின் பண்டமாற்றத்தில் வல்வைக் கப்பல்கள்:**


19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற உற்பத்தி பொருட்களாக புகையிலை பாணிப் புகையிலை, சுருட்டு, பனாட்டு, பாய், ஒடியல், மிளகாய், வெங்காயம், கப்பல் பழம், இரதை வாழைப்பழங்கள் மற்றும் எள்ளு நல்லெண்ணெய் என்பனவாகும். இவைகளை கிழக்கிலங்கையில் உள்ள பல்வேறு துறைமுகங்களுக்கும் ஏற்றிச்செல்லும் வல்வெட்டித்துறை கப்பல்கள் அங்கிருந்து திரும்பும்போது அவ்வப்பகுதிகளிற்சிறப்பான உற்பத்திபொருட்களை யாழ்ப்பாணத்தின் துறைமுகங்களுக்குக் கொண்டுவந்து கொடுப்பதன் முலம் பெரும் இலாபமீட்டினர்.

இவ்வகையில் முல்லைத்தீவிலிருந்து கருவாடு மான், மரை இறைச்சி வத்தல் கள் மற்றும் முதிரை மரங்களும் திருகோணமலையில் இருந்து சட்டி, பானை, ஓடு, (இவை பெரும் பாலும் மூதூர்ப் பகுதி யில் உற்பத்தியானவை) வைக்கல் என்பவைகளும் மட்டக்களப்பில் இருந்து அரிசி, நெல், முதிரை, வேம்பு, தேக்கு போன்ற மர வகைகளும் கப்பல் மூலம் வல்வெட்டித்துறை கடலோடிகளினால் வடபகுதிக்கு கொண்டுவரப்படும் பொருட்களாயின. வங்கக்கடலை ஊடறுத்துச்செல்லும் பர்மாப் பயணங்களில் பெருமளவு உயிர்ச்சேதங்களும் பொருட்சேதங்களும் எற்படுகின்ற நிலையில் வல்வெட்டித்துறையின் கடலோடிகளிற்சிலர் கரையோரமாக செல்வதும் ஒப்பீட்டளவில் பாதுகாப்பானதுமான கிழக்கிலங்கை வர்த்தகத்திலும் கால்பதித்திருந்தனர்.

- **நாகர் கோயிலின் கப்பல் திருவிழாவில் வல்வையரின் கப்பல்:**

வடமராட்சி கிழக்கில் வரலாற்றுப் புகழ்பெற்ற நாகதம்பிரான் கோயிலின் வருடாந்த உற்சவத்தின் 7 ஆம் திருவிழா கப்பல் திருவிழா என்ற முக்கியத்துவம் வாய்ந்த

ஒரு திருவிழாவாக நடைபெறுகின்றது. இத்திருவிழாவில் பயன்படுத்தப்படும் கப்பல் அன்னபூரணி அம்மாளின் வடிவத்தை



ஒத்ததாக ஆலயத்தின் 7 ஆம் திருவிழா உபயகாரரான வல்வை நெடியகாட்டைச் சேர்ந்த சித்திவிநாயகம் என்பவரால் 1957 இல் தயாரிக்கப்பட்டது. இதனை ஆறுமுகம் மேத்திரியார், சாமிக்கண்டு மேத்திரியார், அன்னபூரணி அம்மாள் கப்பலை நிர்மாணித்த சுந்தரம் மேத்திரியாரின் மகன் துரை மேத்திரி யார் ஆகியோர் 2012 ஆம் ஆண்டில் வடி வமைத்து வழங்கியிருந்தனர்.

இக்கப்பல் ஒதிய மரத்தினால் ஆக்கப்பட்ட 8 1/4 அடி நீளமான ஒரு அழகிய கப்பலாகும். பின்னர் நடைபெற்ற போர் நடவடிக்கையினால் மக்களின் இடப் பெயர்வுடன் ஆலயத்தின் சொத்துக்களும் அழிக்கப்பட்ட போது, அழிந்து போன இக் கப்பலைப் போன்ற வடிவமைப்பில் 11 1/4அடி நீளத்தில் மீண்டும் சித்திவிநாயகம் குடும்பத்தினரால் 2012 ஆம் ஆண்டில் சுமார் 3 இலட்சம் ரூபா செலவில் பழனி மேத்திரி யாரினால் புதிதாகச் செய்யப்பட்ட கப்பலே ஆலயத் திருவிழாவின் 7 ஆம் நாள் கப்பல் திருவிழாவின்பொழுது, பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

- **கப்பல் ஓட்டிய தமிழர்களை மதிக்கத் தவறிய அரசு:**

வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் அன்று கப்பல்கட்டும் தொழில் நன்கு விருத்தியடைந்திருந்ததால், பல நூற்றுக் கணக்கான கப்பல்கள் உள்ளூர் மரங்களில் இருந்தே தயாரிக்கப்பட்டன. இவை எந்தவிதமான பாதகமான சூழ்நிலையையும் தாங்கக்கூடியதாக, இலகுவில் கடலையும் கிழித்துக் கொண்டு பயணம் செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டன. அன்றைய எமது மேத்திரிமார்களினால் தயாரிக்கப்பட்ட இரட்டைப்பாய் மரக்கப்பல்களின் மூலம், காக்கிநாடா, ரங்கூன், தூத்துக்குடி போன்ற துறைமுகங்களுக்கும் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, திருக்கோணமலை ஆகிய துறைமுகங்களுக்கும் இடையிலான கடல் போக்கு வரத்துக்கள் மூலம் ஏற்றுமதி, இறக்குமதிகள் சட்டரீதியாகவே இடம் பெற்றுவந்தன. தரைப் போக்குவரத்துக்கள் முக்கியத்துவம் பெறாத காலப்பகுதியில் இவ்வகையான கப்பல்கள் மூலமாகவே பயணிகள் போக்குவரத்துக்கள் அன்று நடை பெற்றிருக்கின்றன. இத்தகைய போக்குவரத் துக்களும், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகமும் இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடனேயே இடம் பெற்று வந்தது.

காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத் தினால் இவை தடைசெய்யப்பட்டதும், திடீரென பல நூற்றுக்கணக்கான மக்கள் தொழில் இழந்து வறுமையில் வாடும் நிலை ஏற்பட்டதால், வேறுவழியின்றி, சட்டவிரோதமான முறையில் கடற் போக்குவரத்தில் ஈடுபடவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அன்று இத்தகைய கள்ளக் கடத்தல் என்று அரசினால் தெரிவிக்கப்பட்ட கடல்ப்போக்குவரத்து வணிகம் ஆரம்பித்ததிற்கு அன்றய அரசாங்கமே பொறுப்பேற்றிருக்க வேண்டும். அன்று இவ்வாறான வர்த்தகத்தின் மூலம் எமது மக்களுக்கு என்னன்ன பொருட்கள் தேவையோ அவை வல்வையின் கடலோடிகளினால் இங்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. குறிப்பாக காஞ்சிபுரம் மணிப்புரி காஸ்மீர் போன்ற இரகங்களுடைய சாறிகள் பீடியிலை, கறையில் உருக்குப் பாத்திரங்கள் மற்றும்

அலங்காரப் பொருட்கள் போன்றவற்றை தமிழாகத்தின் கோடியாக்கரை, வேதாரணியம், நாகபட்டினம் போன்ற பகுதிகளில் இருந்து எடுத்து வரும் அதே வேளையில் இங்கிருந்து இலங்கையில் பாக்கு, சாதிக்காய், ஏலக்காய், ஆம்பல், கராம்பு, சாதிப்பூ போன்ற திரவியங்களை எடுத்துச்சென்று தமிழகத்திற்கு கொண்டு சென்றும் சேர்த்தனர். இதன் மூலம் பல குடும்பங்கள் வேலை வாய்ப்புக்களை பெற்றனர். கள்ளக்கடத்ததை தடைசெய்வதற்கு முன்னர் அவர்களுக்கு இலங்கை அரசு தொழில் முயற்சிகளை செய்து கொடுத்திருக்க வேண்டும். அதனை ஒரு காரணமாக வைத்து வல்வெட்டித்துறையில் இராணு வமுகாம்களையும், காவல் நிலைகளையும் அமைத்து தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளை மேற்கொள்ளத் தொடங்கியது. அந்த மக்களின் அடிப்படைத்தேவைகளையும், அபிலாசைகளையும் இலங்கை அரசாங்கம் அன்று புரிந்து கொள் ளத்தவறியமை யினாலேயே, பின்விளைவுகள் எல்லாமே பாரதூரமானவையாக மாறி அழகிய இலங் கைத் தீவை அழிவின் விழிம்புக்குக் கொண்டு சென்றது....!

- **வல்வெட்டித்துறை கடலோடிப் பாரம்பரியம் தொடர்பாக எழுந்த இலக்கியங்கள்:**

வல்வெட்டித்துறையின் கப்பல் கட்டும் தொழில்நுட்பம், பாரியபுயல் காற்றினையும் கிழித்துக் கொண்டு, கொந்தளிக்கும் அலை கடலின் நடுவே கம்பீரமாகக் கப்பல் களைச் செலுத்திச் செல்லும் இலாவகமும், ஆற்றலும் போன்ற பல்வேறு விடயங்களையும், வல்வெட்டித்துறையை உன்னதமான ஒரு துறைமுகமாக ஆக்குவதற்கான நியாயப் படுத்துகைகள் என்பவற்றை மிகச் சிறப்பாக வெளிக்கொணரப்பட்ட ஒரு நூலாக 1951 ஆம் ஆண்டில் அமரர் பூ.க.முத்துக்குமாரசாமி அவர்களினால் எழுதப்பட்டு, வல்வை சனசமுக சேவா நிலையத்தினரால் வெளியிடப் பட்ட“வடக்கிலங்கைத் துறை முகத்தை மீள ஆரம்பித்தல்” என்ற நூலே முதன்முதலாக, வல்வைக் கடலோடிப் பாரம் பரியத்தை மிகச் சிறப்பாகக் கொண்டு வந்த நூலாகும்.

“வடக்கிலங்கைத் துறைமுகத்தை மீள ஆரம்பித்தல்” (Reopening of North Port) என்ற இந்த நூலை ஆதாரங்களாகக் கொண்டு, அதில் உள்ள விடயங்களை வைத்தே பிற்காலத்தில் பல நூல்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றமை மிகச் சிறந்த ஆரோக்கியமான ஒரு செயற் பாடாகும். குறிப்பாக, 4 வது உலகத்த மிழாராய்ச்சி மகாநாட்டுக்கு வருகை தந்தி ருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்குக் கையளிப்பதற்காக “வல்வைக் கப்பலின் அமெரிக்கப் பயணம்”(1974) என்ற சிறிய கையேடாக திரு. வல்வை. ந. அனந்தராஜ் அவர்களினால் தொகுக்கப்பட்டு வல்வை சனசமூக நிலையத்தினரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. 30.7.1950 இல் வித்துவான் வ.மு கனகசுந்தரம் வீரகேசரிவார வெளியீட்டில் எழுதிய “வல்வெட்டித்துறை வரலாறு” என்னும் கட்டுரையில் வல்வையின் வரலாறு, மக்கள் தொகை, கடலோடிப் பாரம்பரியம் போன்ற பல தகவல்களைக் குறிப்பிட்டுள்ளார்.

வீரகேசரி வார வெளியீட்டில் க. நவசோதி அவர்களினால் ‘‘செந்தமிழ் பாடி வளம் பெருக்கும் வல்வை” என்ற கட்டுரை பிரசுரமானது. வல்வெட்டித்துறையை மையமாக வைத்து எழுதப்பட்ட வரலாற்று நூலான “ஊரின்னிசை”(1982) என்ற நூல், அமரர்களான பூ. க. முத்துக்குமாரசாமி, செ. வைத்திலிங்கம் பிள்ளை ஆகியோரால் சிறப்பாக எழுதி வெளியிடப்பட்டது. அதனை அடுத்து பலரது நேர்காணல்களைச் சேர்த்து திரு. ஈகே. இராஜகோபால் அவர்களினால் ஈழநாடு பத்திரிகையில் வெளியான கட்டுரைகளைத் தொகுத்து “கப்பல் ஓட்டிய தமிழர்கள்” என்ற நூலாகவும் அதனைத் தொடர்ந்து வல்வை வரலாற்று ஆவணக்காப்பக இயக்குநர் திரு. ந. நகுலசிகாமணி அவர்க ளால் 2005 ஆம் ஆண்டில் மேலும்

சில விரிவான தகவல்களுடனும், அரிய புகைப்படங்களுடனும் வல்வெட்டித் துறையின் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில், "வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்" (1997) என்ற தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டது. அந்த நூலுக் குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் 1997இல் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. K.T. பெரியதம்பி அவர்களால் " வல்வை-வல்வை" என்ற நூல் கனடாவில் வைத்து வெளியிடப் பட்டது. திரு. ந. சிவரத்தினம் அவர்களால் வெளியிடப்பட்ட "ஆழக்கடல் வென்றவர்கள்" (1990) என்ற நூலும், தேவகி அனந்தராஜ் அவர்களின் கலைமாணி சிறப்புப் பட்டத்திற்கான, ஆய்வாக பல்வேறு கடலோடிகளிடமும் கப்பல்கட்டும் விற்பன்னர்களிடமும் சென்று திரட்டிய தகவல்களைக் கொண்டு, வெளியிடப்பட்ட "வல்வையின் கடலோடிப் பாரம்பரியம்"(2002) என்ற ஆய்வு நூலும், திரு. பா. மீனாட்சிசுந்தரம் மற்றும் திரு. ந. சிவரத்தினம் ஆகியோர் இணைந்து தொகுத்து வெளியிட்ட "வரலாற்றில் வல்வெட்டித்துறை "(2006) என்ற நூலும், கனடாவில் வசிக்கும், திரு. வி. எஸ். செல்வம், பொன். சிவா ஆகியோரின் அனுசரணையில், ஈழத்துப் பூராடனார் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட "கடலோடிப்பாரம்பரியம்" (2010) என்ற ஆய்வு நூலும், அன்னபூரணி பாய்மரக்கப்பலை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டதன் 75 ஆவது ஆண்டு நிறைவு நாளைக் கொண்டாடும் வகையில் திரு. பொன். சிவாவின் எழுத்துருவில் அமரர் மோகனதாஸ் (மோகன் ஆட்ஸ்) அவர்களின் சித்திரங்களைக் கொண்டு "அன்னபூரணியின் அமெரிக்கப் பயணம்" (2014) என்ற சித்திரக் கதை நூலும் வெளியிடப்பட்டமையானது வல்வையரின் கப்பல் கட்டும் தொழில் நுட்பத்தை வெளிக்கொண்டு வந்ததுடன், அவற்றை உரிய முறையில் ஆவணப்படுத்தவும் உதவின.

**பண்டைய கட்டிட வேலைகளைக் கொண்ட வீடுகள்**





தெணியம்பைச் சந்தியில் காணப்படும் பண்டைய வீட்டின் முகப்பும். சுங்க வீதியில் அன்று பிரபல வர்த்தகர் திரு. எஸ். நாகரத்தினம் அவர்களால் 1955 இல் கட்டப்பட்ட அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வீடு. இந்த வீட்டின் முகப்பின் உச்சியில் மகாத்மா காந்தியின் சிலை வைக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலாத் தலங்களும், வரலாற்று முக்கியத்துவமுள்ள கட்டடங்களும்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியதுமான மையங்கள் வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் காணப்படுகினறன. இவற்றிற்கானவரலாற்றுச் சம்பவங்கள் எழுதி வைக்கப்படாத காரணங்களினால், அவற்றின் முக்கியத்துவம் பற்றி அதிகளவுக்குப் பேசப்படுவதில்லை. குறிப்பாக தொண்டைமானாறு, மயிலியதனை, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களில் காணப்படுகின்றன. .குறிப்பாகப் பின்வரும் சுற்றுலாத் தலங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கனில் சிலவற்றை இன்றும் வடமராட்சியில் காணலாம்.


### 1. வற்றாத நன்னீரைக் கொண்ட தொண்டைமானாறு பொந்துக் கிணறு


இது தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தின வளவினுள் அமைந்துள்ள பொந்துக்கிணறு என அழைக்கப்படும் சிறிய கிணறு, வற்றாத நன்னீரூற்றைக் கொண்டதாக விளங்குவதால், இங்கிருந்து சிலகாலமாக தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இங்கு பாரிய இடியேறு விழுந்ததாலேயே இந்தக் கிணறு தோன்றியதாகச் சொல்லப்படுகினறது.

### 2. கரம்பாவளியில் அமைந்துள்ள வற்றாக் குளம்

தொண்டைமானாற்றில் கரம்பாவளிப் பிரதேசத்தில் கற்பாறைகளிடையே காணப்படுகின்ற வற்றாத நீர்ச் சுனைகள்.இது பண்டைய காலத்தில் வாழ்ந்த பிரபல்யமான குடும்பத்தினரால் நீராடுவதற்காக வெட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தொண்டைமானாறு கடல் நீரேரிக்கு அண்மையில் அமைந்துள்ள கரம்பாவளி என்ற இடத்தில் பற்றைகள் மற்றும் தொடர் கற்பாறைகளுக்கு மத்தியில் நீராடும் வகையில் அமைக்கப்பட்ட பெரிய குளமும், அதன் அருகருகே சிறு சிறு வற்றாத நன்னீர் ஊற்றைக் கொண்ட ஆளம் குறைந்த சிறு கிணறுகளும் காணப்படுகின்றன.

இவற்றை உறுதிப்படுத்தும்வகையில் அதற்கு அண்மையில் காணப்படும் ஆவுரஞ்சிக் கல்லும், அதனுடன் சேர்ந்த கல்வெட்டும் இவற்றின் வரலாற்றைக் குறிப்பிடுகின்ற போதிலும்,அவற்றை முழுமையாக வாசிக்க










முடியவில்லை. எனினும், அக்காலத்தில் இந்தப் பிரதேசத்தில் உள்ள சூழலில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களை அங்கு காணப்படும் எச்சங்கள் மூலம் இனங்காணலாம். இங்குள்ள பெரிய குளத்தின் மேற்குப் புறமாக மூன்றரை அடி உயரமும், ஒன்றரை அடி அகலமும் உள்ள ஆவுரஞ்சிக் கல்லில் 9 வரிகளைக் கொண்ட எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் ‘சூலம்’ படம் பொறிக்கப்பட்டு அதன் கீழ் உள்ள முதுல் 5 வரிகளில் “குமாரசுவாமி பெண் வீராத்தை வெட்டுவித்தது” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய வாசகங்கள் தெளிவில்லாது இருந்தபோதும் இதன் காலம் போர்த்துக்கேயர் காத்திற்குரியது என்பதை அறியமுடிகின்றது. எனினும் அக்காலத்தில் சமுகத்தில் பெண்கள் பெற்றுள்ள முக்கியத்துவத்தையும், இக்குளத்தை வெட்டுவித்த ‘வீராத்தை’ என்ற பெண் சமுகத்தில் வகித்த பங்கையும் அறியமுடிகின்றது. ஆயினும் தொல்பொருள் ஆய்வாளர்கள் இதன் தோற்றம், வரலாறு பற்றிய முழுமையான ஆய்வினை மேற்கொள்ளவேண்டும்.

இங்கு காணப்படுகின்ற குளங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்ட பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள், “ இங்கு அமைந்துள்ள குளத்தின் வடிவமைப்பு தற்போதைய பேச்சு வழக்கில், கேணி அல்லது துரிசு என்று அழைக்கப்பட்டாலும், ஆவுரஞ்சிக் கல்வெட்டில், அது குளம் என்றே அழைக்கப்பட்டிருப்பதால், அப்பெயரைப் பயன்படுத்துவதே பொருத்தமானது” எனக் குறிப்பிட்ட கருத்தானது, குளத்திற்குரிய பண்புகளை இந்த வற்றாத, சிறிய பொந்துகள்

போல் காணப்படும் நீர்ச் சுனைகள் கொண்டிருக்கின்றன.

- **வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊறணி ஊற்று -1714**

வல்வெட்டித்துறையின் வரலாற்றுச்சிறப்பு மிக்க ஒரு புனிதமான இடமாகவும், சுற்றலாமையமாகவும் ஊறணி நன்னீரூற்று விளங்குகின்றது. வல்வெட்டித்துறை ஊறணி இந்திராணி வைத்தியசாலைக்கு வடக்கே கடலுடன் இணைந்ததாக காணப்படும் ஊற்றுக் கேணி, வேலாயுதர் ஆறுமுகத்தார் என்பவரால் சுமார் 1714 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

தென்மேற்கில் இருந்து ஓடிவரும் நன்னீர் ஊற்று இங்கு வெளிப்பட இக்கேணி உருவாக்கப்பட்டுள்ளது. பின்வந்தகாலங்களில் நன்னீர், கேணி என்னும் பதங்கள் மறைந்து போக ஊற்று எனும் தனிப்பெயரால் அழைக்கப்பட்டது. ஊற்றுநீர் ஊறுநீர் என்னும் தொடரான சொல்லமைதியில் இவ்விடம் ஊருணி என்று மருவி தற்போது ஊறணி (நீர்) என அழைக்கப்படுகின்றது.

இந் நன்னீரூற்றில் இருந்து வெளிவரும் தண்ணீர் மருத்துவக்குணம் நிறைந்ததாகக் காணப்படுவதால், சிரங்கு மற்றும் வாத நோய்களால் துன்பப்படுபவர்கள் இங்கு வந்து நீராடிச் சுகமடைந்து செல்கின்றனர்.

இதனுடன் இணைந்துள்ள கடல் புனிதம் நிறைந்த இயற்கை வளமாகும். ஆடி அமாவாசை விரதம், சித்திரா பௌர்ணமி விரதம் மற்றும், பிதிர்க் கடன்களை நிறைவேற்றுவோரும் இங்கு வந்து நீராடித் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்கின்றனர். வல்வெட்டித்துறை, பொலிகண்டி, வல்வெட்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள ஆலயங்களின் தீர்த்தோற்சவம் இச் சமுத்திரத்திலேயே மேற்கொள்ளப்படுவதால் இந்தப் பிரதேசம் புனிதப் பிரதேசமாக விளங்குகின்றது. வல்வெட்டித்துறை ஊறணியில் அமைந்துள்ள ஊற்றுக் கேணி பிதிர் கடன்களை நிறைவேற்றுவதற்காகவும், நீராடுவதற்காகவும் யாத்திரிகர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.


தற்பொழுது மரபுரிமைகள் அமைச்சின், மத்திய சுற்றாடல் திணைக்களத்தினால் பேணப்படவேண்டிய மரபாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. கடந்த சுனாமி தாக்கத்தின் போது, சேதமடைந்த நிலையில் காணப்படுவதால், அதனைத் திருத்தி சிறந்த சுற்றுலா மையமாக்குவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதேவேளை இவ்வூர் மக்களும் அதனை பேணிப்பாதுகாக்கவும் வேண்டும். (படம் இணைக்கப்பட்டுள்ளது)

**3. தொண்டைமானாறு மயிலியதனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மண்டபக் கிடங்கு:**

கி.பி. 1410 இல், யாழ்ப்பாண அரசின் ஆரியச் சக்கரவர்த்தியாக விளங்கிய குணவீரசிங்க ஆரியனின் தம்பி அளகேஸ்வரன் அரசனாக இருந்தபொழுதுஇதனது இராட்சிய் ததிற்குச் சொந்தமான புத்த சாசனத்தைக் கவர்ந்து சென்றமையால், அவனை அடக்குவதற்காகப் பொலநறுவையின் அரசனான 6 ஆம் பராக்கிரமபாகுவின் மகன் பாரிய அரண்களை அமைத்து, அளகேஸ்வரனை எதிர்த்துப் ரோடுவதற்கான அறைகூவலை விடுத்து, கொழும்பிலும், பாணந்துறையிலும் தனது சேனைகளைக் கொண்டு வந்து நிறுத்தி போர் புரிந்தான். இத்தகைய பாரிய தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத அளகேஸ்வரன் அங்கிருந்து பின்வாங்கிப் புறமுதுகிட்டு ஓடி, தொண்டைமானாற்றிற்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையேயான, கெருடாவில் பிரதேசத்தில் உள்ள பிலத்துவார மண்டபத்தில் ஒளித்திருந்தான். பிலத்துவார வாயிலில் ஒரு மண்டபமும்இ உள்ளே சிறு மாளிகையும் அமைக்கப்பட்டிருந்தன. அவனுக்கு முன்பிருந்த தமிழ் அரசர்களால், ஆபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களில் தாங்கள் மறைந்து வாழ்வதற்காகவும், அங்கிருந்து கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்வதற்காகவும் அமைக்கப்பட்ட ஒரு குகையே இந்தப் பிலத்துவார மண்டபமாகும்.

அளகேஸ்வரனைத் துரத்திச் சென்ற பராக்கிரம பாகுவின் மகன் நல்லூரைச் சுற்றி வளைத்து அவனது சேனைகளை அழித்து, அரசனையும் பிலத்துவார மண்டபம் வரை தேடிச் சென்று அவனையும் கொன்று அவனது மனைவிமார்களையும் சிறைப் பிடித்துச் சென்று தனது தந்தையிடம் ஒப்படைத்தான். ஆரியச் சக்கரவர்த்தி ஒளித்திருந்த பிலத்துவார மண்டபம் பின்னர் சிதைவடைந்தாலும் அதுவே. இன்றுள்ள மண்டபக்கிடங்காகும்.





- **திராவிடக்கட்டட மரபுகளைக் கொண்ட பண்டைய வீடுகள் (1935)**

தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வர்த்தக ரீதியாக மட்டுமல்லாது, பண்பாட்டு ரீதியாகவும், தென்னிந்தியாவுடன் தொடர்பு கொண்டிருந்த காரணத்தினால், வல்வெட்டித் துறை மக்களுக்கும் தென்னிந்திய மக்களுக் கும் இடையிலான உறவுகள் காலம் கால மாகப் பேணப்பட்டு வந்திருப்பதை வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, பருத்தித்துறை ஆகிய இடங்களில் காணப் படும் நாற்சார் வீட்டு அமைப்புக்களும், திராவிடக்கட்டட அமைப்பு முறையிலான வீடுகள் மற்றும் வீட்டு முகப்புக்கள், கதவுகள் ஆகியனவும், திராவிடகட்டட மரபை ஒத்ததாகக் காணப்படுகின்றன். ஆனால் இன்று அவற்றுள் பெரும்பாலான வீடுகள் அழிக்கப்பட்டு அமெரிக்கப் பாணியிலான வீடுகள் நவீன முறையில் அமைக்கப்பட்டு வருவதால், எமது பண்டைய பண்பாட்டு ரீதியிலான வளர்ச்சி அழிவடைந்து கொண்டு வருகின்றன. ஆயினும் இவ்வளவு யுத்த அனர்த்தங்களுக்கு மத்தியிலும், இன்றும் தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை பகுதிகளில் இத்தகைய திராவிட கட்ட டமுறையிலான வீட்டு முகப்புத் தோற்றங்கள் அழிவடையாத நிலையில் காணப் படுகின்றன.

இதே போன்று அன்றைய கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள், மைத்துனர்கள் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்த காலத்தில் குடும்ப உறவு நன்கு பேணப்பட்டு வந்ததுடன், இன்பத்திலும்,





**நெடியகாட்டில் உள்ள வாசல் அமைப்பும், தெணியம்பையில் இரந்த மரத்தினாலான வாசலும்**

துன்பத்திலும் ஒன்றாகவே வாழ்ந்துவந்த அந்தக் காலத்தில் நாற்சார் வீடுகள் அமைக்கப் பட்டிருந்தன் இதில் மத்தியில் ஒரு திறந்த முற்றம் காணப்படும் அதனைச்சுற்றி வர நான்கு புறமும் அறைகள் காணப்படும். ஒவ்வொரு அறையும் ஒரு குடும்பத்திற் குரியவையாக இருக்கும். சமையல் வேலைகள் செய்வதற்கு ஒரே ஒரு அடுக்களை (குசினி) மட்டும் தான் இருக்கும். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து சமையலில் ஈடுபட்டு ஒன்றாகவே உணவு உட்கொள்வார்கள். இதன் மத்தியில் எல்லா அறைகளையும் பார்க்கக்கூடிய வகை யில் அமைந்துள்ள தலை வீடு குடும்பத் தலை வருக்கு ஒதுக்கப்படும். இத்தகைய நாற்சார் வீடுகள் அன்று பருத்தித்துறையிலும், வல் வெட்டித்துறையிலும் இருந்தன. தற்போது குடும்ப உறவுகளுக்கிடையேயான விரிசல்கள் வளர வளர ஒவ்வொரு குடும்பமும் தனித்தனி யாகவே வாழ்கின்றமையால், நிலங்களும் துண்டாடப்பட்டு பாகப் பிரிவினைகள் நடந்து அத்தகைய நாற்சார் வீடுகள் எல்லாம் உடைக்கப்பட்டு தனித்தனி வீடுகளாக்கப் பட்டுவிட்டன.

**ஆவுரஞ்சிக் கல்லும், சுமைதாங்கியும்:**

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப் பாணத்தில் மக்கள் கூடும் இடங்கள் மற்றும் மாட்டுவண்டிப் போக்கு வரத்துக்கள் இடம் பெற்ற பகுதிகளில், மடங்கள், தெருமூடி மடங்கள், கேணிகள், சுமைதாங்கிக் கற்கள், ஆவுரஞ்சிக் கற்கள் என்பன பரவ லாக அமைக்கப்பட்டிருந்தன. இங்கு, பரவலாகக் காணப்படும் ஆவுரஞ்சிக் கல் தமிழ் பண்பாட்டின் முக்கிய மரபுரிமைச் சின்னமாக உள்ளது. மந்தைகளுக்கு தோலில் ஏற்படுகின்ற எரிவு அல்லது தினவுகள் காரணமாக அவை கடி உபாதைகளினால் கஸ்டப்பட்டன. அவற்றின் கடியைப் போக்கு வதற்காக பண்டைக் காலம் தொட்டு நீர் நிலைகளுக்கு அண்மையில் பல்வேறு வடிவங்களில் வித்தியாசமான அளவுகளில் கற்களினால் அமைக்கட்டிருந்தன. இதனை பழந்தமிழ் இலக்கியங்களில் மந்தைக் கல், தீண்டுகுற்றி, ஆரோஞ்சிக் கல், ஆவுரிஞ்சி என்ற பல்வேறு பெயர்களினால் அழைக்கப்பட்டது. திருமுருகாற்றுப்படையில் ஆவுரஞ்சிக்கல் முருகன் உறையும் இடமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இவை இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னரேயே யாழ்ப்பாணத்தில் அமைக்கப் பட்டிருக்கலாம். இத்தகைய சுமைதாங்கிக் கற்கள் இன்றும் வல்வெட்டித்துறை நெடியகாட்டிலும் ஊரிக்காடு பகுதியிலும் காணப்படுகின்றன. பெரும்பாலான ஆவுரஞ்சிக் கற்கள் அவை அமைக்கப்பட்ட காலத்தில் வாழ்ந்த பொருளாதார ரீதியாகச் செல்வாக்குப் பெற்ற குடும்பத் தலைவன் அல்லது குடும்பத் தலைவியால் அமைக்கப்பட்டவையாக உள்ளன. யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் ஆவுரஞ்சிக் கற்கள் காணப்பட்டாலும், அவற்றில் சாசனம் பொறிக்கும் மரபை வடமராட்சியில் உள்ள ஆவுரஞ்சிக கற்களி லேயே காணலாம்.

வழுக்கல் மடம் என்று அழைக்கப்பட்டு வந்த இந்த மடம் 100 வருடங்களுக்கு மேல் பழமையானது. வல்வெட்டித்துறை சிவன் கோயிலுக்கு மேற்குப் புறமாக இன்றும் காணப்படும், இந்த மடத்தின் தூண்க ளும், மேடையும் முழுமையாக தனிச் சலவைக்



ஆவுரஞ்சிக் கல்லுடன் நீர்த்தொட்டியும்,



நல்ல நிலையில் இருக்கும் சுமை தாங்கியும்

கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### 5. கிட்டங்கிகள்

பல நூற்றுக் கணக்கான தொன் நிறை கொண்ட கப்பலில் இருந்தும் இறக்கப்பட்ட பொருட்களைச் சேமித்துக்





*100வருடம் பழமைமிக்க சிவன் கோயிலின் பின்புறமாக அமைந்துள்ள வழுக்கல் மடமும்,சந்திகடு அண்மையில் பருத்தித்துறை வீதியில் எஞ்சியுள்ள ஒரு கிட்டங்கியின் தற்போதைய தோற்றமும்*

களஞ்சியப்படுத்தும் முறை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த வகையில் வல்வெட்டித்துறையில் மூன்று கிட்டங்கிகள் 1840 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டன. அவற்றில், கடல்மூலமான வாணிபத்தின் போது கொண்டுவரப்பட்ட அரிசி, சட்டி, பானை, விளையாட்டுப் பொருட்கள் என்பன சேமித்துவைக்க உதவின. கிட்டங்கிகளின் நில அமைப்பு சுண்ணாம்புக் கற்களால் ஆனது. சோழர்காலக்கட்டிட அமைப்புக்கு ஏற்ப இவை நிர்மாணிக்கப்பட்டன. ஈரலிபபுத் தன்மையை உறிஞ்சக்கூடியதாக இருப்பது, இவற்றின் சிறப்பம்சமாகும். இதன் சுண்ணாம்பினால் ஆக்கப்பட்டிருப்பதால், நீர்த்தன்மை இலகுவில் உறிஞ்சப்பட்டுவிடுவதால், நெல், அரிசி போன்றவற்றை நீண்ட காலத்திற்குச் சேமிக்க உதவும். இக்கிட்டங்கிகளின் கதவுகள், தேக்கு மரத்தினால் ஆனவை. ஒவ்வொரு கிட்டங்கிக்கும் பலமானதும் பாதுகாப்பானதுமான இரண்டு கதவுகள் இருக்கும். இவை ஒரே நிலைச் சட்டத்தில் மேல்புறமாகவும், கீழ்ப்புறமாகவும் திறக்கக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளன. இதில் கீழ்க் கதவுகள் 5 அடி உயரமுடையவையாக இருக்கும்.

ஆனால் இன்று, வல்வெட்டித்துறையில் அவற்றுள் ஓரளவு பாதுகாப்பாக மூன்று கிட்டங்கிகள் காணப்படுகினறன. ஆனால் இந்த நூலை எழுதிக் கொண்டிருக்கும் பொழுது 2016. ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் பருத்தித்துறை வீதியில் நல்ல நிலையில் அமைந்துள்ள எஞ்சிய கிட்டங்கியும் உடைக்கப்பட்டு விட்டது. அன்று கப்பல்கள் கட்டப்பட்டிருந்த காலத்தில், துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் ஆறு கிட்டங்கிகள் இருந்தன. அக்கிட்டங்கிகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு அவை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படத் தொடங்கியதால் அவை இருந்தமைக்கான எச்சங்களை காணமுடியவில்லை.





*வல்வை பொதுச் சந்தை இருக்கும் இடத்தில் முன்னர் இருந்த கிட்டங்கியும்,ரேவடி ஒழுங்கையில் சிதைந்த நிலையில் இருக்கும் கிட்டங்கியும்*

# சாதனையாளர்கள் வரிசையில் வல்வையின் மைந்தர்கள்

ஏனைய பிரதேசங்களில் இல்லாத ஒரு பெருமையாக உலக சாதனைகளை நிலைநாட்டி வல்வெட்டித்துறையின் பெருமையை உலகறியச் செய்த பல சாதனையாளர்களைக் கொண்டிருந்தபோதிலும், இந்நூலின் விரிவஞ்சி ஒரு சிலர் மட்டும் நினைவு கூரப்படுகின்றனர்.

- **வல்வெட்டித்துறையின் பெரியவர் திருமேனியார் வெங்கடாசலம் பிள்ளை!.....**

1867 ஆம் ஆண்டு சங்கத்தாபனம் செய்து வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் கோயிலைக்கட்ட ஆரம்பித் தவரே திருமேனியார் வெங்கடாசலம் பிள்ளையவர்கள். வல்வெட்டித்துறையின் புகழ்பெற்ற கடல்வணிகக் குடும்பத்தில் உதித்த ஐயம்பெருமாள் வேலாயுதர் வழிவந்த “திருமேனியாரின்” மைந்தனாக 1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை இவர் வல்வெட்டித்துறையில் அவதரித்தார். இது கலியப்பதம் 4924 இற்கும் சாலிவாகன சகாப்தம் 1745 இற்கும் சமமாகிய சித்திராபானு ஆண்டு மார்கழித் திங்கள் 6ம் நாள் ஆகும். இவர் பிறந்த கிரகநிலையானது சிங்க இலக்கினத்திற்கு உரியதாகும். சூரியனின் பார்வை பெற்ற சிங்க இலக்கணத்தில் பிறந்த இவருடைய முன்னோர்களும் பின்னோர்களும் பெருமைபெற்ற வரலாறுடையவர்கள்.

இவ்வாறு பெருமைமிகு குடும்பத்தில் அவதரித்த இவரின் பிறப்பை நூறு வருடங்களிற்கு முன் வாழ்ந்த வல்வெட்டித்துறையின் மூத்ததமிழ் அறிஞரும் வல்வெட்டித்துறை வைத்திலிங்கப்புலவரின் சகமாணவரும் உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் மாணாக்கனுமான பொன்னையா உபாத்தியாயர் என்றழைக்கப்பட்ட புலவர் நா.பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் பின்வரும் பாடலினூடாக வெளிப்படுத்தியுள்ளார்:

மல்லிகை முல்லை மலரிருவாட்சியாம்
நல்லபைந்தருநிறை நந்தவனமுஞ்
சூழ்ந்திடவதிவளந் துலங்குமிவ் வல்வையில்
ஆழ்ந்திடு கடல்சூழ்வணிகனின் மாக்கள்
வல்வினைப்பிறவியா மறிகடல்நீந்தி
எல்லையில்லா பேரின்பந்துய்ந்திட

கருமேனிகொள்ளாக் கரையறுபுண்யத்
திருமேனிவள்ளல் செய்தவத்துதித்த
தருவேங்கிடநிதித் தாரைபொழிகைத்

திருவெங்கடாசல சீதெந்தரியசிகாமணி!
என சிறப்பாகப் பாடியுள்ளார்.

**திருமேனியாருடைய** முதல் மைந்தனாகப் பிறந்த இவருக்கு குழந்தைவேற்பிள்ளை தம்பிப்பிள்ளை, தம்பையா, இராமசாமி, அப்பாச்சாமி, என ஐந்து இளைய சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். இதனால் மூத்தவர் என்கின்ற காரணப்பெயர் கொண்டு "பெரியதம்பியார்" என அழைக்கப்படலானார். இளமைப்பருவம்முதல் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய இவரும் தமது பரம்பரைத்தொழிலான கடல்வாணிபம் மூலம் பெரும்பொருள் ஈட்டியவர்களில் முதன்மையானவர். உரியபருவம் வந்ததும் திருமணம் முடித்து, வேலுப்பிள்ளை, திருமேனிப்பிள்ளை, அருணாசலம் எனும் மூன்று ஆண்மக்களும் பொன்னம்மா எனும் ஒரு பெண்மகவும் வாரிசாகினர்.

ஆரம்பத்தில் தென்கிழக்காசிய நாடான மலேசியாவின் துறைமுகநகரங்களான பினாங். போர்ட்வேலோ, பன்கூர், கிள்ளான் என்பவற்றுடன் அரிசி வர்த்தகத்தில் ஈடுபட்டார். இக்காலத்தில் தென்னிலங்கை நகரான காலியில் அமைந்திருந்த சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில் பலதிருப்பணிகளை மேற்கொண்டதுடன் அதன் புனருத்தான பணிகளிலும் பெரும்பங்காற்றினார்.

### வற்றாப்பளை கண்ணகை அம்மனின் ஆலயத்தைப் புனரமைத்தமை:

இக்காலத்தில் தன்னைப்போன்ற கடல்வணிகனான மாநாயக்கனின் மகளான கண்ணகியின் பெயரில் சிறுகொட்டிலாக இருந்த "வற்றாப்பளை கண்ணகி அம்மன்" ஆலயத்தை கற்கட்டிடமாக இவர் புனரமைத்ததுடன் கோயிலுக்கு அண்மையில் பக்தர்கள் தங்குவதற்காக ஒருமடத்தையும் தனது பெயரில் இவர் அமைத்திருந்தார். அத்துடன் கள்ளப்பாட்டில் இருந்து வற்றாப்பளைவரை உள்ள வீதியின் இருமருங்கிலும் ஒவ்வொருவருடைய வருணாச்சிரதர்மங்களிற்கு ஏற்றதான மடங்களை அமைத்து பக்தர்கள் தங்கிச் செல்வதற்கான வசதிகளையும் ஏற்படுத்தினார். சில வருடங்களிற்கு முன்புவரை வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் முன்றலில் இவர் பெயரில் அமைந்திருந்த யாத்திகர்களிற்கான தங்குமடம் அடையாளம் காணக்கூடியவாறு காணப்பட்டமை இங்கே குறிப்பிடத்தக்கது. முறையான வீதிப் போக்குவரத்துக்கள் அற்ற அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கடற்பயணம் செய்து வரும் பக்தர்கள் வற்றாப்பளை கண்ணகி அம்மனை வழிபடும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

### கள்ளப்பாட்டில் ஆலயம் அமைத்தமை:

முல்லைத் தீவில் உள்ள கள்ளப்பாட்டில் ஒரு பிள்ளையா கோயிலையும் இவரே அமைத்திருந்தார். பாய்க்கப்பல் மூலமாகவும் நடந்தும் கதிர்காமம் செல்லும் யாத்திரிகள் ஓய்வெடுப்பதற்காக கள்ளப்பாடு கடற்கரையில் ஒரு மடத்தினையும் அமைத்தார். அக்காலத்தில் கள்ளப்பாடு கடற்கரையில் வேறு கற்கட்டிடங்கள் ஏதுமற்ற நிலையில் இவரால் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு காணியில் இவை இரண்டும் அமைந்திருந்ததனால் அப்பிள்ளையார் கோவில் "மடத்தடிப்பிள்ளையார்" என அழைக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் சிதைவடைந்த அப்பிள்ளையார் கோவில் உள்ஊர் மக்களினால் புனரமைக்கப்பட்டதன் பின்பு இன்று கள்ளப்பாடு பிள்ளையார் கோவில் என அழைக்கப்படுகின்றது.

### ஆங்கிலேயரின் கப்பல் கட்டும் கலைக்கு மெருகூட்டிய பெரியவர்

"அத்திலாந்திக் கிங்" கப்பலை மூழ்கிய நிலையில் மீட்டு, வல்வெட்டித்துறைக்கு கொண்டு வந்து தமது பரம்பரை வாடியில் வைத்து (வாடி என்பது கப்பல்கள் மற்றும்

படகுகளை உற்பத்தி செய்யவும் அவை களைப் பழுதுபார்க்கவும் பயன்படுத்தும் இடமாகும்) அதனைச்சீரமைத்து மீண்டும் கடற்பிரயாணம் செய்யும் வகையில் மாற்றியமைத்தார். இவ்வாறான அவருடைய வாடி அமைந்திருந்த இடமே இன்றைய முத்துமாரி அம்மன் கோவிலுக்கு வடக்காக அமைந்திருக்கும் வாடி ஒழுங்கைப் பகுதியாகும். ஆங்கிலேயரின் "Atlantic King" என்றகப்பலை வாங்கி திருத்தியதன் மூலம் ஆங்கிலேயரின் கப்பல் கட்டும் தொழில் நுட்பத்தையும் நன்கு அறிந்து கொண்டார். இத்தகைய பட்டறிவின் மூலம் தமிழரின் பாரம்பரிய கப்பல் கட்டும் முறையினைச் சீர்திருத்தினார். இதன் மூலம் புகழ்பெற்றிருந்த வல்வெட்டித்துறையின் கப்பல் கட்டும் கலையினை மேலும் மெருகூட்டினார். இவ்வாறு எமது நாட்டின் கடலையும் அது தொடர்பாக இவருக்கு இருந்த நுண்ணிய அறிவையும் பொதுச்செயலில் இவருக்கு இருந்த பரந்த மனப்பாங்கையும் கண்ட ஆங்கிலேயரும் தமது கடல்பயணத் தேவைகளுக்காக பலசமயங்களில் இவரின் உதவியைப் தொடர்ந்து பெற்றுக்கொண்டனர்.

இதுபற்றிய சிறுகுறிப்பொன்று முருகர் குணசிங்கம் என்பவரால் எழுதப்பட்ட "இலங்கையில் தமிழர் முழுமையான வரலாறு" என்ற புத்தகத்தில் 343 ஆம் பக்கத்தில் காணப்படுகின்றது. அது பின்வருமாறு "திரு சாண்டஸ்(sanders) உடன் சாவகச்சேரியிலிருந்து போதகர் ஹன்ட் (HAND), இரு உபதேசிமார், ஒரு ஆசிரியர் என நான்கு சுதேசிகளும் ஆனி 16ந் திகதி வல்வெட்டித்துறையிலிருந்து மட்டக்களப்புக்கு பயணித்து எமது மத்திய நிலையமான புளியந்தீவில் தங்கினர்." எனத் தொடரும் இக்குறிப்பானது 1864ம் ஆண்டிற்கு உரியது. இது அமெரிக்க கிறிஸ்தவமிசனரிமாருடைய (A.C.M) report vol.7 reei 451 - 1857 - 1871 batticaloa 20oct1864 என காணப்படுகின்றது. 1864 இல் வல்வெட்டித்துறையின் எசமானாக விளங்கிய இவரைவிட வேறுயாரால் இது முடியும். தந்தையிடமிருந்து இரண்டு கப்பல்களை மட்டுமே பெற்றிருந்த இவர் சிவன்கோயிலைக் கட்ட ஆரம்பித்த காலத்தில் 12 கப்பல்களுக்கு சொந்தக்காரராக இருந்தார். என 1967ம் ஆண்டு வெளியிடப்பட்ட சிவன்கோயில் குடமுழுக்கு விழா மலரில் 17ம் பக்கத்தில் விழாமலரின் ஆசிரியர் பண்டிதர் சங்கரவைத்திலிங்கம். எழுதியுள்ளமை இங்கே நினைவூட்டத்தக்கது.

**வல்வெட்டித்துறையின் மிகப் பெரும் தொழில் வழங்குநராகப் பெரியவர்:**

இக்காலத்தில் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் மணியமாக விளங்கிய இவர் கோயிலின் சுற்று மதிலைக்கட்டியதுடன் கோவிலுக்கு தெற்குப்புறமாக ஒரு குளத்தையும் வெட்டுவித்தார். பன்னிரண்டு கப்பல்களுக்கு அதிபதியாக விளங்கிய இவரிடம் கப்பல் தண்டையல் (கப்ரன்) சுக்கானியர் (மாலுமிகள்) பண்டாரங்கள் (சமையல்காரர்) கிலாசுகள் (பாய்மரம் கட்டுவோர்) எனப் பலர் வேலைசெய்தனர். அதுபோல் கப்பலுடன் சம்பந்தப்பட்ட பொருட்களை ஏற்றுவது இறக்குவது எனத் தொழில் புரிந்த பலரும் கப்பலுக்கு தேவையான கயிறுகள் திரிப்போர் மற்றும் கப்பல் வாடியில் வேலை செய்வோர் என ஏறத்தாழ 300 பேர்களுக்கு மேல் இவரிடம் ஊழியம் புரிந்தனர். இவ்வாறு இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் ஊரில் இருந்த 300 பேருடைய குடும்பத்தினரின் வாழ்க்கையினை இவர் தாங்கியுள்ளார். 1946ம் ஆண்டில் எடுக்கப் பட்ட குடிசனமதிப்பீட்டு கணக்கெடுப்பின்படி வல்வெட்டித்துறை மக்களின் மொத்தத்தொகை 6015 என 30.7.1950 இல் வித்துவான் வ.மு கனகசுந்தரம் வீரகேசரிவார வெளியீட்டில் எழுதிய "வல்வெட்டித்துறை வரலாறு" என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதில் சைவர்கள் 5035 பேரும் கிறிஸ்தவர்கள் 85 பேரும் உள்ளடக்கப் பட்டிருந்தனர். அப்படியானால் அதற்கு 100வருடங்களுக்கு முன் எத்தனைபேர் வல்வெட்டித் துறையில் வாழ்ந்திருப்பர்.

அவர்களில் 300குடும்பத்தில் எத்தனை அங்கத்தவர்கள்? எனக் கணக்கெடுத்தால் அம்மக்களுக்கான இவரின் சேவையை அறிந்து கொள்ளலாம். அம்மக்களுக்கு அனைத்துமே இவராகத்தான் இருந்திருக்கும். அதனால்தான் தன்னிடம் வேலை செய்தவர்களுக்கு எசமானாக விளங்கியது போலவே ஊரின் எசமானகவே அந்த மக்களால் கருதப்பட்டு "எசமான்" எனவே, அழைக்கப்பட்டார். இன்றும் கூட அவர் வாழ்ந்த வீடு "எசமான்வீடு" என்றே அழைக்கப்படுகிறது. இதன்மூலம் வல்வெட்டித்துறை மக்களை வழி நடத்தும் தலைமைப் பதவி இயல்பாகவே கைவரப்பெற்றார். அவர் மறைந்து நூற்றி இருபது வருடங் களுக்கு மேலாகியும், அவரை குறிப்பிடும் போது "எசமான்" எனவும் அவருடைய வழிவந்த குடும்பத்தினரை "எசமான் குடும்பத்தினர்" எனவும் அளவிறந்த மரியாதையுடன் இன்றும் அழைக்கின்றனர். அவரது தலைமைத்துவத்தின் சிறப்பை அவரது வழித்தோன்றலான மேதகு வே.பிரபாகரன் அவர்களிடம் காணமுடிந்தது.

ஒரு கிராமத்தின் அல்லது பட்டினத்தின் முதல் மனிதராக முன்னுரிமை பெற்றிருந்த வெங்கடாசலம்பிள்ளை அவர்களின் வாழ்வில் 1867ஆம் ஆண்டு பாரிய மாற்றம் உண்டாயிற்று. வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் "தர்மகர்தா" என்னும் கோயில் மணியமாக அக்காலத்தில் கடமையாற்றிவந்த இவர் கண்டகனவில் "இவரது தந்தையார் வல்வட்டித்துறையில் சிவபிரானுக்கு கோயில் ஒன்றை எடுத்துத்தருமாறு பணித்திருந் தார். இவரது தந்தையராகிய "திருமேனியார்" மறையும் போது வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவில் தர்மகர்த்தாவாக இருந்தவர். இவற்றுடன் அவருடைய பூட்டனாரான"வேலர்" ஆரம்பித்து வைத்த நெடியகாட்டு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோவில். புட்கரணிப்பிள்ளையார் கோவில். மற்றும் வைகுந்தப் பிள்ளையார் கோவில் எனும் நான்கு கோயில்களுக்கும் மணியமாக இருந்து பெருந்தொண்டு ஆற்றியவர்.

**வல்வை வைத்தீஸ்வரர் கோயிலைக் கட்டிய வள்ளல்.**

கப்பல் வணிகம் மூலம் பெரும் பொருள் ஈட்டி புகழ்பெற்ற வர்த்தகராய் இருந்த வெங்கடாசலம்பிள்ளை முழுமுதற்கடவுளாம் சிவபிரானை நினைத்து அவருக்கு கோயில் கட்டும் பணியில் செயற்படலானார். கொன்றைமரத்தில் ஜோதி தோன்றிய இடத்தில் கோயில் அமைப்பதற்கு கொன்றை மரங்கள் நிறைந்திருந்த அம்மன்கோவிலுக்கு தெற்காகவும் புட்கரணிப் பிள்ளாயார் கோவிலுக்கு மேற்காகவும் அமைந்திருந்த 60 பரப்புக்காணியை விலைக்கு வாங்கிக் கொண்டார். இந்நிலப்பகுதி வெங்கடாசலம்பிள்ளையின் பெரிய தந்தையாராகிய் புண்ணியமூர்த்தியாருக்கே சொந்தமாக இருந்தது. அந்நிலப்பகுதியில் கற்பாறைகள் அதிகமாகக்காணப்பட்டன. ஊருக்கே எசமானாக வழிவந்து வாழ்ந்து காட்டிய குடும்பத்தில் வந்த பெரியவர் ஆனாலும் இறைவனுக்கு ஊழியம்புரியும் அடியவனாகி தனது கையினாலேயே பெரும் பாறைகளைப் புரட்டியும் தகர்த்தும் "புட்கரணி" என்னும் அந்நிலத்தைச் செம்மைப்படுத்தினார்.

**பஞ்சத்தை நீக்க அரிசியை இறக்குமதி செய்து மக்களுக்கு வழங்கிய வள்ளல்:**

சிவன்கோயிலின் கட்டுமானப் பணிகளை சிறப்புற அமைத்து வரும் வேளையில் 1877ம் வருடம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும் பஞ்சமும்,வாந்திபேதியும் ஏற்பட்டது. இறப்புக்கள் வேகமாக அதிகரிக்க உணவுப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகியது. பசியாலே பலர் பரிதாபமாக இறந்தனர். இக்காலத்தில் பர்மாவிலும் இந்தியாவின் பலபகுதிகளில் இருந்தும் அரிசி மற்றும் உணவுத்தானியங்களை கொண்டு வந்து குடாநாட்டு மக்களின் பஞ்சத்தைப் போக்குவதில் பெரியவர் பெருமுயற்சி செய்தார். யாழ்ப்பாண மக்களிடைய வியாபார நோக்கில் வந்து குடியேறிய பல செட்டிமாரும்

சுதேச செல்வந்தர்களும் வறியோரை மேலும் வாட்டி தமது பணப்பைகளை நிரப்ப முற்பட்டபோது, தனது சேமிப்புக்கிடங்கில் இருந்த அனைத்து அரிசியையும் தனது கப்பல்களில் வரும் அரிசியையும் பஞ்சமென வந்தவர்களுக்கு இல்லையெனாது அள்ளிக் கொடுத்த வள்ளல் இவர். இதன்மூலம் தன் பொருள் எல்லாம் இழந்தார். இதனால் கோயில் கட்டுவதிலும் பலசிக்கல்கள் பொருளாதா ரரீதியாக ஏற்பட்டன.

**அந்தணப்பெருமக்களுக்கும், ஓதுவார்களுக்கும், கலைஞர்களுக்குமான குடிமனைகள் அமைத்த வள்ளல்:**

வல்வெட்டித்துறையில் வைத்தீஸ்வரர் கோவிலை அமைத்ததுடன் அபிசேட ஆராதனைகளை புரியும் அந்தணப்பெருமக்கள் தமது குடும்பத்துடன் தங்கி வாழ்வதற்காக கோயிலின் தெற்குவீதியில் குடிமனை களையும் அமைத்துக் கொடுத்தார். இதேபோல காலம் தவறாது கோவிலில் தேவார, திருவாசகங்களை பாடும் "ஓதுவார்" களுக்காக கோவிலின் தென்மேற்கு மூலையில் ஒரு குடிமனையையும் அமைத்திருந்தார். இன்றும்கூட "ஓதுவார்வீடு" என்பது சிதைந்தநிலையிலும் அடையாளம் காணக்கூடியவாறே காணப்படு கின்றது. இவ்வாறு ஆலயத்தின் நித்திய கருமங்களிற்கு இடையூறு நேராது கவனித்துக்கொண்டார்.

கோவிலின் நித்தியபூசைகளின் போது நாதஸ்வரகானம்இசைப்போர்சிவமந்திரத்திற்கு கட்டியம்கூறும் மேளம் அடிப்போர் மற்றும் ஆஸ்தானவித்துவான்களை இந்தியாவில் இருந்து வரவழைத்து கோவிலுக்கு அண் மையில் தனக்குரிய காணியில் அவர்களை குடியமர்த்தினார். அத்துடன் எப்பொழுதும் தெய்வங் களையே மயக்கும் ஆஸ்தான புல்லாங்குழல் விற்பன்னரையும் சேவைக்கு அமர்த்தி இருந்தார். மக்களுக்கு அருள் புரியும் ஆண்டவன் வாழும் கோயில் என்பது அதற்குரிய அனைத்து தேவைகளையும் தன்னகத்தே பூர்திசெய்யும் வல்லமை கொண்டதாக இருக்கவேண்டும். அதுவே பூரணமான கோயிலாகும். அதற்கேற்பவே வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரர் கோயிலை அமைத்தவர் பெரியவர் வெங்கடாசலம்பிள்ளை அவர்கள்.

**அருகிப்போய்விட்ட புதிர் எடுத்தல் திருவிழா:**

கடல்வணிகனாய்ப் பிறந்து கடலோடியாய் வாழ்ந்த போதும் கோவிலின் தேவைக்கான நெல்லைத்தானே உற்பத்தி செய்துகொண்டார். கோயிலிற்கு அருகாமையில் இருந்த தீருவில் வயலில் சிவன்கோவிலைச் சார்ந்தவர்களினால் உற்பத்தி செய்யப்படும் நெல் விளைச்சலில் நடைபெறும் கதிர் அறுப்பென்பது பெரும் திருவிழாவாக அக்காலத்தில் கொண்டாடப்பட்டு வந்தது. ஒவ்வொரு தைப்பொங்கலிற்கு அடுத்தநாள் கோவிலில் இருந்து வயலிற்கு செல்லும் மாணிக்கவாசகப்பெருமான் கதிர்அறுப்பில் ஈடுபடுவார். நாள்முழுக்க அறுவடைசெய்தபின் அறுவடை செய்த நெல்லுடன் பிற்பகலில் மாணிக்கவாசகப்பெருமான் கோவிலுக்குத் திரும்புவார் "புதிர்எடுத்தல்" என்னும் பெயரில் பெரியவர் வெங்கடாசலாம்பிள்ளையால் நடத்தப்பெற்று வந்த இந்தநிகழ்வும் திருவிழாவும் திரு.சபாரத்தினம் எசமான் காலம் வரையில் கொண்டாடப் பட்டதெனினும் பின்பு வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியபின்னர், இந்த நடைமுறை கைவிடப்பட்டு விட்டது.

**வல்வையின் தலைமைத்தவத்தை ஏற்று மத நல்லிணக்கத்தை வெளிப்படுத்திய பெரியவர்**

சமூகம் அல்ல ஒரு குடும்பம் என்னும் நிலையில் காணப்படும் வல்வெட்டித் துறைக்கான தலைமைப் பதவியினை எவ்விதசலனமுமின்றி இவர் முன்னெடுத்தார். அதேவேளை 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்தமிழரின் அரசியல் வழிகாட்டலிலும் இவரின் முன்னெடுப்பு குறிப்பிடக் கூடியதாகவே இருந்துள்ளது. இவ்வகையில் 1879 இல் சட்டநிருபணசபையின் கௌரவ உறுப்பினரான முத்துக்குமாரசாமியின் மறைவின் பின்னர் அவரது வெற்றிடத்திற்கான

போட்டியில் கத்தோலிக்கரான "கிறிஸ்தோபர் பிறிற்ரோவிற்கு" இவர் வழங்கிய ஆதரவைக் குறிப்பிடலாம். தேசாதிபதியின் நியமனத் தின்மூலம் நியமிக்கப்படும் உறுப்பினராக பொது சேவையில் நீண்ட அனுபவமும் பிரபல சமூகசேவை யாளராகவும் ஒரு மாவட்ட நீதிபதியாகவும் அறியப் பட்ட கத்தோலிக் கரான பிறிற்றோவை நியமிப பதன் மூலம் இலங்கைத்தமிழரிடையே மதரீதியான காழ்ப் புணர்வை தவிர்ப்பதுடன் மக்களிடையேயான ஒற்றுமையும் அவர்களிற்கான சேவையும் பூரணமாக் கப்படும் என இவர் நம்பினார். எனினும் அப்போட்டியில் "சைவவேளாளர்" என்னும் கோசத்தினை முன்னிறுத்திய ஆறுமுகநாவலரின் அதீத பிரச்சாரத்தினால் பொன்னம்பலம் இராமநாதன் எனும் உயர்குடி வேளாளரே தேசாதிபதியால் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவரும் தனது பதவிக்காலம் முழுமையுமே தனக் காகவும் கொழும்பை மையமாகக் கொண்ட தன்னைப் போன்ற உயர்குடிகளான தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுக் காகவுமே குரல்கொடுத்து வந்துள்ளார். சர்வஜன வாக்குரிமையை மறுத்த சேர். பொன். இராமநாதனின் செயலின் மூலமே அவரின் உண்மைத்தன்மையை யாரும் உணர்ந்து கொண்டனர். தமது இனத்தையும் மொழியையம் சிந்திக்கமறுக்கும் இராமநாதன் போன்ற அரசியல் வாதிகளினாலேயே இன்றும் ஈழத் தமிழினம் அழிவுகளைச் சந்தித்து வருகின்றது. இவ்வாறான அரசியல் வாதிகளிற்கு எதிராக 130 வருடங்களிற்கு முன்பே போர்க்கொடி தூக்கிய திரு.வெங்கடா சலம்பிள்ளையின் அரசியல் தீர்க்கதரிசனமும் போர்க்குணமும் ஆச்சரியப்படத்தக்கது அல்ல என்பதை வரலாறு நமக்கு உணர்த்தி நிற்கின்றது. இவ்வகையில் வல்வெட்டித்துறையின் சமூக மட்டத்தில் மட்டுமல்லாது ஈழத்தமிழருக்காக அரசியல் அரங்கிலும் போராடிய "தமிழ்த் தேசியவாதி"யாகவே இவரைப் பார்க்கலாம்.

பெரியவர் தான் தேடிய சொத்துக்களையும் நிலபுலங்களையும் தான் கட்டிய கோவிலின் பெயரில் எழுதி வைத்து அக்கோயிலானது எக்காலத்திலும் நெறிபிறளாது இருப்பதற்காக அதன் நிர்வாகத்தை மட்டுமே தொடரும் தனது ஆண் சந்ததிக்காக எழுதிவைத்தார். இதன்மூலம் பல ஏக்கர் நிலங்கள் பின்வந்த காலங்களில் இவரது பரம்பரையினருக்கு பயன்பட்டதை விட கோயில்க்காணி என்னும் பெயரில் யார் யாரோ என சமூகத்தின் பலதரப்பட்வர்களுக்கும் பயன்பட்டன. 1956ம் ஆண்டில் வற்றாப்பளைமுதல் இரட்டை முள்ளிவாய்க்கால் வரையிலான நந்திக்கடலின் கிழக்கு மற்றும்தெற்குப் பகுதிகளில் இருந்த காணிகளும் தென்னந்தோப்புகளும் என 90 ஏக்கர் வரையானநிலங்களில் பலவும் பின் வந்தகாலங்களில் உரிமை கோரப்படாத நிலையில் பின்வந்த அரசாங்கத்தினாலும் தனியார்களினாலும் சுவீகரிப்படுத்தப் பட்டமையால் இன்று அவை பயன்படாத நிலங்களாகப் போய் விட்டன. தனது கனவான சிவன் கோயிலை, 1883இல் நிறைவேற்றியதுடன், தொடர்ந்தும் கப்பல்கள் மூலம் கடல் வணிகம் புரிந்த இவரின் இறுதிக் காலம் வரை சிவன்கோயிலுக்காகவே தனது உழைப்பை வழங்கி வந்தார். அக்கோவிலின் திருப்பணியிலேயே தனது வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்த "பெரியவர்" திரு. வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் நந்தன ஆண்டு ஐப்பசிமாதம் 11ம் நாள் அதாவது **24.10.1892** ஆங்கிலநாளில் தன்பூதவுடல் நீங்கி புகழுடன் இறைவன் திருப்பாதம் அடைந்தார்.

வல்வெட்டித்துறையில் வாழ்ந்து "திசை யெலாமிசை பரப்பிய திருமேனியார் வெங்கடாசலமெனும் பெரியதம்பியார்", பெரியவர் எனப் புகழப்பட்டு அவர் வாழ்ந்திருந்த போது மட்டுமல்லாமல் அவர் வாழ்ந்து நூறாண்டுகள் கடந்தபின்னும் அவர் பெயரையும் அவர் வழியையும் அவர் வழிவந்தவர்களையும் இந்த உலகம் அன்போடு ஆதரித்து நிற்பது தொடரும்புதியவரலாறாகும். வல்வெட்டித்துறையின் "சமூகத் தலைவராக" விளங்கிய வெங்கடாசலம்பிள்ளையின்

வழியில் வந்த அவரது கொள்ளுப்பேரனும், ஈழத்தமிழினத்தின் "தேசியத் தலைவராகவும்" உயர்ந்தவர்தான், வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் என்பது நம்மில் பலருக்கும் தெரியாது.

- **இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை.ச.வைத்தியலிங்கம்பிள்ளை-(1843-1901)**

தமிழ் கூறும் உலகில் இயற்றமிழ் போதகாசிரியர் வல்வை.ச.வைத்திலிங்கம் என்று பெருமையுடன் பேசப்படும் புலவர், வல்வெட்டித்துறையின் பாரம்பரியம், சமூகம் பற்றியும் மற்றும் இலக்கியம், கிறிஸ்தவ எதிர்ப்புக் கண்டனங்கள், பதிப்புக்கள், உரைகள், நிகண்டு, கணிதம், பூமிசாஸ்திரம், வானசாத்திரம் எனப் பல்துறைகளில் ஆய்வுகளையும் நூல்களையும் வெளியிட்டுள்ளார். புலவர் ச.வைத்தியலிங்கம் அவர்கள் 1843 ஆம் ஆண்டு மாசி மாதம் பூர நட்சத்திரத்தில் வல்வெட்டித்துறையில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர்,சங்கரப் பிள்ளை. இவர் உடுப்பிட்டி சிவசம்பு புலவரின் மாணவராவர். இவர் இந்தியாவுக்குச் சென்று அங்கும் ஈழத்தமிழரின் புகழை நாட்டியவர். உடுப்பிட்டி சிவசம்பு புலவரின் மாணாக்கர். இவர் "பாரதி நிலைய முத்திராட்சகசாலை" என்ற அச்சகத்தை வல்வெட்டித்துறையிலேயே நிறுவியதோடு, ஒரு தமிழ் பாடசாலையையும் நடத்தி வந்தார். 1878 இல் "நம்பியகப்பொருள்" என்ற இலக்கண நூலுக்கு விளக்கம் எழுதியுள்ளார். "சைவஅபிமானி" என்ற பத்திரிகையை பாரதி நிலையத்தினூடாக மாதமொரு தடவை வெளியிட்டு சைவத்தையும், தமிழையும் வளர்த்து வந்தார்.

சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் எழுதிய "சைவமகத்துவம்" என்ற நூலுக்கு கிறிஸ்தவர்களால் எழுப்பப்பட்ட கண்டனங்களை மறுத்து,"சைவமகத்துவபானு" என்ற மறுப்பு நூலை வெளியிட்டு சைவத்தின் மகத்துவத்தை உணரவைத்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தினால் இவருக்கு "இயற்றமிழ் போதகாசிரியர் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் சைவத்தையும், தமிழையும் முன்னிலைப்படுத்தும் வகையில் சமய நூல்கள், தலவரலாறுகள், கண்டன நூல்கள், உரை நூல்கள் எனப்பல நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றுள் குறிப்பாக, செல்வச்நிதி முறை, சிந்தாமணி நிகண்டு (1876), வல்வை வைத்தியேசர் பதிகம், வல்வை வைத்தியேசர் ஊஞ்சல், சாதி நிர்ணய புராணம், சைவ மகாத்மியம், போன்றவற்றையும், உரை நூல்களாக சிவராத்திரி புராணம், கந்தபுராணத்து அண்டகோசப் படலவுரை, தெய்வானை திருமணப் படலவுரை, சூரபத்மன் வதைப்படலம் ஆகியவற்றையும் குறிப்பிடலாம்.

இத்தகைய பெரியார் 1991 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆவணி மூலத்தில் இறைவனடி சேர்ந்தார். அவருக்கு ஒரு சிலை அமைக்கவேண்டும் என்ற உணர்வு எல்லோருடைய மனதிலும் ஆழமாக வேருன்றியுள்ள போதிலும் எவரும் இதுவரை முன்வரவில்லை. வைத்திலிங்கப் புலவர் அவர்களின் நிழல் படங்கள் இல்லாத போது, அவரது அங்க வடிவமைப்பைக் கொண்டு அவரது உருவப்படத்தை மிகத்த்தரூபமாக பிரபல ஓவியர் மோகனதாஸ் - மோகன் ஆட்ஸ்- அவர்கள் வரைந்து தந்திருந்தார். 1999 ஆம் ஆண்டு, அன்னாரைக் கௌரவிக்கும் வகையில் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற வல்வை மக்களின் முயற்சியினால், முத்திரை வெளியிடப்பட்டது. தற்போது அவுஸ்திரேலியாவில் வாழும் திரு. சு. சக்திவடிவேல் ஆசிரியர் அவர்களின் முயற்சியினால் இந்த முத்திரை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவ மதமாற்றத்திற்கு எதிராகவும், தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதில், நாவலருக்கு ஈடான பணிகளை இவர் ஆற்றிய போதும்,

பல்வேறு காரணங்களுக்காக இவரது நாமம் முன்னிலைப் படுத்தப்படவில்லை.

இவருடன் மேலும் பல புலவர் பெரு மக்கள் வல்வையில் பிறந்து, பல தமிழ் நூல்களையும் பிரபந்தங்களையும் எழுதி வலவைக்குப் பெருமை சேர்த்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

- **இலங்கையர் உண்டு சுவைக்கத் திராட்சையை அறிமுகப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரத்தினம்:**

கதிரிப்பிள்ளை துரைரத்தினம் 10 ஆகஸ்ட் 1930 ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம், 10 ஆம் திகதி தொண்டைமானாற்றில் கதிரிப்பிள்ளை செல்லமுத்து தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். இவர் தனது இடைநிலைக் கல்வியையும், உயர்தரக் கல்வியையும் வட்டக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்தபொழுதே தனது குடும்ப வறுமை காரணமாக 17 ஆவது வயதில் எழுதுவினைஞராகச் சில காலம் சேவையாற்றினார். பின்னர் அந்தப் பதவியை விட்டு பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு, பொருளியலில் கலைமாணி பட்டத்தைப் பூர்த்தி செய்தார். பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறியதும், பருத்தித்துறை, புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் ஒரு ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். ஆசிரியராகக் கடமையாற்றும்பொழுதேதந்தை செல்வாவின் கொள்கைகளின் ஈர்ப்பினால், இலங்கைத் தமிழசுக் கட்சியில் தன்னை ஒரு தீவிர அங்கத்தவராக இணைத்துக் கொண்டு அப்போழுதே மிகவும் விசுவாசமாகத் தமிழ் தேசியத்திற்காக உழைக்கத் தொடங்கினார். 1960 ஆம் ஆண்டு வரை வேலாயுதம் ஆங்கிலப் பாடசாலையில் அங்கு ஆசிரியராகக் கடமையாற்றிய பொழுது, சட்டக் கல்வியை கொழும்பு சட்டக் கல்லூரியில் சேர்ந்து பூர்த்தி செய்து சட்டத்தரணியாகவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவரது சமுக சேவையானது, உடுபபிட்டிக் கிராம சபையின் துணைத் தலைவராகக் கடமையாற்றத் தொடங்கியதில் இருந்து ஆரம்பித்தது.

திரு.க.துரைரததினம் அவர்கள் இளமைக் காலத்தில் இருந்தே நகைச்சுவையா கவும், அங்கதச் சுவையு டனும் பேசும் ஆற்றலைக் கொண்டதால், தந்தை செல்வா 1956 இல், அவரை பருத்தித்துறைத் தேர்தல் தொகுதி யில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட வைத்தார். ஆனால் அவரது அரசியல் அனுபவமும், பொது மக்களிடையேயான அறிமுகமும் இல்லாததால், அந்தத் தேர்தலில் அவரால் வெற்றி பெறமுடியாது போய்விட்டது. அந்தத் தேர்தலில் இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சியைச் சேர்ந்த திரு. பொன். கந்தையா அவர்கள் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றதானது வடமராட்சி மக்களின் ஜனநாயக சிந்தனையை எடுத்துக் காட்டியது. ஆனால் பின்னர் நடந்த தேர்தல்களில் குறிப்பாக மார்ச் 1960, ஜூலை 1960 , மேமாதம் 1965 மற்றும் மே 1970,1977 ஆகிய ஐந்து பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்ட துரைரத்தினம் அவர்கள் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் சேவையாற்றினார்.

அமரர் துரைரத்தினம் அவர்கள் தமிழரசுக் கட்சியினால் 1961 இல், ஏற்பாடு செய்த சத்தியாகிரகப் போராட்டத்தில் ஒரு முக்கிய பங்கை வகித்ததுடன் பொலிசாரினால் மிலேச்சத் தனமாகத் தாக்கப் பட்டுமிருந்தார். 1961ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தந்தை செல்வாவின் தலைமையில் காலை 5 மணியில் இருந்து சுமார் 75 பேர் யாழ் கச்சேரியின் முன் உள்ள பழைய பூங்கா மைதானத்தில் ஒன்று திரண்டு சத்தியாகிரஹத்தில் ஈடுபட்டனர். அந்த ஆயுதம் ஏந்தாத சாத்வீகமான போராட்டத்தில் தந்தை செல்வாவின் தலைமையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், வி.தர்மலிங்கம் ஏ.யு. கந்தையா. டாக்டர். இ.மு.வி.நாகநாதன், வி.என் நவரத்தினம் மற்றும் இவர்களுடன் இணைந்து

க.துரைரத்தினமும் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களது சாத்வீக மான போராட்டத்தை முறியடித்து அவர்களை ஆயுதபலத்தினால் அடக்கி ஆளவேண்டுமென்ற முனைப்பில், கலகம் அடக்கும் நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்கள் தலைக்கவசங்கள் அணிந்து, குண்டாந்தடிகள் மற்றும், இரும்புத் தலைக் கவசங்களை யும் அணிநதபடி சத்தியாக்கிரகிகளை நோக்கி முன்னேறி அவர்கள் மீது தாக்குதல்களைத் தொடுககத் தொடங்கினார்கள். அப்பொழுதும் கூட அந்த இடத்தை விட்டு நகராது படுததி ருந்த தமிழத் தலைவர் களை நாய்களை இழுத்துச் செல்வது பொல் இழுத்துக் கொண்டு சென்றனர். அவர்களில் ஒருவன் தந்தை செல்வாவை இழுத்துக் கொண்டுபோய்ச் சாக்க டைக்குள் தூக்கி எறிந்தான். அமரர் துரைரத்தினம் அரசியலில் ஆய்வு செய்வதற்காக சில பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு ஒன்று சுற்றுலாவை மேற்கொண்டிருந்த பொழுது, அந்தக் குழு வில் திரு.க.துரைரத்தினமும் ஒருவராகச் சென்றிருந்தார். அவர் அங்கே நின்ற நாட்களில் யாழ்ப்பாணத்தின் புவியியல் சூழல் நிலைமை களைக் கொண்டிருந்த இஸ்ரேலில் நன்கு செழித்து வளர்ந்திருந்த திராட்சைப் பழச் செடிகளைப் பார்த்ததும், அவற்றை எமது பிரதேசத்தில் கொண்டு போய் அறிமுகப்படுத்துவதில் ஆர்வத்துடன் இருந்ததால், அங்குள்ள விவசாய, பொருளாதார அமைச்சுடன் தொடர்பு கொண்டு, திராட்சைப் பயிர்ச் செய்கை தொடர்பான நுட்பங்களை அறிந்து கொண்டார். அவர் இஸ்ரேலில் இருந்து நாட்டுக்குத் திரும்பும் பொழுது, விமான நிலையத்திலும், பயணத்தின் பொழுதும் பலர் அவரைக் கேலி செய்தனர்.



எவ்வளவு கண்ணியமானவராகவும், தமிழ் தேசிய உணர்வுடனும் வாழ்ந்தாரோ அந்த அளவுக்கு, யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தின் மீதும் அக்கறையுடன் செயற்பட்டார். 1963 இல் இஸ்ரேலின் அரசியல், பொருளாதார அமைப்பை

"இப்ப உங்களுக்குச் சிரிப்பாகக் கிடக்குது, இன்னும் கொஞ்ச நாளிலை நீங்கள் எல்லாரும் எங்கடை மண்ணில பழுத்த திராட்சைப பழங்களைச் சாப்பிடும் பொழுது தான் அதன் அருமை தெரியும்..."

அவர்களுடைய கேலிச் சொற்களையும் பொருட்படுத்தாது, இஸ்ரேலில் இருந்து கொண்டுவரப்பட்ட திராட்சைத் துண்டங்களை, முதலில் தொண்டைமானாற்றில் தனது உறவினர் ஒருவரின் தோட்டத்தில் நடுகை செய்து, அவை பற்றிய பயிர்ச் செய்கை முறைகள், கத்தரித்தல், பசளையிடுதல், பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்களைச் சொல்லிக் கொடுத்து, அதன் பயன் கிடைக்கும் வரை கூடவே தொடர்ந்தும் கண்காணித்து வந்தார். அவரது அந்த முயற்சியினாலேயே இலங்கைக்கே திராட்சைப் பழம் கிடைத்தது. அங்கிருந்தேது குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் திராட்சை வெட்டுத் துண்டங்களை இலவசமாக விநியோகித்து விவசாயிகள் மட்டத்தில் திராட்சைச் செய்கையைப் பரவலாக்கினார். அவரது அந்த முயற்சியின் சாதனை பற்றி ஆங்கில, சிங்கள ஊடகங்கள் உட்பட அனைத்து ஊடகங்களும் முக்கியத்துவப் படுத்தியிருந்தன. 1970 ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களத்தின் மாதாந்த வெளியீடான “கமத்தொழில் விளக்கம்” சஞ்சிகை திரு. க. துரைரத்தினம் திராட்சைப் பழத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தியமை தொடர்பாக மிகச் சிறப்பான முறையில் ஆசிரியத் தலையங்கத்தை எழுதி அவருக்கு வாழ்த்தையும் தெரிவித்திருந்தது.

1970 ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின்னர் இலங்கைத் தமிழர் அரசியலில் மாற்றங்கள் ஏற்படத் தொடங் கின. 1970 இல் பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு தமிழருக்கு எதிரான பல நடவடிக்கை களை எடுத்தது. இதனால் தமிழ் இளைஞர் மத்தியில் தீவிரவாதம் முளைவிடத் தொடங்கியது. இந்த நிலையில், தமிழர் மிதவாதக் கட்சிகளின் தலைவர்கள் இனியும் பிரிந்து நின்று எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்தனர். 1972ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி அன்று, இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் , மலையகத் தமிழர்களின் கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணியினர் ஒன்றிணைந்து, வல்வெட்டித் துறையில் அகில இலங்கை தமிழ் மாநாடு அமரர் ச. ஞானமூர்த்தி அவர்களின் தலைமையில் எட்வேட் தங்கவடிவேல் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றபொழுது, பலத்த இழுபறிகளின் மத்தியில், “தமிழர் ஐக்கிய முன்னணி” உருவாக்கப்பட்டது. வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் நகரபிதா திரு. ச. ஞானமூர்த்தி அவர்களின் அந்த முயற்சியில் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. க. துரைரத்தினம் அவர்கள் முக்கிய அனுசரணையாளராகச் செயற்பட்டார்.

வல்வெட்டித்துறையில் ஒற்றுமைப் படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட தமிழர் கூட்டணியின் தலைவர்களாக தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், அகில இலங்கைத் தமிழ் காங்கிரசுக் கட்சியின் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தமிழர் கூட்டணியாகத் தோற்றம் பெற்ற பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி (Tamil United Liberation Front- TULF) என்று பெயர் மாற்றம் பெற்று, வட்டுக்கோட்டையில் நடைபெற்ற மகாநாட்டில், தமிழீழம் என்னும் தனி நாட்டை உருவாக்குவதற்கான கோரிக்கையை முன் வைத்துத் தீர்மானம் நிறைவேற்றினர். தமிழீழக் கோரிக்கை தொடர்பாக மக்களிடையே பிரசாரம் செய்யும் நோக்கில், 1976ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அன்று திரு. க. துரைரத்தினம் அவர்களுடன் மற்றைய முன்னணி தமிழ் அரசியல் தலைவர்களான, திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், திரு. வி. என் நவரத்தினம், திரு. க. பொ. இரத்தினம் ஆகியோர் இணைந்து திரு. மு சிவசிதம்பரம் அவர்களின் பெயரில் தமிழீழத் தீர்மானத்தை அச்சிட்டுத் தயாரித்த துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு நேரடியாக விநியோகித்துக் கொண்டிருந்தபொழுது,






அரசாங்கத்தின் கடுமையான உத்தரவின் பேரில் அ.அமிர்தலிங்கம், க.துரைரத்தினம்,வி. என்.நவரத்தினம், க.பொ.இரத்தினம் முதலிய தலைவர்கள் கைது செய்யப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் தேசத் துரோகிகளாக சிங்கள அரசாங்கத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களைப் பிரதிவாதிகளாக பட்டியல் இட்டு அவர்களுக் கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. முதன் முதலாக தமிழர்களுக்கு எதிராக அறிமுகப்படுத்தப்பட்ட "ட்ரையல் அட் பார்" எனப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களில் அவர்களுக்கு எதிரான விசாரணை நடத்த ஏற்பாடாகியது. இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் மிகவும் கவனிக்கப் பட்ட ஒரு வழக்காக இது விளங்கியதுடன், தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையைக் காட்டும் ஒரு வாய்ப்பாக வும் அமைந்தது எனலாம்.

அந்த நேரம் இந்த வழக்குப் பிரபலமாகப் பேசப்பட்டது. இந்த விசாரணையின் பொழுது, இவ்வழக்கை நடத்துவதற்காக தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மற்றும், தமிழ் காங்கிரசின் தலைவர் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் ஆகியோரின் நெறிப்படுத்தலில் சுமார் 70 முன்னணி புகழ் பெற்ற தமிழ் வழக்கறிஞர்கள், பிரதிவாதிகளுக்காக வாதாடியிருந்தனர். இதில் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் வாதத்திறமை யினாலும், அனைத்துத் தமிழர்களும் ஒற்றுமையாக ஒரே தலைமைத் துவத்தின் கீழ் செயற்பட்ட தாலும், 1977 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி, இந்த வழக்கு உயர் நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப பட்டனர்.

தமிழ்கட்சிகளிடையே ஏற்பட்ட ஒற்றுமை யைத் தொடர்ந்து, 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி" தமிழீழக் கோரிக் கையை முன்வைத்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட பொழுது, 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர். அந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் ஆணையாக 95 வீத்ததிற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சி ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டது. அன்று தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையினால் அ.அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு தமிழ் மக்களின் அபிலாசை களை உலகுக்கு எடுத்துக் காட்டும் ஒரு சந்தர்ப்பத்தை மக்கள் உருவாக்கிக் கொடுத்தனர். இன்று போல் சிங்கள அரசியல்வாதிகளினால் அன்று திரு.அ.அமிர்தலிங்கத்திற்குத் தானமாக அந்தப் பதவி வழங்கப்படவில்லை. தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலவராக வந்ததை ஜீரணிக் கமுடியாத சிங்கள அரசியல் தலைவர்கள்

ஒன்றிணைந்து ஒரு அரசியல் அமைப்புச் சீர்திருத்தச்சட்டத்தை உருவாக்க முனைந்தனர். தமிழர் ஒருவர் தேர்தலின் மூலும் எதிர்க்கட்சித் தலைவராக வரக்கூடிய, அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் எதிர்காலத்தில உருவாகக் கூடாது என்பதற்காகவே அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் ஜனாதிபதியாக இருந்த திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் அரசியல் அமைப்புச் சட்டம் மாற்றி யமைக்கப்பட்டு,விகிதாசாரத் தேர்தல் முறை கொண்டுவரப்பட்டது.இன்று அழகான இலங்கையைச் சீரழித்துக் கொண்டிருக்கும் அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்த பெருமை ஜே.ஆர் ஜெயவர்த்த னாவுக்கே உரியதாகும்.

அன்று வெற்றி பெற்றவர்களில் திரு.க.துரைரத்தினம் அவர்களும் அமோகமான வாக்குகளால் வெற்றி பெற்று பாராளுமன்ற நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற அரசியல் அமைப்பின் ஆறாம் திருத்தச் சட்டமூலத் துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், 1983 ஆம் ஆண்டின் தமிழர்களுக்கு எதிராக அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட கருப்பு யூலை வன்முறைகளில் சிங்கள காடையர்களினால் 3000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரி வித்தும், அனைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் 1983 முதல் நாடாளுமன்றத்தை ஒன்றியொதுக்கல் செய்தார்கள்.இந்த நிலையில், இலங்கை அரசின் இன ஒதுக்கல் கொள்கையை உலகறியச் செய்யவேண்டுமென்பதற்காகவும் திரு.க.துரைரத்தினமும் மற்றும் ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களும், 1983 ஆம் ஆண்டு





***திரு.ஆர்.பிரேமதாஸ் (உதவி உள்ளூராட்சி அமைச்சர்), திரு.க.துரைரத்தினம்(MP)***

**1971ம் ஆ 1971ம் ஆண்டில் உ லக்சபானாஜி மின்சாரம் தென்பகுதியிலிருந்து யாழ்மாவட்டத்திற்கு வந்தபோது வல்வெட்டித்துறைக்கு மின்சாரத்தை வழங்கியபொழுது, அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

உறுப்பினராகப் பருத்தித்துறைத் தொகுதியில் தெரிவு செய்யப்பட்டார். ஆயினும் தமிழ் ஈழத்துக்கு ஆதரவளிப்பதில்லை என ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும், தொடக்கம், ஒன்றியொதுக்கல் முறையில் நாடாளுமன்றத்தைப் பகிஸ்கரித்து வந்தனர். அவர்களது பகிஸ்கரிப்பின் காரணமாக மூன்று

மாதங்கள் முடிந்ததும், திரு.க.துரைரத்தினம் உட்பட ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், ஜனவரி 1984 ஆம் ஆண்டு 5 ஆம் திகதி தமது பாராளுமன்ற இருக்கைகளை இழந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றினர். அன்றைய தமிழ் அரசியல் தலைவர்கள் மக்களுக்காகவே மக்களுடன் வாழ்ந்து மறைந்த போதும்,அவர்கள் ஒவ்வொருவரின் பெயரும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த நெருக்கடியில் மக்களோடு மக்களாக வாழ வேண்டிய தமிழ் அரசியல் தலைவர்கள் இந்தியாவுக்குச் சென்று,தலை மறைவு வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த வேளையில், திரு. துரைரத்தினம் அவர்கள் மட்டும்,தமது மக்களுடன் மக்களாக வாழ்ந்து நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார்.

1986 களில், தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலத்தில் அரசாங்கத்துடன் சில குழுக்கள் சேர்ந்து இயங்கிய போதும்,தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் பல இளைஞர்கள் தம்மை இணைத்துக் கொள்ளத் தொடங்கினர். திரு.க.துரைரத்தினம் அவர்களின் இளைய மகன் 'அச்சன்" என்று அழைக்கப்படும், "வண்டையலூர் பரமேஸ்வரன்"இலங்கை இராணுவத்தினது அடாவடித்தனங்களாலும், இலங்கை அரசாங்கத்தின் இனத்துவேசக் கொள்கைகள் காரணமாகவும் விரக்தி அடைந்து, தமிழ்த் தேசியத்தின் மீது கொண்ட பற்றுதலின் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தன்னை "கமல்" என்ற பெயரில், 1985 இல் தன்னை இணைத்துக் கொண்டார். வரலாற்றுச் சமர் என்று இன்றும் பேசப்படுகின்ற "நெல்லியடி மத்திய கல்லூரியின் மீதான கரும்புலித் தாக்குதலில் மில்லர் கரும்புலியாகச் செல்வதற்கு முன்னர், முன்தளப் படையணியின் போராளியாகச் சென்று "ஜேர் கமல்" ஆக வீரச்சாவைத் தழுவியிருந்தார். அவரது இழப்பு திரு.க.துரைரத்தினம் அவர்களைப் பாதித்திருந்தாலும், தனது மகன் ஒரு இலட்சிய வீரனாகத் தன்னைத் தியாகம் செய்து கொண்டார் என்பதில் அவர் பெருமைப் பட்டுக் கொண்டார்.

அவரது சுகயீனம் காரணமாக 1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி இயற்கைச் சாவைத் தழுவிக் கொண்டார். அவர் இறுதிநாட்கள் வரை எந்தவிதமான ஏற்றத் தாழ்வுகளுமின்றி எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும்,நகைச்சுவையாகவும் பழகும் துரைரத்தினம் அவர்கள் இன்றுள்ள சில அரசியல்வாதிகள் போல் பதவிப் போட்டிக்காக தமிழ் மக்களையும், நாட்டையும் காட்டிக் கொடுக்கும் முயற்சிகளிலும்,காலத்திற்குக் காலம் கட்சிகளை மாற்றி வெவ்வேறு தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் ஒரு மூன்றாம்தர அரசியல்வாதியாகவும் என்றுமே அவர் செயற்பட்டதில்லை. அதனாலேயே அவரது பெயர் இன்றும் தமிழர்களின் அரசியல், சமுக, பொருளாதார வரலாற்றில் நிலைத்து நிற்கின்றது. ஆவர் மறைந்து 16 வருடங்களாக அவரது சேவைகளை நினைவு கூராத சில அரசியல்வாதிகள் தற்பொது தேர்தல்களை இலக்காகக் கொண்டு அவருக்கான நினைவு தினங்கள், சிலை அமைத்தல் என்றெல்லாம் பேசிக் கொண்டு வருவதுதான் வேடிக்கையாக இருக்கின்றது. ஆயினும், வல்வெட்டித்துறைக்கு முதலாவதாகவும்,இறுதியாகவும் கிடைத்த ஒரு அரசியல் முதுசொமாக விளங்கும் அமரர் க.துரைரத்தினத்தின் வெற்றிடம் இன்றும் வல்வெட்டித்துறையின் அரசியலில் மட்டுமின்றி வடக்கு கிழக்கு மாகாண அரசியலிலும் காணப்படுகின்றது.

- **இலங்கை -இந்திய பாக்கு நீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்த நீச்சு வீரன் நவரத்தின சாமி - 1954**

யாழ்ப்பாணமாவட்டம், வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குட்பட்ட தொண்டைமானாறு என்ற இடத்தைப் பிறப்பிடமாகக்

கொண்ட முருகுப்பிள்ளை நவரத்தினசாமி 1909 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்,16 ஆம் திகதி பிறந்தார். பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயின்று தனது உயர்தரக் கல்வியை முடித்த பின்னர் அரச சேவையில் இணைந்து வேளாண்மை பயிற்றுனராகப் பணியாற்றினார். தனது ஊரிலேயே லீலாவதி என்பவரைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு மூன்று மகன்கள். இளம் வயதிலேயே மனைவி இறந்து விட்டதால் பிள்ளைகளின் பராமரிப்பு முழவதையும் தானே ஏற்றுக் கொண்டு,அவர்களின் கல்வியையும் கவனித்து வந்தார்.

பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே நீந்துவதில் விருப்பம் கொண்டிருந்த நவரத்தினசாமி தனது, பத்து வயதிலேயே, 10 மைல்களுக்கும் மேலாக நீந்திச் சாதனை புரிந்தவர். பிரித்தானியாவில் உள்ள ஆங்கிலக் கால்வாயை ஆங்கிலேயர் ஒருவர் நீந்திக் கடந்தார் எனற செய்தியைப் படித்த போதே, தனது கிராமத்துடன் இணைந்திருக்கும் பாக்குநீரிணையை நீந்திக் கடக்க வேண்டுமென



ஆவல் கொண்டார். அதற்காகக் கடுமையான பயிற்சிகளை எடுத்துக் கொண்டார். ஆதன் விளைவாக அவருடைய உள்ளத்திலேயே கனன்று கொண்டிருந்த இலட்சியத்தை நிறைவு செய்யும்வகையில்,1954ம்ஆண்ட மார்ச்மாதம் 16 ஆம் திகதி அன்று' வல்வெட்டித்துறையில் இருந்து கோடியக்கரை வரையான 34 மைல் தூ ரத்தைக் கொண்ட பாக்குநீரிணையை நீந்திக் கடக்க முயன்றபொழுது, கடுமையான கடல் கொந்தளிப்பினால் அதனை நீந்திக் கடக்க முடியாது போய்விட்டது. கடலில் நீந்திக் கொண்டிருந்த போதே தென்னிந்தியாவின் கரையோரக் கிராமமான கோடியாக்கரையை அடைவதற்கு மேலும் ஏழு மைல்கள் மட்டும் இருக்கும் பொழுதே, அவரால் தொடர்ந்து நீந்த முடியாது போகவே தனது நீச்சல் பயணத்தை இடைநிறுத்திக் கொண்டார். ஆயினும் பாக்கு நீரிணையைக் கடந்தே ஆக வேண்டும் என்ற தனது இலட்சியத்தை முன்னெடுக்க வேண்டு மென்பதில் அவர் தனது முயற்சியில் தளராது மேலும் மேலும் பயிற்சிகளைத் தொடர்ந்து கொண்டே இருந்தார். இதன் விளைவாக 9 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் நீந்திக் கடப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

மு.நவரத்தினசாமி. அவர்கள், மீண்டும் தனது கடல்கடக்கும் சாதனையை ஆரம்பித்த பொழுது, அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மு.இராமலிங்கம் அவர்களின் ஆசீர்வாதத்துடன், 1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் இருந்து 32 மைல் நீளமான பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும்



சாதனையை மேற்கொண்டார். 1954 மார்ச் 25 மாலை4:10 மணிக்கு அவர்தனது இரண்டாவது பயணத்தை ஆரம்பித்தார். பல இடர்களுக்கு மத்தியில் பொங்கிப் பிரவாகிக்கும், ஆழக் கடலினூடாக 1954 மார்ச் 26 மாலை 7 மணிக்கு 27 மணி நேரம் நீந்திய பின்னர் வேதாரண்யத்தை வந்தடைந்தார். பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து, உலக சாதனையை நிலை நாட்டிய முதலாவது சாதனையாளர் என்ற பெயரைப் பெற்றுள்ள நிலையில், இலங்கைத்

தமிழர் ஒருவர் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து தமிழகக் கடற்கரைக்கு வந்து சேர்ந்துவிட்டார் என்ற செய்தி பரவியதும், அடுத்த நாள் காலையில் கோடியக்கரை, வேதாரண்யம், திருநெல்வேலி மக்கள் பெரும் வரவேற்பு அளித்தனர். துமிழக உறவுகளின் வரவேற்பையும் கண்ணீர் மல்கிய நிலையில் பெற்றுக் கொண்ட நவரத்தினசாமி அவர்கள் அந்த மக்களிடம் இருந்து விடைபெற்று, 1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம், 28 ஆம் திகதி மாலை 6:30 மணிக்கு வல்வெட்டித்துறை ரேவடிக்கடற்கரையை வந்தடைந்தார். அவரது சாதனை மிகக கடற் பயணத்தை அறிந்ததும், சேர் கந்தையா வைத்தியநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரி. இராமலிங்கம், வ. நல்லையா, என். எம். பெரேரா ஆகிய அரசியல் தலைவர்கள் உட்பட பெருமளவு மக்கள் இவரை வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வைத்து வரவேற்றனர. அவரது வருகையை அறிந்ததும், யாழ்ப்பாணக் குடாநாடு விழாக் கோலம் பூண்டிருந்தது. இந்திய, இலங்கை ஊடகங்கள் இச்சாதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதி யிருந்தன. இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை ஆகியோர் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

கொழும்பில் காலிமுகத்திடலில் 1954 ஏப்ரல் 9ல் நடந்த ஒரு பாராட்டு நிகழ்வில் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை இவருக்கு ஒரு வெள்ளிக் கேடயத் தைப் பரிசாகக் கொடுத்தார். எலிசபெத் மகாராணி தனது பிறந்த நாள் நினைவாக இவருக்கு British Empire Medal (BEM) வழங்கிக் கௌரவித்தார. இவ்விருது கொழும்பில் உள்ள இராணி மாளிகையில் வைத்து (Queen's House) 1955 சனவரி 15 இல் நவரத்தினசாமிக்கு வழங்கப்பட்டது. பிரித்தானியாவின் மாட்சிமை தங்கிய மகாராணி எலிசபெத் அவர்களின் சிறப்பு விருதினை பெற்றுக் கொண்ட முதலாவது தமிழர் என்ற பெருமையையும் பெற்ற நீச்சு வீரர் நவரத்தினசாமி அவர்கள் வல்வைக்குக் கிடைத்த ஒரு முதுசொமாகும்.

மு.நவரத்தினசாமி அவர்கள் தனது 56ஆவது அகவையில் 1965 ஆம் ஆண்டில் அரசசேவையில் இருந்து இளைப்பாறினார். இளைப்பாறிய பின்னர் இவர் சில இளைஞர்களை அழைத்து, இலங்கையை கட்டுமரம் ஒன்றில் 760 மைல்கள் தூரம் கடலில் சுற்றி வருவதற்குப் பயிற்சி கொடுத்தார். 1969 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 இல் அமரர். மு. நவரத்தினசாமி அவர்கள் காலமானார்.

1962இல், திரு.மா. செல்வராஜாவினால் எழுதப்பட்ட 'நீச்சு வீரன் நவரத்தினசாமி" என்ற இவரைப் பற்றிய வரலாற்று நூல் மற்றும் கரவெட்டி பிரதேச சபையின் 2011 ஆம் ஆண்டின் சிறப்பு மலரான "திருவுடையாள்" என்ற சிறப்பு மலரில், வல்வை ந.அனந்தராஜ் அவர்களினால் எழுதப்பட்ட "சாதனை வீரர் நவரத்திசாமி!" என்ற கட்டுரை ஆகியன இவரைப்பற்றி அறிவதற்கான குறிப்பிடப்பட்ட இலக்கியங்களாகக் காணப்படுகின்றன.

அவரது சாதனையை எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் 1958 ஆம் ஆண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அவரது சாதனையையும், வரலாறையும் நினைவு கூரும் வகையில் இவரது படத்துடன், வெளியிட்ட 4ஆம் வகுப்பு தமிழ் மொழிப் பாடநூலில் ஒரு அலகாக உள்ளடக்கப்பட்டிருந்தது. இவரைக் கௌரவிக்கும் வகையில், பருத்தித்துறையில் நீச்சல் தடாகம் அமைப்பதற்காக நினைவுக்கல் ஒன்று நாட்டப்பட்டுள்ள போதும் அது தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

2015 ஆம் ஆண்டு தொண்டைமானாறு கடற்கரையுடன் பாலத்திற்கு அருகில் நீச்சு வீரன் மு.நவரத்தினசாமி அவர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒரு சிலை அமைக்கப்பட்டு தொண்டைமானாறு மண்ணின் பெருமையைக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

- **கின்னஸ் சாதனை வீரன் ஆழிக்குமரன் ஆனந்தன்- 1963**

வல்வெட்டித்துறை மண் பெற்றெடுத்த சாதனையாளர்களின் வரிசையில். வி.எஸ்.சி.

நீச்சலை முடித்துச் சாலையுடன் திரும்பும், நீச்சு வீரர் மு.நவரத்தினசாமியை வல்வெட்டித்துறை பிரமுகர்கள் அழைத்து வருகின்றனர்.

ஆனந்தன் என சுருக்கமாக அழைக்கப்படும், விவேகானந்தன் செல்வகுமார் ஆனந்தன் என்ற அந்த உலக சாதனையாளனின் வரலாறும், அனுபவங்களும் புதிய தலைமுறையினருக்கு ஒரு பாடமாகவும், உந்துசக்தியாகவும் அமையும்.

விவேகானந்தன் செல்வகுமார் ஆனந்தன் 1943 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி வல்வெட்டித்துறையில், தெணியம்பை என்ற இடத்தில், பொறியியலாளராகக் கடமையாற்றிய விவேகானந்தன் அவர்களதும், செல்வானந்தராஜம் அவர்களதும் சிரேஸ்ட புதல்வனாகப் பிறந்தார். அந்தக் குழந்தை பிறந்ததும், இருவழிப் பேரன்மார்களையும் நினைவு கூரும் வகையில், "செல்வகுமார் ஆனந்தன்" என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்கள். ஆதுவே பிற்காலத்தில் "வி.எஸ். சி.ஆனந்தன்" என்ற பெயராக நிலைத்து நின்றது.

சிறு வயதில் இருந்தே ஆனந்தனிடம் எதனைச் செய்தாலும் தானே முதலில் செய்ய வேண்டும் என்ற பிடிவாதக் குணமும், எந்தப் போட்டியிலும் தானே வெற்றிபெறவேண்டும் என்ற வைராக்கியமும் இருந்து வந்தது. ஆனந்தன் வளர, வளர அந்தக் குணங்களும் வளர்ந்தே வந்தன. இது பற்றி அவரது தாயார் திருமதி இராஜன் விவேகானந்தன் அவர்கள் குறிப்பிடுகையில்,

"ஆனந்தன் சிறு வயதில் இருந்தே எதிலும் வெற்றி பெறவே முயற்சி செய்வான். உழைத்துச் சம்பாதிப்பதைத் தனது சாதனை முயற்சிகளுக்கே செலவிடுவான். சாதனைகளின் போது கிடைக்கும் பரிசுப்பணத்தை ஊனமுற்றவர்களுக்கே உதவிடுவான்..." என்று தனது மகனின் குணங்களை விபரிப்பார்.

1954 ஆம் ஆண்டில் முதன் முதலில் பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை நிலைநாட்டிய நீச்சு வீரன் நவரத்தினசாமியின் "நீச்சல் வாரிசாக" ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந்திக் கடப்பதற்குத் தயாராகினார். ஆழிக் கடலில் இறங்குவதற்கு முன்னர், நீச்சல் சாதனையாளர் அமரர் நவரத்தினசாமி அவர்களின் வீட்டுக்குச் சென்று ஆசி பெற்றதுடன் கடலில் திடீர், திடீரென ஏற்படும் காலநிலை மற்றங்கள் பற்றியும் அவ்வாறான மாற்றங்களின் போது நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றியும் தெரிந்து கொண்ட ஆனந்தன் தனது நீச்சல் சாதனையை நிலை நாட்டுவதற்குப் புறப்பட்டார்.

அலை கடல் ஆர்ப்பரிக்கும் ரேவடிக் கடற்கரையெங்கும் மக்கள் வெள்ளத்தில் நிறைந்து போய் இருந்தது. பல நூற்றுக் கணக்கான வள்ளங்கள் புடை சூழ அங்கு

குழுமி நின்ற மக்களின் உணர்ச்சி பூர்வமான வாழ்த்தொலிகள் வானைப் பிளக்க ஆனந்தன் என்ற அந்த 18 வயது இளைஞனின் உடல் முழுவதும் ‘கிறிஸ்’ பூசப்பட்ட நிலையில் கடலில் இறங்கி நடக்கத் தொடங்கினார். வானை முட்டுமளவுக் குப் பொங்கி எழும் பேரலைகளை எதிர்த்து அந்த ஆழிக் கடலினூடாக வல்வெட்டித்துறையில் இருந்து தமிழகத்தின் கோடியாக் கரைவரை நீந்திச் சென்று, மீண்டும் அதேபாதையில் நீந்தி வந்து வல்வெட்டித்துறை மண்ணைத் தொடவேண்டுமென்பதே ஆனந்தனின் இலட்சியமாக இருந்தது.

வல்வைக் கடற்கரையில் நின்று வழி அனுப்புவதற்காக வந்திருந்த மக்களுக்குக் கை காட்டி தன்னுடைய வணக்கத்தையும் தெரிவித்துவிட்டு ஆனந்தன் கடலில் இறங்கி கழுத்து வரை மறையும் ஆழம் வரை நடந்து நென்று பின்னர் நீந்தத் தொடங்கினார். ஊரில் உள்ள அத்தனை வள்ளங்களும் ஆனந்தனுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்காக அவரைச் சூழ்ந்து சென்று கொண்டிருந்தன. ஆனந்தனுக்கு உற்சாகத்தை வழங்குவதற்காக இடையிடையே அவரது சில நண்பர்களும் அவருக்குச் சிறிது தூரம் தள்ளி நீந்திக் கொண்டிருந்தனர். படிப்படியாக இரண்டு பக்கங்களினதும் கரைகள் மறையத் தொடங்கியதும் போகும் பாதையும் தெரியவில்லை,அவர்கள் சென்று கொண்டிருக்கும் திசைகளும் தெரியவில்லை.

சூரியன் மறையும் நேரத்தில் திடீரென வானம் இருண்டுகொண்டு வந்து கடும் குளிர் காற்று வீசத் தொடங்கிவிட்டது. நீண்ட நேரமாக நீந்திக் கொண்டிருந்த ஆனந்தனின் உள்ளங்கால்கள் இரண்டும் வெளிறிப் போய் இருந்தது.இது மிகவும் ஆபத்தான ஒரு விடயமாகும். வானமும் கடலும் இருண்டு கொண்டு வந்தாலும் இலகுவில் வெள்ளை நிறம் பளிச்சென்று தெரியும்.அவ்வாறான வெள்ளை நிறங்களை நோக்கி பெரிய சுறா மீன்கள் வந்து தாக்கத் தொடங்கும்.காற்றும் வேகமாக அடிக்கத் தொடங்கியதால் ஆனந்தனால் ஒரு சரியான திசையை நோக்கி நீந்த முடியவில்லை. பதினைந்து நிமிடங்களுக்குள் வானம் இருண்டு கொண்டே வந்துவிட்டது.அலைகள் பத்தடி உயரத் திற்கு பொங்கி எழுந்து, துணையாகக் கூட வந்த வள்ளங்களின் மேல் மோதியது. பெருத்த இரைச்சலுடன் மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது. ஒவ்வொரு அலையும் கூடச் சென்ற படகுகளைக் கவிழ்த்து விடுவது போல் மோதிச் சென்றது.

ஒரு திசையில் போய்க் கொண்டிருந்த வள்ளங்கள் அலையின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாது வேறு திசைகளில் செல்லத் தொடங்கிவிட்டன.அந்த வேகத்தில் அலையை எதிர்த்து நீந்திக் கொண்டிருந்த ஆனந்தனையும் அலை வேறு திசைக்கு இழுத்துச் சென்றதால், ஆனந்தனைக் காணாது தவித்தனர். அவருக்குத் துணையாகக் கூடச் சென்றவர்களுக்கு அச்சம் ஏற்பட்டு விட்டது. இரவு முழுவதும் அச்சத் துடன் பொழுதைக் கழித்தபடி, துணைக்குச் சென்றவர்களால், ஆனந்தனைத் தேடிக் கண்டுபிடிக்கமுடியாது போய்விட்டது.கிழக்கு வெளிக்கத் தொடங்கியதும் தான் தூரத்தில் ஆனந்தன் மெதுவாக நீந்திக் கொண்டிருந்தது தெரிந்தது. நீண்ட நேரம் இரவிரவாக நீந்திக் கொண்டிருந்ததாலும், உப்புக் கடல் நீரை அதிகளவில் அருந்தியதாலும் வாந்தி எடுக்கத் தொடங்கிவிட்டார். அவரது நிலையைப் பார்த்த, அவரது நண்பர்கள்,ஆனந்தனை நீச்சலைக் கைவிட்டு வள்ளத்தில் ஏறிக்கொள்ளு மாறு கெஞ்சினார்கள். ஆனந்தனுக்கு உள்ள வழமையான பிடிவாதக் குணம் காரணமாக அவர்களுடன்வள்ளத்தில் ஏறமறுத்துவிட்டார். ஆனால் ஆனந்தனைக் கட்டாயப்படுத்தி இன்னுமொரு சந்தர்ப்பத்தில் சாதனையை முடிக்கலாம் என்ற உறுதிமொழியின் அடிப்படையில் ஆனந்தன் பலவந்தமாக ஏற்றப்பட்டார். இதனால் ஆனந்தன் தனது நீச்சல் சாதனையைக் கைவிடும் நிலை வந்ததால், வள்ளத்தில் இருந்த ஒருவரையும் ஆனந்தன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

இந்தப் பயணம் முழுவதும் தனது தோல்வியை நினைத்து அழுது கொண்டே வந்தார். தனது பள்ளிப் படிப்பிலோ அல்லது பல்கலைக்கழக வாழ்க்கையிலோ தோல்வியைச் சந்தித்து அனுபவிக்காத ஆனந்தனால், இந்த ஏமாற்றத்தையும், தோல்வியையும் சீரணித்துக் கொள்ளமுடியவில்லை.

சிலநாட்களின் பின் பயிற்சிகளை யும், காலநிலை மாற்றங்கள் பற்றியும் நன்கு அறிந்து கொண்ட ஆனந்தன் மீண்டும் பாக்குநீரிணையைக் கடக்கும் நீச்சல் சாதனையின் இரண்டாவது பயணத்திற்கான முயற்சியினை மேற்கொண்டார். அன்றும் கூட பல ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்த்தொலிகளின் மத்தியில், பல நூற்றுக்கணக்கான வள்ளங்கள் புடை சூழ ஆனந்தனின் நீச்சல் பயணம் இரண்டாவது தடவையாக ஆரம்பமானது. 1963 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி வல்வெட்டித்துறை ரேவடிக் கடற்கரையில் (சுங்கக் கடற்கரை) அவரது இரண்டாவது நீச்சல் சாதனைக்கான பயணம் ஆரம்பமானது. அன்று பிற்பகல் 4.15 மணிக்கு ஆரம்பித்த அவரது நீச்சல் பயணம் 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை 42 மணி நேரம் வரை கடலில் நீந்தியும் மிதந்தும் சென்று தமிழகத்தின் கோடிக் கரையில் நிறைவடைந்தது.

1953 ஆம்ஆண்டு நீச்சு வீரன் நவரத்தின சாமிக்கு, தமிழக மக்களால் மாபெரும் வரவேற்புக் கொடுக்கப் பட்டது போல், தமிழக உறவுகளால் ஆனந்தனுக்கும் வழங்கப் பட்டது. இந்த இரு சாதனையாளர் களுக்கும் தமிழகத்தின் கோடியாக்கரை மக்கள் திரண்டு வாழ்த்தியமை வல்வெட்டித்துறை நகரத்திற்கு மட்டுமல்லாது, தமிழர்கள் பரந்து வாழும் உலகுக்கே பெருமை சேர்த்த ஒன்றாக அமைந்தது. ஆனந்தனின் அந்த இரண்டாவது முயற்சி எந்த ஒரு பிரச்சினையும் இல்லாது, வெற்றிகரமாக முடிவடைந்தமை ஆனந்தனுக்கு மட்டுமல்லாது அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கெல்லாம் சந்தோசத்தைக் கொடுத்தது. அங்கிருந்து ஆனந்தனை மீண்டும் வள்ளமொன்றிலேயே வல்வெட்டித்துறைக்கு அழைத்துச் சென்றனர். மறுநாள் சனிக்கிழமை வல்வெட்டித்துறை ரேவடிக் கடற்கரை விழாக் கோலம் பூண்டிருந்தது. காற்றில் அசைந்து அசைந்து ஆடும் வண்ணக் கொடிகளாலும், மேடை அலங்காரங்களாலும் வல்வெட்டித் துறைக் கடற்கரை அழகூட்டப்பட்டிருந்தது.18 வயதில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை புரிந்த வீர மைந்தனுக்குப் பிறந்த நகரமே விழா எடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அங்கே அமைக்கப்பட்டிருந்த அழகான மேடையில் ஆனந்தன் அமர்ந்திருக்க பூமாலைகள அவரை மறைத்துக் கொண்டிருக்க சுற்றி வர மக்கள் கூட்டம் மகிழ்ச்சிப் பெருக்கில் ஆரவார ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தது. அந்தப் பாராட்டு விழாவில், தமிழரசுக்கட்சியின் தலைவர், தந்தை செல்வா சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் முன்னிலையில் அவரது வாழ்த்துரையுடன் நடந்த அந்தப் பாராட்டு வைபவத்தில் அவர் வாழ்த்திய அந்த நிகழ்வு, ஆனந்தனின் வாழ்வில் மறக்கமுடியாத ஒன்று என்று அவரே பல இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். அன்று அதே மேடையில் வைத்து இவரது சாதனையைப் பாராட்டி வீரகேசரியின் பிரதம ஆசிரியராக இருந்த எஸ்.டி.சிவநாயகம் அவர்கள், ஆழிக்கடல் கடந்து சாதனையை மேற்கொண்ட ஆனந்தனுக்கு “ஆழிக்குமரன்” என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்திருந்தார். அன்று வீரகேசரி வழங்கிய “ஆழிக்குமரன் ஆனந்தன்” என்ற பட்டமே, கடைசி வரை அவரது பெயராக நிலைத்து விட்டது.

அன்று ரேவடிக் கடற்கரையில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில், ஆனந்தன் பேசும்போது, “பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தது போல் என்றோ ஒரு நாள் ஆங்கிலக் கால்வாயையும் நீந்திக் கடப்பேன்” என்று வைராக்கியத்துடன் கூறிய பிரகடனம் ஆனந்தனுக்குப் பிற்காலத்தில் அதுவே ஒரு சவாலாகவும் இருந்தது. ஆனந்தன் தனது 18

ஆவது வயதிலேயே ஆழியை நீந்திக் கடந்து சாதனை புரிந்தது போல், தனது கல்வியைத் தொடர்வதற்காகவும், பல பாடசாலைகளில் ஏறி இறங்கிக் கற்றும் சாதனை புரிந்த ஒரு பல்துறை ஆற்றல் உள்ளவராகவும் திகழ்ந்தார்.

பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டப் படிப்பை மேற் கொண்டிருந்த பொழுதே, பேராத னையில், பொருளியல் சிறப்புப் பட்டப் படிப்பை மேற்கொண்டிருந்த மாத்தறையைச் சேர்ந்த 'மானெல்' என்பவரை விரும்பியிருந்தார். இவர் தற்போதைய வெளிவிவகார அமைச்சராக இருக்கும் திரு.

களை நிலைநிறுத்துவதிலேயே கூடிய கவனம் செலுத்தி வந்தார். பாக்கு நீரிணையை இருவழியாகவும் நீந்திக் கடக்க வேண்டுமென்ற அவரது இலட்சியம் நாளுக்கு நாள் அவருக்குள்ளாகவே வளர்ந்து வந்தது. அன்று அவரது உள்ளத்தில் கருக்கொண்ட அந்த இலட்சியம், பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து 12 வருடங்களின் பின், ஆனந்தனின் 30 வது வயதில் உருப்பெறத் தொடங்கியது.


1971 ஆம் ஆண்டு தலைமன்னாரின் ஆர்ப்பரிக்கும் கடற்கரையோரம் ஆயிரக் கணக்கான மக்கள் குழுமி நின்று வாழ்த்துக்



மனைவி மானெல், மகன் குமார் ஆனந்தனுடன், ஆழிக்குமரன்



உடலை கிறீசினால் மறைத்து நீச்சலுக்குத் தயாரகும் ஆனந்தன்



ரேவடியில்நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆழிக்குமரனை வாழ்த்தும் தந்தை செல்வா




இலங்கை அரசினால் வெளியிடப்பட்டமுத்திரை

மங்கள சமரவீராவின் மருமகளாவார் அவரது குடும்பத்தினரதும் அனுமதி பெறாமலேயே ஆனந்தன், அவர் விரும்பியிருந்த 'மானெலை' பதிவுத் திருமணம் செய்தார். ஆனந்தன் சட்டப் படிப்பை முடித்ததும் உலக சாதனை

களைத் தெரிவிக்க, பல நூறு படகுகள் பக்கத்துணையாகச் செல்ல தலைமன்னர் கடலில் இருந்து ஆனந்தனின் இண்டாவது சாதனைப் பயணம் ஆரம்பமானது. அன்று காலை 8.00 மணிக்கு நீந்தத் தொடங்கி மறுநாள்

தனுஸ்கோடியை 51 மணித்தியாலங்களில் அடைந்து, அங்கிருந்து தலை மன்னாருக்கு நீந்தி வந்து தனது மற்றைய உலக சாதனையையும் நிலை நாட்டினார். உலக சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸ் புத்தகத்தில் தனது முதலாவது உலகசாதனை யைப் பதிவு செய்து கொண்ட ஆனந்தனுக்கு மேலும், மேலும் உலக சாதனைகளை நிலை நாட்டி கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரைப் பல தடவைகள் பதிவு செய்து கெள்ளவேண்டும் என்ற அவாவும், ஆவலும் மேலோங்கியது.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த பின், அதனைத் தொடர்ந்து ஏழு உலக - சாதனைகளைப் படைத்து கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரை எட்டுத் தடவைகள் பதித்துக் கொண்ட ஒரே ஒரு தமிழன் என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார். ஆனந்தனின் சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் “பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த குமார் ஆனந்தன்” என்ற குறிப்புடன் இவரது உருவம் பதிக்கப்பட்ட தபால் முத்திரையை வெளியிட்டிருந்தது.

- 1971 இல், தலைமன்னாரில் இருந்து தனுஸ்கோடிக்கு நீந்திச்சென்று மீண்டும் அங்கிருந்து தலைமன்னாருக்கு நீந்தி வந்து 51 மணித்தியாலங்களில் இருவழி நீச்சல் பயணத்தை நிறைவு செய்தமை முதலாவது உலக சாதனையாகப் பதிவு செய்யப்பட்டது.
- 1978 டிசெம்பர் மாதத்தில் தொடர்ச்சியாக 128 மணித்தியாலங்கள் வரை ருவிஸ்ற் நடனம் (Twist Dance) ஆடிச் சாதனை புரிந்தார்.
- 1979 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பில் உள்ள விகாரமாதேவி பூங்காவைச் சுற்றி நிற்காது தொடர்ந்து துவிச்சக்கர வண்டியில் 1487 மைல்கள் (2227 km) வரை 187 மணித்தியாலங்ளில் (Non-stop cycling) ஓடி முடித்தார்.
- கொழும்பில் 1979 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் விகாரமாதேவி பூங்காவில் உயரமாக அமைக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட மேடையில் பந்து ஒன்றுக்குக் கைகளால் அடித்து அது மேலே எழும்ப மீண்டும் மீண்டும் அடித்து (Ball Punching) தொடர்ச்சியாக 136 மணித்தியாலங்களாகக் களைக்காது உலக சாதனையை நிலை நாட்டினார்.
- 1980 ஆம் ஆண்டில் இரண்டு நிமிடங்களில் 165 தடவைகள் இருந்து எழும்பியும்(Sit ups)சாதனை படைத்தார்.
- 70 இறாத்தல் நிறையுள்ள இரும்பை 2000 தடவைகள் கீழிருந்து மேலே தூக்கிய மற்றொருசாதனை.
- 1983.01.01 அன்று 1000கிராம் நிறையுள்ள பிலியட் தடியை 2520 தடவைகள் 2 மணித்தியாலமும் 29 நிமிடங்களுமாக உயர்த்துகின்ற மயிர்க் கூச்செறியும் மற்றொரு சாதனையை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தினார். இதில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர்கள் நடுவர்களாகக் கடமையாற்றினர்.
- கொழும்பில் 1979 மே மாதத்தில் ஒற்றைக்காலில் 33 மணித்தியாலங்கள் வரை இடைவிடாது நின்று, (Balancing on one foot) சாதனை படைத்தார். இதற்கு முன்னர் 2 நிமிட நேரத்திற்குள், 165 தடவைகள் இருந்து எழும்பியும் ஒரு சாதனையைப் படைத்தார்.
- 1980 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் கொழும்பில் jhd;>high kicks என்ற உலக சாதனையை 9100 தடவை கள் நிகழ்த்தி உலக சதனையை நிலை நாட்டினார்.
- 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதத்தில் சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் தொடர்ந்து 80 மணித்தியாலங்கள் வரை ‘தவளையைப்’ போல் மிதந்து (Water-

Treading) தமிழகத்திலும் கூடத் தனது உலக சாதனயை நிலைநாட்டினார்.

இவ்வாறு பல சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டே வந்த ஆனந்தனின், ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்க வேண்டுமென்ற அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான பயிற்சிகளை இங்கிலாந்திலே ஆரம்பித்தார். அந்தச் சாதனையை நிறைவேற்றவிடாது தடுப்பதற்கான பல்வேறு சதிமுயற்சிகள் கூட இங்கிலாந்து மண்ணில் நடந்தன. அவரைக் காரினால் மோதிக் கொலை செய்வதற்கு முயன்றவேளை அதிர்ஸ்டவசமாக பலத்த காயத்துடன் உயிர் தப்பியிருந்தார். அதனால் அவருடையகாலுக்குச்சத்திரசிகிச்சையின்மூலம் உலோகத் தகடுகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்த நிலையிலும்கூடத் தனது முயற்சியைக் கைவிடாத ஆனந்தன் நாள் குறித்து ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சியை மேற்கொண்டார்.

ஆனந்தன் சிறுபிள்ளையிலேயே இளம்பிள்ளை வாதத்தினால் பாதிக்கப் பட்டாலும், பல சாகசச் செயல்களில் தன் சாதனைகளைப் படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றார். பின்னர், இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தின் விளைவால் இவரது மண்ணீரல் அகற்ற நேரிட்டது. ஆயினும் அவர் மனம் தளர வில்லை. இவர் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கத் திட்டமிட்டு இங்கிலாந்து சென்றார். குறுகிய பயிற்சியில் ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடக்க முற்பட்டார். முன்வைத்த காலைப் பின்வைக்கமுடியாது என்ற வைராக்கியத்துடன், அங்கே நின்ற ஒவ்வொருவரினதும் கண்ணீரின் நடுவே, 1984 ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 20 ஆம் திகதி ஆங்கிலக் கால்வாயில் தனது நீச்சல் பயணத்தை அரம்பிப்பதற்கான முயற்சியை மேற்கொண்ட போது ஆனந்தனின் பயணத்தை இனிமேல் எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்ற நிலையில் தமது துயரங்களைத் தமக்குள்ளேயே அடக்கிக் கொண்ட அவரது உறவுகள் மற்றும் நண்பர்கள் பலர் சூழநின்று விடை கொடுத்து அனுப்பிய போது அது தான் ஆனந்தனின் இறுதிப் பயணம் என்பதை அப்போது யாரும் உணரவில்லை....`. அந்தக் குளிர் நிறைந்த ஆங்கிலக் கால்வாயைத் தொட்டு வணங்கிய ஆனந்தன், "குளிர்ந்த கடலே கவலை தருகிறது. அதற்கேற்ப என்னை தயார் செய்ய கால அவகாசம் போதவில்லை" என்று தெரிவித்தார். இதுதான் அவர் கூறிய கடைசி வார்த்தை.

சிறிது தூரம் வரைக்கும் அந்தக் குளிர் நிறைந்தஆங்கிலக் கால்வாயை நீந்திக் கொண்டிருந்த பொழுது அவரது கால்கள் விறைத்துப் போன நிலையில், உலோகத் தகடுகள் பொருத்தப்படடிருந்த கால்களால் அவரால் முன்னோக்கி நகர முடியவில்லை.. ஆங்கிலக் கால்வாயை நீந்திக்கடந்தபோது குளிரால் பாதிக்கப்பட்டு சாதனை முயற்சியின் போதே 1984 ஆம் ஆண்டு ஆகத்து மாதம் 6 ஆம் திகதி அன்று, மரணத்தையும் தழுவினார்

ஆம்.....1943 ஆம் ஆண்டு, மே மாதம், 25 ஆம் திகதி வல்வெட்டித்துறை மண்ணின் ஆழியோரம் பிறந்து, ஆழியிலே சாதனை புரிந்து ஆழிக்குமரன் எனப் பெயர் எடுத்த அந்த மாவீரன் ஆனந்தனை ஆழித் தாய் அவரது 41 வது வயதில் தனக்குள் இழுத்துக் கொண்டு விட்டாள். ஆனந்தனின் வாழ்வும் முடிவும் அந்த ஆங்கிலக் கால்வாயுடன் சங்கமித்து விட்டது.

இவரைப்பற்றிய இலக்கியங்களாக ஈ.கே. ராஜகோபால் அவர்களால் எழுதப்பட்ட "ஆழிக்குமரன் ஆனந்தன்" என்ற நூலும், கரவெட்டி பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட "திருவுடையாள்" சிறப்பு மலரில், வல்வை. ந. அனந்தராஜ் அவர்களால் எழுதப்பட்ட "சாதனை வீரன் ஆழிக்குமரன் ஆனந்தன்" என்ற கட்டுரை, கிளிநொச்சியில் இருந்து வெளிவந்த "அறிவுக்கதிர்" சஞ்சிகையின் ஆனந்தன் சிறப்பு மலர் என்பன காணப்படுகின்றன. அதே போன்று'ஆழிக்குமரன் ஆனந்தனின் பெயரை மீண்டும் உலகறியச் செய்யும்

வகையில், இவரது மகன் ராஜன் ஆனந்தன், ஆசியாவிற்கான கூகிள் மைக்குரொசொஃப்ட் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டமை வல்வைக்குக் கிடைத்த இன்னுமொரு பெருமையாகும். இன்று கூகிள் நிறுவனத்தின் ஆசியாவுக்கான தலைவர் என்ற பதவி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தமிழர் ஒருவருக்குக் கிடைத்தது என்பது வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகும்.

- **குச்சுப்புடி நடனத்தில் உலக சாதனை படைத்த ரங்கமணி விவேகானந்தன்:**

எங்களில் பலர் பரதநாட்டியத்தைத் தான் எப்பொழுதும் நினைவில் வைத்திருப்பதுடன், அந்த நடனத்திலேயே கூடுதலான ஈடுபாட்டையும் காட்டி வருகின்றோம். ஆனால், குச்சிப்புடி போன்ற ஏனைய நடன வடிவங்களை இரசிக்கவும், பாராட்டவும் தவறிவிடுகின்றோம். ஆனால், அழகும் தெய்வீக உணர்வையும் தரக்கூடிய குச்சிப்புடி நடனத்தை இரசிக்கும் பொழுது ஏற்படும் மனநிறைவும், சுகானுபவமும், வேறு எந்த நடனத்திற்கும் கிடைப்பதில்லை.

அந்த வகையில், குச்சிப்புடி நடனத்தை இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளுக்கும் கொண்டு சென்று அதன் முக்கியத்துவத்தையும், கலைநயத்தையும் உணரச் செய்தவர் ரங்கா என்று அழைக்கப்படும் ரங்கமணி விவேகானந்தன். வல்வெட்டித்துறை தெணியம்பை என்ற இடத்தைச் சேர்ந்த விவேகானந்தன், செல்வானந்தராஜம் அவர்களின் மகளாகப் பிறந்ததவர் என்ற பெருமைக்கும் அப்பால், உலக சாதனை வீரன் ஆழிக்குமரன் ஆனந்தன் அவர்களின் இளைய சகோதரி என்ற புகழையும் உடையவர். குச்சிப்புடி மற்றும் மோகினியாட்டம் போன்ற நடனங்களை ஈழத்திலும், இந்தியாவிலும் சிறப்புற ஆற்றுப் படுத்தி அவற்றின் முத்திரையைப் பதித்த ரங்கமணி விவேகானந்தன் அவர்கள் ஐரோப்பிய நாடுகள் எங்கும் சென்று அவற்றை ஆற்றுப்படுத்தியவர்.

ஆரம்ப காலத்தில் அவரது தந்தையினால், தென்னிந்தியாவின் பிரபல பரத நாட்டியக் கலைஞராக விளங்கிய குரு கீதாஞ்சலி வி.கே. நல்லையா அவர்களிடம் பரத நாட்டியத்தையும், கதகளி நடனத்தையும் கற்றுக் கொடுப்பதற்காக அவரது வீட்டிலேயே நடன வகுப்புகளை ஒழுங்கு செய்து கொடுத்தார். ரங்கமணியின் ஆரம்பக் குருவாக விளங்கிய கலைஞர். வீ. கே. நல்லையா அவர்களே ஆரம்பகால குருவாக இருந்து நடனத்தின் நுட்பங்களைக் கற்றுக் கொடுத்து ரங்காவை உலகப் புகழ்பெற்ற மிகச் சிறந்த நடன மேதையாக உருவாக்கியுள்ளார்.

தனது ஆரம்பகாலத்தில் பரத நாட்டியத்திலும், கதகளி நடனத்திலும் ஈடுபாடு காட்டி வந்த ரங்கமணி அவர்கள், பின்னர் குச்சிப்புடி நடனத்தின் சிறப்புக்களையும், அதன் மகிமையையும் அறியத் தொடங்கியதால், குச்சிப்புடி நடனத்தையும் ஆர்வத்துடன் கற்கத் தொடங்கினார்.

குச்சிப்புடி நடனம் என்பது தென்னிந்தியாவில் உள்ள ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள "குச்சிப்புடி" கிராமத்தில், உள்ள ஆலயங்களில் பிராமணர் களால் மட்டுமே ஆற்றுப் படுத்தி வந்த ஒரு கலையாக விளங்கியது. குச்சிப்புடி நடனப் பாணியானது, அதன் அழகினாலும், கவர்ச்சியினாலும் எல்லோராலும் பாராட்டப்பட்டு வரும் ஒரு கிராமிய கலை வடிவமாகும் அதன்பின்னரே சிதேந்திரா யோகியின் வழிகாட்ட லில் பெண்களும் சேர்ந்து கற்கும் ஒரு அழகிய கலைவடிவமாக மாற்றப்பட்டது. அந்தக் கலையின் வடிவத்தில் குரு சீட முறையில் பயிற்றப்பட்டு வளர்ந்த ரங்கமணி விவேகானந்தன் குச்சிப்புடி நடனத்திலும், மோகினி ஆட்டத்திலும் உலகப் பகழ்பெற்ற வராக விளங்கியமை வல்வைக்குக் கிடைத்த பெருமை.

1971 ஆம் ஆண்டில் ரங்காவுக்கு நாட்டிய "விசாரத்" என்ற விருது கிடைத்தபொழுது அவரது குச்சிப்புடி நடனக் குருவாக இருந்த வேம்பட்டி சின்னச் சத்தியம்

என்பவரும், மோகினி ஆட்டத்தில் புகழ்பெற்ற குரு கலா மண்டலம் நடனம் கோபால கிருஸ்ணன் என்பவரும் அவரை நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்ததை ஒரு பேறாகவும், நன்றியுடனும் நினைவு கூரும் ரங்கமணி சிறந்த குரு பக்தி மிக்கவராகவும் திகழ்ந்ததாலேயே இன்றும் புகழுடன் வாழ்ந்து வருகின்றார்.

ரங்கமணி விவேகானந்தன் தற்பொழுது ஆர்ஜென்ரினாவில், தனது குடும்பத்தினருடன் வசித்துவருவதுடன், அங்கே ஸ்பானிஸ் கலைஞர்களுக்கு குச்சிப்புடி வகுப்புகளையும் எடுத்து வருகின்றார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட நடனக் கல்லூரியே ஆர்ஜென்ரினாவின் முதலாவது மரபு ரீதியான. இந்திய நடனக் கல்லூாரி யான Center for Classical Dance ஆக விளங்குகின்றது. அவரால் ஐரோப்பிய நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் கலை முயற்சிகளை ரங்காவின் நடனக் கல்லூரியின் Anandarajam என்ற இணையத் தளத்தில் ஸ்பானிஸ் மொழியில் பார்வையிடலாம்.





**ரங்காவின் நடனக்குரு கீதாஞ்சலி வி. கே நல்லையாவும் குச்சிப்புடி நடனக் கலைஞர் வேம்பட்டி சின்னச்சத்தியம், நடனம் கோபாலகிருஸ்ணன் ஆகியோருடன் ரங்கமணி**



**இந்திராணி வைத்தியசாலையின் திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்கள்**




நெடியகாட்டில் சிதைந்த நிலையில் இருக்கும்
சுமைதாங்கி



வல்வைக் கல்வி மன்றத்தில் இடம் பெற்ற கல்வி, விஞ்ஞானக்
கண்காட்சியில் பிரபல ஆசிரியர்கள் R.L.தேவராஜாவும்
R.சக்திவடிவேல் மாஸ்ரரும்



மாடுகளின் மூலம் இயக்கப்படும் சுத்திர கிணறு



பறை வாத்தியங்களுடன் அம்மன் அழைத்துவரப்படுதல்



நீச்சு வீரர் மு. நவரத்தினசாமி



சிற்ப வேலையுடனான
தலைவாசல் வீடு



K. N. சோதிசிவமும்
சுந்தரம் டிவகலாலாவும்




அவுஸ்திரேலியாவில் வெளியிடப்பட்ட
புலவர் வைத்திலிங்கத்தின் முத்திரை



நவீன மயப்படுத்தப்பட்டு இன்றும் ஓடும்
கவிஞரின் கார்


## உயிர் காக்கும் இந்திராணி வைத்தியசாலை

வல்வெட்டித்துறை மக்கள் பட்ட அவலத்தைத் தீர்க்கும் உயரிய நோக்கில் முகாந்திரம் அப்புக்குட்டியாபிள்ளை அவர்களினால், ஊறணியில் ஆரம்பிக்கப்பட்ட வைத்தியாசாலைக்கான அடிக்கல், இலங்கையின் தேசாதிபதியாக இருந்த சேர் கென்றி மேசன் மூர் என்பவரால் 1945.05.30 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு, 1947 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி "இந்திராணி வைத்தியசாலை" எனப் பெயரிடப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறான ஒரு சேவையை வழங்கியதற்காக அபபோதைய பிரித்தானிய அரசு இவருக்கு "முகாந்திரம்" என்ற உயர்ந்த பட்ட்ததை வழங்கிக் கௌரவித்திருந்தது.

1975 ஆம் ஆண்டு பெண்களுக்கான சிகிச்சைக் கூடங்கள் இல்லாத குறையைப் போக்கும் வகையில் பிரபல தொழில் அதிபரும் சமுக சேவையாளருமான திரு. அ. சி. விஸ்ணுசந்தரம் அவர்கள் தனது தாய் தந்தையரான சிற்றம்பலம் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் நினைவாக இரண்டு மாடிக் கட்டிடத்தைக் கொண்ட பிரசவ விடுதி ஒன்றையும் அமைத்துக் கொடுத்தார்.

1989 ஆம் ஆண்டு போர்க்காலச் சூழலில் தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சுக்கள் நிகழ்த்தப்பட்ட போது, பொது மக்களுக்குப் பாதுகாப்பான முறையில் சிகிச்சைகளையும், அவசர சத்திர சிகிசசைகளையும் மேற்கொள்வதற்காக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழவினரின் முயற்சியினால் நிலக் கீழ் சத்திர சிகிச்சை மறறும் நோயாளர் விடுதிகள் என்பன அமைக்கப்பட்டன. ஆனால் அவை இன்று பயன்படுத்தப்படாமலேயே அழிந்து போகும் நிலையில் காணப்படுகின்றன.





முகாந்திரம் அப்புக்குட்டியா பிள்ளையும், அ. சி. விஸ்ணு சுந்தரம் அவர்களும்

# ஈழத் தமிழர்களின் அரசியல் வாழ்வில் வல்வையின் பங்கு

- **வல்வையில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்துவைத்த எதிர்க்கட்சித்தலைவர் - அ. அமிர்தலிங்கம்**

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முதல் தடவையாக வல்வெட்டித்துறையில் ஒற்றுமைப்படுத்தப்பட்டு "தமிழர் விடுதலைக் கூட்டணியாக" தோற்றம் பெற்று வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு "தமிழர் பிரச்சினைக்கு தமிழீழமே தீர்வு" என்பதனை தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்து, உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டதால், 99 வீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று முதல் தடவையாக இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக வந்தமை இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியமான ஒரு காலகட்டமாகும்.

1977 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் வகையில் வடக்கு கிழக்கில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வெற்றி பெற்ற இருபத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும், கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்ட வெற்றிவிழா வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது. அதில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமாக தெரிவு செய்யப்பட்ட அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் பேசும் பொழுது,

"இன்று நாங்கள் பெற்ற வெற்றி மக்களின் வெற்றி... தமிழீழத்திற்கான நீங்கள் தந்த ஆணை... அந்த ஆணையில் இருந்து நாங்கள் ஒரு போதும் விலகிச் செல்ல மாட்டோம்... சாத்வீகமான முறையில் இதனை அடைவது என்பது முடியாத காரியம்... மகாத்மா காந்தியின் சாத்வீகமான போராட்டத்தில் சுபாஸ் சந்திரபோஸ் எவ்வாறு போராடினாரோ அதே போன்ற அணுகு முறையை நாங்களும் கைக்கொள்ள வேண்டும்.... அதற்கான 'சரக்கு' இங்கே வல்வெட்டித்துறையில் தான் இருக்கின்றது... உங்களில் இருந்து 5000 இளைஞர்கள் ஆயுதம் எந்தத் தயாராகுவீர்கள் ஆனால் நாங்கள் எமது பதவிக் காலத்திற்குள் தமிழீழத்தைப் பெற்றுத் தருவோம்..."

என்று அன்றைய வெற்றி விழாக் கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் அ. அமிர்த லிங்கம் அவர்கள் பேசிய உணர்ச்சியூட்டும் வீரவசனங்களைக்

கேட்டதும், அந்தக் கடற்கரையில் கூடியிருந்த மக்களிடம் இருந்து எழுந்த கரகோசமும், மகிழ்ச்சியும் வானைப் பிளந்தததை அன்று அங்கே இருந்தவர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.... அவரை அடுத்து உரையாற்றிய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்,

"நாங்கள் சிங்கள பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கப் போவதில்லை... எதிரிக்கட்சியாகவே இருக்கப் போகின்றோம்... இன்றைய இளைஞர்கள் எங்களுடைய வழியைப் பின்பற்றினால், தமிழீழம் என்பது தூரத்தில் இல்லை..."

உணர்ச்சி மிக்க பாடல்களினால், தமிழ் மக்களின் நெஞ்சத்தில் இடம் பிடித்த ஒரு கவிஞர் என்ற வகையில் அவரது உரை இளைஞர்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது.. அவரது வீரமிக்க துணிச்சலான உரையைக் கேட்டதும், கம்பர்மலையைச் சேர்ந்த இரவீந்திரன் என்ற இளைஞன் திடீரென மேடையில் ஏறி, தான் வைத்திருந்த சிறிய வில்லுக் கத்தியினால், தனது விரலைக் கீறி, கவிஞர் காசி ஆனந்தனின் நெற்றியில் இரத்தத் திலகமிட்டு தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.... அன்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் வீரமிக்க உரைகளினால் தூண்டப்பட்ட அந்த இளைஞன் தான் பிற்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியமான ஒரு போராளியாகத் திகழ்ந்து, வீரச்சாவடைந்த "கப்டன் பண்டிதர்" ஆவர்..... ஆக தமிழ் இளைஞர்களைத் தூண்டி, ஆயுதம் ஏந்த வைத்து தனக்குக் கீழ் ஒரு "கூலிப்படையாக" வைத்திருக்க விரும்பிய அ. அமிர்தலிங்கம், அவர்கள் நினைத்தது ஒன்று நடந்ததோ வேறோன்றாக இருந்ததால், தமிழினம் அந்த நேரம் எந்த அன்னிய சக்திகளுக்கும் அடிமையாகாது இருந்தது... அந்த நேரம் வெற்றிக்களிப்பில் மிதந்த தமிழ் தலைவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளும், அவற்றிற்கான தீர்வுகளும், தமது கரங்களை விட்டுக் கைமாறும் என்பதை அப்போது நினைத்துப் பார்க்கவில்லை. ஆனால், தமிழ் உணர்வு மிக்க இளைஞர்களின் எதிர்பார்க்கைகள், அன்றைய தமிழ் தலைவர்களின் அபிலாசைகளில் இருந்தும் முற்றாகவே வேறுபட்டதாக இருந்ததால், இளைஞர்கள் அவர்களிடம் இருந்து விலகிச் செல்லத் தொடங்கினர்... அவர்களிடையே பிரபாகரன் அவர்களின் தலைமையில் ஒரு தனித்துவமான தலைமைதத்துவத்தைக் கொண்டதாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடமுன் வந்தமைக்கு, அன்று அ. அமிர்தலிங்கம் போன்ற தமிழ் தலைவர்களின் தூண்டுதலே காரணமாக இருந்தது என்பதுதான் யாதார்த்தம். (ஆதாரம் : "வல்வைப் புயல்" - வல்வை. ஆனந்தன்)

- **வல்வையில் இருந்து அகற்றப்பட்ட சுங்க அலுவலகம் - 1958**

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டம இலங்கைப் பாராளுமன்றத்தில் முன்னாள பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் சட்டமாக்கிய பொழுது, தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொழுது, அவர்கள் மீது பொலிசாரும், இராணுவத்தினரும், அவர்களால் அழைத்துவரப்பட்ட காடையர்களும் மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். அதனை அடுத்து 1958 இல் தென்னிலங்கையெங்கும் தமிழர்களுக்கெதிரான இனக்கலவரம் மூண்டது. அப்பொழுது பலநூற்றுக் கணக்கான தமிழர்கள் கொல்லப் பட்டதுடன் அவர்களின் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. பல பெண்கள் சிங்களக் காடையர்களினால் மான பங்கப்படுத்தப்பட்டனர். இந்த நிலையில் சிங்களக் காடையர்களின் தாக்குதல்களில் இருந்தும் தப்பிய தமிழர்கள் உடுத்த உடைகளுடன், கப்பல்கள் மூலம் பருத்தித்துறையில் அகதிகளான நிலையில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். இதனால்

ஆத்திரமடைந்த இளைஞர்கள் வல்வெட்டித் துறையில் இருந்த சுங்கக் கட்டடத்தை இடித்துத் தரைமட்டமாக்கியதுடன், தொலைத் தொடர்புக் கோபுரம், மற்றும் புத்தவிகாரை என்பவற்றையும் தகர்த்தனர். சுங்கத் திணைக்களம் கள்ளக்கடத்தல் மற்றும், சட்டவிரோத குடிவரவு ஆகியவற் றைத் தடுப்பதாகக் கூறியபடியே வல்வெட்டித் துறையில் சுங்கக் கட்டிடத்தை அமைத்தனர். அந்த நிலத்தில் வேரூன்றிய பின்னர், அந்த நிலத்தையும் அதனுடன் செல்லும் நீண்ட கடல் பிரதேசத்மதையும் தமது ஆதனம் என்று உறுதி யை எழுதுவித்து உரிமை கொண்டாடினர்.

அந்தச்சுங்கக்கட்டிடம் இருந்த நிலத்துடன் கடற்கரையோரமாக வீதியை அமைப்பதற்கான நிதியை 2013 ஆம் ஆண்டில் ஒதுக்கி வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பொழுது,

இன்று மீண்டும் அந்த நிலப்பகுதி தமக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடிக் கொண்டு, சுங்க அலுவலகத்தை அமைப்பதற்குச் சுங்கத் திணைக்களம் முயற்சிகளை மேற் கொண்டுள்ளபொழுது, அப்போதைய வல்வெட்டித்துறை நகரபிதாவினால், அந்த ஆதனத்தை நகரசபைக்கே வழங்க வேண்டு மென்றும்தற்போதைய சூழ்நிலையில்வல்வெட் டித்துறையில் சுங்கம் அமைக்கவேண்டிய தேவை இல்லை என்றும் தெரிவித்து ஒரு கடிதத்தை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும்,ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னரே சுங்கத் திணைக்களம் இருந்த இடத்துடன் அகன்ற வீதி அமைக்கப் பட்டுள்ளதுடன், ரேவடி இளைஞர் விளையாட் டுக் கழகத்தினரால் அழகிய சிறுவர் பூங்காவும், தூய்மையான கடற்கரையும் உருவாக்கப்பட்டுள்ளதால், தினமும் பல நூற் றுக் கணக்கான மக்கள் தமது பொழுது போக் குத் தலமாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில்

ஆழிக்குமரன் ஆனந்தன் நினைவாக அவரது மனைவியின் குடும்பத்தினரின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீரா அவர்கள் தமது குடும்பத்தினரின் சார்பில் தமது குடும்ப நிதியில் இருந்து 25 மில்லியன் ரூபா பெறுமதியில் நீச்சல் தடாகம கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்ட போது வல்வெட்டித்துறைக்கு வருகை தந்து நகராட்சி மன்றத்தின் ஆலோசனையைப் பெற்றுச் சென்றார். அவர் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுப் பதவியை வகிப்பதால், தனது செலவாக்கைப் பயன்படுத்தி, அவர் எடுத்த முயற்சியின் காரணமாகவே நீச்சல் தடாகத்தையும், ஆனந்தனின் சிலையையும் அமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலேயே அதற்காக 25 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை ஒரு முக்கியமான அம்சமாகும். இத்தகைய ஒரு சிறந்த முடிவை எடுத்தமைக்காக வல்வெட்டித்துறைச் சமுகம் நன்றிக் கடன் பட்டிருக்கின்றது.

- **தமிழரசுக்கட்சியின் சத்தியாக்கிரகத்தில், வல்வையரின் பங்கு-1961**

1961 ஆம் ஆண்டு தந்தை செல்வா அவர்களின் தலைமையில் இடம் பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு, அரசுக்குத் தமது சாத்வீகமான எதிர்ப்பைக் காட்டியிருந்தனர். அந்தப் போராட்டத்தில் வல்வெட்டித்துறையில் இருந்தும் நூற்றுக் கணக்கானவர்கள் பங்குபற்றியிருந்து தமது தமிழின உணர்வை வெளிக்காட்டியிருந்தனர். இதில் குறிப் பாக வல்வெட்டித்துறையில் இருந்து சென்ற நூற்றுக்கும் மேற்பட்டவர்களுள் பல பெண்களும, வயோதிபர்களும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது. அதேவேளை வல்வெட்டித்துறையில் தந்தை செல்வாவின் அகிம்சைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வல்வெட்டித் துறையிலும் ஒரு பேரணி நடத் தப்பட்டது.






*1961இல் சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட வல்வையர் - முன்வரிசையில் க. துரைரத்தினம்*

- **வரலாற்றில் பெயர் பதித்து வெஞ்சமர் கண்ட தீருவில் மண்:**

கல்லடி வேலுப்பிள்ளை அவர்களினால் எழுதப்பட்ட தமிழரின் வரலாற்று நூலாகிய "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" என்ற நூலில் பறங்கியர்கள் என அழைக்கப்பட்ட போர்த்துக்கேயர், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய காலப்பகுதியில், சுமார் 400 வருடங்களுக்கு முன்னர், வல்வெட்டித் பாளையமிட்டிருக்கிறது என அறிந்து.." என்று தொடர்ந்து செல்லும் வாசகங்களில் இடம் பெறும் குளம் தான் தற்போதைய தீருவில் குளமாகும். அந்தக் காலப்பகுதியில் தீருவில் பகுதி பனங்கூடல்களால் நிறைந்த இடமாகவும், பின்னர் குளத்தை அண்டிய பகுதியில் இருந்ததால், அவை அழிக்கப்பட்டு, வயல்களாகவும் மாற்றப் பட்டு நெல்பயிரிடப்பட்டு வந்தன. இவை தொடர்பான தகவல்கள் "யாழ்ப்பாண

> ன் கடைசிக்கலகம்,— தஞ்சாவூர் நாயக்கன் யாழ்ப்
> சச்செயிக்க இன்னுமொரு கடைசிப்பிரயத்தனஞ் செ
> ன். அவனனுப்பிய சேனை பருத்தித்துறையில் இற
> றதெனக் கேள்வியுற்ற ஒலிவேறா, தெமோற்றா எ
> ஒருபறங்கியர் சேனையை அங்கனுப்பினான். ஆயி
> வூர்ச் சேனை வல்லுவெட்டித்துறைக் கரையிலிறங்கி
> கரையிலுள்ள பனந்தோப்பிற் பாளையமிட்டிருக்கிற
> அறிந்து தெமோற்றா அங்கு இரகசியமாய்ச்சென்று ப
> மூன்றாஞ்சாமமாகும்போது போர்ப்பறை யறைந்து
> டத் தமிழர் திகிலடிபட்டுக் குதிரைகளிலேறி ஓடிப்
> வாரும், திசைதப்பி அலைவோருமாய்க் கலைவுறப் பற
> பின்தொடர்ந்து 1200 பேரைச் சிரங்கொய்தனர். விழு
> வர்களுள் யாழ்ப்பாணச் சிங்காசனம் வகிக்கும் நோ
> வந்திருந்தவனை சேனாநாயகமும் ஒருவனானான். இர
> நாட்களுள் தேமோற்றா கம்பங்களிற் குற்றிய பகைவர் சி
> ளோடும், பறித்தெடுத்தவாள், அம்பு வில், துப்பாக்கி யா
> வற்றோடும் தஞ்சாவூரினின்றும் பரிவாரமாய் வந்த ஸ்திரி
> , குதிரை, நாய், குரங்கு, கிளிப்பிள்ளை முதலியனவோடும்,
> ரான கைதிகளோடும் நல்லூரில் வந்துசேர்ந்தான். சிரங்க
> அடக்கஞ்செய்யவும் கைதிகள் அக்கால வழக்கப்படி எலத்
> ற்கூறிவிற்கவும்பட்டனர்.

துறையில் உள்ள தீருவில் பகுதியில் முகாமிட்டு தங்கியிருந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த நூலில் இடம் பெற்ற "வல்வெட்டித்துறைக் கரையிலிறங்கி ஒரு குளக் கரையிலுள்ள பனந்தோப்பில் வைபவ கௌமுதி"யின் 67 ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் குறிப்பிடப்பட்ட "ஒலிவேறா" என்பவன், போர்த்துக்கேயப் படைத் தளபதி என்பது குறிப்பிடத்தக்கது.

**இராணுவத்தினருக்கு எதிரான வல்வையரின் முதல் எதிர்ப்பு - 1961**

1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் நின்ற சில பொதுமக்கள் மீது துப்பாக்கிகளினாலும், சப்பாத்துக் கால்களாலும் மிலேச்சத்தனமாகத் தாக்கிய பொழுது, அவர்களது மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடி யாத நிலையில் அங்கே நின்ற 5 கடற் றொழி லாளர்களும் தம்மிடம் இருந்த கத்திகள், பொல்லுகளால் இராணுவத்தினரைத் தாக்கியதில் ஒரு இராணுவச்சிப்பாய் கொல்லப் பட, மற்றையவன் படுகாயத்திற்குட்பட, மற்றைய சிப்பாய் அலறி அடித்துக் கொண்டு தப்பி ஓடினான். அவர்களின் துப்பாக்கிகளைப் பறித்து கடலில் வீசிவிட்டனர். கொடுரம் விளைத்த இராணுவத்தினருக்கு எதிராக வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப் பட்ட வீரமிக்க முதலாவது இந்தத் தாக்கு தலை மேற்கொண்டவர்கள் வல்வை ஆதிகோயிலடியைச் சேர்ந்த பஞ்சலிங்கம், சோதிலிங்கம், அழகையா, இராமசாமி சகோதரர்கள் ஆகியோராவர். தமிழினத்தை ஆகிகரமிப்புச் செய்து, அடக்கி அடிமையாக வைத்திருக்க விரும்பும் பேரின வாதிகளுக் கெதிரான முதலாவது தாக்குதலை ஆரம்பித்து வைத்தவர்கள் வல்வெட்டித்துறை ஆதிகோயி லடி மக்களே என்பதை இன்றைய வரலா றுகள் மறைக்கப்பட்டாலும், அநீதிக்கும், துரோகத் தனத்திற்கும் எதிராகக் கிளர்ந்தெழும் அந்த வீரத்தை அவர்களிடம் இன்றும் காணலாம்.

- **பொலிசாருக்கு எதிரான முதலாவது துப்பாக்கிப் பிரயோகமும், வ.இ.சிவஞான சுந்தரம் படுகொலையும்:**

1967ம் ஆண்டு சித்திரைமாதம் 8ந்திகதி சனிக்கிழமை வரப்போகும் புதுவருடப் பிறப்பிற்கு வல்வெட்டித்துறைமண் தயாராகிக்கொண்டிருந்தது. அதேநேரம் வல்வை மக்களின் குல தெய்வமான அருள்மிகு முத்துமாரியம்மனின் பக்திபூர்வமான பதினைந்துநாள் இரவும்பகலுமான உற்சவநாட் களும் கோலாகலமாக கொண்டாடப்படும் இந்திரவிழாவும் நெருங்கிக்கொண்டிருந்தன. ஆனாலும் அப்பேதைய வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த பத்திரானாவும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த சார்ஜன்ற் இராஜரத்தினம் மற்றும் திசநாயக்கா உட்பட ஏனைய பொலிசாரின் தாக்குதல்கள் தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக, வல்வெட்டித்துறை நகரத்தின் மத்தியில் விளங்கிய சனசமூக நிலையத்தின் முன்றலில் அன்றைய சனசமூகநிலையத்தின் தலைவராக விளங்கிய சண்முகம்பிள்ளை ஞானமூர்த்தி அப்பாவின்தலைமயில் இயங்கிய நிர்வாகசபையினரால் "தொடரும் பொலிஸ் இராணுவ அட்டூழியங்களை நிறுத்த பகிரங்க ஆலோசனைக்கூட்டம்"

என பொதுமக்களிற்கான அறிவித்தல் கொடுக்கப்பட்டுப் பிற்பகல், பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. ஊரில் வாழும் ஆண்களில் கணிசமான பகுதியினர் அக்கூட்டத்தில் சமூகம் அளித்திருந்தனர். எனினும் போக்குவரத்திற்கு தடங்கலின்றி மக்கள் உள்ளே போகவும் வரவும் வழிவிட்டு அடைக்கப்பட்ட வாசிகசாலை முன்றலிற்கு உள்ளேயே அவர்கள் கூடியிருந்தனர். ஒருசிலர் மைதானத்தை சுற்றிய வீதியோரங்களில் ஆங்காங்கே நின்று கூட்டத்தை பார்த்துக்கொண்டிருந்தனர். கூட்டத்தில் பலவித கருத்துக்களும் பகிரப்பட் டுக்கொண்டிருந்தன.

மேற்படி பொதுக்கூட்டம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கையில் ஊரின் இன்னோர்புறத்தே முத்துமாரியம்மனின் திருவிழாவிற்கு கட்டியம்கூறும் காத்த வராயரின் ஊர்வல மும் நடந்து கொண்டிருந்தது. இதனால் கூட்டத்திற்கு சமூகமளிக்காதோர் மங்கலவிளக்குகளுடன் வீட்டுவாசல்களில் காத்தவராயரின் வருகைக்காக காத்திருந்தனர். சனசமூக நிலையக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, இரண்டு, தடவைகள் கூட்டத்தில் கூடியிருந்த மக்களை ஊடறுத்து, ஜீப் வண்டியில் பொலிசார்

போய்க்கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கிருந்த இளைஞர்களிடையே, சலசலப்பு ஏற்பட்டது. இந்நிலையில் மீண்டும் மூன்றாவது தடவையாக இராணுவத்தினர் மூன்று ஜீப்புகளிலும், வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்திரானாவின் தலைமையில் சுமார் ஐம்பதுக்கும் அதிகமான பொலிசார் இன்னொரு ஜீப்பிலுமாக கூட்டம் நடந்து கொண்டிருந்த வாசிகசாலை மைதானத்தை சுற்றி வளைத்துக் கொண்டனர். எவ்வித முன்னறிவித்தலுமின்றி படைகளால் சுற்றிவளைக்கப்பட்ட மக்கள் படைகளின் குண்டாந்தடித் தாக்குதலுக்கு இலக்காகினர். மைதானத்தின் மூன்றுவாசல்களையும் வாசிகசாலையின் வடக்குப் புறவாசலையும் மக்கள் தப்பித்து செல்லாதவாறு தடைசெய்த படி படையினர் தமது தாக்குதலை தொடங்கி யிருந்தனர்.

அதுவரை அமைதியாக உறங்கிக்கிடந்த வல்வெட்டித்துறை மண்ணில் புதிய போர்க்களம் ஒன்று திறக்கப்பட்டது. தனித் தனியாக மக்கள் கூட்டத்தினை குண்டாந்தடி கொண்டு தாக்கிய படையினர் வெருண்டோடி குழுக்களாக சேர்ந்து கொண்டனர். அதேபோல் வெட்ட வெளியில் நின்று வெறும் கைகளுடன் மோதவாரம்பித்த மக்களும் பாதுகாப்பிடம் தேடியபடி, ஒழித்திருந்து கொண்டே கற்களினாலும் போத்தல்களினாலும் தொடர்ந்து தாக்கினார்கள். சிலர் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக சனசமூக நிலையத்திற்குள் பின்வாங்கினர். காயம் பட்டவர்கள் கைமுறிந்தவர்கள் கால் உடைந்தவர்கள் தலைபிளந்தவர்கள் என இரு புறமும் இரத்தம் வழிந்தோடியது. பூனை என பதுங்குவார்கள் என எதிர்பார்த்த மக்கள் புலியாகமாறி பழிவாங்க பாய்ந்தபோது விழிபிதுங்கிய படையினர்வெருண்டோடத்தலைப்பட்டனர். தம்மை பாதுகாத்துக்கொள்ள துப்பாக்கிகளின் துணையை நாடினர். இராணுவத்தினரோ தாம் ஏறிவந்த ஜீப்பொன்றையும் கைவிட்டுவிட்டு களத்தினை விட்டு ஓடிமறைந்தனர். நாலாபுறமிருந்தும் பறந்துவரும் போத்தல்களையும் கற்களையும் எதிர்கொள்ள முடியாத பத்திரானாவின் தலைமையில் வந்த பொலிசார் சனசமூகநிலையத்திற்குள் ஓடிஒளிந்து கொண்டனர்.

சந்தியிலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு தப்பியோடமுடியாத நிலையில் இடையிடையே வெளியேவந்து சகட்டு மேனிக்கு சுட ஆரம்பித்தனர். இறுதியில் வல்வெட்டித்துறை சந்தியின் நடுநாயகமாக யாழ்ப்பாணவீதியோரம் நின்ற அரசமரத் தின்கீழ் இராமசாமிப்பிள்ளை சிவஞானசுந்தரம் என அழைக்கப்படும் "ஞானம்", சனசமூக நிலையக்கட்டிடத்தின் முன்னால் துப்பாக்கியுடன் காத்திருந்த திசநாயக்கா என்ற பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டில் பலியாகி விழுகின்றார். தனது வியாபாரக்கடமைகளை முடித்துவிட்டு யாழ்ப்பாணவீதியால் வீடு திரும்பிக் கொண்டிருந்த இவரை வானைவிட்டு இறங்கி முன்னால் நடந்து வரக்கூறிய இன்ஸ்பெக்டர் பத்திரானாவின் கட்டளைப்படி, திசநாயக்கா என்ற பொலிஸ் ஞானத்தை சுட்டு வீழ்த்தினார்.

ஆனால்1967ஆம்ஆண்டுஏப்ரல்மாதம்08ஆம் திகதி அன்று நடந்த அரசபடைகளினுடனான மோதலும் சிவஞானசுந்தரத்தின் படுகொலையும் அதனைத்தொடர்ந்து குற்றவாளிகள் தப்பிக்கொண்டவிதமும் வல்வெட்டித்துறை இளைஞர்களிடையே அதிருப்தியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது. அன்று, வல்வெட்டித்துறைச் சந்தியில் பொலிசாரினால் கொல்லப்பட்ட சிவஞானசுந்தரம் அவர்களுடைய நினைவாக எழுந்து நிற்கும் "சிவஞானசுந்தரம் ஞாபகார்த்த மண்டபம்" வல்வையின் அன்றைய அந்தச் சோக கீதத்தை இன்றும் மீட்டிக் கொண்டே இருக்கின்றது. 1967 ஆம் ஆண்டு வல்வையில் நிகழ்ந்த அந்தத் துன்பியல் வரலாற்றை நினைவு கூரும் வகையில் "அமரர் வ.இ சிவஞானசுந்தரம் ஞாபகார்த்த பேருந்து தரிப்பிடம்" இருந்தபோதும், அதன் முக்கியத்துவத்தையும்,


வாழ்வியல் ஆதாரத்தையும் இழக்கச் செய்யும் வகையில், மேலதிகமாக இரண்டாவது பேருந்து தரிப்பிடத்தையும், அமைத்தமை வல்வை மக்களிடையே அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது. வயோதிபர்கள், மாற்றுத் திறனாளிகளால் மேல்மாடியில் ஏறிச்சென்று, நூலகத்தைப பயன்படுத்தமுடியாத அளவுக்கு சனசமுகநிலையக்கட்டிடம் அமைக்கப்பட்டுப் பயன்படாத ஒரு முதுசொமாகப் போய் விட்டது.

- **வல்வைப் பெண்களை அவமதித்த சிறுகதைக்கு எதிர்ப்புக் காட்டிய இளைஞர்கள்:**

வல்வெட்டித்துறையின் பண்பாட்டைச் சிதைக்கும் வகையிலும், இங்கு தன்மானத்துடன் வாழ்ந்து வருகின்ற எமது பெண்களின் கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையிலும், தனது தனிப்பட்ட குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக வல்வெட்டித்துறையில் வாழ்ந்து வருகின்ற பெண்களை ஒட்டுமொத்தமாகவே இழிவு படுத்தும் வகையில் திரு. அங்கையன் கைலாயநாதன் என்பவரால் 1972 ஆம் ஆண்டில், வீரகேசரி வார வெளியீட்டில் "கடல்காற்று" என்ற ஒரு சிறுகதை வெளியிடப்பட்டபோது, கொதித்தெழுந்த வல்வையின் இளைஞர்கள், மறுநாள் திங்கட்கிழமை வல்வெட் டித்துறை, பொலிகண்டி, தொண்டைமானாறு பகுதிகளுக்கு விநியோகம் செய்வதற்காகக் கொண்டுவந்த, வீரகேசரியின் நூற்றுக்கணக்கான பிரதிகளைப் பறித்தெடுத்து தமது அதிருப்தியைக் காட்டும் வகையில் சந்தியில் குவித்துத் தீமூட்டினார்கள். அந்தச் சம்பவத்திற்கு வீரகேசரி, வருத்தம் தெரிவிக்கும் வகையில், செவ்வாய்க்கிழமை வெளியாகிய தினசரியில் மன்னிப்புக் கோரி, தனது பத்திரிகாதர்மத்தை நிலைநாட்டியிருந்தது. அதற்கு மேலும் இன்னும் ஒரு படி சென்று, வல்வெட்டித்துறையின் சிறப்பையும், பண்பாட்டையும் எடுத்துக் காட்டும் வகையிலும், கப்பலோட்டிய பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் வகையிலும், சுவடிகள் திணைக்களத்தில் பணியாற்றி வந்த க.நவசோதி அவர்களால் வீரகேசரி வாரவெளியீட்டில் "செந்தமிழ் பாடி வளம் கொளிக்கும் வல்வை" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையைப் பிரசுரித்து தனது தவறுக்கான பிராயச்சித்தத்தைத் தேடிக்கொண்டது. பின்னர்அந்தக் கட்டுரை சிறிய கையேடாகவும் பிரசுரிக்கப்பட்டது.

- **பிரிந்து நின்ற தமிழர் கட்சிகளை ஒன்று படுத்திய வல்வையின் விவேகம் -1971**


தமிழ் இனத்தின் தலைவர்கள் என்று கூறி வெவ்வேறு கோணங்களில் சிதறுண்டு சுயநல நோக்கில், தமது அரசியலை நடத்தி வந்த தமிழ்க் கட்சிகளை எப்படியோ, ஒன்று படுத்தி "தமிழர் கூட்டணி" என்ற ஒரே கட்சியாகத் தோற்றுவித்த நாள் 1971 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி வல்வெட்டித்துறை வரலாற்றின் மறக்க முடியாத நாள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒன்றையொன்று தாக்குவதிலும் முரண்பட்டுக் கொண்டும் இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் சுயாட்சிக் கழகம், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி ஆகிய நான்கு கட்சியின் தலைவர்களை ஒரே இடத்தில் கூடவைத்து ஒன்றுபடுத்துவதற்காக முன்னாள் வல்வெட்டித்துறை நகரபிதா அமரர் ச.ஞானமூர்த்தி அவர்களின் தலைமையில், திரு. வேற்பிள்ளை, திரு. அ. சபாரத்தினம் ஆகியோரால் இந்த ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப் பட்டது. தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினரால வரவேற்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. அவர்களைக் கீழே உள்ள புகைப்படத்தில் பின்வரிசையில் காணலாம். ஆனால் அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இன்றைய சில அரசியல் தலைவர்களால், இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகின்றமை குறித்து மக்களிடையே கடும் அதிருப்தி நிலவுகின்றது.





தமிழ் தலைவர்கள் ஒன்று சேர்ந்து வல்வெட்டித்துறையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியபோது,ச.காந.திதாசன்,ந.அனந்தராஜ்,ந.நகுலசிகாமணி,த.சுந்தரலிங்கம் உட்பட வல்வையின் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியினர் சிலரும் முக்கிய பங்காற்றியிருந்தனர்

- **நான்காவது உலகத்தமிழாரய்ச்சி மகாநாட்டில் வல்வையின் பங்கு - 1974**

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் 4வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது, அப்பொழுது யாழ்ப்பாண மாநகரசபையின் மேயராக இருந்த திரு.அல்பிரெட் துரையப்பா அதற்கு எதிராக இருந்தபோதும் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியினால், பலத்த எதிர்ப்புக்களின் மத்தியிலும் மகாநாடு திட்டமிட்டபடி ஜனவரி மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமானது.



அதில் ஊர்திகளின் பவனியின் பொழுது யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதற்காக வல்வை இளைஞர்களால் அன்னபூரணி அம்மாள் என்ற இரட்டைப் பாய்மரக் கப்பலின் மாதிரி உரு ஒன்று மிக அழகாகவும் தத்ரூபமாகவும் கட்டப்பட்டது. இது, திரு. அப்பு மேத்திரியார் அவர்களால் உருவாக்கப்பட்டது. வல்வெட்டித்துறையில இருந்து அன்று அமெரிக்காவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட அன்னபூரணி அம்மாள் கப்பலின் அதே வடிவத்தில் அமைக்கப்பட்டது. அந்த மகாநாட்டின் நினைவாக வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விருந்துபசாரம் ஒன்றும் வல்வெட்டித்துறையில் ஒழுங்கு செய்யப்பட்டது,. இந்த நிகழ்வில் தொகுக்கப்பட்டு, வல்வை சனசமுக சேவா நிலையத்தினரால் “அன்னபூரணியின் அமெரிக்கப் பயணம்” என்ற சிறு கையேடு தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டு வெளிநாட்டுப பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. இவற்றினூடாக, எம்மவரின் விருந்தோம்பும் பண்பையும், எமது மக்களின்



சாதனைகளையும் வெளிநாட்டவர்களுக்கு எடுத்து விளக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகவும் இருந்தது.

இந்த நூலை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில், சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த அறிஞரும், தமிழ் மொழி இலக்கண ஆய்வாளருமான கார்ல் ஏ கெல்லர் என்பவர், தமிழிலேயே உரையாற்றியபொழுது, பின்வருமாறு குறிபபிட்டார்.

" வல்வெட்டித்துறை மக்கள் சிரித்த முகத்துடன் மக்களை வரவேற்கின்ற பண்பைக் காணும் பொழுது மகிழ்ச்சியாக இருக்கின்றது. அன்று கப்பல் கட்டித் துணிவுடன் பல நாடுகளுக்கும் சென்று புகழ்பரப்பிய மக்களின் ஊருக்கு வருகை தந்ததில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்"

- **வல்வையை வதைத்த லிபரேசன் ஒப்பரேசன் இராணுவ நடவடிக்கை -1986**

யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிரவாகக் கட்டுப்பாட்டிற்குள் இருந்த பொழுது, யாழ்ப்பாணத்தின் நிர்வாகம், நிதி நடவடிக் கைகள் மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணும் நீதி நிர்வாக நடவடிக்கைகள் என்பன, தமிழீழ விடுதலைப் புலிகளினாலேயே பரிபாலிக்கப்பட்டிருந்தன. அதனை மீண்டும் கைப்பற்றும் நோக்கில் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொண்டு 26.05.1986 இல் முப்படைகளின் துணையுடன், மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையே "ஒப்பரேசன் லிபரேசன்" என்ற இராணுவ நடவடிக்கையாகும். ஸ்ரீலங்கா படையினரின் இந்த இராணுவ நடடிக்கையின் பொழுது, 850 தமிழ் பொது மக்கள் கொல்லப்பட்டும் 56 இளைஞர்கள் கைது செய்யப்பட்டும், பின்னர் காணாமல் போயுமுள்ளனர். அப்பொழுது லலித் அத்துலத் முதலி பாதுகாப்பு அமைச சராக இருந்து இந்த பாரிய இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான அனுமதியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசாங்க்ததின் அடக்கு முறைக்கு மத்தியிலும், சளைக்காது நிமிர்ந்து நின்ற வீரம் வல்வெட்டித்துறைக்கே உரியதாகும். அந்த வரலாறுகள் எமது மண்ணுக்கே உரிய ஒரு முதுசொமாகும்.


- **இந்திய இராணுவத்தினரின் வல்வைப் படுகொலைகள் -1989**

இந்திய இராணுவத்தினரால் ஆகஸ்ற் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் வல்வெட் டித்துறையில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து விட்டு வல்வெட்டித்துறை மக்களை வெளியேற விடாது தடுத்து துப்பாக்கிகளால், சுட்டும், உயிரோடு எரித்தும், 74 அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்த நாள். இதிலும் பல நூற்றுக் கணக்கான வீடுகளும், கடைகளும் எரித்து அழிக்கப்பட்டன. வல்வெட்டித் துறையில் இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்த னமான தாக்குதல் தொடர்பான சத்தியக் கடதாசிகள், புகைப்படங்கள், வீடியோ ஒளிப்பதிவு நாடாக்கள் போன்ற பல்வேறு சான்றாதாரங்களுடன் தமிழகம் சென்ற பொழுது அதன் உண்மைத்தகவல்களை அங்கிருந்த அரசியல் தலைவர்களான ஜோர்ஜ் பெர்னான்டஸ், வை. கோபாலசாமி, நெடுமாறன், வீரமணி, கலைஞர் மு. கருணாநிதி ஆகியோரைச் சந்தித்து விளக்கியபொழுதுதான், தமது இராணுவத் தினர் இன்னொரு நாட்டின் மக்கள் மீது, மேற்கொண்ட அராஜகத்தை உணர்ந்து கொண்டனர். இந்திய இராணுவத்தை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான பல்வேறு பிரசார வேலைகளை முன்னெடுத் ததில், வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் செயற்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

வல்வெட்டித்துறையின் துயரம் நிறைந்த இந்த வரலாற்றில் இடம்பெற்ற. கொடுரமான சம்பவத் தை உலகுக்கு வெளிப்படுத்தவதற்காக முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. ஜோர்ஜ் பெர்னான்டஸ் அவர்களின் முன்னுரையுடன் தமிழில் "வல்வைப்படுகொலைகள்" என்ற பெயரிலும், ஆங்கிலத்தில் "India's Mylai" என்ற பெயரிலும் இரு பதிப்புக்களாக வெளியிடப்பட்ட பொழுது, சர்வதேச அரங்கில் மிகப் பெரும் தாக்கத்தையும், நெருக்கடிகளையும் இந்திய அரசுக்கு ஏற்படுத்தியது. இத்தகைய சோதனை மிகுந்த துயரம் நிறைந்த காலத்தில் மக்களுடன் வாழ வேண்டியவர்கள் இந்தியாவிற்கு ஓடிச் சென்று தலைமறைவாக இருந்து கொண்டு

விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான ஆலொசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் இந்திய அரசுக்கு வழங்கிக் கொண்டிருந்தனர்.

இந்த நூலின் இரண்டாவது பதிப்பு அளவில் சிறியதாகவும்,சிறந்த பதிப்பாகவும் பிரித்தானியாவில் வெளியிடப்பட்டமை யானது, இந்த நூலுக்கு அவர்கள் அளித்த முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது










**தமிழகத்திலும் பிரத்தானியாவிலும் வெளியிடப்பட்ட 1 ஆம் பதிப்பும், 2 ஆம் பதிப்பு நூல்கள்**

- **தீருவில் நினைவுத் தூபியும்,சிறுவர் பூங்காவும் - 1989**

"காற்றும் ஒரு கணம் பேச மறந்தது...
கடலும் ஒரு நொடி அமைதியாய்க் கிடந்தது
தேற்றுவார் இன்றியெம் தேசம் அழுதது..!
தீருவில் வெளியிலும் தேகங்கள் எரிந்தன..."

என்ற பிரபல தென்னிந்தியப் பாடகர் ரி.எல்.மகாராஜனின் அந்தப் பாடல் வரிகளை காற்றின் அலைகளினூடாகக் கேட்கும் பொழுது,எங்களுடைய உடலெல்லாம் ஒரு கணம் புல்லரிக்கும். தீருவிலில் அமைந்துள்ள "வயலூர் முருகன்" கோயிலுடன் தெற்குப் புறமாக உள்ள வயல்வெளியும் சிறிது துாரத்தில் வானளாவ எழுந்து நின்ற நினைவுத்துாபியும்,அதற்கு எதிர்ப்புறமாக தீருவில் குளத்துடன், "கிட்டு" நினைவாகக் கட்டப்பட்டிருந்த கப்பலும், கம்பீரமாக எழுந்து நின்று பார்ப்பதற்கே மிக அழகாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தது...

1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்திக்கும்,ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வுக்கும் இடையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின், "கடற்புறா" என்ற படகில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளான குமரப்பா,புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு போராளிகள், பயணம் செய்து கொண்டிருந்த பொழுது,இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவத் தலைமையகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.அங்கு,தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவுக்கமைய கொழும்புக்குக் கொண்டு செல்ல முயற்சி எடுக்கப்பட்ட பொழுதே, சயனைற் அருந்தி தமது உயிரைத் தியாகம் செய்து கொண்டனர். அவர்களது உடல்கள் ஒரே சிதையில் வைத்து, தீருவிலில் தகனம் செய்யப்பட்டதால்,அந்த இடத்தில் அவர்களது நினைவாக ஒரு தூபி அமைக்கவேண்டுமென்று வல்வைப் பிரஜைகள் குழுவினரும; குடும்பத்தினரும் மற்றும் பொதுமக்களும் விரும்பிச் செயற்பட்டதால், இப் பன்னிரு போரளிகளுக்கும் நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கான இடத்தை, வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் ஒதுக்கி அனுமதியும் வழங்கியதைத் தொடர்ந்து, அப் பன்னிரு போராளிகளின்

நினைவாக வடமராட்சிப் பிரதேச மக்களின் பங்களிப்புடன் இந்த நினைவுச் சின்னமும், மிக அழகான பூங்காவும் அமைக்கப்பட்டன.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குப் பூங்கா அமைப்பதற்குத் தேவையான ஆரம்ப நிதியாக சுமார் 50 மில்லியன் ரூபா, அப்போது, பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளராக இருந்த சுந்தரம் டிவகலாலாவினால் ஒதுக்கப்பட்டிருந்தது.

அந்த அழகிய பிரமாண்டமான தோற்றத்தைக் கொண்ட நினைவுச் சின்னம், புல்டோசர் கொண்டு இடித்து விழுத்தப்பட் டதால், இன்று அவை இருந்த இடம் தெரியமலேயே போய்விட்டன.

- **போராளிகள் சிலைகள்-1989**

தீருவிலில் இருந்த போராளிகள் சிலைகள், மலேசியாவின் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் சிலைகளைப் போன்ற அமைப்பில், முருகன் கோயிலின் நுழைவாசல் பகுதியில் அழகாக வடிவமைக்கப்பட்ட "போராளிகள் சிலைகளும் கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. இந்தப் போராளிகள் சிலையை அமைப்பதற்கு முன்னர் மலேசியாவில் உள்ள போர் நினைவுச் சிலைகளைக் (War Memoriyal statues) கொண்ட புகைப்படம் கையளிக்கப்பட்டு,"இது போன்ற அமைப்பில் எங்களுடைய பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, போராளிகளின் சிலைத் தொகுதியை வடிவமைக்குமாறு விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினரினதும், பொதுமக்களின் பங்களிப்பினதும் முயற்சியினால், இலங்கையின் மிகச்சிறந்த கலைஞரான, 'ரமணி' அவர்களினால் வடிவமைக்கப்பட்டது. இது திறந்து வைக்கப்பட்ட பின்னர், வெளியிடங்களில் இருந்தும் கூடப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டுச் சென்றமையும் மறக்கமுடியாத ஒன்றாகும்.

இப் பூங்கா வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொறுப்பில் இருந்ததுடன், அன்று தொடக்கம் பொது மக்களின் பாவனையிலேயே இருந்தும் வந்தது. விடுதலைப் போராட்டத்தில், ஆகுதியாகிய பல்லாயிரக்கணக்கான போராளிகள் நினைவாக தீருவிலில், மிகவும் தத்ரூபமாக அமைக்கப்பட்ட போராளிகள் சிலைத் தொகுதியும், 1990 ஆம் ஆண்டு, ஸ்ரீலங்கா இராணுவத்தினரலால் உடைத்துத் தகர்க்கப்பட்டது. அன்று புனிதம் நிறைந்த ஒரு சுற்றுலாத் தலமாகவும் விளங்கிய தீருவில் இன்று வெறும் கட்டாந்தரையாகக் காட்சி அளிக்கின்றது.

இந்த நிலையில் கடந்த பல வருடங்களாக எவராலும் கவனிக்கப்படாது கைவிடப்பட்ட நிலையில் இருந்த அந்தப் புனிதமான மண்ணை காவல் துறையினர் சுவீகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்த நிலையில் அதனைப் பூங்காவாக நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டு அதற்குரிய காணிகளை நகர சபைக்குச் சொந்தமாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது திரு. இ. சிவகுகதாசன், திரு. தேவசிகாமணி ஆகியோரை அணுகிய பொழுது,



*மலேசியாவில் உள்ள போர் நினைவுச்சி வைப்பு*



அவர்களாகவே மனமுவந்து தனது காணிகளை அன்பளிப்புச் செய்தனர், சிவன் கோயில் ஆதினகர்த்தர்களிடம் இருந்தும் நீண்டகாலக் குத்தகை அடிப்படையிலும் நிலத்தைப் பெற்றுக் கொண்டதால், 27 பரப்பு ஆதனம் நகர சபைக்கே சொந்தமாக்கப்பட்டது. அதே வேளை 1999 ஆம் ஆண்டு நினைவுத் தூபி அமைக்கும் பணி ஆரம்பித்ததும் சிலரது காணிக்கான பணம் பிரஜைகள் குழுவினரால் வழங்கப்பட்டது. ஆனால் அது உறுதியாக எழுதப்படாததால், அவர்களிடம் சென்று அதற்குரிய ஆதனத்தை வழங்குமாறு கேட்டபொழுது, பூங்காவுக்கான தமது நிலங்களை வழங்க மறுத்துவிட்டனர். ஆயினும் நகர சபைக்குக் கிடைத்த காணியைக் கொண்டு பூங்கா அமைப்பதற்கான ஆயத்த வேலைகளை மேற்கொண்டபொழுது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நகரபிதா எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் அந்த முயற்சிக்கு எதிராகத் தடை உத்தரவை விதிக்குமாறு பருத்தித்துறை நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். தானாடா விட்டாலும் தன் தசை ஆடும் என்பது போல் அன்று நீதி மன்றத்தில் கடமையில் இருந்த அத்தனை வழக்கறிஞர்களும் ஒன்று பட்ட குரலில் அந்தத் தடை உத்தரவுக்கு எதிர்ப்புக் காட்டியதால், அது தள்ளுபடி செய்யப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பூங்காவுக்கான இடம் திறந்து வைக்கப்பட்டது. அதனால் ஆத்திரமடைந்த புலனாய்வுத் துறையினர் நகரசபைக்கு எதிராக வழக்குத் தொடுத்திருந்தனர். அந்த நிலையில் திரு. நடராஜா ரஜீவன் அவர்கள் நகரசபைக்காக இலவசமாகவே வழக்காடி அதில் வெற்றி பெற்றதால் பொலிசாரினதும், இராணுவத்திடம் இருந்தும் அந்தத் தீருவில் மண் காப்பாற்றப்பட்டது.

- **ஊறணிப் படுகொலை-1985**

1985 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி ஸ்ரீலங்கா படையினரால் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கையே 'ஊறணிப் படுகொலை என்று அழைக்கப்படுகின்றது. நள்ளிரவில் திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையின் பொழுது 70 அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

மே மாதம் 12 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு வல்வெட்டித்துறையைச் சூழ்ந்துள்ள வல்வெட்டி, இமையாணன், இலக்கணாவத்தை, பொலிகண்டி, தொண்டைமானாறு ஆகிய கிராமங்கள் பல நூற்றுக் கணக்கான ஸ்ரீலங்கா படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. படையினரின் நடமாட்டத்தினால் உசார் அடைந்த நாய்கள் தொடர்ச்சியாகக் குரைத்தபடியும், ஊளையிட்டபடியும் இருந்ததால், நடுநிசித் தூக்கத்தில் இருந்தவர்கள் பதறித் துடித்து வேலி இடுக்குகளினூடாகவும், கதவுத் துளைகளினாலும் தெரு வீதியைப் பார்த்ததும் அதிர்ந்து போய் நின்றனர்.

வீதிகளிலும், சிறிய சந்துகளிலும் ஆயுதங்களை நீட்டியபடி நின்ற படையின ரைக் கண்டதும் அவர்களுடைய உடல் அச்சத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தன. நாய்களின் ஓலத்தின் மத்தியில், மயானச் சூழலை நினைவூட்டும் வகையில் பேயுலாவும் தெருக்களாகக் காணப்பட்ட அந்தக் கிராமத் தில் வீடுவீடாகச் சென்று, தேடுதலை நடத்திய படையினர் வீடுகளுக்குள் இருந்த பொது மக்களை ஆயத முனையில் அச்சுறுத்தி குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள் என்ற வேறுபாடுகளின்றி, ஒருவர் பாக்கியில்லாமல் வெளியே வரச் சொல்லிப் பணித்தனர். நடக்கப்போகும் அனர்த்தங்களைப் புரிந்து கொண்ட சில இளைஞர்கள், பின்புறமாகப் பாய்ந்து தப்பியோடி, நெல்லியடி மற்றும் கொடிகாமப் பகுதிகளில் தஞ்சமடைந்தனர். வெளியே தப்பிச் செல்ல முடியாத நிலையில் நின்ற மக்களை வரிசையாக வல்வெட்டித்துறையின் நகரப் பகுதிக்குக் கூட்டிச் சென்று ஊறணி தீர்த்தக் கடற்கரைக்குச் சிறிது தூரம் தள்ளியிருந்த நூலகக் கட்டிடத்தில் போய் நிற்குமாறு பணிக்கப்பட்டனர். அவர்களில் 15 இளைஞர்களைப் பிடித்துக் கொண்டு சென்று ஊறணி தீர்த்தக்கடற்கரையில் பெண்கள் ஆடை மாற்றும் மண்டபத்தில் கைகளைப் பின்புறமாகக் கட்டியபடி முழங்காலில் இருக்க வைத்து, சுட்டுக் கொன்றனர். ஏனையோரை நூலகக்கட்டிடத்துடன்வைத்தேகுண்டுவைத்துத்

தகர்த்தனர். இவ்வாறு கொல்லப்பட்ட 70 தமிழர்களின் உடல்களைக்கூட எடுக்கமுடியாத நிலையில் தசைகள் வேறாகவும், எலும்பகள் வேறாகவும் அங்குமிங்குமாகச் சிதறிக் காணப்பட்டன.

- **ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் வல்வைப் புயல் நடவடிக்கை -1991**



1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி, நண்பகல் 12.40 மணிக்கு "வல்வை மக்கள் அனைவரையும் 24 மணித்தியாலங்களுக்குள் எழும்பிச் செல்லவேண்டும்" என்ற அறிவித்தலுடன் துண்டுப்பிரசுரங்களை உலங்கு வானூர்திகளின் மூலம் வீசி எறிந்து விட்டு, நான்கு மணித்தியாலங்களுக்குள் பத்துக்கும் மேற்பட்ட வானூர்திகளினூடாக தொடர் விமானக் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன. தொடர்ச்சியாக 4 நாட்கள் வரை விமானங்கள் குண்டுகளைப் பொழிந்ததில், சுமார் 1200 வீடுகள் உடைக்கப்பட்டதுடன் பலர் கொல்லப்பட்டும், 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தும், உள்ளனர்.

இந்தக் கோரத்தனமான தாக்குதலில், இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள், பாடசாலைகள், வல்வைக் கல்வி நிலையக் கட்டிடம், வர்த்தக நிலையங்கள், வைத்தியசாலை என்பன சின்னா பின்னப்படுத்தப் படுத்தப் பட்டன. வல்வெட்டித்துறை மண்ணைச் சாம்பல் மேடாக்கிய இந்த வல்வைப் புயல் இராணுவ நடவடிக்கை வல்வை மக்களின் பொருளாதாரத்தையே வேரோடு சரித்தாலும் உறுதி குன்றா உணர்வுடன் மீண்டும் எழுவோம் என்ற உறுதியுடன், அடுத்த கட்ட வாழ்வை எதிர் நோக்கி தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்.

இந்த சோகம் நிறைந்த வரலாற்றை, "வல்வைப்புயல்" என்ற தலைப்பிலான ஒரு விவரணச் சித்திரமாக 15 நாட்கள் தொடராகப் பிரசுரித்த "உதயன்" பத்திரிகை, வல்வை மக்களின் அவலங்களை உலகுக்கு அம்பலப் படுத்தியது. இவ்விவரணச் சித்திரத்தை 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் கனடா இகுருவி நிறுவனம் கனதியானதும், வர்ணப் படங்களையும் கொண்டதாக "வல்வைப் புயல்" என்ற நூலாக வெளியிட்டு ஆவணப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



படுகாயமடைந்த பள்ளி மாணவி



குண்டு வீச்சில் அழிக்கப்பட்ட சிவன் கோயில்

# வல்வெட்டித்துறையின் சிறப்பு வாய்ந்த உணவுகள்

வல்வெட்டித்துறையில் இன்றும் சில பாரம்பரியமான உணவுப் பொருட்களைத்தயாரிக்கும்மரபு இருந்து வருகின்றது. அவற்றுள் குறிப்பாக பருத்தித்துறையில்இருந்துசமூகஉறவுகளின்ரீதியாகவல்வெட்டித்துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட தட்டைவடை, எள்ளுருண்டை (புண்ணாக்கு என்பது பேச்சு வழக்கில் இருந்த சொல்), மென்மையும் சுவையும் நிறைந்த வெள்ளை அப்பமும், முட்டை அப்பமும், உழுத்தங் கழி, பயற்றம் பணியாரம், பனங்காய்ப் பணியாரம், வேப்பம் பூ வடகம், எண்ணெய்ப் பிட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- **தட்டைவடையும், எள்ளுருண்டையும்**

வடமராட்சியில் உள்ள பருத்தித்துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட தட்டை வடை பின்னர், அதே சுவையுடனும், தரத்துடனும் வல்வெட்டித்துறையில் இன்று பிரபல்யமடைந்துள்ளது. அதே போன்று, வல்வெட்டித்துறையில் உள்ள எள்ளுருண்டையும், இன்றும் உலகளாவிய ரீதியில், மிகவும் பிரபலம் வாய்ந்த உணவுகளாகக் காணப்படுகின்றன.

பருத்தித்துறை தட்டை வடைக்கும் வல்வெட்டித்துறை எள்ளுருண்டைக்கும் இன்றும் உலகளாவிய ரீதியில் செல்வாக்கு இருப்பதால், வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் கூட பருத்தித்துறை வடையையும், வல்வெட்டித்துறை எள்ளுருண்டையையும் (புண்ணாக்கு என்றுதான் வல்வெட்டித்றையில் அழைப்பார்கள்) தேடி வந்து வாங்கிச் செல்லும் அளவுக்கு அவை பிரபல்யமடைந்துள்ளன. இதனை நீண்ட நாட்கள் பழுதடையாமல் சேமித்துக்கூட வைக்கலாம். அந்த வடையையும், எள்ளுருண்டையையும் தயாரிக்கும் முறைகளை அறிந்து... ஒரு முறை நீங்களும் செய்து உண்டு பாருங்கள். அப்பொழுது தான் அதன்சுவையை நீங்களும் உணர்ந்து கொள்வீர்கள்.

இன்று இது பருத்தித்துறையிலும், வல்வெட்டித்துறையிலும் மிகச் சிறந்த குடிசைக் கைத்தொழிலாக வளர்ச்சி பெற்று பல குடும்பங்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கின்றன.

இத்தகைய சுவையான தட்டை வடைகளையும், எள்ளுருண்டைகளையும் உள்ளூரில் விற்பனை செய்து வருவதுடன் பிரித்தானியா, கனடா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தட்டை வடையும், வல்வெட்டித்துறையின்



எள்ளுருண்டையும்எள்ளுருண்டை


செய்வதற்குத் தேவையான பொருட்கள்:

- ஒடியல் கூழ்

தமிழர்களின் பாரம்பரிய உணவான ஒடியல் கூழ் என்பது சுவையும், போசாக்கும் நிறைந்த ஒரு உணவாக மட்டும் அன்றைய எமது மக்கள் பார்க்கவில்லை. சமுக உறவைப் பேண உதவும் “ஒன்று கூடல் உணவுப் பழக்க மாகவே” இதனைக் கவனத்தில் எடுத்தார்கள். அயலில் உள்ளவர்களையும் நெருங்கிய உறவினர்களையும் அழைத்து பெரிய அண்டாக்களில் ஒடியல் கூழைக் காய்ச்சிக் கூடிக் குடிப்பார்கள். ஒடியல் கூழ் மிகவும் பெரும் பணச் செலவில் தயாரிக்கப்படுவதால், சிலர் தமக்குள் அதற்கான செலவு தொகையைப் பங்கு போட்டு எல்லாவற்றையும் வாங்கி ஒன்றாக இருந்து கூழைத் தயாரிப்பார்கள். இதில் பிரதானமாக ஒடியல்மாவுடன், பயற்றங்காய், மரவள்ளக் கிழங்கு, பூசணி போன்ற மரக்கறிகள், மீன், இறால், நெத்தலிக் கருவாடு, சாதாரண மீன், கருவாடு, நண்டு, கணவாய், முசுட்டை இலை, முல்லை இலை போன்ற இலைக்கறி வகைகள், தனி மிளகாய்த்தூ ள், மிளகு, உப்பு, சிறிதளவு சமைத்த அரிசி, வெங்காயம், உள்ளிப் பூடு என்பன ஒன்றாகச் சேர்த்துக் காய்ச்சிப் பதமாக வந்தவுடன் அதனை இறக்கி சுடச்சுட எல்லோரும் ஒன்றாக வட்டமாக இருந்து கூழைக் குடிப்பார்கள். அந்த நாட்களில் வல்வெட்டித்துறை மக்களின் சிறப்பான ஒரு உணவாக இருந்து தற்பொழுது ஒன்றாக இருந்து கூடிக் குடிக்கும் மரபு அற்றுப் போய்விட்டது.

கூழ் குடிப்பதற்கு அன்று பனை ஓலையினால் இளைக்கப்பட்ட “பிளா” என அழைக்கப்படும் நீரேந்து பாத்திரம் பயன்படுததப்பட்டது. அந்த நாட்களில் வயல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்குக் கஞ்சி கொடுப்பதற்கும், ஒடியல் கூழ் மற்றும் திரவத்தன்மையான உணவுகளைக் குடிப்பதற்கும் இதனைப் பயன்படுத்தினர். கடினமான வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளைகளில் கை,கால்களைக் கழுவுவதற்கோ அல்லது வைத்துக் குடிப்பதற்கோ இடம் தேவையில்லை. கைகளில் வைத்தபடியே குடிப்பதற்கு





இலகுவானதால், இவ்வகையான பிளாக்களின் பாவனைகள் இருந்தன. காலப் போக்கில் இதன் பாவனை கள்ளுத் தவறனைகளில் கள் அருந்துவதற்காகவே பய்னபடுத்தப்பட்டு வந்தது. தற்பொழுது அதுவும் மறைந்து பெரிய கண்ணாடிக் குவளைகளில் கள்ளு அருந்தும் முறை வந்து விட்டது.


- **பனங்காய்ப் பணியாரம்**

பனம் பழத்தில் இருந்து தயாரிக்கப்படும் சுவையும் போசாக்கும் நிறைந்த ஒரு பணியாரம் தான் பனங்காய்ப்பணியாரம். இதனை பின்வரும் முறையில் தயாரிக்கலாம்:

இப் பனம் சாறு, சீனி, சிறிது வேகவைத்த கோதுமை மா, சிறிது உப்பு மற்றும் பெரித்தெடுப்பதற்கு எண்ணெய் என்பன தேவை. நன்கு பழுத்த பனம் பழத்தை மெல்லிய சூடான நெருப்பில் வாட்டி எடுத்தபின் புறத் தோலை அகற்றி, அதனைப் பிழிந்து சாறை எடுத்து சிறிது நீர் கலந்து, அதனை மெல்லிய மஸ்லின் துணியில், வடித்து எடுத்தல் வேண்டும். இச் சாற்றுடன், கோதுமை மாவையும், சீனியையும் நன்கு பிசைந்து இறுக்கமாகக் கலந்து வைத்தல் வேண்டும். கொதிக்க வைத்த எண்ணெயில் விரல்களால் பிழிந்து சிறுசிறு உருண்டைகளாக, அதனுள் விட்டு பொரித்து, அவை பொன்னிறமாக வந்ததும், எண்ணெயில் இருந்த வெளியே எடுத்து, அவற்றை ஒரு தாளில் பரப்பி வைத்து, ஆறிய பின்னர் பரிமாறலாம்.

- **மெதுமெதுப்பான முட்டை அப்பமும், சுவையான பயற்றம் பணியாரமும்**

வறுத்த அரிசி மாவை, கள் விட்டுப் புளிக்கவைத்து வேக வைக்கப்படும் அப்பம் மிகவும் மெதுமையாகவும் சுவையாகவும் இருக்கும். வெள்ளை அப்பம் சிறிது வெந்து வரும் பொழுது, அதன் மேல் முட்டையை ஊற்றி முட்டை அப்பம் செய்யப்படுகின்றது. இத்தகைய மென்மையான சுவையான அப்பத்தை வல்வெட்டித்துறையில் தான் பெற்றுக் கொள்ளலாம். அதனைப் பெற்றுக் கொள்வதற்காக உடுப்பிட்டி, தொண்டைமானாறு, பொலிகண்டி ஆகிய பிரதேசங்களில் இருந்தும் வருவார்கள்.





# பிரதான போக்குவரத்துச் சாதனமாக இருந்த தட்டிவான்கள்

1940 களில் இருந்து வடமராட்சியில், பிரதானமான பொதுமக்களின் போக்குவரத்துச் சாதனமாக அன்று தட்டிவான்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனஅவ்வாறான தட்டி வான்கள் 1960 களில் வல்வெட்டித்துறையில் மட்டும் சுமார் 13 வாகனங்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன..அன்றைய எமது மக்களின் தொழில் நுட்பத்திறன் விருத்தியை இந்த வாகனங்களை உருவாக்கிய முறையைக் கொண்டு அறியமுடிகின்றது.அன்று யாழ்ப்பாணத்தில் பிரபலமான போக்குவரத்துச் சாதனமாக இருந்த "செவர்லெற் மோட்டார் கார்" கடினமான பாவனைக்கு,ஏற்றதாக இருந்ததால் அவை சாதாரணமாகப் பொதுமக்களின் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டன. பின்னர் அதன் வடிவத்தை தமது தொழில் நுட்ப ஆற்றலினால், முற்றாகவே மாற்றியமைத்து பிரயாணிகளுக்கான பொதுப் போக்கு வரத்துச்சாதனமாக எம்மவர்களால் மாற்றி அமைக்கப்பட்டது தான் வியப்புக் குரியது.

அதன் முகப்பு கடினமான இரும்பினால் செய்யப்பட்டு, வெளியே கோள வடிவில் தள்ளிக் கொண்டிருக்கும்.அதன் உடற்பகுதி (Body) மரப்பலகையினால், இரும்புச்சட்டங்களினால் பிணைக்கப் பட்டிருக்கும். அதனுள்ளே மரப்பலகையினால் செய்யப்பட்ட ஆசனங்கள்,குறைந்த உயரமுடைய தாழ் வான கூரை,எந்தக் கரடு முரடான பாதை யையும் இலகுவில் தாண்டி ஓடக்கூடிய சில்லுகள், கண்ணாடிகள் அற்ற யன்னல்கள் என்பவற்றுடன், அதனுடைய சாரதிப் பக்கத்தில் பொருத்தப் பட்டுள்ள விசேட "பாம்..பாம்.." என்று ஒலி எழுப்பிக் கொண்டிருக்கும் காற்றை அமுக்கி இயக்கும் ஒலி எழுப்பி (Horn) ஆகியவையே தட்டிவான்களின் சிறப்பியல்பாகக் காணப்பட்டன.இத்தகைய தட்டிவான்கள் எந்த விதமான சுமையையும் ஏற்றக்கூடிய தாகவும்,பின்புறத்தில் இரு ஓரங்களிலும், இரண்டு இரும்புச் சங்கிலிகளினால் பிணைக்கப்பட்டிருந்த பலகையினாலான தட்டிகளிலும், கூடாரத்தின் மேலும் பயணிகளை ஏற்றிச் செல்லும் இலாவகமும்,இன்று நவீன போக்குவரத்துச் சாதனங்களின் வருகையுடன் படிப்படியாகக் குறைந்து வந்துவிட்டது.இவ்வகையான தட்டிவான்கள் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நெல்லியடிப்

பகுதிகளில் அன்று அதிகளவில் மேன்படுத்தப்பட்டைமையால்,பொதுமக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகள் பெருமளவு குறைந்திருந்தன. 1960 களில் வல்வெட்டித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் கச்சேரிவரை காலை 7.30 மணிக்கும் வல்வெட்டித்துறையில் இருந்தும்,பிற்பகல் 4.30 மணிக்கு கச்சேரியடியில் இருந்தும் தினசரி அரச அலுவலர்களை மட்டும் ஏற்றி இறக்கும் சேவை தட்டிவான்கள் மூலமே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

**வல்வையின் நடனக் கலைகளின் வளர்ச்சி**





ஜெ.ஜென்சிகா,கு.லக்சிகா,து.நிசாந்தி ஆகியோரினதும் மாதுமை சேந்தனின் நடனத் தோற்றங்களும

வல்வெட்டித்துறையில் 1960 களில் தென்னிந்தியக் கலைஞர்களான திரு.காயம்பு, திரு. வி.கே. நல்லையா போன்றவர்கள் வீடுகளில் வைத்து பரதநாட்டியம்,கதகளி போன்ற நாட்டியக் கலைகளைக் கற்பித்து வந்தனர். அவ்வாறு வழங்கப்பட்ட பயிற்சிகளின் முடிவில், குருவணக்கமும்,அரங்கேற்றமும் நடத்தப்பட்டதால். நாட்டியக் கலையானது,தனித்துவம் மிக்க கலையாக வளர்த்தெடுக்கப்பட்டது. ஆனால் பின்னர் அதன் முக்கியத்துவம் குறைந்து வரத் தொடங்கியதும்,சமூக மட்டத்தில் அருகிப் பாடசாலை மட்டத்தில் போட்டி நிகழ்ச்சிகள்,கலைவிழாக்களில் பங்குபற்றுதல் என்ற வரையறைக்குள் மட்டுப் படுத்தப்பட்டன. ஆனால் தற்பொழுது மீண்டும் அந்தக் கலைக்கு உயிர் கொடுக்கும் வகையில், நாட்டியக் கலாமன்றங்கள் உருவாக்கப்பட்டு நாட்டியக் கலை வளர்த்தெடுக்கப் பட்டு வருகின்றது.

தொண்டைமானாற்றில் திருமதி.ஞானதர்சினி அவர்களின் அபிநய சுரபி என்ற நடனக் கல்லூரிமூலமும், வல்வெட்டித்துறையில், திருமதி அன்ரனெற் சுபாசினி அவர்களின் "பரதசுரபி நாட்டிய கலா மன்றம்" என்ற அமைப்பின் மூலமும்,செல்வி.நீதிராஜா பைரதி ஆகியோரின் நட்டுவாங்கம் மற்றும் நெறியாள் கையின் மூலமும் பரதநாட்டியம்.நாட்டிய நாடகம் போன்ற கலைகளை வளர்த்து வருகின்றனர்.

# வல்வையின் பாரம்பரிய கலை, பண்பாட்டு வடிவங்கள்

பாரம்பரியகலைவடிவங்களானகரகஆட்டம்,உடுக்குபொம்மலாட்டம், சிலம்பாட்டம், , நாட்டார் பாடல்கள்,கூத்துக் கலைகள்,போர்த்தேங்காய் அடித்தல்,புகைக் கூண்டுகளை வானத்தில்விடுதல், பட்டங்களைப் பறக்க விடுதல் என்பன வடமராட்சி வடக்கில் முக்கியத்துவம் வாய்ந்த கலைவடிவங்களாக பேணப்பட்டு வருகின்றன.இத்தகைய தமிழ் மக்களின் இத்தகைய கலைவடிவங்களைப் பேணிவருவதில் வடமராட்சி வடக்கில் உள்ள ஆதிகோயிலடி,பொலிகண்டி, தொண்டமனாறு மாதனை,நெல்லண்டை ஆகிய கிராமங்களைக் குறிப்பிடலாம்.ஆயினும் இக்கலைவடிவங்களைப் பாதுகாப்பதில் ஒரு குறிபபிட்ட சிலரே இன்றும் முன்னணியில் உள்ளனர்.அவற்றை முறைப்படி கற்று மக்கள் மயப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் எங்கள் இளைஞர்களிடம் இன்று அருகிவருவதால் அவை காலப்போக்கில் அழிந்துவிடக் கூடிய ஆபத்துக் காணப்படுகின்றது.

- **கரக ஆட்டமும்,உடுக்கு அடித்துப் பாடுதலும்,நாட்டுக் கூத்து மரபும்:**

இக் கலைகள் வல்வெட்டித்துறையில் நீண்டகாலமாகப் பேணப்பட்டு வந்தமையால்,அந்தக் கலைகள் இன்றும் அழிவடையாது இளம் சந்ததியினரிடையே பரப்பப்பட்டு வருகின்றன.தமிழர்களின் கலாசார வடிவமாக விளங்கிய கரக ஆட்டம்,இன்றும் பக்தி பூர்வமாக வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில்,வீரமாகாளி அம்மன் கோயில் ஆகிய பெண்தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்ற ஆலயங்களில் நேர்த்திக் கடன் வைத்து ஆடப்பட்டு வருகின்றன. வல்வெட்டித்துறையில் ஆடப்பட்டுவரும் கரகங்கள் பூக்களால் அழகாக வடிவமைக்கப்பட்டதுடன்,அவை மிகவும் பெரிதாகவும் இருக்கும். கரக ஆட்டங்களின் பொழுது,தமிழர்களின் பண்டைய இசைக்கருவியான உடுக்குடன்பாடல்இசைக்கப்படும்பொழுது,இயல்பாகவே ஒரு ஆட்டம் வருவதைக் காணலாம்.அதே வேளை வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயிலின் தீர்த்த உற்சவத்தின் பொழுது,முத்துமாரி அம்மன் தீர்த்தமாடி,மீண்டும் ஆலய வாசலுக்கு வருகை தரும் பொழுது,வாசலில் ஆரம்பிக்கும் பொழுது,சுமார் 30க்கும் மேற்பட்ட உடுக்கு வாத்தியங்களை மட்டும் இசைத்து,அம்மனை வரவேற்கும் வகையிலான, “வாசலிது,வாசலிது மாரியம்மன் வரும் வாசலிது,கங்கையிலே நீராடி எங்கள் மாரி அம்மன் வரும் வாசலிது..” என்ற பாடலை, மற்றைய

வாத்தியங்கள் யாவும் நிறுத்தப்பட அனைத்து உடுக்குக் கலைஞர்களும் சேர்ந்து பாடும் பொழுது, மிக அற்புதமாகவும், உணர்வு பூர்வமாகவும் இருக்கும்.

கரகம், உடுக்கு போன்ற தமிழர்களின் பாரம்பரியக் கலைகள் எவ்வாறு வல்வெட்டித் துறையில் பேணப் பட்டு வருகின்றதோ அதேபோன்று, நாட்டுக் கூத்துக் கலைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. வல்வெட்டித்துறையில் நாட்டுக் கூத்துக் கலாபூசணம் ஆழ்வாப்பிள்ளை மற்றும் ஆதிகோயிலடியில் இன்றும் அந்தக் கலை வடிவம் பேணப்பட்டு வருகின்றது. ஆதிகோயில். கலா மன்றத் தைச் சேர்ந்த ச சிவப்பிரகாசசம், பரஞ் சோதி, சித்திரவேலாயுதம், மதியழகன் போன்றவர்கள் நாட்டுக் கூத்தை மேடை ஏற்றுவதிலும், இளம் தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுப்பதிலும் முக்கிய பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது



கெலியன்ஸ் நண்பர்களின் இலட்சிய வீரன் நாடகத்தில் ஒரு காட்சி




மீண்டும் வருவோம் குறும்படத்தில் தேவர் அண்ணா

**நாடக மன்றங்கள் உடாக நாடகக் கலை வளர்ச்சி**

கலைஞர்கள் பலர் இருந்து அந்தக் கலையை வளர்த்து வந்திருக் கின்றார்கள். தமிழர்களின் தனித்துவம்மிக்க கலையாக விளங்கும் நாட்டுக்கூத்துக்கள் அன்று அம்மன் கோயில் வீதி, நெடியகாட்டுப் பிள்ளையார் கோயில் வீதி, ஆதிகோயிலடி மற்றும் வேவில் பிள்ளையார் கோயில் வீதியிலும் இரவிரவாக நடத்தப்பட்டு வந்தன. பின்னர் யுத்தக் கெடுபிடிகளினால் அவை அருகிப் போய்விட்டன.

வல்வெட்டிததுறையில் நாட்டுக் கூத்துக் கலையை முன்னெடுத்து வந்தவர்களில் பல கலைஞர்கள் இருந்திருக்கின்றார்கள். அவர்களுள் குறிப்பாக பொலிகண்டி கலாபூசணம் சிவலிங்கம், தொண்டைமானாறு

வல்வெட்டித்துறையில் நாடகக் கலையும், இசை நாடகமும் முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. இவர்களுள் அமரர் மர்சலின் பிள்ளை செல்வராஜா மாஸ்ரர், அவர்கள் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளனர். மேலும் கலைஞர்களான கட்டபொம்மன், செ. யோசரத்தினம் கே.என். சோதிசிவம், சிவசோதி, கலைப்பரிதி. கே.என். தேவதாஸ், ஆ. அதிரூபசிங்கம், ஜெயம் புரடக்சன் ஸ்தாபனத்தாரின் பல நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்ற இ. சிவசோதி போன்ற கலைஞர்கள் நாடகத் துறைக்குக் கணிசமான பங்கை ஆற்றியிருந்தனர்.

வல்வெட்டித்துறையில இயங்கிய பல நாடக மன்றங்களில் **1965** ஆம் ஆண்டில்

ஆரம்பிக்கப்பட்ட வல்வை கெலியன்ஸ் நண்பர்கள் அதிகளவிலான நாடகங்களை மேடை ஏற்றியதுடன், தென்னிந்திய நாடக நடிகர் மற்றும் திரைப்படக் கலைஞர் ஆர்.எஸ்.மனோகரின் நவீன தொழில் நுட்ப உத்திகளால் கவரப் பட்டு அவருடைய பாணியில் மேலும் பல உத்திகளைப் பயன்படுத்தி சுமார் 35க்கும் மேற்பட்ட நாடகங் களை மேடைஏற்றியுள்ளனர். இதனை உருவாக்கிய கலாபூசணம். வெ.முத்துச்சாமி, ச. காந்திதாசன், நா.குமரச்செல்வன், சி. பாஸ்கரன், சி. மனோகரன் ஆகியோருடன் வல்வையின் பல கலைஞர்கள் இந்த நாடக மன்றத்தில் பங்கேற்றிருந்தனர்.

ஆதிகோயிலடியில் 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "ஆதிசக்தி கலா மன்றம்"நாட்டுக் கூத்துக் கலையில் புதிய ஒரு பரம்பரையை உருவாக்கி வருகின்றது. இதில் அண்ணவியார் இராசேந்திரம், சிவப்பிரகாசம், பரம்சோதி ஆகியோர் முக்கிய பங்கேற்ற கலைஞர்காளாவர். அவர்களைத் தொடர்ந்து இ.மதியழகன் போன்ற இளைஞர்கள் இன்று அந்தக் கலையைத் தொடர்ந்தும் வளர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்று இளம் தலைமுறையினரிடையே கலை காலசாரத்தை வளர்க்கவேண்டுமென்ற சிந்தனைக்கு வடிவம் கொடுத்த வகையில் வல்வெட்டித்துறையின் இளைய தலைமுறை யினரால் உருவாக்கப்பட்ட "வல்வைக் கலை இலக்கிய மன்றம் வருடம் தோறும் கலை நிகழ்ச்சிகளையும், கலை இலக்கியப் போட்டிகளையும், கலைஞர்களைக் கௌரவித்து கலைச்சிகரம் விருதயும் வழங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் "நெய்தல்" என்ற கலை இலக்கிய இதழ்களையும் வெளியிட்டு வருகின்றனர்.


இவர்களைவிட தனிமனிதனாக இருந்து பல மேடை நாடகங்களிலும் திரைப்படங் களிலும், குறும்படங்க ளிலும் நடித்துப் புகழ் பெற்ற தேவர் அண்ணா என்று அழைக்கப்படும் திரு.வ.ஆ.தங்கவேலாயுதம் அவர்கள் பல குறும்படங்களைத் தயாரித்தும், நடித்தும், இலக்கிய நூல்களை வெளியிட்டும் இன்றும் சளைக்காது கலை, இலக்கியத்திற்குச் சேவையாற்றி வருகின்றார். குறிப்பாக அவர் நடித்துத் தயாரித்து வெளியிடப்பட்ட 'தமிழினி', 'மீண்டும் வருவோம்' போன்ற குறும்படங்கள் மிகச் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2008ஆம் ஆண்டு வெளிவந்த இராமேஸ்வரம் என்ற திரைப்படத்திலும் நடித்துள்ளார்.

- **சிலம்பாட்டம்**

1966சிலம்பம் என்பது ஒரு தடியடி தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். தமிழர்களின் பண்டைய போர் மரபுகளில் ஒன்றாக சிலம்பாட்டம் இருந்துள்ளது. சாதாரண வழக்கில் இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். இது தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக் கலை ஆகும். சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக்கம்பினால் தொடுதல் (தொடு புள்ளி) போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.

சிலம்பாட்டத்தைக் கற்றுக் கொள்வதாயின், குறைந்தது ஆறு மாத காலமாவது தேவை. இதற்கென சிலம்பாட்டப் பயிற்சிக் கழகங்கள் பல அன்று இருந்தன. சிலம்பாட்டம் ஆடுவதற்குக் குறைந்தது இருவர் வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில் விளையாடுவர், இதனை ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் கற்றுக் கொள்ளலாம். கோயில் திருவிழாக்கள், மற்றும் ஊர்வலங்களில் சிலம்பாட்டம் இடம் பெற்று வருகின்றது.

வல்வெட்டித்துறையில் இக்கலையில் புகழ்





சிலம்பாட்டம் ஆடும் வல்வையின் இளந்தலைமுறை - 60 அடி உயரமான புகைக் கூண்டு

பெற்றவர்கள் பலர் இருந்துள்ளனர்.குறிப்பாக வல்வையின் மூத்த கடலோடியும்,பிரபல வர்த்தகருமான வையாபுரி அப்பா என்று அழைக்கப்படும் திரு.பொன்னுச்சாமி வையாபுரி அவர்களும் மற்றும் திரு. மீனாட்சிசுந்தரம், சிலம்புச் சக்கரவர்த்தி K.M. சோதிசிவம், இ.சிவசோதி ஆகியோர் அன்று இக்கலையில் புகழ் பெற்றிருந்தனர். தற்போது இதனை, இளைய பரம்பரையினருக்கும் கற்றுக் கொடுப்பதில் ஆதிகோயிலடி திரு. மதியழகன்,பொலிகண்டி கலாபூசணம் சிவலிங்கம் ஆகியோர் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றமையால் இக்கலை இன்றும் வல்வெட்டித்துறையில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அவர்களின் முயற்சிகளினூடாக சிலம்பாட்டம் வளர்தல் ஒரு புதிய பரம்பரை உருவாகிவருகின்றது.

- **வானைத் தொடும் புகைக் கூண்டுகள் வல்வையில் அறிமுகம்- 1928**

முதலாவது கடதாசி புகைக்கூண்டு பிரான்சின் தென்கிழக்குப் பிரதேசத்தில் உள்ள அனோனி என்ற இடத்தில் வாழ்ந்த மொன்ற்கோல்பியர் (Montgolfier) சகோதரர்களால், 1783 ஜூன் 4ஆம் திகதி வடிவமைக்கப்பட்டது.ஆரம்பத்தில் இவை கோளவடிவமாக அமைக்கப்பட்டது.இதனுள் சூடான வளியை நிரப்பி அதன் மேலுதைப்பு காரணமாக உயரத்தில் பறக்க விட்டனர்.இக்கலை பின்னர் யப்பான்,சீனா ஆகிய நாடுகளில் அறிமுகப்படுததப்பட்டது போன்று, பின்னர் வல்வெட்டித்துறையின் கடலோடிகளால் வடமராட்சிக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.

தென்கிழக்காசிய பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளுக்கும்,வல்வெட்டித்துறைக்கும் இடையில் கடல் மார்க்கமான வர்த்தகப் பரிமாற்றம் நீண்ட காலமாகவே,நிலவி வந்தது. குறிப்பாக முதலாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து,இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது, நிலவிய உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்காக, வல்வை மாலுமிகளால், பர்மாவில் இருந்து பாய்மரக் கப்பல்களில், அரிசி ஏற்றிக் கொண்டுவரப்பட்டு,அவை வல்வெட்டித்துறையில் இறக்கப்பட்டு,யாழ் குடாநாட்டு மக்களுக்குப் பங்கிட்டு அளிக்கப்பட்டது. இந்தப் பணியில் வல்வெட்டித்துறைக் கடலோடிகள் பெரும் பங்களிப்பைச் செய்திருந்தனர்.

இப்படி, வல்வெட்டித்துறையில் கப்பல் கட்டும் தொழிலுடன்,கப்பலோட்டி வணிகம் செய்து வந்த காலப்பகுதியான 1928 ஆம்

ஆண்டு பர்மாவில் இருந்து, அரிசி ஏற்றிக் கொண்டு, "விநாயக செளபாக்கிய லட்சுமி" என்ற கப்பலில் வங்காள விரிகுடாவின் ஊடாக, வல்வெட்டித்துறையை நோக்கி, வந்து கொண்டிருந்தபொழுது, அக் கப்பலுக்கு மேலாக மிகத் தாழ்வாக, புகைக்கூணடு ஒன்று குறுக்காக வந்து கொண்டிருந்தது. கப்பலில் இருந்த மாலுமிகள், கைக்கெட்டிய தூரத்தில் வைத்து அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். அது பர்மிய மக்களால், அவர்களது கலாசார விழா ஒன்றின் போது, கடலுக்கு மேலாக வானத்தை நோக்கிஅனுப்பப்பட்ட ஒரு புகைக்கூண்டு ஆகும். வானில் பறந்து வந்த அந்ப் புகைக் கூண்டைப் போல, புகைக்கூண்டுகளைத் தயாரித்து, விண்ணில் அனுப்பவேண்டும் என்ற ஆர்வம், அக் கப்பலில் இருந்த மாலுமி களுக்கு ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் நெடிய காட்டுப்பகுதியைச் சேர்ந்தவர்களாதலாலேயே முதன் முதலில் நெடியகாட்டில் புகைக்கூண்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்களால் கைப்பபற்றப்பட்ட அந்தப் புகைக் கூண்டின், அமைப்பையும் சூடான வளி அடைக்கப்பட்ட நிலையில், மேலுதைப்பு காரணமாக மேல் நோக்கி எழும்பும் அறிவியல் தொழில் நுட்பத்தை நன்கு அறிந்து, தமது அறிவுக்கு எட்டிய வகையில், புதிய புகைக் கூண்டுகளைத் தயாரிக்கத் தொடங்கினர்.

இவ்வாறு வல்வெட்டித்துறை மாலுமிகளினால் கடல் கடந்த நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்டு இங்கு அறிமுகப்டுத்தப்பட்ட புகைக்கூண்டுகள் வல்வெட்டித்துறைக்கே உரிய ஒரு ஒரு கலாசார சின்னமாக இன்றும் காணப்படுகின்றன. ஆலய உற்சவங்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் இவை விண்ணில் ஏவப்படுகின்றன. இவை வர்ணக் கடதாசிகளினால் செய்யப்பட்டு, அதன் திறந்த முனைப்பகுதியினூடாகப் சூடான புகையை நிரப்பி வானத்தில் பறக்கவிடும் காட்சி அற்புதமாக இருக்கும். இன்றும் வல்வெட்டித்துறை மக்களால் திருவிழா காலங்களில் பல நூற்றுக் கணக்கான புகைக் கூண்டுகள் பறக்கவிடப்படுகின்றன. சுமார் 7 அடி தொடக்கம் 100 அடி வரை உயரமான புகைக்கூண்டுகள் பறக்கவிடப்படுகின்றன.

- **பட்டம் விடும் கலை**


அழகானதும், பல்வேறு வடிவங்களைக் கொண்டதுமாக பட்டங்களை முதன் முதலில் கண்டுபிடித்தவர் கள் சீனர்கள், அவர்களை அடுத்து யப்பானியர்கள் பட்டம் விடும் கலையை அற்புதமாகச் செய்து வந்தார்கள். பட்டம் விடும் கலை முதன் முதலில் கி.மு. 468-376 காலப்பகுதியில் சீனாவின் மவுன்ற் லூ என்ற இடத்தில் வாழ்ந்த தத்துஞானிகளான, மோசி (Mozi) லு/பான் (Lu Ban) ஆகியோரினால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை தயாரிப்பதற்கு உடனடியாகக் கிடைக்கக்கூடிய பாரம் குறைந்த மூங்கில்கள், பப்ரிக் துணி, மற்றும் வர்ணக் கடதாசிகள் ஆகியவற்றைக் கொண்டு சீனர்களால் பட்டங்கள் தயாரிக்கப்பட்டன. அதனைஅடுத்தே யப்பான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப் பட்டது.

ஆரம்ப காலங்களில் இராணுவ தேவைகளுக்காகவும் பின்னர் செய்திப் பரிமாற்றம், தூரத்தை அறிதல், காற்றின் திசையை அறிதல் போன்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த பட்டக் கலை இன்று சிற்நத அழகை இரசிக்கும் பொழுது போக்குக் கலையாக எமது நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இது பரவலாக எல்லா இடங்களிலும் பேணப்பட்டு வந்தாலும் வல்வெட்டித்துறையிலும், பருத்தித் துறையிலும் இக்கலையை வளர்ப்பதற்காகப் பட்டம் விடும் போட்டிகளை நடத்தி இக் கலையை மெருகூட்டிவருவதைக்

காணலாம். வருடத்தின் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் வாடைக் காற்று வீசும் காலங்களில் பட்டம் ஏற்றும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பிரதேசங்களில் நகர புறங்களிலும், புறநகர் பகுதிகளிலும் அழகழ கானதும், வெவ்வேறு வடிவமைப்புக்களையும் கொண்ட பட்டங்கள் வானில் பறக்கவிடப் படுகின்றன. தைப் பொங்கல்பண்டிகையை அடையாளப்படுத்தும்





*வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரையில் இடம் பெற்ற பட்டம் ஏற்றும் போட்டியில் பறக்கவிட்பபட்ட பல்வேறு பட்டங்கள்*

வகையில் வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா விளையா ட்டுக் கழகத்தினரால்,உதயசூரியன் உல் லாசக் கடற்கரையில் பலவருடங்களாக நடைபெற்றுவரும் பட்டம் ஏற்றும் போட்டியில் பல நூற்றுக்கணக்கான வகை வகையான பட்டங்களைப் பறக்கவிட்டனர். இதில குடா நாட்டிகன் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் திரண்டு வரும் காட்சியும் மிக அற்புதமாக இருக்கும். இதில்பெட்டிப் பட்டம்நட்சத்திரங் கள், வெளவால், விமனங்கள், கார், கொக்கு, பருந்து,டைனோசர்,ட்ரகன் போன்ற பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்ட பட்டங்கள் பறக்கவிடப்பட்டு அவற்றுள் சிறந்தவற்றிற்குப் பெறுமதியான பரிசுகளும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு பட்டமும் ஒரு அடி உயரத்தில் இருந்து,30 அடி உயரம் வரை அமைக்கப்பட்டு பிரமிப்பூட்டும் வகையில் இருந்தன.

அதே போன்று, பருத்தித்துறையில் இந்துமாமன்றத்தினரால் பருத்தித்துறை உல்லாசக் கடற்கரையிலும், தொண்டைமானாற்றில் சின்னக் கடற்கரை யிலும் பட்டம் ஏற்றும் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**வல்வை கலை,இலக்கிய மன்றத்தினரின் கலை,கலாசார நிகழ்ச்சிகள்**





கடந்த ஏழு வருடங்களாக வல்வையில் கலை மற்றும் பண்பாட்டு அபிவிருத்தியை உருவாக்கும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட கலை இலக்கிய மன்றத்தினர் ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகின்ற பண்பாட்டுப் பெருவிழாவின் ஆரம்ப நிகழ்வாக இடம்பெறும் கலாசார பவனியில் இடம்பெறும் நிகழ்வுகளான “ட்றகன்” வடிவத்திலான பொம்மலாட்டமும்,சிறுவர்களின் கரக ஆட்டமும் பார்வையாளர் களைக் கவரும் வகையில் இருக்கின்றன.

# பண்பாட்டைச் சீரழிக்கும், மதுபான சாலைகளே இல்லாத நகரம்:-1944 - 2012

அண்மைக்காலமாக இலங்கை மக்களையும் குறிப்பாக இளைஞர் களையும் சீரழித்து வரும் போதைப் பொருட்களுக்கு எதிராக இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பிரசாரம் செய்து வரும் பொழுது, சாராயம் மற்றும் ஏனைய மதுபான விற்பனையில் யாழ்ப்பாணமே முன்னிலை வகிப்பதாகவும், இரண்டாவது இட்தததை நுவரெலியாவும், மூன்றாவது இடத்தை மட்டக்களப்பும் வகிப்பதாகவும் கூறிய தகவல்கள் ஒவ்வொரு தமிழரையும் நிலைகுலைய வைத்துள்ளது.

அதன்படி வருடமொன்றிற்கு யாழ்ப்பாண மக்கள் பயன்படுததும் மதுபானத்தின் அளவு 60 பில்லியன் ரூபா பெறுமதியானவை என்றால், தமிழ் மக்களின் வாழ்வு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது, வல்வெட்டிததுறையின் நகரபிதாஎடுத்த அதிரடி நடவடிக்கையின் காரணமாக "போதையற்ற ஒரு நகரத்தை" உருவாக்கியுள்ளமை குறித்து ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படவேண்டும்.

கடந்த 70 வருடங்களுக்கு மேலாக தெணியம்பையில் இயங்கி வந்த சாராய விற்பனை செய்து வந்த தவறணை, வல்வெட்டித்துறை நகரசபைஎடுத்த நடவடிக்கையின் காரணமாக அதனை மூடிவிடுமாறு கோரிக்கை விடுத்தபோதும், அதனை மூடிவிட முன்வராத நிலையில் அவரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்தும் எடுத்த முயற்சிகள் தோல்விஅடைந்த நிலையில் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்ட சிபார்சுக் கடிதத்தையும் கொண்டு வந்து கொடுத்த பொழுது, அதனைப் பார்வையிடாமலேயே கிழித்தெறிந்த நகர பிதா மதுபானசாலையின் உரிமையாளரின் கோரிக்கையை ஏற்க மறுத்துள்ள நிலையில், அதனை மூடுவதற்கான கடும் நடவடிக்கையை மேற்கொண்டார். அந்தச் சாராயத் தவறணையின் உட்புறப் பகுதியை மறைத்து உயர்ந்த மதில் கட்டப்பட்டு இருந்ததால், அதற்கு உட்புறமாகவே நகரின் சில கௌரவமான முக்கிய புள்ளிகளும், சில உயர்தரப் பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களும் குந்தி இருந்து பியர் போத்தல்களையும், கால்போத்தல் சாராயத்தையும் குடித்து ஏப்பமிட்டுக் கொண்டிருந்தார்கள், அதற்குள்ளே நிற்பவர்களை எவராலும் அடையாளம் காணமுடியாதிருந்ததால் தெருவழியாக தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று வருகின்ற மாணவிகளைத் துன்புறுத்தியும்

வந்தனர். சாராயத் தவறணை முதலாளியிடம் தெரிவித்த போதும், அது தொடர்பாக அவர் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அந்த நிலையில் நகர சபையில் மதுபான சாலையை மூடவேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்தத் தீர்மானத்திற்கமைய தவறணையை மூடிவிடவேண்டும் என்ற கடிதத்தை அனுப்பிய பொழுது, அவர், யாழ் மேல் நீதிமன்றத்தில், நகரபிதாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அதில் அவர் குறிப்பிட்ட விடயமாக, "தனது ஜீவனோபாயத் தொழிலைத் தடைசெய்யும் வகையில் தன்னிச்சையாகவும் தான் தோன்றித்தனமாகவும் ஏனைய உறுப்பினர்களின் அனுமதியுமின்றியே முடிவெடுத்திருந்தார். அந்த இடத்தில் 70 வருடங்களுக்கு மேலாக சாராயத் தவறணையைத் தாங்கள் பரம்பரை, பரம்பரையாக நடத்திவருவதால், தொடர்ந்தும் அதே இடத்திலேயே இயங்கச் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்று முறைப்பாட்டைச் செய்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்குத் தனிப்பட்ட முறையில் நகரபிதாவுக்கு எதிராகவே தாக்கல் செய்யப்பட்டதால், நகரசபையின் சார்பில் எதிர்மனுக் கொடுக்கமுடியாது போனது. தனிப்பட்ட முறையியேலயே சட்டத்தரணியையும் ஏற்பாடு செய்யவேண்டிய நிலை இருந்தது. அந்த நேரம் அதிர்ஸ்ட வசமாக பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரையாளராகவும், யாழ் சிவில் சமூகத்தின் முக்கிய உறுப்பினராகவும் இருந்த திரு.குமாரவடிவேல் குருபரன் அவர்கள் எனக்கு ஆதரவாக இலவசமாகவே வழக்காட முன் வந்தார். ஆயினும் அவருக்கான சிறு கொடுப்பனவையாவது பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்கப் பட்ட பொழுது, திரு.கு.குருபரன் அவர்கள் கூறிய வார்த்தைகள் அந்த நீதி மன்ற வளாகத்தில் நின்ற பொது மக்களையே கண்கலங்கவைத்து விட்டது.

"இப்படி ஒரு நல்ல காரியத்தை நீங்கள் துணிச்சலுடன் நடைமுறைப்படுத்த முன் வந்ததற்கு நாங்கள் தான் நன்றியுடன் இருக்க வேண்டும். இன்று யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கிராமங்களையும், இவைபோன்ற மதுபான சாலைகள் சீரழித்துக் கொண்டு எங்களுடைய இனத்தையே அழித்துக் கொண்டு வரும்போது, நீங்கள் ஒரு ஆசிரியராகவும், அதிபராகவும் கல்விப் பணிப்பாளராகவும் இருந்தவர் என்பதால், அதனுடைய தாக்கங்களை உணர்ந்திருக்கின்றீர்கள். அந்த வகையில் நாங்கள் இதில் கூட உதவமுடியாவிட்டால் மனிதர்களாக இருப்பதில் பிரயோசனமில்லைத் தானே- இதனை என்னுடைய வழக்காகவே பார்க்கின்றேன்." என்று கூறிய அந்த உறுதியான வார்த்தைகள் ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்தது. அவரது அற்புதமான வாதத்திறமையினால் மூன்று தவணைக்குள் அந்த வழக்கு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அதன்படி, யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றத் தீர்ப்புக்கு அமைவாக வல்வெட்டித்துறையில் மக்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் எந்தவிதமான மதுபான சாலைகளும் அமைக்கப்படக் கூடாது என்ற தீர்ப்புடன் 2012 ஜூலை மாதம் தொடக்கம் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. கடந்த 70 வருடங்களாக பொது மக்களினதும் மாணவர்களினதும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் குடிமனைகள், பாடசாலை, தனியார் கல்வி நிலையம், பால்சாலை, வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து ஆகியவற்றிற்கு இடையூறுகளையும் சமூகச் சீர்கேடுகளையும் ஏற்படுத்தி வந்த மேற்படி மதுபானசாலை, நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய மூடப்பட்டு விட்டதால் இன்று வல்வெட்டித்துறை மக்கள் நிம்மதியான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். அதன் விளைவாக எழுந்த மிரட்டல்களுக்கும் அடிபணியாது இருந்ததால், வல்வெட்டித்துறை புனிதப் படுத்தப்பட்ட மண்ணாக இன்று விளங்குகின்றது.

இலங்கையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் மதுபானசாலைகள் அல்லது





சாரயத் தவறணையால் சீரழிந்த நிலையிலான அன்றைய தோற்றமும் சாராயத் தவறணை இருந்த அடையாளமே இல்லாது புனிதப்படுததப்பட்ட அதன் இன்றைய தோற்றமும்

இல்லாத ஒரே ஒரு உள்ளூராட்சி மன்றம் என்ற பெருமையைப் பெற்றுள்ள மண் வல்வெட்டித் துறை தான் என்பதில் இதிலும் சாதனை படைத்துள்ளது. இதனை ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் கடைப்பிடிப்பார்களேயானால், "போதையற்ற நகரத்தை" நிஜவாழ்விலேயே கட்டி எழுப்பமுடியும்.

**வல்வையின் அமஞ்சி எடுக்கும் மரபு**

முத்துமாரி அம்மன் கோயில் திருவிழாவின் பொழுது,11ஆம்,12ஆம், திருவிழாக்கள் மற்றும் வல்வை வைத்தீஸ்வரன் காயில் கல்யாணத் திருவிழா என்பன பொது மக்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திருவிழாக்களுக்கான செலவை அனைத்துத் தொழிலாளர்களும்,பகிர்ந்து கொள்வர். இவற்றை "அமஞ்சி" மூலம் கிடைக்கும் வருமானத்தில் தமக்குள்ளே பகிர்ந்து கொண்டு திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தினர்.

தமிழ் மக்களின் நாளாந்த பாவனையில் இருந்து இச்சொல் மறைந்து போனாலும்,சங்ககால மரபில் சில நடைமுறைகளை இன்றும் பின்பற்றிவரும் வல்வை மக்களிடையே "அமஞ்சி" என்ற சொல் பயன்படுத்தப் பட்டு வருகின்றது.. அமஞ்சி என்ற சொல்லுக்கான வைமன் கதிரைவேற்பிள்ளையின் சொல்லகராதியில், "கூலி கொடாது செய்யப்படும் வேலை" எனப் பொருள் கூறியுள்ளார். வல்வெட்டித்தறையின் கப்பலோட்டிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததனால்,தான் வளர்ந்த சமூகச் சூழலில், இருந்த "அமஞ்சி" என்ற சொல்லுக்கான பொருளைச் சரியாகக் கூறியிருந்தார்.அதேபோன்று மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களும் தனது தமிழ் மொழி அகராதியில் இதே பொருளைத் தரும் "கூலி கொடாமல் வாங்கும் வேலை" என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ் "அமஞ்சி" என்பது,குறித்த திருவிழாவை நடத்துவதற்கு ஊரில் வாழும் அனைத்துக் கடற் றொழிலாளர்களும், குறித்த ஒரு நாளில் கிடைக்கும் வருமானத்தை முழுமையாக அப்படியே திருவிழாக் குழுவினரிடம் கையளிப்பர்.அன்று பிடிக்கப்படும் மீனின் பெறுமதியில் அன்றைய செலவு தொகை கழிக்கப்பட்டு,மிகுதிப் பணம் அனைத்தும் கோயிலுக்காகவே செலவு செய்யப்படும்.இவ்வாறு சேகரிக்கப்படும் நிதியே "அமஞ்சி" எனப்படுகின்றது. இதே முறையைப் பின்பற்றியே வல்வையில் பாடசாலைகளின் சில தேவைகளுக்கும், விளையாட்டுக் கழகங்களுக்கும்,சனசமுக நிலையங்களுக்கும் சேர்த்துக் கொடுத்திருக்கின்றனர்.




வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலை




வ.இ.சிவஞானந்தரம் ஞாபகார்த்த பேருந்து தரிப்பிடம்



வல்வை நகராட்சி மன்றத்தின் புதிய கட்டடம்




வல்வை சிதம்பரக் கல்லூரியின் முகப்புத் தோற்றம்



விவசாயத்தில் பயன்படுத்தப்பட்ட ஏர்



பொதுச் சந்தைகளும் புனித செபஸ்தியார் தேவாலயமும்



பசுவின் உடற் பகுதிகளின் தெய்வ அம்சங்கள்



கிடுகு விற்பனையில் ஈடுபட்ட இரட்டை மாட்டு வண்டி

# வல்வெட்டித்துறை அபிவிருத்தியும் பிரஜைகள் குழுவும்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்காக சொந்த நிலம் இல்லாத போது முன்னாள் நகர பிதா, அமரர் ச.ஞானமூர்த்தி அவர்களின் இடைவிடாத முயற்சியினால் இதற்கான நிலம் பழைய ஒரு வீட்டுடன் சேர்த்துக் கொள்வனவு செய்யப்பட்டது. சில காலம் வரை இதில் இருந்த பழைய வீட்டிலேயே நகராட்சி மன்றத்தின் அலுவலகம் இயங்கியது. அதற்குப் பின்னரே வல்வெட்டித்துறைக்கென நவீனமான ஒரு பணிமனை உருவாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை வல்வெட்டித்துறை மக்களின் மனதில் தோன்றியது. சிறந்த கல்விமானாகவும், சமூக சேவையாளராகவும் விளங்கிய முன்னாள் நகரபிதா திரு.ச.ஞானமூர்த்தி

அவர்களின் மறைவின் பின்னர் அதனை முன்னெடுப்பதற்கான ஒரு சிறந்த தலைமைத்துவம் இல்லாத நிலையில் வல்வெட்டித்தறையின் அபிவிருத்தியிலும் ஒரு தேக்கம் காணப்பட்டது. 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் எமது மக்களுக்கான ஒரு அரசியல் தலைமைத்துவம் என்பது இல்லாத காரணத்தினால், வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு அந்த வெற்றிடத்தை நிரப்பக்கூடிய ஆற்றல் மிக்க சக்தியாகத் திகழ்ந்தது. பலர் அச்சத்தினால் நாட்டை விட்டு அகன்றும் ஊரை விட்டும் அகன்றும் மௌனித்தும் இருந்த நிலையில் வல்வெட்டித்துறை மற்றும் அயற்பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கான பலமான ஒரு சக்தியாக இருந்த வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கான பல நடவடிக்கைகளை மேற்கொண்டமையை இந்தச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடவேண்டும். இந்தக்குழுவில் தலைவராக பட்டயக் கணக்காளர் திரு.ச.செல்வேந்திரா, செயலாளராக ந.அனந்தராஜ், பொருளாளராக அமரர்.வ.இ.நடனசிகாமணி, மற்றும் உறுப்பினர்களாக திரு.பொ. யோகேந்திரன், அமரர் ஆ.தில்லையம்பலம் ஆகியோர் பல்வேறு உயிர் அச்சுறுத்தலுக்கும் மத்தியில் கடமையாற்றியிருந்தனர். அந்த நேரம் பல வழிகளிலும் ஒடுக்குதலுக்குள்ளாக்கப்பட்ட எமது மக்களது அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு, வல்வெட்டித்துறையின் உட்கட்டமைப்பு வசதி களை மேம்படுத்தக்கூடிய பல திட்டங்களை வகுத்ததுடன், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.






*வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் அலுவலகக் கட்டிடம் -அன்றும் இன்றும்*

1988-1989 காலப் பகுதியில் பிரஜைகள் குழுவினரால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக் கப்படுவதற்கு ஏதுவாக துறைசார் வல்லுநர்களை அழைத்து தயாரிக்கப்பட்ட 'நகர அபிவிருத்தித் திட்டம்' வல்வெட்டித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு நீண்டகாலத் திட்ட மாக இருந்தது. அவற்றுள் குறிப்பாக வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடம், மீன் சந்தை, மரக்கறிச் சந்தைத் தொகுதி, பொது நூலகம், பொதுப் பூங்கா, கலையரங்கம், மீன் சந்தையில் குளிர்சாதன வசதிகள் பொருத்தப்பட்ட அறை, அழகுற வடிவமைக்கப்பட்ட கடற்கரை, ஊறணி ஊற்றைப் புனரமைத்தல், நகராட்சி மன்றத்திற்கான பணிமனைக் கட்டடம் ஆகியவற்றை அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. இதில் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்கான அலுவலகக் கட்டடம் - கட்டடக்கலைஞர் செந்தில்குமரன் அவர்களால் வடிவமைக்கப்பட்டது. அவரது திட்டடத்திற்கு அமைவாக அதற்கான கட்டடத்தைக் கட்டுவதற்காக அப்போதைய அரச அதிபராப் பணிபுரிந்த திரு. அன்ரன் அல்பிரெட் அவர்களும், திட்டப் பணிப் பாளரும் வல்வெட்டித்துறை நகரத்திற்கு வருகை தந்து சில வழிகாட்டல்களை மேற் கொண்டதுடன் அவர்களின் உதவியினாலும், கனடா அரசாங்கத்தின் உதவியுடனும் இதனைக் கட்டுவதற்காக 45 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. கச்சேரியுடன் தொடர்பு கொண்டு அதற்கான வேலைகள் ஆரம்பிக்க உள்ள சந்தர்ப்பத்தில் 1990 ஆம் ஆண்டு மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதும் துரதிர்ஸ்டவசமாக ஆரம்பவேலைகள் இடைநிறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்த 10 வருடங்கள் கழித்து 1999ஆம் ஆண்டு திரு. க. சிவாஜிலிங்கம் நகரசபையின் தலைவராக இருந்த பொழுது, புதிய அலுவலகத்திற்கான கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், ஜனாதி பதியின் நிதியில் இருந்தும், சபை நிதியில் இருந்தும், றான் அபிவிருத்தி நிதியில் இருந்தும், வேறும் பல கடன் திட்டத்தின் கீழும் இக்கட்டடத்தைக் கட்ட நடவடிக்கை எடுத்துள்ள போதும், 2002 ஆம் ஆண்டுடன் அவரது பதவிக் காலம் முடிவடைந்தது. பின்னர் அவர், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இருந்து, 2011 ஆம் ஆண்டு வரை சுமார் 9 வருடங்களாக இதனை பூர்த்தி செய்யமுடியாததால், குறை நிலையில் இந்தக்கட்டிடம் காணப்பட்டது.

2011 ஆம் ஆண்டில் நடை பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் புதிதாகப் பதவி ஏற்ற சபையின் முயற்சியினால், என்றெப் திட்ட மாகாணப் பணிப்பாளராக இருந்த கலாநிதி.சிவகுமார் அவர்களுடன் தொடர்பு கொண்டபொழுது, அவரால், வழங்கப்பட்ட 15.5 மில்லியன் ரூபாவைக் கொண்டு, இதனை இன்று அழகுற பூர்த்தி செய்ய முடிந்தது

ஆயினும், புதிய வேலைகளை ஆரம்பிக்கும் பொழுது, பழைய கட்டடத்தில் இருந்த கதவு, யன்னல் நிலைகளின் மரங்கள் தரங்குறைந்த




**முழுமையாக 9 உறுப்பினர்களுடன் நிர்வாகம் நடைபெற்ற காலப்பகுதி** (2011-2015)




**இரு உறுப்பினர்களுடன் மட்டும் நிர்வாகம் நடைபெற்ற காலப்பகுதி** (1999-2002)

சப்புப் பலகைகளினால் அமைக்கப்பட்டதால், பிரதம பொறியியலாளரின், அறிவுறுத்தலுக்கு அமைவாக, அவற்றை முற்றாகவே இடித்து எடுத்து, அவற்றுக்குப் பதிலாக அலுமினியத்தினாலான விலை உயர்ந்த தரமான, சட்டங்கள் பொருத்தி அழகுற அமைக்கப்பட்டன. கட்டட வேலைகள் முடிவடைந்ததும், இரண்டு காலங்களுக்கும் உரிய சபை உறுப்பினர்களின் பெயர்களைக் கொண்ட நினைவுக் கற் களைப் பொருத்த வேண்டுமென்று, கூறியபொழுது, முன்னாள் நகர சபைத் தலைவர் திரு. க. சிவாஜிலிங்கம் தனது காலத்திற் குரியவர்களில், எவரதும் பெயர்களையும் குறிப்பிடாது, வல்வெட்டித் துறை நகராட்சி மன்ற ஆள்புலத் தைச் சேராத ஒருவரான க. சந்திரசேகரன் என்பவரது பெயரை மட்டுமே உபதலைவர் எனத்தந்ததால், அடிக்கல் நாட்டிய நினைவுக்கல்லில் துரதிர்ஸ்டவசமாக, இந்த இருவரின் பெயர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளது ஆயினும், 2011 ஆம் ஆண்டில்



கட்டடத் திறப்பு விழாவின் பொழுது, இருந்த ஒன்பது, உறுப்பினர்களின் பெயர் களும் பொறிக்கப்பட்ட நினைவுக் கல் அமைக்கப்பட்டு சகல உறுப்பினர்களினதும் கௌரவம் பேணப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

அதேவேளை உலக வங்கியின் பல உயர் அதிகாரிகளும், உள்ளூர் மற்றும் மத்திய அரச அதிகாரிகளும் வருகை தந்து பல்வேறு செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த நிதி உதவி வழங்கி வல்வெட்டித்துறை யைக் கௌரவித்தது போல், மக்களால் தெரிவு செய்யப்பட்ட நகராட்சி மன்ற நிர்வாகத்தை மாற்றவேண்டும் என்று உண்ணாவிரதமிருந்த ஒரு சில சபை உறுப்பினர்களின் உண்ணாவி

ரதமும் வெற்றியளிக்காது என்ற நிலையில், அவர்களுக்கு நீராகாரத்தை வழங்கி முடித்து வைத்து நகரசபையைப் பெருமைப்படுத்திய வடமாகாணசபையின் பேரவைத்தலைவர் திரு. சி.வி.கே.சிவஞானம் அவர்களின் விஜயமும், வல்வெட்டித்துறையின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவே இன்றும் பேசப்படுகின்றது.

ஆயினும் 2011 ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் புதிய நிர்வாகம், பல்வேறு போட்டிகள், பழிச்சொற்கள் அச்சுறுத்தல்களின் மத்தியிலும், வல்வெட்டித்துறையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் சுமார் 83 கோடி ரூபா பெறுமதியான நிதி வளங்களைக் கொண்டு வீதி அபிவிருத்திகள், கட்டடங்கள், புதிய சந்தைக்கட்டடங்கள், குளத்தைப் புனரமைத்து நிலத்தடி நீரைச் சேமித்தமை மற்றும் பல்வேறு சமுக அபிவிருத்திகள் என மிகப் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தமையால் இன்று வல்வெட்டித்துறை நகரம் புதிய பொலிவுடன் விளங்குகின்றது.

**நெடியகாடு கணபதி படிப்பகமும், தீருவில் சனசமூக நிலையமும்**





நெடியகாடு கணபதி படிப்பகம் நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தின் பரிபாலன சபை யி-னரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் ஒரு சிறுகட்டடமாகக் கட்டப்பட்டு 14.09.1967 இல் பட்டின சபைத் தலைவர் திரு.மு.இரத்தினவடிவேல் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையம் நூல்களை இரவல் வழங்குதல், இலக்கியப் போட்டிகளை நடத்துதல் என்பவற்றுடன் "கவிஞன்" என்ற கையெழுத்துச் சஞ்சிகையையும், திரு.சு.சக்திவடிவேல் அவர்களின்கைவண்ணத்தில் உருவான "அருவி" கையெழுத்துச் சஞ்சிகையையும் வெளியிட்டு வந்தது. முன்பள்ளிப் பிள்ளைகளுக்காக "கணபதி பாலர் பாடசாலையையும் ஆரம்பித்து நடத்தி வருகின்றனர்

அதேபோன்று, தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரின் மைதானத்திற்கு எதிர்ப்புறமாக திரு. செந்திவேல் அவர்கள் தனது மனைவியின் ஞாபகார்த்தமாகக் 2013 ஆம் ஆண்டில் கட்டிய படிப்பகம், இன்று அந்தப் பகுதியின் மக்களுக்கான அறிவியல் தேடலை ஊக்குவித்து வருகின்றது.

# வரலாற்று ஆவணக் காப்பகம்

பல ஆண்டுகளாக கனடாவில் திரு. ந. நகுலசிகாமணி, திருமதி உமா நகுலசிகாமணி ஆகியோரினால் இயக்கப்பட்டு வந்த கனடா வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம், வல்வெட்டித்துறை மக்களினதும், ஏனைய பகுதி மக்களினதும் ஆய்வுத் தேடலைக் கருத்தில் கொண்டு 2013 ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறை, ஊரிககாட்டில் உள்ள கீதாஞ்சலி இல்லத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆவணக்காப்பகதின் இயக்குனரான திரு. ந. நகுலசிகாமணி அவர்கள் இதனைத் திறந்து வைத்ததன் நோக்கம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகினறார்:

"1969ம் ஆண்டு குரும்பசிட்டி இரா. கனகரெத்தினம் தம்பதியினர் தமிழின வரலாற்றையும், ஈழத்தமிழரின் போராட்ட நிகழ்வுகளையும் ஆவணமாக சேகரித்து வைத்ததைப் பார்க்கும் சந்தர்ப்பம்கிடைத்தது. அப்போது எம் ஊர் வரலாறுகளையும், செய்திகளையும், அதேபோல் சேகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பிறந்தது தான் இந்த வரலாற்று ஆவணக்காப்பகம். இன்று இந்த ஆவணக்காப்பகம் ஈழத்தின் வரலாறுகளைச் சேகரிப்பதுடன் அல்லாது, யாழ் நூல் நிலையத்தில் எரிந்த, செல்லரித்த நூல்களையும் மீள்பதிப்புச் செய்யும் பணியிலும் ஈடுபடுகின்றுது. இது எமது பிறந்த மண்ணின் காவியம், நமது முன்னோர் கள் நமக்கு விட்டுச் சென்ற சொத்து. பூமிப்பந்தின் பலபாகங்களிலும் வாழும் எமது உடன்பிறப்புக்களையும் வரலாற்று ஆய்வாளர்களையும் வல்வைத்தாயிடம் சங்க காலத்தில் இருந்து இன்றுவரை உங்களை அழைத்துச் செல் கின்றோம்." என்று குறிப்பிட்டு அநியாயமாக இழக்கப்பட்ட தமது இரு புதல்வர்களான சந்துரு, சௌமியன் இருவரினதும் நினைவாக வல்வையின் ஆவணக்காப்பத்தை தமிழ் மக்களுக்காகத் திறந்து வைத்திருக்கின்றார்.

19 ஆம் நூற்றாண்டில் இருந்து வெளியிடப்படட நூல்கள், வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட கிராமங்களின் வரலாற்று நூல்கள், கப்பல் கட்டும் கலை, கப்பல் தொழிலில் பயன்படுத்திய கருவிகள், வல்வெட்டித்துறை கடலோடி களினால் பயன்படுத்திய கப்பல் களின் மாதிரி உருக்கள், வல்வெட்டித்துறையில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பொருட்கள், வல்வெட்டித்துறை தொடர்பாக வெளிவந்த நூல்கள், வல்வெட்டித்துறை எழுத்தளர்களினால் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள் கப்பல்களில் பயன்படுததப்பட்ட உண்மை உருக்கள், கப்பல்களின பாரிய மாதிரி உருக்கள், கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட நங்கூரம் மற்றும் வரலாற்று ரீதியாக தமிழர்களின் பாரம்பரியத்தையும், கலை பண்பாடு மற்றும் சாதனைகளையும்



அமரத்துவம் அடைந்த சந்துரு,சௌமியன்



வெளிப்படுத்தும் வகையிலான புகைப்படங்கள் என்பனவும் பண்டைய மக்களால் பயன் படுத்தப்பட்டு தற்பொழுது வழக்கொழிந்து போகும் பாவனைப் பொருட்களுமாக பல நூற்றுக்கணக்கான காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதன் அரிய முயற்சியாக இதுவரை 20 க்கும் மேற்பட்ட அழிந்து போகும் நிலையில் உள்ள பின்வரும் பண்டைய நூல்களை மீள் பதிப்புச் செய்துள்ளர்.

1. கைலாயமாலை- முத்துராச கவிராயர்
2. யாழ்ப்பாண வைாவமாலை – மாதகல மயிலவாகனப் புலவர் -1984
3. யாழ்ப்பாண வைபவகௌமுதி– கல்லடி க.வேலுப்பிள்ளை -1912
4. அருணகிரிநாதர் அருளிய கந்தரலங் காரத்திற்கான உரை- 1912 (இரண்டாம பதிப்பு)
5. கந்தவநாதர் நான்மணிமாலையும் பதிகமும்,திருப்பள்ளி எழுச்சியும் -1928
6. பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் சரித்திரம் -100 ஆவது பிறந்த தினம் -1954
7. தொண்டைமானாறும் செல்வச்சந்நிதி வரலாறும் -செ.நாகலிங்கம் -1974
8. அனைத்துலக நீதிச்சபைமுன் இலங் கைத்தமிழர் பிரச்சனை-தந்தை செல்வா சமர்ப்பித்த அறிக்கை-1973
9. S.J.V.Chelvanayakam A Tribute – 1978
10. Re-Opening of North Ceylon Port -1954
11. நவரத்தினசாமி நீச்சல் வீரனின் வாழ்வுச் சரித்திரம் - காவலூர் கவிஞர் ஜி.எம். செல்வராஜா-1954
12. அனைத்துலக நீதிச்சபை ஜெனிவா முன், இலங்கைத் தமிழர் பிர்சசினை பற்றிய தந்தை செல்வா வுருடுகு சார்பில் சமர்ப்பித்த அறிக்கை -1973
13. சுன்னாகம் வரதராஜ பண்டிதரின் சிவராத்திரி புராணம் - வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் ச.வைத்திய லிங்கம் பிள்ளையின் உரை – 1881
14. திருக்குறள் அதிகாரச் சாரமாகிய நன்னெறித் தாலாட்டு–வல்வை வ.ஞா. கணேசபண்டிதர் -1919
15. கந்தபுராணம் தெய்வயானையம்மை திருமணப்படலம் - வல்வை.இயற்றமிழ் போதகாசிரியர் ச.வைத்தியலிங்கம் பிள்ளையின் உரையுடன் – 1956 (இரண்டாம் பதிபபு)
16. கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலம் - .இயற்றமிழ் போதகாசிரியர் ச.வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களின் உரையுடன் -1955
17. மறசை அந்தாதி- நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் -1913
18. மாரியம்மன் மான்மியம் - பண்டிதர் ஆ.சபாபதி,மட்டக்களப்பு – 1912
19. கல்வளையந்தாதி மூலமும்,உரையும் - நல்லூர் சின்னத்தம்பி புலவர் -1913
20. திருமுருகாற்றுப்படை - ஆறுமுகநாவலர்

# வரலாற்றின் மறக்கமுடியாத சில நினைவுகள்

- பசுவதையை முற்றுமுழுதாக தடைசெய்த பெரியவர்

தனது தந்தையாரான திருமேனிப்பிள்ளை அவர்களின் கனவையும் ஊர்மக்களின் தேவைகளையும் அறிந்திருந்த திருமேனிப்பிள்ளை வெங்கடாசலம் பிள்ளையவர்கள் ஆகம விதிக்கமைய சிவன்ஆலயம் அமைத்ததுடன் மட்டும் நின்று விடாது, வல்வெட்டித்துறை மக்கள் தொடர்ந்து ஆசாரசீலராய் இருக்கவும் வாழவும் வழிவகுத்தார். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் 1883ம் ஆண்டில் சிவன் கோவில் நிர்மாணம் செய்யப்பட்ட பின்சிவபூமியாக விளங்கிய வல்வெட்டித்துறையில்சிவனின் வாகனமானதும் சைவமக்களின் பூசைக்குரியதுமான "கோமாதா"என அழைக்கப்பட்ட பசுவை வதைப்பதை முற்றுமுழுதாக தடை செய்தார். ஒரு பசுவின் உடற்பகுதிகள் ஒவ்வொன்றிலும் தெய்வ அம்சங்கள் பொதிந்துள்ளதாக ஆகமங்கள் கூறுகின்றன. அதன் ஆண்வடிவமாக நந்தி தேவரை சிவ ஆலயங்களில் முன்னிறுத்தி வணங்குகின்றனர். சிவனுக்குரிய முக்கிய விரதங்களில் ஒன்றான பிரதோச விரதத்தின் பொழுது நந்தி தேவருக்குரிய பூசைகளே சிறப்பாக நடைபெறுகின்றன. இத்தகைய சிவனின் அம்சமாக விளங்கும் பசுக்களைக் கொல்வதும், அவற்றை உண்பதும் இந்துக்களால் விலக்கப்படவேண்டியது என்றே ஆகமங்கள் தெரிவிக்கின்றன. அதனைக் கருத்தில் கொண்டே பெரியவர் உணவுக்காக மாடுகளை வெட்டுவதற்கு எதிர்ப்பைத்தெரிவித்தார்.

சமூகத்தில் தனக்கிருந்த "எசமான்" என்னும் தலைமைப்பதவியின் பெயரால் பொதுமக்களிடம் எந்த வித கண்டிப்பையும் காட்டாத பெரியவர் உணவுக்காக மாடுவெட்டுவதற்கு தன்னுடைய கடும் எதிர்ப்பைக் காட்டி அதனைத் தடைசெய்ய வேண்டுமென்பதில் மிகவும் இறுக்கமாக இருந்தார். எந்த ஒரு விலங்கும் தாக்கப்படும் பொழுது, "அம்மா" என்ற ஒலியை எழுப்புவதில்லை. பசுக்களும், மாடுகளும் வதைக்கப்படும் பொழுது மட்டுமே, "அம்மா" என்ற அவலக் குரலை எழுப்புவதைக் கொண்டு, அதன் தெய்வீகத் தன்மையை உணர்ந்து கொள்ளலாம் என்பதையும் பெரியவர் மக்களுக்கு விளக்கிக் கூறினார்.

அன்று முதல் வல்வெட்டித்துறையில் இறைச்சிக்காக மாடு வெட்டப்படுவதில்லை. ஆனால் தற்பொழுது சிவபூமி என அழைக்கப்பட்டு வந்த வல்வெட்டித்துறையில் ஒரு சிவன் ஆலயம் உட்பட 33 சைவ

ஆலயங்கள் இருக்கின்ற நிலையில் பெரியவரின் எண்ணத்திற்கு முரணாக, அண்மைக் காலமாக சுமார், 20 க்கும் அதிகமான மாட்டிறைச்சிக் கொத்துறொட்டிக் கடைகளும், மாட்டிறைச்சி விற்பனை நிலையமும் அமைக்கப்பட்டிருப்பது சைவத்திற்கே இழுக்கைத்தருகின்ற விடயமாவே பார்க்கப்படுகின்றது. வல்வெட்டித்துறையில் மதுபான சாலையை ஒழிப்பதற்கு உதவிய மக்கள், சிவனின் சின்னமாகவும் வாகன மாகவும் பயன்படுத்தப்படும் "பசுவதையை" ஒழித்து, "சிவபூமி என்று அழைக்கப்பட்ட வல்வையின் பெருமையை நிலை நாட்ட முன்வரவேண்டும்.

### 6. போர்த்தேங்காய் அடித்தல்

வல்வெட்டித்துறையில் சித்திரை வருடப்பிறப்புக் காலங்களில் போர்த் தேங்காயை அடித்து உடைத்தல் என்னும் விளையாட்டு மிகச் சுவாரசியமாக விளை யாடப்பட்டது. இருவரின் கையிலும் தடித்த ஓடுகளைக் கொண்ட சிறிய ஒடுக்கமான தேங்காய்களைக் கொடுத்துவிட்டு, ஒருவர் பின் ஒருவராக தேங்காயை நிலத்தில் உருவாக்கிய சிறிய மண்குவியல் வைக்கும் பொழுது, மற்றையவர் முட்டுக் காலில் இருந்தபடி தனது கையில் உள்ள "கையான்" தேங்காய் என்று அழைக்கப்படுகின்ற தேங்காயினால் ஓங்கி உடைக்க முயற்சிப்பார். இப்படி மாறி மாறி உடைக்கும் பொழுது யார் அதிகளவிலான தேங்காய்களை உடைக்கின்றாரோ அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார். போர்த் தேங்காயப் பொட்டியில் கலந்து கொள்வதற்காக அந்த நாட்களில் காலியில் இருந்து தடித்த ஓடுள்ள சிறிய வீரியம் நிறைந்த தேங்காய்களைக் கொண்டு வந்து, நீர்த் தொட்டியினுள் குறைந்தது 15 நாட்கள் முன்னரேயே ஊறப் போடுவார்கள்.

### 7. மார்கழிப்பனியிலும் சங்கூதி எழுப்பும் தொண்டர்கள்

1950 களில் இருந்து மார்கழி மாதம் பிறந்தவுடன் வல்வெட்டித்துறையின் இளை ஞர்கள் சிலரால் ஒன்று சேர்ந்து அதிகாலை 3.00 மணியில் இருந்து ஒவ்வொரு வீதி வழியாகவும், சிறிய சந்துகளின் வழியாகவும் சங்கு மற்றும் சேமக்கலங்களை ஊதியபடி மாணிக்கவாசகரின் "திருவெம்பாவைப் பாடலைப் பாடி ஊர் மக்களை எழுப்பியபடி செல்வார்கள். அதிகாலையில் மார்கழிப் பனியிலும் சிவ தொண்டு செய்கின்ற அந்த இளைஞர்களுக்கு பல பொது மக்கள் தாமாகவே முன்வந்து, கோப்பி, தேநீர் ஆகியவற்றைக் குடிப்பதற்குக் கொடுப்பார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவெம்பாவையில் வரும்,

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்

சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள்தடங்கண் மாதே வளருதியோ வன்செவி யோ நின்செவிதான்....." என்று வரும் பாடல் அடிகளை மார்கழி மாதத்தின் அதிகாலைப் பொழுதில், இளைஞர்கள் உரத்துப்பாடும் பொழுது, அவர்களுடைய அந்தப் பாடலைக் கேட்ட பின்னரும் எவரும் தூங்கிக் கொண்டி ருக்க மாட்டார்கள். அந்த நாத ஒலியுடனேயே எல்லோரும் எழுந்து, குளிர்ந்த நீரில் நீராடி சிவன் ஆலயத்தில் நடைபெறும் திருவெம்பாவை" பூசைக்குச் சென்று விடுவார்கள்.

நன்றி: புகைப்படம் valvettiturai.org.com



அதிகாலையில் சங்கூதி மக்களை எழுப்பி நீராடச் செய்யும் அந்த வழக்கம் இன்றும் வல்வையின் இளைஞர்களினால் பேணப்பட்டு வருகின்றது.

- **தமிழாராய்ச்சி மாநாட்டு அறிஞர்ளைக் கௌரவித்த வல்வை:**

யாழ்ப்பாணத்தில் 1974 இல் நடைபெற்ற 4 வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த





தமிழக அறிஞர்களையும் கௌரவிக்கும் வகையில், இடம் பெற்ற விருந்துபசாரத்தில் தமிழகத்தின் பிரபல தமிழறிஞர் பேராசிரியர் சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன் உட்பட வெளிநாட்டுத் தமிழ் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் ஜேர்மனியைச் சேர்ந்த கார்ள் உட்பட வெளிநாட்டு அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

யாழ் கன்னாதிட்டி நகைக்கடை உரிமை யாளர் சங்கத்தினரால் குறிப்பாக வல் வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களினால் நடத்தப்படுகின்ற நகைக்ககடை உரிமை யாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரவு உணவு விருந்து வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. முருகமூர்த்தி அவர்ளுக்குச் சொந்தமான, வைரமாளிகையின்மேல்மாடியில் இடம் பெற்ற பொழுது, இந்த நிகழ்வில், ஒழுங்குகளை மேற்கொண்ட வர்களுடன், வல்வையைச் சேர்ந்த ச.காந்திதாசன், ந.அனந்தராஜ், காலஞ்சென்ற கிராம சேவகர் பொ.கனகராஜா மற்றும் நகைக்கடை உரிமையாளர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வைத் தொடர்ந்து, வல்வெட்டித்துறையிலும், திரு. சி.விஸ்ணுசுந்தரம் அவர்களின் இல்லத்திலும் வைத்து தேநீர்விருந்து உபசாரம் வழங்கப்பட்ட பொழுதே, "அன்னபூரணியின் அமெரிக்கப் பயணம்" என்ற கையேடும் வழங்கப்பட்டது.









**வல்வைப் பிரஜைகள் குழுவினர் ஏற்பாடு செய்த பொது மக்களின் ஜனநாயக ரீதியான ஆர்ப்பாட்டங்கள்:**

யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவ அணிகள் தங்கியிருந்த 1987-1990 காலப் பகுதியில், பொது மக்களின் வாழ்வாதார உரிமைகளைத் தடுக்காது இருக்கும் வகையிலும், பொது மக்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களையும் கண்டித் தும், மீன்பிடித் தடையை நீக்கக் கோரியும், 1989இல் வல்வைப் பிரஜைகள் குழு, கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களை இணைத்து பல்வேறு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை மேற்கொண்டது. அன்று அந்த மக்கள் முன்னெடுத்த சாத்வீகமான எழுச்சிகளே அன்றைய மக்களுக்கான உடனடித் தீர்வுக ளையும் பெற்றுத்தந்தது. அன்று தமிழ் மக்களை வழி நடத்துவதற்கான அரசியல் தலைமைத்துவம் இல்லாத நிலையில், அந்தந்த இடங்களில் இயங்கிய பிரஜைகள் குழுக்களே அந்த வெற்றிடங்களை நிரப்பி வந்தன. ஆனால் இன்று அரசியல் தலைவர்கள் பலர் இருந்த போதும் மக்களைச் சரியான முறையில் வழி நடத்தும் ஆற்றலும் தலைமைத்துவப் பண்புகளும் நிறைந்தவர்களை இன்று தேடினாலும் காணமுடியவில்லை.

- **தமிழீழ மக்கள் மன்றத் தலைவர் க.சிவானந்தசுந்தரம் படுகொலை (1989)**

இந்திய இராணுவம் வடக்கு கிழக்கை ஆக்கிரமித்திருந்த வேளையில் இந்திய இராணுவத்தினருக்கு எதிராகப் பல்வேறு சாத்வீகப் போராட்டங்களை வல்வெட்டித் துறை பிரஜைகள் குழுவினருடன் சேர்ந்து முன்னெடுத்து வந்த தமிழீழ மக்கள் மன்றத்தைத் தாபித்த தலைவர். இவர், இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலத்தில் ஈழத் தமிழர்களின் அன்றைய நிலை பற்றியும் ஆள்புல எல்லையின் முக்கியத்துவம் பற்றியும் "Sri Lanka Ethnic Confllict" என்ற நூலை ஆங்கிலத்திலும், "இலங்கை இன முரண்பாடுகள்" எனத் தமிழிலும் ஒரு நூலை எழுதி சர்வதேசத்தின் பர்ரவையை இலங்கை பக்கம் பார்க்க வைத்தார்.

தமிழரசுக்கட்சியில் இருந்து ஊர்காவல் துறைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி. நவரத்தினம் அவர்கள் தமிழரசுக் கட்சி கொள்கையில் இருந்தும் தடம் மாறிச் செல்வதாகக் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டிய பொழுது, அ. அமிர்தலிங்கம் அவர்களுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகத் தமிழரசுக் கட்சியில் இருந்தும் பிரிந்து சென்று "சுயாட்சிக கழகத்தை" அமைத்த பொழுது, திரு. க. சிவானந்தசுந்தரம் அவர்களும் அவருடன் இணைந்து கொண்டார். அப்பொழுது, இவர் அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் தலைவராக இருந்து, அந்தப் பதவியையும் தூக்கி எறிந்து விட்டு தமிழர் சுயாட்சிக் கழகத்தில் இணைந்து தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாக் கொண்டு பருத்தித்துறையில் வாழ்ந்த க. சிவானந்தசுந்தரம் அவர்கள், 1989 ஆம் ஆண்டு அரியாலையில்இடம்பெற்றசந்தோசம் மாஸ்ரர் என்ற போரளியின் ஓராண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு வல்லை வெளியின் ஊடாகப் பருத்தித்துறையை நோக்கிப் பேருந்து வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த பொழுது, இந்திய இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கிய ஒட்டுக்குழுவைச்சேர்ந்த இருவரால், வெளியே இழுத்துப் பலரும் பார்த்திருக்க ஓட ஓடச் சுட்டுக் கொன்றனர். ஒரு சிறந்த சிந்தனையாள னும், நல்ல நம்பகத் தன்மையான ஒரு தலைமைத்துவத்தை வழங்கியிருக்கக்கூடிய க. சிவானந்தசுந்தரம் அவர்கள் கொல் லப்பட்டமையானது தமிழினத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அதேபோன்று வல்வெட்டித்துறை பிரஜைகள்' குழவினரின் செயற்பாடுகள் எல்லாவற்றிலும் சேர்ந்து செயற்பட்ட அவர்கள் விஜயகுமார் வல்வெட்டித்துறையில் இருந்து தெல்லிப் பளையில் உள்ள தனது அச்சுக்கூடத்தைப் பார்வையிடுவதற்காகச் சென்ற வேளையில் வடமராட்சிக்கு வெளியே வைத்து ஒட்டுக் குழுக்களால் சுட்டுக் கொல்லப் பட்டார். இன்று அவரது இழப்பும்






பொது மக்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டத்தில் திரு. க. சிவானந்தசுந்தரமும், பிரஜைகள் குழுவுடன் இயங்கிய திரு. விஜயகுமாரும் உரையாற்றுகின்றார்.

வல்வெட்டித்துறை மண்ணுக்குக் கிடைத்த பேரிழப்பாகும்

- **பேபி மார்க் சோடாக் கம்பனி:**

வல்வெட்டித்துறைக்கும் பெருமை சேர்த்த ஒரு முதுசொமாக 1927 ஆம் ஆண்டு திரு. சுப்பிரமணியம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட "பேபி மார்க்" என்ற வர்த்தகப் பெயரில் சுவையும் நறுமணமும் மிகுந்த பானம் தயாரிக்கப்பட்டது. யாழ் குடாநாடு மட்டுமல்லாது, தென்னிலங்கையிலும் புகழ் பெற்றிருந்த சோடாக் கம்பனி ஊரிக் காட்டில் இயங்கி வந்தது. அதன் சுவை நிறைகாள்வதற்காகப் பலர் முயற்சித்தந்த :ஒறேஞ பார்லி சோடாவில் உள்ள உள்ளீடுகள் நிறைந்த கலவையை அறிந்து கொள்வதற்காகப் பலர் முயற்சித்த போதும் முடியாமல் போனது. அவரது மறைவின் பின்னர், சுப்பிரமணியம் சோடாக் கம்பனி அவரது மகன் பாலசேகர் அவர்களால் அத் சொந்த இடமான ஊரிக்காட்டிலேயே நடத்தப் பட்டு வந்தது. பின்னர் யுத்தத்துன் அது மூடப்பட்டு விட்டது. திரு. சுப்பிரமணியம் அவர்களே மின்சார வசதி ஏற்படுத்தப்படாத காலத்தில் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திற்கும், அதனைச் சூழ உள்ள பகுதிகளுக்கும் மின்சாரத்தை விநியோகிப்பதற்கான பாரிய மின்பிறப்பாக்கியை அன்பளிப்புச் செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


அன்று போக்குவரத்துச் சாதனமாப் பயன்பட்ட தட்டி வான்கள்







# வளக்கிலிருந்து அருகிவரும் முதுசொங்கள்

## நாற்சார்வீடுகளும், அன்றைய சமாதிகளும்




பீலி ஓடுகளினால் வேயப்பட்ட நாற்சார் வீடுகளைக கொண்ட ஒரு வீட்டின் முகப்பு வாசலும்,ஆரம்ப காலங்களில் வசதி படைத்தவர்கள் தமது உறவினர்கள் இறந்த பின்னர் அவர்களுக்காகக் கோபுர வடிவில் அமைக்கப்பட்ட சமாதிகளைக் கட்டி வைத்தனர்.இவற்றில் இறந்த உடலங்களைப் புதைக்கும் பொழுது, அவர்கள் பாவித்த பொருட்களையும் சேர்த்துப் புதைத் பின்னரே இத்தகைய சமாதிகளைக் கட்டிவைத்தனர்.இம்மரபானது,சிந்து வெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட ஈமத் தாழிகளை நினைவூட்டுவது போல் அமைந்துள்ளது. இவற்றில் 1936இல் கட்டப்பட்ட இரண்டு சமாதிகள் தற்பொழுதும் ஊறணி இடுகாட்டில் காணப்படுகின்றது.

## ஏத்து பட்டைகளும்,கிடுகு வேலிகளும்



1950 களில் கிணறுகளில் இருந்து நீரை அள்ளி எடுப்பதற்காக இரும்பினால் ஆன ஏத்து பட்டைகள்.இவை போன்ற ஏத்து பட்டைகள் பனை ஓலைகளினாலும் தயாரிக்கப்பட்டன. அன்று எல்லைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கிடுகு வேலிகளை அமைப்பதற்காக கிளுவை,பூவரசு, முருங்கை போன்ற மரங்களின் கதியால்களை நட்டு அவற்றை ஒருதளமாகக் கொண்டே அதன்மேல் வரிசையாக தென்னோலையால் அமைக்கப்பட்ட கிடுகு களினால் வேலி அமைப்பார்கள்.இதனால் சூழல் வளம் பேணப்படுவதுடன் வீடுகளில் வளர்க்கப்படும் கால் நடைகளுக்கும் இலை குழைகள் போன்ற உணவையும் பெறக்கூடியதாக இருக்கும்.

## A- Z மொடல் மோட்டார் வாகனங்கள்




மிகச்சிறிய அளவு தூரத்திற்குள் ஓடுவதற்காக பாவனையில் இருந்த A- Z மொடல் மோட்டார் வாகனங்கள் சில ஓடிக் கொண்டிருந்தன. அவற்றுள் திரு. இளைய பெருமாள் அப்பா, சிவன்கோயில் எசமான் திரு. எஸ். அருணாசலம், திரு. தி. சண்முகசபாபதிப்பிள்ளை, திரு. முருகுப்பிள்ளை மாஸ்ரர் திரு. ந. அனந்தராஜ், ஆகியோரிடம் இத்தகைய A தொடக்கம் Z வரையான மொடல் மோட்டார் கார்கள் இருந்தன. 1955 ஆம் ஆண்டில் இருந்து தினகரன் பத்திரிகை நடத்திய பழைய கார் பவனி போட்டிகளில் 1956 இல் வல்வையைச் சேர்ந்த திரு. அருணாசலம் அவர்களுக்குச் சொந்தமான B 2349 என்ற வாகனமும், 1970,1971 இல் திரு. ந. அனந்தரஜ் அவர்களுக்குக்குச் சொந்தமான வானமும் தொடர்ந்து அடுத்தடுத்து வெற்றிக் கிண்ணங்களைச் சுவீகரித்து வல்வைக்குப் பெருமை சேர்த்தன. தற்பொழுது Z 26, 20 என்ற கார் நவீனமயப்படுத்தப்பட்டு இன்றும் பாவனையில் உள்ளது.


## காணாமல் போய்விட்ட சூத்திரக் கிணற்றடி





சுமார் 85 வருடங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறை சுங்கவீதியின் முகப்பில் தற்போதைய புதிய சந்தைக் கட்டிடத்திற்கு எதிர்ப்புறமாக சூத்திரக்கிணறு ஒன்று இருந்தது. சூத்திரக் கிணறு என்பது, பற் சக்கரங்கள் கொண்ட பொறியினால் இயக்கப்படும் ஒரு சாதனமாகும். கிணற்றின் ஆழம் வரை செல்லக்கூடியதாக ஒரு இரும்புச் சங்கிலியில் சுமார் 20 வரையான பட்டை போன்ற இரும்பு வாளிகள் பொருத்தப்பட்டிருக்கும். அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பொறியை இயக்கும் பொழுது ஒரு குறித்த நேரத்திற்குள் அதிகளவிலான நீரை வெளியேற்றலாம். இதன் மூலம் பெறப்படும் நீர் அன்று விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டது.

பிற்காலத்தில் அக்கிணற்றைச் சாதாரண கிணறு போன்று புனரமைத்துப் பொது மக்களால் 1970 வரை பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது அந்தக் கிணறும் மூடப்பட்டு ரேவடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் சீமெந்தினாலான அழகான அலங்கார மேடை அமைக்கப்பட்டுள்ளது. முன்னர் சூத்திரக் கிணறாகப் பயன்படுத்தப்பட்ட இந்த இடம் "சூத்திரக் கிணற்றடி" என்றே அழைக்கப்பட்டு வந்து, காலப்போக்கில் அந்தப் பெயர் மருவி விட்டது.

## இயற்கை அரைப்பான்களும், துலாக் கிணறுகளும்





உணவுப் பொருட்களை அரைப்பதற்கும்,தானியங்களை உடைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட கருங் கற்களினால் தயாரிக்கப்பட்ட இயற்கை அரைப்பான்களான, ஆட்டுக்கல், திருகை, அம்மியும், தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட துலாவும் ஓலையால் செய்யப்பட்ட ஏத்து பட்டையும்


## பனைகளில் தொங்கும் மண்முட்டிகளும்,பனை ஓலைப் பெட்டிகளும்





பனைகளில் இருந்து பதநீர் அல்லது கள்ளைச் சேகரிப்பதற்காக மண்ணால் செய்யப்பட்ட பல முட்டிகளை இளம் பாளைகளில் கட்டித் தொங்கவிட்டுவிட்டு மறுநாள் அவற்றைக் கீழே இறக்கிக் கொண்டு வந்து பெரிய முட்டிகளில் சேகரிக்கும் வழக்கம் இருந்தது. இப்பொழுது பிளாஸ்ரிக் போத்தல்களைக் கட்டி விடுகின்றார்கள். பனை ஓலைகளில் இருந்து இளைக்கப்படும பாய்கள், கடகங்கள், தட்டுப் பெட்டிகள், மூடல் பெட்டிகள், சுளகுகள், நீற்றுப் பெட்டிகள், கைப்பைகள் போன்றன அன்று பாவனையில் இருந்தன.


## செம்புகளும்,மூக்குக் குவளைகளும்






செம்பு உலோகத்தினால் ஆன குடிநீர்ப் பாத்திரமாக இருந்ததால் அன்று இது செம்பு என்று அழைக்கப் பட்டது. காலப் போக்கில் இதன் பாவனையும் தயாரிபபும் மறைந்து பொன பின்னர், இவைபோன்ற வடிவத்தில் பித்தளை உலோகத்தினாலும், தற்போது கறையில் உருக்கினாலும் தயாரிக்கப்பட்டுப் பாவனையில் உள்ள போதும், இப்பாத்திரம் "செம்பு" என்றே அழைக்கப்படுகின்றது. அதேபோன்று செம்பினால் தயாரிக்கப்பட்ட மூக்குக் குவளைகளும் அன்று பாவனையில் இருந்தன.

## தீவட்டியும், மரவைகளும்






மின்சார வசதியில்லாத காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இரும்பினால் தயாரிக்கப்பட்ட தீவட்டிகள் மூலம் வீதிகளில் ஒளி ஏற்றுவதற்காகக் கொண்டு செல்வார்கள். ஆலயங்களில் நறுமணப் புகையூட்டுவதற்காகவும் இவை பயன் படுத்தப்பட்டன. இன்று இது செல்வச் சந்நிதி ஆலயத்தில் திருவிழாவில் பயன்படுத் தப்படுகின்றது. அன்று உணவுகளை எடுத்துச் செல்வதற்கு ஒருவகை மரங்களால் செய்யப்பட்டு அழகிய சித்திரவேலைப்பாடுகளுடன் கூடிய மரவைகள் என அழைக்கப்படும் விசேடமான தாம்பாளங்கள் வல்வெட்டித்துறையின் பெரும்பாலான வீடுகளில் பயன்படுத்தப்பட்டன.

## பித்தளை இட்லிச் சட்டியும்,கப்பலில் பயன்படுத்திய நங்கூரமும்





பித்தளையினால் செய்யப்பட்ட இட்லி அவிக்கும் பானையை அன்று அடுப்பில் வைத்தே, இட்லியை அவித்தனர். அன்று எமது கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட பாரிய நங்கூரம் இன்றும் ஆதிகோயிலடியில் வாடி ஒழுங்கையில் உள்ள் முருகைக் கற்களில் ஒதுங்கிய நிலையில் காணப்படுகின்றது.

## இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த இரு விருட்சங்கள்





நெற்கொழு வைரவர் ஆலயத்தின் முன்னால் காணப்படும் 200 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த ஆலமரமும், நெடியகாட்டில் 200 வருடங்களுக்கு மேலாக வேம்பைச் சுற்றி வளர்ந்துள்ள அரசமரமும்


## குளக்கரை வந்தமரும் அரிய இனப் பறவைகள்





தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்திற்கு முன்பாக ஆற்றங்கரைப் பகுதியில் உள்ள கடல் நீரேரியில் காலத்திற்குக் காலம் பல நூற்றுக் கணக்கான பெலிக்கன் இனப் பறவைகள் வந்து போகின்றன. அதேபோன்று தீருவில் புட்கரணிக் குளத்திலும் எல்லாக் காலங்களிலும் நீர் நிறைந்து இருப்பதால், பல நூற்றுக் கணக்கான பறவைகள் இரைக்காக வந்து போகின்றன. அவை குளத்தின் விளிம்பின் ஓரமாக இரைக்காகக் காத்திருக்கும்.

## அன்றைய வல்வையின் மீன் சந்தையும், இன்றைய சந்தையும்





வல்வெட்டித்துறை மீன்சந்தை 2004 ஆண்டிற்கு முன்னர் இருந்த மீன் சந்தை,கலகலப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.. நூற்றுக்கணக்கான வெளியூர் வியாபாரிகளும்,கொழும்புக்கு மீன்களை ஏற்றிச் செல்கின்ற வாகனங்களுமாக வெள்ளிக்கிழமை தவிர்ந்த நாட்களில் மக்கள் கூட்டத்தினால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.ஆனால் இன்று அந்தச் சந்தையில் இரண்டு மாடிக் கட்டடம் கட்டப்பட்ட நிலையிலும் மொத்த வியாபாரிகளின் வருகை குறைந்து களை இழந்து :காணப்படுகின்றது. அன்றைய மீன் சந்தையின் புகைப்படம் 2004 ஆம் ஆண்டு மே மாதம், ரு.டு.கு.லார்சன் என்பவரால் டிஜிற்றல் சொனி கமராவினால் எடுக்கப்பட்டது.

## 150 வருட பொலிகை சாமியார் மடமும்,பொலிகை ஓவியமும்





பொலிகண்டியில் கந்தவனக் கோயிலுக்கு மேற்காக இருந்த நூற்றைம்பது ஆண்டு காலம் பழமை வாய்ந்த முருகேசு சாமியார் மடம்என அழைக்கப்படும் ஓவியக் கலரியும்,அங்கு இயற்கையாக வரையப்பட்ட பொலிகை ஓவியமும் இன்று சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

## பிரித்தானியர் கால தபால் பெட்டியும்,ஸ்ரீலங்காவின் தபால் பெட்டியும்









வல்வெட்டித்துறை சந்தியில் உள்ள பிரித்தானிய மகாராணியின் இலச்சினை பொறிக்கப்பட்டிருந்த தபால் பெட்டி (Colonial PillarBox) *1839* இல் அமைக்கப்பட்டது. பின்னர் அதே அமைப்பில் இரும்பினால் உருவாக்கப்பட்ட தபால்பெட்டிகள், இலங்கை அரசாங்கத்தின் இலச்சினை பொறிக்கப்பட்டு பல இடங்களிம் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, வல்வெட்டித்துறை தபால் கந்தோர் முன்பாக இன்றும் காணப்படுகின்றது.


## எள்ளில் இருந்து எண்ணெயைப் பிரிக்க உதவிய செக்குகள்





எள்ளில் இருந்து எண்ணெய் வடிப்பதற்காக அன்று பயன்படுத்தப்பட்ட செக்கு.இதனைச் சிலர் மனிதர்களைக் கொண்டும், மாடுகளைக் கொண்டும் இயக்குவார்கள்.இத்தகைய இயற்கைப் பொறிகளைப் பயன்படுத்தியதால் அன்று சூழல் மாசடைதல் மற்றும் எரிபொருள் செலவு என்பன குறைந்திருந்ததுடன் மனித வலுவுக்கு மதிப்பும் இருந்தது. இதில் உள்ள செக்கு தனிக் கருங்கல்லினால் ஆக்கப்பட்டது. இது சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் எள்ளில் இருந்து நல்லெண்ணெய் வடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. அன்று வேவில் பிள்ளையார் கோயிலடியில் பயன்படுத்தப்பட்ட கருங்கலலினாலான செக்கு இன்றும் வல்வெட்டித்துறை வேம்படிச் சந்தியில் வைக்கப்பட்டுள்ளது.

## வல்வைக்கு விஜயம் செய்த வலம்புரியும்,காங்கிரஸ் கட்சித் தலைவர்களும்





தமிழகத்தில் இருந்து 1966 இல், வருகை தந்திருந்த "வலம்புரி" என்பவர் துவிச்சக்கர வண்டியின் கைப்பிடியில் அமர்ந்தவாறே பின்புறமாகத் தொடர்ந்து ஐந்து நாட்கள் ஓய்வின்றி ஓடிச் சாதனை படைத்தார். உணவு, குடிநீர் என்பன ஓடிக் கொண்டிருந்த நிலையிலேயே பயன்படுத்தி தொடர்ந்து 120 மணித்தியாலங்கள் வரை இந்தச் சாதனையைச் செய்து முடித்தார். இந்த நிகழ்வு நெடியகாடு இளைஞரகளால் ஒழுங்கு செய்யப்பட்டு அப்போது ஊறணிக்குப் பின்புறமாக இருந்த வெளியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற ஒரு விழாவில் தமிழ் காங்கிரசுக் கட்சியின் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களுடன், பட்டினசபைத் தலைவர் திரு. சபாரத்தினம், பருத்தித் துறை நகர பிதா நடராஜா, முன்னாள் பட்டினசபையின் தலைவர் திரு. சோ. சுந்தரலிங்கம், மு. சிவசிதம்பரம் உட்படப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வரலாற்றில் நினைவு கூரப்படும் நகராட்சி மன்றத்தின் தலைவர்களில் இருவர்





வல்வெட்டித்துறை பட்டிசபையின் தலைவராக இருந்த திரு. சண்முகம் பிளளை நடனசிகாமணி அவர்கள், நெடியகாட்டு இளைஞர் அணியினர் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய பொழுது, அந்த வீரர்களுடன் காணப்படுகின்றார். அதேபோன்று பட்டிசபையின் தலைவராக இருந்த திரு. இ. மு. வி. இரத்தினவடிவேல் அவர்கள் அலுவலர்களுடன் காணப்படுகின்றார். அவர்களுக்குப் பின்புறமாகக் காணப்படுவது, ஆரம்பகாலத்தில் இருந்த நகராட்சி மன்றத்தின் பணிமனைக் கட்டிடம்

## அம்மனை வரவேற்கும் மோர் மடங்கள்





முத்துமாரி அம்மன் கோயில் முன்றலில் அம்மனை வரவேற்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மோர் மடம். இது விக்னேஸ்வரா சனசமூக நிலையம் மற்றும் உதயசூரியன் விளையாட்டுக கழகத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மற்றையது, ஆதிசக்தி இளைஞர்களினால் அம்பாள் வடக்கு வீதிக்கு வருகை தரும் பொழுது வரவேற்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மோர் மடம்.

## கப்பலுடையவர் கோயிலின் மகிமை





வல்வெட்டித்துறை கப்பலுடையவர் கோவிலின் பின்னணியில் தெரியும் முத்துமாரியம்மன் கோவில் கோபுரம்

இயற்கை வழி பாடானது வல்வெட்டித்துறையில் இருபதாம் நுற்றாண்டின் நடுப்பகுதிவரை கப்பல் கிழவன் கோவிலின் முன்றலின் கைக்கொள்ளபட்டு வந்துள்ளது. கடல் தெய்வமான வருணவழிபாட்டு முறையானது இன்று பெருமளவு மறைந்துள்ளது. எனினும் வல்வெட்டித்துறை மக்களின் ஆரம்ப காலவழிபாடானது இவ்வகையானதேயாகும். இதன்எச்சமாக இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்பும் மீன், கூழ், கள் என்பனவற்றை படைத்து ஆடல்பாடலுடன் மக்கள் வழிபட்ட தெய்வம் தான் 'கப்பற்கிழவன் என அழைக்கப்படும் தெய்வமாகும்.

இத்தகைய இயற்கைவழிபாடு இம்மண்ணின் தொன்மைக்கும் இன்றும் கடலைத்தமது தெய்வமாக வணங்கும் இம்மண்ணின் மைந்தர்களது பெருநம்பிக்கைக்கும் சான்றாகும். கடல் தாண்டி கப்பலில் செல்வோரும் கடல்மீது மீன்பிடிக்கச் செல்வோரும் தமக்குத் துணையாக தாம்வணங்கும் கடவுளையே எப்போதும் நினைத்துக்கொள்வர். பொது வாகவே மழையும் புயலும் சேர்ந்தடிக்கும் காலங்களில் அலைகளினால் கப்பல்களும் படகுகளும் பந்தாடப்படும்பொழுது கடலோடிகளின் துணையாக வருணபகவானே எப்போதும் முன்னிற்பார் என்பது ஐதீகம். இக்காலத்தைப் போல வானொலித் தொடர்பாடல் எதுவுமின்றி கடலிலே தனிமையாக நிற்கும் படகானது காற்றின் போக்கிற்கும் அலையின் வீச்சிற்குள்ளும் சிக்கிச்சுழலும் போது இடி இடிக்கும் அவ்வேளையில் உடலின் இயக்கமே நின்றுவிடும் அக்காலத்தில் மழைத்தெய்வமான வருணபகவானையும் அவர் மகனான அருச்சுனனையும் கடலோடிகள் கூவிஅழைப்பர்

(நன்றி: பொன் சிவா)

# வல்வை எழுத்தாளர்களின் நூல்கள் மற்றும் ஆய்வு நூல்கள்

வல்வையின் எழுத்தாளர்களினால் ஈழத்திலும்,புலம் பெயர்ந்த நாடுகளிலும் வெளியிடப்பட்ட நூல்களின் விபரங்கள் முடிந்தவரை, குறிப்பிடப்பட்டுள்ளன. அதேவேளை வல்வெட்டித்துறைக்குப் பெருமை சேர்த்தவர்களின் வரிசையில், வல்வை ச.வைத்தியலிங்கப் புலவர் தமிழுக்கும்,சைவத்திற்கும் ஆற்றிய பணிகளில் அவர் வெளியிட்ட பல நூல்கள் எமது மண்ணின் பெருமையை இன்றும் பேசிக் கொண்டிருக்கின்றன.

1. தமிழ் இலக்கண நூல் - வல்வை.ஏகாம்பரப் புலவர் (1864)
2. திருத்தாலாட்டு - வல்வை.வ.ஞா.கணேசபண்டிதர்
3. கந்தரலங்கார உரை - புலவர்.இயற்றமிழ் போதாகாசிரியர் ச.வைத்தியலிங்கம்
4. கந்தவனக் கலம்பகம்
5. தமிழ் மக்கள் மாண்பு (1950)- வித்துவான்.வ.மு.கனகசுந்தரம்
6. Re- opening of North Ceylon Port- P.K.Muthukumarasamy-1951
7. வல்வெட்டித்துறை ஊரின்னிசை(தொகுப்பு)-பூ.க.முத்துக் குமாரசாமி, இ.வைத்திலிங்கம்
8. ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் சரித்திரம் - வே.வ.சிவப்பிரகாசம்
9. வல்வைச் சிறுகதைகள் (வல்வை இளம் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு நூல்)-1973
10. தாயின்பாசம்(குறுநாவல்) - க.துரைராசா - கேரீஆர்,ஆதிகோயிலடி
11. தொண்டைமானாறும், செல்வச் சந்நிதியும் -(1985) - செ.நாகலிங்கம்
12. கப்பலோட்டிய தமிழர்கள் (1983) ஈ.கே.ராஜகோபால்
13. ஆழிக்குமரன் (1993) - ஈ.கே.ராஜகோபால்
14. சுயம்வரம் - கி.செ.துரை,டென்மார்க்
15. ஒரு பூ - கி.செ.துரை
16. ஒரு சினிமாப் பைத்தியத்தின் உளரல் (2010) - கி.செ.துரை

17. புதுமாத்தளன் சோகங்களுக்குப் புது மருந்து(2015) -கி.செல்லத்துரை

18. மனப்பட மனிதர்கள் (2016)- கி.செல்லத்துரை

19. சிந்தனைச் சிதறல்கள் (2006) சி.கிருஸ்ணானந்த தேவர்,கனடா

20. மாங்கல்யம் - வல்வை.கமலா பெரியதம்பி (கனடா)-1993

21. நீதி கதைகளில் ஆத்திசூடி - வல்வை.கமலா பெரியதம்பி (கனடா)-1995

22. நம் தாயார் தந்த தனம் (நாவல்) - வல்வை.கமலா பெரியதம்பி (கனடா)-1994

23. தமிழ்க் கவிக் காவினிலே(இலக்கியக் கட்டுரைகள்)-வல்வை.கமலா பெரியதம்பி (கனடா)-1996

24. அருளும் ஒளியும் (பாமலர்) - வல்வை.கமலா பெரியதம்பி (கனடா) - 1996

25. வல்வைக் கமலா கவிதைகள் - வல்வை.கமலா பெரியதம்பி (கனடா) - 2002

26. வல்வை.ச.வைத்திலிங்கப் புலவர் - பேராசிரியர் கா.சிவத்தம்பி (இவர் 50 க்கும் மேற்பட்ட நூல்களையும்,விமர்சனக் கட்டுரைமற்றும்,ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.)

27. வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள் - (தொகுப்பு நூல்)வல்வை.ந.நகுலசிகாமணி

28. வல்வெட்டித்துறை-வல்வைநகர்-வல்வை(மேற்படி நூலுக்கு எதிரான கண்டனநூல்)-மு.வு.பெரியதம்பி

29. திருக்குறளில் இருந்து திருமந்திரம் வரை (2008) -k.T. பெரியதம்பி

30. உடுப்பிட்டி சிவசம்பு புலவர் - வல்வை.ந.நகுலசிகாமணி

31. North South and Death (Novel)- பாமினி செல்லத்துரை

32. சிதறிய சித்தார்த்தன் (மேற்படி நூலின் தமிழாக்கம்- சபா.இராஜேந்திரன்)

33. கலவை (சிறுகதைத் தொகுப்பு) - ச.இராஜேந்திரன் (2008)

34. இராஜயோகம் (2005) பொ.பாலவடிவேல்

35. வல்வைக் கப்பலின் அமெரிக்கப் பயணம்-(1974) சனசமுக நிலைய வெளியீடு -வல்வை.ந.அனந்தராஜ்

36. மண்ணும் மனிதனும் -(தினகரன் தொடர் நாவல்-1976-1977) வல்வை.ந.அனந்தராஜ்

37. Sri Lanka Ethnic Conflict - (1988) க.சிவானந்தசுந்தரம்

38. இலங்கையின் இன முரண்பாடுகள் (1988) க.சிவானந்தசுந்தரம

39. வல்வைப் படுகொலைகள் -(தமிழில்) -1989- வல்வை.ந.அனந்தராஜ்

40. India's Mylai - Valvettiturai Massacre (ஆங்கிலத்தில்)-1989-வல்வை.ந.அனந்தராஜ்

41. அறிவியல் உண்மைகள் (மூன்று பதிப்புக்கள்)-1993,2003,2014-வல்வை.ந.அனந்தராஜ்

42. உதிரம் உறைந்த மண் (விவரணச் சித்திரம்)-1997 -வல்வை.ந.அனந்தராஜ்(வல்வை. ஆனந்தன்)

43. பொது விவேகம் (கல்வி அமைச்சு வெளியீடுதொகுப்பு நூல்)-1998 -.ந.அனந்தராஜ்

44. முகா ாமைத்துவ நுட்பங்கள் (4பதிப்புக்கள்)சாகித்திய விருது பெற்ற நூல்-(1998) -ந.அனந்தராஜ்

45. சந்நிதிச்செல்வம்- சாகித்திய விருது பெற்றநூல்-இரண்டு பதிப்புக்கள்(1999)-வல்வை.ந.அனந்தராஜ்

46. வடபுல நாட்டார் வழக்கு (இரண்டு பதிப்புக்கள்) -2002 - வல்வை.ந.அனந்தராஜ்

47. பாதசரம்-சர்வதேசரீதியாகவும் உள்நாட்டிலும் பரிசுபெற்ற சிறுகதைகள்-(2002) வல்வை.ந.அனந்தராஜ்

48. ஈழத்து இலக்கியத்தில் அறிவியல் நூல்கள்(ஆய்வு நூல்2003)- வல்வை.ந.அனந்தராஜ்

49. நீரலைகள் (குறு நாவல்) -2003 -வல்வை.ந.அனந்தராஜ்

50. இந்தியாவில் அறிவியல் நூல்கள் ஓர் ஆய்வு-முதுமாணிப்பட்ட ஆய்வு(2003) ந.அனந்தராஜ்

51. தேசியத்தை நோக்கிய கல்வி - 2005 - வல்வை.ந.அனந்தராஜ்

52. கூழ் நியாயங்கள் (பாரிஸ்ரர் கூழின் கதை)-2005 -வல்வை.ந.அனந்தராஜ்

53. பாடசாலை முகாமைத்துவம் -(குமரன் வெளியீடு)- 2006 - வல்வை.ந.அனந்தராஜ்

54. நூலக அபிவிருத்தி முகாமைத்துவம் -2014 - வல்வை.ந.அனந்தராஜ்

55. வல்வைப் புயல் - (2015) (வல்வை ஆனந்தன்) வல்வை.ந.அனந்தராஜ்

56. சமர் கண்ட முல்லைத்தீவு - (2015) வல்வை.ந.அனந்தராஜ்

57. கல்வி நிர்வாக முறைமைகள் (2016) வல்வை.ந.அனந்தராஜ்

58. வல்வையின் முதுசொம் (2017) வல்வை.ந.அனந்தராஜ்

59. வல்வெட்டித்துறைக் கடலோடிப் பாரம்பரியம் -ஆய்வு நூல் (2002) அனந்தராஜ்தேவகி

60. முத்துமாரி அம்பாளின் அவதாரச் சிறப்புக்கள் - வி.யோகானந்தவேல்

61. ஆழக்கடல் வென்றவர்கள் (2013)-ஆதிகோயில் ஜெயம் (ந.சிவரத்தினம்)

62. வரலாற்றில் வல்வெட்டித்துறை - பா.மீனாட்சிசுந்தரம், ந.சிவரத்தினம் (தொகுப்பு நூல்)

63. வாழ்க்கையின் சுவடுகள் -சிறுகதைத் தொகுப்பு (2006) - வ.ஆ.தங்கவேலாயுதம்

64. யுத்தத்தின் சாபம் - போர்காலச் சிங்களச் சிறுகதைகள் (2008)-வ.ஆ.தங்கவேலாயுதம்

65. அன்னையர் பாமலர் -1996 - சிவ.ஆறுமுகம்

66. வேலழகன் பாமலர் - 2014 - சிவ.ஆறுமுகம்

67. ஈழத்துப் பூராடனாரின் வல்வெட்டித்துறைக் கடலோடிகள் (ஆய்வு நூல்)(2011)

வி.அருள்சுந்தரம்,பொன்.சிவகுமாரன்,கனடா

68. கோடியாக்கரை மாரியம்மன் (2012) பொன்.சிவகுமாரன் (கனடா)

69. யோகம் இருக்கின்றது - (சிறுகதைத் தொகுப்பு) -குந்தவை, தொண்டைமானாறு

70. ஆறாத காயங்கள் (2016) - (சிறுகதைத் தொகுப்பு) -குந்தவை, தொண்டைமானாறு

71. மூச்சுக்காற்றால் நிறையும் விழிகள் - சு.குணேஸ்வரன், தொண்டைமானாறு

72. அலைவும் உலைவும் - கட்டுரை - சு.குணேஸ்வரன், தொண்டைமானாறு

73. புனைவும் புதிதும் - கட்டுரை சு.குணேஸ்வரன், தொண்டைமானாறு

74. உள்ளும் வெளியும் - கட்டுரை - சு.குணேஸ்வரன், தொண்டைமானாறு

75. தொண்டைமானாறும் செல்வச்சந்நிதியும் - நாகலிங்கம், தொண்டைமானாறு

76. ஆற்றங்கரை வேலவன் (2011)- வ.ஆ.அதிரூபசிங்கம்

77. சந்நிதியான் அற்புதங்கள் 1-6 பாகங்கள் (2010,2013,2016) - ந.அரியரத்தினம்)

78. திருக்கல்யாணங்கள் (2014) - ந.அரியரத்தினம்

79. சந்நிதியான் மடங்கள் (2016) -ந.அரியரத்தினம்

80. Memories sweet,sour & Bitter (2009) -Ramalingam Dharmalingam

81. Sojourn in Sydney (2014) -Ramalingam Dharmalingam

82. Random Thoughts - Ramalingam Dharmalingam

83. வேத மந்திரச் சிறப்புக்கள் - வி.யோகானந்தவேல்

84. வாழ்வுதனைத் தேடி - ஆ.சுமன்

85. மரணித்த மனிதம் - ஆ.சுமன்

86. முகாரி பாடும் முகங்கள் -ஆ.சுமன்

87. கம்பிகளின் மொழிகள் - பி.பிரேம்குமார்.

88. வேங்கையின் பூங்கொடி காவியத் தூது -வல்வை சகாரா(கனடா)

89. அன்னபூரணியின் அமெரிக்கப்பயணம்(சித்திரக் கதை) - பொன். சிவா (2014)

90. வானத்தின் அமைதி குலைகிறது (கவிதை -2015) வல்வைகமல்

91. வல்வையின் பாரம்பரியக் கலைகள் - சுகன்ஜா பாலசேகர் (கனடாவில் இருந்து)

**முடிவுரை:**

வடமராட்சியில்குறிப்பாக வல்வெட்டித்துறையின் பண்பாடுகளும் மரபுகளும், உணவுப்பழக்க வழக்கங்களும் ஏனைய பிரதேசங்களை விடத் தனித்துவமானவையாக இருந்தபோதும், அவற்றுள் இன்று புதிய தலைமுறையினர் அறிந்து கொள்ளமுடியாத அளவுக்கு ஒரு பாரிய தலைமுறை இடைவெளி காணப்படுவதால், அவை அடுத்த சந்ததியினரால் அறிந்து கொள்ளமுடியாது போகின்ற ஒரு நிலை இன்று காணப்படுகின்றது. அவற்றை எழுத்துருவாகவோ, ஒலி, ஒளி வடிவத்திலோ ஆவணப் படுத்தவேண்டிய ஒரு தேவை இன்றுள்ளதால், இன்றும் அந்த மரபுகளையும் பாரம்பரியங்களையும், அன்று எம்மவர்களின் வீரதீரச்சாதனைகளையும், உணவுப் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் ஆவணப்படுத்த வேண்டியது இன்று

வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், மற்றும் அறிவு ஜீவிகளின் கடமையாகும். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அதனை சிறந்த முறையில் ஆவணப்படுத்தும் வகையில் ஒரு அமைப்பாகச் செயற்பட முன்வர வேண்டும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற அந்த நவீன கோட்பாட்டைத் தூக்கி எறிந்து விட்டு, தமிழனின் அடையாளத்தைக் காட்டுகின்ற வரலாறு களை ஆவணப்படுத்துவதனூடாக இந்த மண்ணில் தமிழர்கள் என்ற ஒரு தேசிய இனம் காலங்காலமாக வாழ்ந்து வருவதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்தலாம். எம்மவர்களின் புகழை உலகறியச் செய்த பல சாதனையாளர்களையும், தியாகிகளையும், ஆபத்தில் உதவியவர்களையும், உயிரைக் காத்து உலாவவிட்டவர்களையும் நிகழ் காலத்திலேயே மறந்து போகச் செய்கின்ற இந்த இயந்திர யுகத்தில் எமது மக்களுக்காக அவர்களின் நலன்களுக்காக இரவு பகல் பாராது உழைத்து ஓடாகிக் கொண்டிருக்கின்ற எமது உள்நாட்டு உறவுகளும், புலம் பெயர்ந்த உறவுகளும் இத்தகைய ஆவணப்படுத்துகைகளை ஒவ்வொரு பிரதேசத்திலும் இருந்து அந்தந்தப் பிரதேசங்களின் வாழ்வியல் ஆதாரங்களை வெளிப்படுத்தும் வகையில் ஒரு அமைப்பு ரீதியாச் செயற்பட முன்வரவேண்டும்.

**உசாத்துணைகள்**


1. Re-Opening of North Ceylon Port (1951) - பூ.க.முத்துக்குமாரசாமி
2. An historical relation of the island Ceylon, in the East Indies
3. ஊரின்னிசை - பூ.க.முத்துக்குமாரசாமி, செ.வைத்திலிங்கம்
4. ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் சரித்திரம் - வே.வ.சிவப்பிரகாசம்
5. யாழ்ப்பாண வைபவ கௌமுதி -வேலுப்பிள்ளை
6. வல்வெட்டித்துறைக் கடலோடிப் பாரம்பரியம் - தேவகி அனந்தராஜ்
7. அன்னபூரணியின் அமெரிக்கப் பயணம்(1974) - வல்வை.ந.அனந்தராஜ்
8. தொண்டைமானாற்றில் அறிவொளிபரப்பும் வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம்.
9. யாழ்ப்பாணச் சரித்திரம் ஆ. முத்துத்தம்பி
10. விக்கிப்பீடியா - கூகிள்
11. வல்வையின் அருளாலயங்கள், வல்வைநலன்புரிச்சங்கம். அவுஸ்ரேலியா 2010.
12. உடுப்பிட்டி ஒல்லாந்தர் காலத் தமிழ்க் கல்வெட்டு - பேராசிரியர் புஸ்பரட்ணம்
13. ஈழத்துப் பூராடனாரின் வல்வெட்டித்துறைக் கடலோடிகள் (2011) - பொன்சிவா, வி.அருள்செல்வம்,
14. கலைக்கேசரி சஞ்சிகை -வீரகேசரி வெளியீடு
15. வல்வை சனசமுக சேவா நிலைய வெள்ளி விழா மலர்
16. சிதம்பரக் கல்லூரி நூற்றாண்டு மலர்
17. பொன்சிவாவின் கட்டுரைக் குறிப்புக்களும், புகைப்படங்களும்
18. வல்வைப் படுகொலைகள் - (1999) வல்வை.ந.அனந்தராஜ்
19. வல்வைப்புயல் - (2015) வல்வை.ந.அனந்தராஜ்
20. வல்வை சிவன் கோயில் மகாகும்பாபிசேக மலர் -2004



“வரலாறுகள் ஒருபோதும் பின்னோக்கிப் பாய்வதில்லை... ஆனால் பழையனவற்றை முற்றாகவே கழித்து விடுவதும், அவற்றை மறந்து விடுவதுமென்பது, ஒரு இனத்தின் பாரம்பரியத்தையும், இருப்பையுமே இல்லாமல் செய்து விடும். அந்த வகையில் எமது இனத்தின் பாரம்பரியங்களையும், பழக்க வழக்கங்களையும், நினைவுச் சின்னங்களையும் பாதுகாப்பது மட்டுமல்லாது, அடுத்து வரும் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் எடுத்துச் செல்வதும் எமது கடமையாகும்.

இலங்கைத் தமிழர்கள் வந்தேறு குடிகள் அல்ல என்பதற்கும், அவர்களுக்கென்று ஒரு ஆள்புல எல்லைகளைக் கொண்ட அரசுரிமை இருந்ததற்குமான சான்றாதாரங்கள் இருந்தபோதும், அவை மறைக்கப்பட்டு புதிய வரலாறுகள் எழுதும் மரபு ஒன்று இலங்கையில் தற்பொழுது வளர்ந்து வருகின்றது. சோழப் பேரரசு எவ்வாறு ஆழக்கடல் ஓடித் தன் புலிக்கொடியைப் பறக்கவிட்டனரோ, அதேபோன்று வல்வெட்டித்துறையின் கடலோடிப் பாரம்பரியமானது இலங்கையுடன் மட்டும் நின்று விடாது, இந்திய, ரங்கூன், காக்கிநாடா, மலேசியா மற்றும் அமெரிக்காவரை கப்பல் ஓடிச் சாதனை படைத்த ஒரு மண்ணில் இருந்து ஒலிக்கும் குரலான, **“வல்வையின் முதுசொம்”** உலகளாவிய ரீதியில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழர்களையும் சென்றடைய வேண்டும். அதனூடாக சிறிதளவாவது புலத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழ்ந்து தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வரும் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் பயன்படுமாயின் அதுவே எனது நோக்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

ஏனெனில் எமது முதுசொம்களை இன்றைய சந்ததியினருக்கு மட்டுமல்லாது, எதிர்காலத்தில் தோன்றப் போகின்ற, இளைய சந்ததியினருக்கும் கையளிக்க வேண்டிய பொறுப்பு இன்றைய சந்ததியினரின் கடமையாகும்”

**- வல்வை ந.அனந்தராஜ்**

ISBN 978-955-41846-1-9